॥श्रीः॥

शाश्वतधर्मगोप्त्रे श्रीपते वासुदेवाय नमः॥



॥ मन्त्रप्रश्नः ॥

மந்திரப்பிரச்னம்.

தமிழுரையுடன்.

இச்சிறந்த உரை

நியாய வியாகரணபாரங்கதரும், மீமாம்ஸாசிரோமணியுமான

பிரும்மஸ்ரீ கணேச சாஸ்திரிகள்

அவர்களால் இயற்றப்பெற்று

ஆர்யமதஸம்வர்த்தனீ பத்திராதிபர்

பிரும்மஸ்ரீ கடலங்குடி நடேசசாஸ்திரிகள்

அவர்களால் தமது ஆர்யமதஸம்வர்த்தனீ அச்சு

இயந்திரசாலையில், அச்சியற்றி சென்னையில்

பிரசுரஞ் செய்யப்பட்டது.

1926

10-00

ஸ்ரீ ராமஜயம்

श्रीः

शाश्वतधर्मगोप्त्रे श्रीमते वासुदेवाय नमः



॥ मन्त्रप्रश्नः ॥

மந்திரப்பிரச்னம்.

தமிழுரையுடன்.

இச்சிறந்த உரை.

நியாய வியாகரணபாரங்கதரும் மீமாம்ஸாசிரோமணியுமான

பிரும்மஸ்ரீகணேசசாஸ்திரிகள்

அவர்களால் இயற்றப்பெற்று

ஆர்யமதஸம்வர்த்தனீ பத்திராதிபர்

பிரும்ம ஸ்ரீ கடலங்குடி நடேசசாஸ்திரிகள்

அவர்களால் தமது ஆர்யமதஸம்வர்த்தனீ அச்சு இயந்திரசாலையில், அச்சியற்றி சென்னையில் பிரசுரஞ் செய்யப்பட்டது.

காபிரைட்] 1926 [10-00

குறிப்பு--

இந்தக் கிரந்தத்தில் அடிமுதல் 21 பாரம் முடிய
சிவகாமி விலாச அச்சுக்கூடத்திலும்,
மேலுள்ளவை நமது ஆர்யமதஸம்வர்த்தனீ அச்சுக்கூடத்திலும்,
பதிப்பிக்கப்பட்டது.



कडलंगुडि नटेश शास्त्री

ज्यौतिषिकः

व्याकरण वेदान्त शास्त्र पारंगतः, भागवत भगवद्गीतोपन्यासकः

आर्यमत संवर्द्धनी पत्रिका संपादकश्च ॥

முகவுரை.

மந்திரப் பிரச்னம்.

இந்தப் பிரச்னத்தில் ஸ்மார்த்தமான ஔபாஸனாக்கினி யொன்றிலோ, லௌகிகாக்கினி யொன்றிலோ செய்யப்படும் கர்மங்களுபதேசிக்கப்படுவதால் ஏகாக்னிகாண்டம் என இதையழைக்கின்றனர். உலகில் ஆஸ்திகனா யுள்ள எந்தப் பிராம்மண குடும்பங்களிலும், ஜாதகர்மம், நாமகரணம், அன்னப்பிராசனம், சௌளம், உபநயனம், 4வேத விரதங்கள், விவாஹம், ஆகிய இந்தக்கர்மங்கள் யாதேனுமொரு முறையில் நடைபெற்றுத் தீருகின்றன வென்பது வெளிப்படை. அவ்விதம் நடைபெறும் அக்கர்மங்களும் இதிற் சொல்லிய மந்திரங்களைச் சொல்லியே தான் செய்யப்படுகின்றன என்பதும் யாவருமறிந்த விஷயமே. அத்துடன் இக்கர்மங்களை யனுஷ்டிக்கும் விஷயத்தில் ஏழைமுதல் பணக்காரன் வரையுள்ள எந்தப் பிராம்மணரும் தத்தமது சக்திக்கு மீறியே பொருட் செலவு செய்வதும் ஆஸ்திகர் யாவருமறிந்தவிஷயமே. இவ்விதம் ஏராளமாகப் பொருளைச் செலவு செய்து யாதேனு மொரு முறையில் இக்கர்மங்களை யனுஷ்டித்து வரும்பொழுது, தாமனுஷ்டிக்கும் கர்மங்களி லுபயோகப்படும் இம்மந்திரங்களின் பொருள் என்னை? என அறிந்து கொள்ள ஆவலைத்தைவிகமா யடையும்பொழுது அவர்களுடைய ஆவலைப் பூர்த்திசெய்யக் கூடிய கிரந்தமொன்று இதுகாறும் நந்தமிழுலகில்லாமலிருந்து வருவதைக்கண்ட நாம் அக்குறையைப் போக்க வேண்டி நியாய வியாகரணசாஸ்திரபாரங்கதரும், மீமாம்ஸா சிரோமணியுமான பிரும்மஸ்ரீ கி. கணேச சாஸ்திரிகள் அவர்களைக் கொண்டு இந்த மந்திரப்பிரச்னத்திற்குத் தமிழில் பதவுரை, கருத்துரை விசேஷவுரை இவைகளை யெழுதச் செய்து, அவர்களது ஆவலைப்பூர்த்தி செய்யவேண்டி அதை வெளியிட்டிருக்கிறோம். ஆகவே நமது தமிழ்தேசத்திலுள்ள ஒவ்வொரு ஆஸ்திகப் பிராம்

மண குடும்பத்திலும் இந்தக் கிரந்தமானது இருக்கவேண்டுவது மிகவும் அவசியமான தென்றேற்படுகின்றது. மேலும், பிரும்மஸ்ரீ கணேசசாஸ்திரிகள் இதற்கு உரை யெழுதுமிடத்து ஹரதத் பாஷ்யத்தைத் தழுவியே உரை எழுதியிருப்பதுடன் அங்கந்தவிடத்திற்கு உபயோகமுள்ள ஆபஸ்தம்பகிருஹ்ய சூத்திரத்தையும் முறையே எழுதி ஸுதர்சன பாஷ்யப்படி அவைகளுக்கு உரையும் எழுதி வெளியிட்டிருக்கிறார். இவ்வித அருமைதங்கிய கிரந்தத்தை மொழிபெயர்த் தெழுதுவதில் இடையிடையே முக்கிய விடங்களுக்குக் குறிப்பெழுதி அவ்விஷயத்தை விளக்கியுமிருக்கிறார். ஆகவே சாஸ்திரிகளவர்கள் நமது ஆஸ்திகப் பிராம்மண சமூஹத்திற்குப் பரமோபகாரஞ் செய்து விட்டா ரென்பதில் யாதுமையமில்லை.

ஆகவே இவ்வுரையை ஒவ்வொரு ஆஸ்திகப் பிராம்மணரும் வாங்கிப் படித்து தம்மாலனுஷ்டிக்கப்படும் கர்மங்களின் ஸ்வரூபங்களை யுள்ளபடி யறிந்தனுஷ்டித்து இஹபரசுகங்களை யடைவாராக.

கடலங்குடி, நடேசசாஸ்திரிகள்.
ஆர்யமதஸம்வர்த்தனீ பத்திராதிபர்,

MANTRAPRASNAM OF THE YAJURVEDA

SIGNIFICANCE OF RELIGIOUS RITES

Sir P. S. Sivaswami Aiyar writes: —

Pundit Kadalangudi Natesa Sastrigal has rendered a distinct service to the public in publishing the Mantraprasnams of the Yajur Veda with a Tamil translation and commentary. These two prasnas comprise the mantras which are in use in most of the rituals performed by Brahmins except those relating to funeral ceremonies. One main difference betweee the religious usages of the Brahmin community and those of others is that the Brahmin employs the Vedic mantras in the performance of the various sacraments and rituals while the other castes do not make use of the Vedic mantras. The exclusive privilege claimed by the Brahmins of using Vedic mantras for these rituals has given rise to not a little resentment and bitterness on the part of the other castes, and is to some extent responsible for the ill-feeling that now exists between the communities. But, though the Brahmin has been claiming this exslusive privilege, he has not cared to study and understand the meaning of the mantras which he has to utter. The mantras have no meaning and no significance to the lay Brahmin who utters them and the only solemnity with which they invest the important sacraments in life is

that derived from the impressiveness of the sounds of an unfamiliar language. The significance and solemnity which would be derived from a knowledge of the meaning of the mantras are not for him. Every Brahmin who wishes to perform the rituals ordained and to be counted as orthodox should really care to study the meanings of the mantras which he has to go through. It is with the purpose of enabling Brahmins to attain this subject and perform their rituals with an understanding of the mantras that the Pundit has brought out this publication. Incidentally, it will serve a wider class of persons in the Hindu community. Many of the classes who are now debarred from studying the mantras will now have an opportunity of studying them and finding out for themselves what there is of value in the field of Brahmin ritual which has been hitherto closed against their intrusion. The attempt to popularise a knowledge of the meaning of the rituals, to which so much importance is attached in India, deserves every encouragement. The translation of the mantras is easy and readable and makes a knowledge of them easily accessible to all who care to study them. It is to be hoped that this attempt of the Pundit will meet with due appreciation and encouragement and that he will soon have to bring out a second edition free from the few errors which have crept by oversight into this edition.

விஷய அட்டவணை.

விவாஹப் பிரகரணம்.

*

ஸமாவர்த்தனப்பிரகரணம்.

ஸீமந்தோன்னயனப்பிரகரணம்.

பும்ஸுவனப் பிரகரணம்.

ஜாதகர்மப் பிரகரணம்.

நாமகரணப் பிரகரணம்.

கிருஹநிர்மாணப் பிரகரணம்.

கிருஹப்பிரவேசப் பிரகரணம்.

ஸர்ப்பபலிப் பிரகரணம்.

அஷ்டகாசிராத்தப் பிரகரணம்.

श्रीः

शाश्वतधर्मगोप्त्रे श्रीमते वासुदेवाय नमः ॥

॥ मन्त्रप्रश्नः ॥

॥ प्रथमः खण्डः ॥

मन्त्रप्रश्नापरनामकैकाग्निकाण्डस्य भाषान्तरविपरिणामः प्रारभ्यते ।

அவதாரிகை—'ஸ்மார்த்தாக்னி' எனப்பெயரிய ஔபாஸனாக்னி ஒன்றிலோ, அல்லது லௌகிகாக்னி ஒன்றிலோ செய்யப்படும் கர்மங்களில் உபயோகிக்கப்படும் மந்திரங்களடங்கிய வேத பாகத்திற்கு एकाग्निकाण्डम् ஏகாக்னிகாண்டம் எனப்பெயரிடப்பட்டிருக்கிறது. இக்காண்டத்தின் ஆரம் பத்தில் வைச்வதேவமந்திரங்கள் படிக்கப்பட்டிருக்கின்றனவாயினும், ஸந்தியாவந்தனம் முதல்தேவ பூஜைவரை யுள்ள கர்மங்களைத் தொடர்ச்சியாய் எழுதி, பின்னர் வைச்வதேவகர்மத்தைச் சொல்லுமிடத்து அம்மந்திரங்களை மொழிபெயர்த் தெழுதுவதாகச் சங்கல்பித்திருக்கிறோம். ஆதலால் இப்பொழுது விவாஹத்தில் உபயோகிக்கப்படும் மந்திர பாகந் தொடங்கி முறையே எல்லா மந்திரங்களையும் மொழிபெயர்த் தெழுதுகிறோம்.

देवैश्चैव मनुष्यैश्च तिर्यग्भिश्चोपजीव्यते ।
गृहस्थः प्रत्यहं यस्मात् तस्माच्छ्रेयान् गृहाश्रमी ॥

यथा मातरमाश्रित्य सर्वे जीवन्ति जन्तवः ।
तथा गृहस्थमाश्रित्य सर्वे जीवन्ति भिक्षवः ॥

यथा—मूलप्राणो भवेत् स्कन्धः स्कन्धात् शाखाः सपल्लवाः ।
मूलेनैव विनष्टेन सर्वमेतद्विनश्यति ॥

तथा—चतुर्णामाश्रमाणां तु गृहस्थो योनिरुच्यते
तस्मात्सर्वप्रयत्नेन रक्षणीयो गृहाश्रमी ॥ इति गौतमः ॥

यथा नदीनदास्सर्वे सागरे यान्ति संस्थितिम् ।
तथैवाश्रमिणस्सर्वे गृहस्थे यान்ति संस्थितिम् ॥ इति मनुः ॥

"தேவர்களாலும், மனிதர்களாலும், மற்று முள்ளவிலங்கினங்களாலும் ஒவ்வொருநாளும் கிருஹஸ்தன் ஸேவிக்கப்படுவது பற்றி கிருஹஸ்தாச்ரமத்திலிருப்பவன் எல்லா ஆச்ரமிகளினும் மேலாகிறான். தாயை ஆச்ரயித்து எல்லாப்பிராணிகளும் ஜீவிப்பது போலவே பிக்ஷுகர்களான=பிரும்ஹசாரி வானப்பிரஸ்தன், ஸன்யாஸி இவர்கள் கிருஹஸ்தனையாச்ரயித்தேஜீவிக்கின்றனர். ஒருமரத்திலுள்ள * ஸ்கந்தத்திற்கு ஆணிவேரே பிராணனாக ஆகின்றது. ஸ்கந்தத்தினின்றே தளிர்களுடன் கூடினகிளைகள் உண்டாகின்றன. ஆகவே ஆணிவேர் போய்விட்டால் மற்ற யாவும் அடியோடு போய் விடும் என்பது போல நான்கு ஆச்ரமத்திலுள்ளவர்களையும் கிருஹஸ்தனேயுண்டு பண்ணுவதால் கிருஹஸ்தன் கஷ்டப்பட்டால் மற்ற மூன்று ஆச்ரமிகளும் கஷ்டப்படவேண்டிவரும். ஆனது பற்றி எவ்வித முயற்சி செய்தும் கிருஹஸ்தன் காப்பாற்றத்தகுந்தவன்" என்று கௌதமரும் "நதீநதம் முதலிய வைகள் சமுத்திரத்தைப் போய்ச் சேருவது போல எல்லா ஆச்ரமிகளும் கிருஹஸ்தனையாச் ரயித்திருக்கின்றனர்." என்று மனுவும் சொல்லி இருப்பதால் எல்லா ஆச்ரமிகளுக்கும் மூலபூதமான கிருஹஸ்தாச்ரமமே மேலானதென்று ஏற்படுகின்றது.

மேலும் **न गृहं गृहमित्याहुर्गृहिणी गृहमुच्यते** என்றபடி **गृहेण=** கிருஹசப்தத்தால் சொல்லப்படும் பத்தினியுடன் **स्थ=**இருப்பவன் எவனோ அவனே கிருஹஸ்தன் எனப்படுவன் என்றும் ஏற்படுகின்றது. அவ்விதஞ் சிறந்த கிருஹஸ்தாச்ரமத்தை ஒருவன் அடை வதற்கு ஸதிருசமான கன்னிகையின் விவாஹம் அவச்யமாகின்றது. அந்த விவாஹம்,

---

* வேருக்கு மேலும் கிளைகள் பிரிவதற்குக்கீழு முள்ள மரத்தின் பாகத்திற்கு "ஸ்கந்தம்" என்று பெயர்.

वाग्दानं च प्रदानं च वरणं पाणिपीडनम् ।
सप्तपदीति पञ्चाङ्गो विवाहः परिकीर्तितः ॥

என்றபடி, 1 வாங்நிச்சயம், 2 கன்னிகாதானம், 3 வரணம் 4 பாணிக்கிரஹணம், 5 ஸப்தபாதி என ஐந்து முக்யாங்கங்களை யுடையதா யிருக்கிறது. இவற்றுளொன்றான வரப்ரேஷணத்தில் உபயோகிக்கப்படும் மந்திரம் மந்திர பிரச்னத்தின் முதலில் படிக்கப்படுகின்றது—வரப்ரேஷணமாவது—

सुहृदस्समवेतान्मन्त्रवतो वरान् प्रहिणुयात् । பிறருடைய உபகாரத்தை எதிர்பாராது உபகரிக்கும் ஸ்வபாவமுள்ளவர்களும், தான் எடுத்த கார்யம் ஒன்றையேச் செய்வதில் பற்றுள்ளவர்களும், மந்திரம் பிராம்மணம் இவற்றையறிந்தவர்களுமான பிராம்மணர்களை வரன் கன்னிகையின் பிதா முதலியவர்களைக் குறித்து அனுப்பவேண்டும் என்றும், **तानादितो द्वाभ्यामभिमन्त्रयेत** பயணமாய் கிளம்பினவர்களான பிராம்மணர்களைக்குறித்து முதலிலிருக்கும் இரண்டு மந்திரங்களையுச்சரிக்கவேண்டும் என்றும் ஆபஸ்தம்பகிருஹ்ய ஸூத்திரத்திற் சொல்லியபடி கன்னிகையைத் தானஞ்செய்யக் கடமைப்பட்டவர்களான பிதாமுதலியவர்களைக்குறித்து முன் சொல்லிய லக்ஷணம் வாய்ந்தப் பிராம்மணர்களை யனுப்பும் பொழுது அந்தப்பிராம்மணர்களுக்கு நேரில் இவ்விரண்டு மந்திரங்களை ஜபித்து கன்னிகையின் பிதாமுதலியவர்களிடம் பிராம்மணர்களையனுப்புவதே வரப்ரேஷணம் (ஒருவரிடஞ்சென்று தான் கோறியதை அவரிடமிருந்து பெறத்தக்க யோக்கியதையுள்ள பிராம்மணர்களையனுப்பும் காரியம்) எனப்படும். அக்காலத்தில் ஜபிக்கப்படும் மந்திரங்கள் பின்வருமாறு—

(मन्त्रः)प्रसुग्मन्ता धियसानस्य सक्षणि वरेभिर्वरानभिषुप्रसीदत ।
अस्माकमिन्द्र उभयं जुजोषति यत्सौम्यस्याऽन्धसो बुबोधति ॥ १ ॥

अनृक्षरा ऋजवस्सन्तु पन्था येभिस्सखायो यन्ति नो वरेयम् ।
समर्यमा संभगो नो निनीयात्संजास्पत्यꣳसुयममस्तु देवाः ॥ २ ॥

1. (ப-ரை) **प्रसुग्मन्ता-प्र**=மிக்க வேகமாகவும் **सु**=அழகாகவும் **ग्मन्ता**=செல்லுகின்ற ஓ பிராம்மணர்காள்! (**यूयम्**=நீங்கள்) **धियसानस्य** (செல்லவேண்டிய விடம், செய்யவேண்டிய காரியம் இவற்றை, மனத்தால் நன்கு எண்ணி ஒரு முடிவு செய்ததற்கு **सक्षणि**=அடுத்தக்ஷணத்தில் **वरेभिः** = நல்லவழிகளால் (நடந்து) **वरान्**=வரிக்கத்தகுந்த (யாசிக்கத்தகுந்த) கன்னிகையின் பிதா முதலியவர்களைக்குறித்து **अभि**=நேரில் **सुप्रसीदत**=செல்வீர்களாக **यत्**=யாதுகாரணம்பற்றி **इन्द्रः**=தேவேந்திரன் **सौम्यस्य**=ஸோமரஸ ரூபமான **अन्धसः**=அன்னத்தை **बुबोधति**=ஆவலுடன் கருதுகின்றனே, (**तत्**=அக்காரணம்பற்றி) **अस्माकम्** = கன்னிகை, நான் ஆகிய எங்களின் **उभयम्**=இரட்டையை **जुजोषति**=ஸேவிக்கிறான். அதாவது கன்னிகையை என்னுடன் சேர்த்து வைப்பதற்காகச் செல்லும் உங்களுக்கு உதவியாயிருக்கிறான்.

(தா-ம்) இயற்கையில் வேகமாகவும், அழகாகவும் நடக்கும் ஸ்வபாவமுள்ள ஓ பிராம்மணர்காள்! தாங்கள் செல்லவேண்டிய விடத்தையும், செய்யவேண்டிய கார்யங்களையும் மனதாலெண்ணி நிர்ணயித்துக்கொண்டு பிறகு அடுத்தக்ஷணத்திலேயே இங்கிருந்து கிளம்பி நல்வழிநடந்து கன்னிகையின் பிதாமுதலியவர்களிடமே நேரில் செல்வீர்களாக. तदेषां तन्नप्रियं यदेतन्मनुष्या विदुः "மனிதர் ஆத்மஞானத்தையடைதல் தேவர்கட்குப்பிரியமில்லாதது" என்று பிருஹதாரண்ய கோபனிடதத்திற் சொல்லியபடி மோக்ஷமார்க்கத்திற் செல்லுகின்றவர்கட்கும் அதற்குபகரிக்கின்றவர்கட்கும் தேவர்கள் இடையூறு செய்யக்கூடுமாயினும் இந்த விவாஹ விஷயத்தில் தேவர்கள் எவ்வித இடையூறுகளையும் செய்யமாட்டார்கள். நான் ஒரு கன்னிகையை மணந்துகொண்டு ஸோமயாகம்முதலிய ஸத் கர்மங்களைச் செய்து இந்திரன் முதலிய தேவர்கட்கு ஹவிர்ப்பாகங் கொடுப்பதை தேவராஜனை இந்திரன் மிக்க ஆவலுடன் கருதுவானதலால் என்னை ஒரு கன்னிகையுடன் சேர்த்து இரட்டையாக்குவது இந்திரனுக்கும் ஸம்மதமாகவே இருக்கும். ஆகவே தேவராஜனுக்குச் சம்மதமான இக்கார்யத்தில் பிரவிருத்தித்த தங்களுக்கு தேவர்களுடையவும், தேவராஜனுடையவும் உதவி கட்டாயம் ஏற்படுமாத

லால் இக்கார்யத்தில் தாங்கள் தடையின்றி முயற்சித்தல் தகும். (எ-று.)

குறிப்பு— ब्राह्मो दैवस्तथैवार्षः प्राजापत्यस्तथाऽऽसुरः ।
गान्धर्वो राक्षसश्चेति पैशाचश्चाष्टमो मतः ॥

என்ற மனுவசனப்படி விவாஹம் 1 பிராம்மம், 2 தைவம், 3 ஆர்ஷம், 4 பிராஜாபத்யம், 5 ஆஸுரம், 6 காந்தர்வம், 7 ராக்ஷஸம், 8 பைசாசம் என 8 விதமாகும். அவற்றுள்

षडानुपूर्व्या विप्रस्य क्षत्रस्य चतुरो वरान् ।
विट्शूद्रयोस्तु तानेव विद्याद्धर्म्यानराक्षसान् ॥

பிராம்மணனுக்கு பிராம்மம், தைவம், ஆர்ஷம், பிராஜாபத்யம், காந்தர்வம் ஆகிய ஆறும்; க்ஷத்திரியனுக்கு ஆஸுரம், காந்தர்வம், ராக்ஷஸம், பைசாசம் ஆகிய நான்கும், வைச்யன் சூத்திரன் இவர்கட்கு ஆஸுரம், காந்தர்வம், பைசாசம் ஆகிய மூன்றும் தர்மத்தைவிட்டு விலகாத விவாஹங்களாகும். ஆயினும்,

चतुरो ब्राह्मणस्याद्यान् प्रशस्तान् कवयो विदुः ।
राक्षसं क्षत्रियस्यैकं आसुरं वैश्यशूद्रयोः ॥

என்றபடி பிராம்மம், தைவம், ஆர்ஷம், பிராஜாபத்யம் இந்நான்குமே பிராம்மணனுக்கு மிக்கச் சிறந்த விவாஹங்களென்றும், ராக்ஷஸ விவாஹமொன்றே க்ஷத்திரியனுக்கு மிக்கச் சிறந்ததென்றும், ஆஸுர விவாஹமொன்றே வைச்யன், சூத்திரன் இவர்கட்கு மிக்கச் சிறந்ததென்றும், இவையல்லாது மற்றவை எல்லாம் இதற்குத் தாழ்ந்தபடியிலுள்ளவை என்றும், அறிஞர் கருதுகின்றனர். மேலும்,

पञ्चानां तु त्रयो धर्म्याः द्वावधर्म्यौ स्मृताविह ।
पैशाचश्चासुरश्चैव न कर्तव्यौ कदाचन ॥

பிராஜாபத்யம், ஆஸுரம், காந்தர்வம், ராக்ஷஸம், பைசாசம், என்ற இவ்வைந்து விவாஹங்களுள் பிராஜாபத்யம், காந்தர்வம்,

ராக்ஷஸம் என்ற இம்மூன்று விவாஹங்களே தர்மத்தைவிட்டு விலகாதவைகள், மற்ற ஆஸுரம் பைசாசம் என்ற இரண்டு விவாஹங்களும் தர்மத்தைவிட்டு விலகினவைகளாக எண்ணப்படுகின்றன. ஆனது பற்றி பைசாசம் ஆஸுரம் என்ற இரண்டு விவாஹங்களும் எக்காலத்திலும் செய்யத்தகாதவைகளாகவே யாகும். இவ்விதம் இந்தச் சுலோகத்திற் சொல்லி இருப்பதில் பிராஜாபத்யம் என்ற விவாஹம் க்ஷத்திரியன், வைச்யன், சூத்திரன் இவர்கட்கு இது வரை விதிக்கப்படாததால் அது இந்தச் சுலோகத்தால் விதிக்கப்பட்டதாக ஏற்படுகிறது. வைச்ய சூத்திரர்கட்கு இதுவரையில் ராக்ஷஸ விவாஹம் விதிக்கப்படாததால் அதுவும் இங்கு விதிக்கப்பட்டதாக ஏற்படுகிறது. மேலும் **पैशाचश्चासुरश्चैव न कर्तव्यौ कदाचन** என்று கூறி இருப்பதிலிருந்து பைசாச, ஆஸுர விவாஹங்கள் எந்த ஜாதிக்காரருக்கும் எச்சமத்திலும் தகாதென்று ஏற்படுவதால் க்ஷத்திரிய விருத்தியை யவலம்பித்து ஜீவிக்கும் பிராம்மணனுக்கு பைசாசம், ஆஸுரம் என்ற இந்த இரண்டு விவாஹங்களும் ஒரு பொழுதும் கூடாதென்று ஏற்பட்டுவிட்டது. மேலும் இவ்விடத்தில் எந்த ஜாதிக்கு எந்த விவாஹத்தின் விதி நிஷேதங்கள் செய்யப்பட்டனவோ அந்த விவாஹமே அந்த ஜாதிக்கு விகல்பமாயேற்படுமேயல்லாது விதிக்கப்படாதவிடத்தில் விகல்பம் சம்பவிக்காதென்றும் கொள்ளவேண்டும்.

पृथक् पृथग्वा मिश्रौ वा विवाहौ पूर्वचोदितौ ।
गान्धर्वो राक्षसश्चैव धर्म्यौ क्षत्रस्य तौ स्मृतौ ॥

என்றபடி முன் சொல்லப்பட்ட விவாஹங்கள் சேர்ந்தோ தனித்தனியாகவோ செய்யத் தகுந்த வைகளேயாகும்; முற்கூறிய காந்தர்வம், ராக்ஷஸம் என்ற இவ்விரண்டு விவாஹங்களும் க்ஷத்திரியனுக்கு தர்மத்தை விட்டு விலகாத வைகளாக வேயாகின்றனவென்பது மனு முதலியோரின் கருத்தாக இருக்கின்றது. ஸ்திரீ புருஷர்கள் முதலில் ஒருவரை யொருவர் நேசித்துப்பிறகு அதற்கு விரோதியாக இருப்பவர்களைப் போர்க்களத்தில் வென்று

அக்கன்னிகையை மணம் புரிவது காந்தர்வம் ராக்ஷஸம் என்ற இரண்டு விவாஹஞ் சேர்ந்ததாக ஏற்படுவதால் இவ்விவாஹமே காந்தர்வம், ராக்ஷஸம் என்ற இரண்டும் சேர்ந்த மிச்ரவிவாஹம் எனப்படும். இவ்விதங்கூறிய பிராம்மம் முதலிய 8 விவாஹங்களின் லக்ஷணமறிதலவச்யமாதல் பற்றி அதை யுபதேசிக்கும் மனுவசனங்களை பின்னர் எழுதுவாம்—

आच्छाद्य चार्चयित्वा च श्रुतिशीलवते स्वयम् ।
आहूय दानं कन्यायाः ब्राह्मो धर्मः प्रकीर्तितः ॥

சிறந்த வஸ்திரங்களைக்கன்னிகை, வரன் இருவர்க்கும் கொடுத்து அணியச்செய்தும், சிறந்த ஆபரணாதிகளாலலங்கரித்தும், சிறந்தவேத வித்யை சிறந்த ஒழுக்கம் இவைகளுள்ளவனும், பிரார்த்திக்காதவனுமானவரனையழைத்து அவனுக்குக் கன்னிகையைத் தானஞ் செய்வது தர்மமான பிராம்மவிவாஹம் எனப்படும்.

यज्ञे तु वितते सम्यक् ऋत्विजे कर्मकुर्वते ।
अलङ्कृत्य सुतादानं दैवं धर्मं प्रचक्षते ॥

தன்னால் ஆரம்பிக்கப்பட்டு நடத்தப்படும் யாகத்தில் ருத்விக்காக விருந்து கர்மத்தைச்செய்கின்றவனை வஸ்திராலங்காராதிகளால் அலங்கரித்து அவனுக்குச் செய்யும் கன்னிகாதானத்தை தைவ விவாஹம் எனச்சொல்லுகின்றனர்.

एकं गोमिथुनं द्वे वा वरादादाय धर्मतः ।
कन्याप्रदानं विधिवदार्षो धर्मस्स उच्यते ॥

வரனிடமிருந்து ஆண்பெண் என்ற இரண்டு சேர்ந்த ஒரு கோமிதுனத்தையோ, அல்லது அவற்றின் இரண்டு மிதுனத்தையோ யாகாதி தர்மசித்திக்கு வேண்டியோ, திரும்பவும் கன்னிகைக்குக் கொடுப்பதற்காகவோ பெற்றுக் கொண்டு அவனுக்குக் கன்னிகையைத் தானஞ் செய்வது ஆர்ஷம் என்ற விவாஹமாகச் சொல்லப்படுகின்றது.

सहोभौ चरतां धर्ममिति वाचा ऽनुभाष्य च ।
कन्याप्रदानमभ्यर्च्य प्राजापत्यो विधिस्स्मृतः ॥

"இருவருஞ் சேர்ந்து தர்மத்தையனுஷ்டிக்ககடவீர்கள்" என கன்னிகாதான காலத்தில் வாயினுல் சொல்லி திட்டப்படுத்தி வஸ்திராதிகளாலங்கரித்துச் செய்யப்படும் கன்னிகாதானம் ப்ராஜாபத்யம் என்றவிவாஹமாக எண்ணப்படுகின்றது.

ज्ञातिभ्यो द्रविणं दत्वा कन्यायै चैव शक्तितः ।
कन्याप्रदानं स्वाच्छन्द्यादासुरो धर्म उच्यते ॥

கன்னிகையின் பிதா முதலியவர்களுக்கோ, கன்னிகைக்கோ தனது சக்திக்குத்தக்கபடி தனத்தைக் கொடுத்து தனதிஷ்டப்படி கன்னிகையைப் பெறுவது (மணப்பது) ஆஸுர விவாஹம் எனப்படும்.

इच्छयान्योऽन्यसंयोगः कन्यायाश्च वरस्यच ।
गान्धर्वस्स तु विज्ञेयो मैथुन्यः कामसंभवः ॥

கன்னிகைக்கும், வரனுக்கும் ஒருவருக்கொருவரிடமுண்டான ஆசை காரணமாக ஆலிங்கனம் முதலியதையுடையசேர்க்கையானது காந்தர்வவிவாஹம் எனப்படும். இந்த விவாஹம் ஒருவரை யொருவர் நேசிப்பதன் மூலமுண்டாவதால் மைதுனத்திற்கு (புணர்ச்சிக்கு) ஹிதமானதாகவுள்ளது. பொதுவாய் எல்லாவிவாஹமும் புணர்ச்சிக்கு ஹிதமானதாகவே இருக்க இங்கு திரும்பவும் **मैथुन्यः** என்று கூறியபடியால் ஒருவரை யொருவர் நேசித்து முதலில் புணர்ச்சி ஏற்படினும் அதனுல் எவ்வித விரோதமுமில்லை என்றும், காந்தர்வம் என்ற சாஸ்திரீய விவாஹமாகவே அதைக்கொள்ள வேண்டும் என்றும் அதன் கருத்தென குல்லூகபட்டர் தமது உரையில் எழுதி இருக்கிறுர்.

हत्वा छित्वा च भित्वा च क्रोशन्तीं रुदतीं गृहात् ।
प्रसह्य कन्याहरणं राक्षसो विधिरुच्यते ॥

பலாத்காரமாகக் கன்னிகையைக் கொண்டு போகுதல் ராக்ஷஸவிவாஹம் எனப்படும். அவ்விதம் பலாத்காரமாக வரன் கன்னிகையை எடுத்துச்செல்லும் பொழுது கன்னிகையின் பிதா முதலியவர்கள் வரனுடைய சக்தி விசேஷத்தைக்கண்டு உபேக்ஷையாக இருந்து விடுவார்களேயானல் இங்கு ஒருவரையும் ஹிம்ஸிக்கவேண்டிவராது. அவ்விதமின்றிக் கன்னிகையின்பிதா முதலியவர்கள் சத்துருக்களாகி இவனுடன் சண்டைசெய்வார்களாயின் சண்டையில் அவர்களைக் கொன்றே, அல்லது அங்கத்தைவெட்டியோ அல்லது அவர்கள் நகரத்திலுள்ள மதில் முதலிய வற்றைத் தகர்த்தோ, "ஓபிதாவே! ஓ ஸஹோதரனே! திக்கற்றவளாய் யாரோவொருவனல் கொண்டுபோகப்படுகின்றேன்" என்று கன்னிகை கண்ணீர் விட்டுக் கதறினும் அவளை விடாது பிதாமுதலியோரின் வீட்டினின்று எடுத்துச் சொல்லுதலும் ராக்ஷஸ விவாஹத்தில் நிகழும் காரியங்களாகும்.

सुप्तां मत्तां प्रमत्तां वा रहो यत्रोपगच्छति ।
स पापिष्ठो विवाहानां पैशाचश्चाऽष्टमो मतः ॥

கன்னிகை தூங்கும் பொழுதோ, மத்யபானஞ் செய்துமதிமயங்கி இருக்கும் சமயத்திலோ, புத்தி ஸ்வாதீனமில்லாத சந்தர்ப்பத்திலோ ஒருவருமில்லாத காலத்தில் அவளைப் புணர முயற்சிப்பது மேற் கூறிய விவாஹங்களுள் மிகவும் தாழ்ந்ததான பைசாசம் என்ற விவாஹமாகும். மேற்படித்த வசனங்களால் விவாஹத்தை 8 விதமாகப் பிரித்து அவற்றுள் 8 வதான பைசாச விவாஹத்தை எந்தவர்ணத்தாரும் செய்யக் கூடாதென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. மேலும்

ब्राह्मादिषु विवाहेषु चतुर्ष्वेवाऽनुपूर्वशः ।
ब्रह्मवर्चस्विनः पुत्राः जायन्ते शिष्टसंमताः ॥

रूपसत्वगुणोपेता धनवन्तो यशस्विनः ।
पर्याप्तभोगा धर्मिष्ठा जीवन्ति च शतं समाः ॥

பிராம்ஹம், தைவம், ஆர்ஷம், பிராஜாபத்யம் என்ற இன்னுன்கு விவாஹங்களைச் செய்துகொண்ட தம்பதிகளுக்கு ஜனிக்கும் புத்திரர்கள் பிரும்மதேஜஸ் உள்ளவர்களாகவும், சிஷ்டர்களிடத்துப் பிரியமுள்ளவர்களாகவும் ஜனித்து அழகிய சரீரகாந்தியும், எதிலும் களங்கமற்ற தெளிவான அறிவும், தயை முதலிய 8 ஆத்ம குணங்களுமுள்ளவர்களாகவும், தனமுள்ளவர்களாகவும், நல்லகீர்த்தியுள்ளவர்களாகவும், இஷ்டப்படி கிடைத்த வஸ்திராபரணாதிகளை யனுபவிப்பவர்களாகவும், தார்மிகர்களாகவுமாகி 100 வருஷகாலம் ஜீவித்து மிருக்கின்றனர்.

इतरेषु च शिष्टेषु नृशंसाऽनृतवादिनः ।
जायन्ते दुर्विवाहेषु ब्रह्मधर्मद्विषस्सुताः ॥

மீதமான காந்தர்வம், ஆஸுரம், ராக்ஷஸம், பைசாசம் என்ற இன்னுன்குவித விவாஹங்களைச்செய்து கொண்ட தம்பதிகளுக்கு ஜனிக்கும் குழந்தைகள், பிறரை ஹிம்ஸிப்பவர்களாகவும், பொய்சொல்லும் ஸ்வபாவமுள்ளவர்களாகவும், வேதத்திலும், அதில் சொல்லப்பட்ட யாகம் முதலிய சத்கர்மங்களிலும் துவேஷமுள்ளவர்களாகவும் இருப்பார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே மேற்கூறிய 8 விவாஹங்களுள் மேற்சொன்ன **प्रसुग्मन्ता** என்ற மந்திரத்தை ஜபிக்கவேண்டிய வரப்ரேக்ஷணம் என்ற விவாஹாங்கமானது மூன்றுவதான ஆர்ஷ விவாஹத்திலும் ஐந்தாவதான ஆஸுர விவாஹத்திலும் தான் சம்பவிக்குமே யல்லாதுமீதமுள்ள விவாஹங்களில் சம்பவிப்பதில்லை என்று கிருஹ்ய ஸூத்திரபாஷ்யத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

நமது தேசத்தில் ஆர்யப்பிராம்மண குடும்பங்களில் சுமார் 25 வருஷங்களுக்கு முந்திய காலம்வரைக் கன்னிகைக்குப் பணங்கொடுத்தே விவாஹமானது பெரும்பாலும் நடந்து வந்திருக்கிறது. ஆயினும் அவ்விவாஹத்தை மனுஸ்மிருதியில் சொல்லப்பட்ட 8 வித விவாஹங்களுள் 5 வதான ஆஸுரவிவாஹமாக எண்ணுவதற்கும் ஒரு சமயம் இடமுண்டு. அவ்வித ஆஸுர

விவாஹம் நடைபெற்ற தம்பதிகளுக்குப் பிறந்த குழந்தைகளே பெரும்பாலோ ராயிருப்பது பற்றி

इतरेषु च शिष्टेषु नृशंसाऽनृतवादिनः ।
जायन्ते दुर्विवाहेषु ब्रह्मधर्मद्विषस्सुताः ॥

என்ற வசனத்திற் சொல்லிய குணங்கள் நமதார்ய குடும்பத்தில் மேலிட்டு, நம்மனோர்களும் மகான்களுமான மஹர்ஷிகளுக்கிருந்து வந்த சக்தி, நீண்டவாயுள் முதலியனவற் றவர்களாய் நம்மனோராகிவிட்டனர் என்று எண்ணுவதற்குமிடமிருக்கின்றது. அதுபோக தத்காலம் சிலவாண்டுகளாய் நமதார்ய குடும்பங்களில் பொலிகாளையை விலைக்குவாங்குவதுபோல வரனைத்தேடிக் கன்னிகையின் பிதா முதலியவர்கள் ஆங்காங்கு அலைந்து திரிவதும், அதைக் கண்டவரனோ, வரனைச்சேர்ந்தவர்களோ வெகு முறுக்குடன் பொலிகாளைக்குச் சமயம் பார்த்து அதிகம் விலை கூறுவதுபோலக் கன்னிகையின் பிதா முதலியோரின் ரக்தத்தை உறிஞ்சி விடுவதெனச் சங்கல்பித்துக் கொண்டு பலவிதமான போட்டிகளைக் காட்டிப்பேசுவதும், உலகமறியாததில்லை. அவ்வளவிற்கும் இவர்கள் இணங்கிவிட்டால் கல்யாண காலத்தில் ஹா! ஹா!! கஷ்டம்! கஷ்டம்!! பெண்ணைப்பெற்றப்பாபிகளை ஹிம்ஸிப்பதென்றே தனது பந்து வர்க்கத்தில் முன் பின்பார்த்து மிராத சில காலிகளை யழைத்துக் கொண்டு வந்து பல வழிகளிலும் பெண்பெற்றவர்களை ஹிம்ஸித்து நடைபெறும் இக்காலத்திய இக்கொடிய விவாஹத்தை மேற்கூறிய 8 வித விவாஹங்களுள் எதிலும் சேர்ப்பதற்கில்லை.

சங்கை—முதலாவதான பிராம்ஹ விவாஹத்தில் இதைச் சேர்க்கக்கூடாதோவெனின்?

உத்தரம்—அந்தோ! அந்தோ!! மிக்க கஷ்டம். அப்பிராம்ஹ விவாஹ லக்ஷணத்தைச் சற்று கவனித்தால் இச்சங்கைக்கே முற்றிலு மிடமிருது. அதாவது—श्रुतिशीलवते—श्रुति என்ற வைதிகமான வித்யை யுள்ளவனும்,

अद्रोहः सर्वभूतानां कर्मणा मनसा गिरा ।
अनुग्रहश्च ज्ञानं च शीलमेतद्विदुर्बुधाः ॥

மனம், வாக், கர்மம் இவைகளால் எப்பிராணிகளுக்கும் துரோஹஞ் செய்யாமையும், எவ்விதமான குற்றங்களையும் பொருத்தல் என்ற அனுக்கிரஹமும், சாஸ்திரீயமானக் ஞானமுமே சீலம் எனப்படும் என்ற ஸ்மிருதி வசனத்திற் சொல்லிய சீல முள்ளவனுமான வரனைத்தேடிக் கன்னிகையைக் கொடுப்பதே பிராம்ம விவாஹம் எனச் சொல்லப் பட்டிருக்கிறது. தற்சமயமோ விவாஹம் என்றவார்த்தை வந்ததுமுதற்கொண்டே கன்னிகையின் பிதா முதலியோரை எவ்விதத்திலும் ஹிம்ஸித்தே தீருகின்றதென்று கங்கணங் கட்டிக்கொண்ட இப்பொலிகாளைக்கு மேற்கூறிய ஸ்மிருதி வசனத்திற் சொல்லிய சுருதியோ சீலமோ இருப்பதாக எவனுவது உறுதியாய் சொல்ல முடியுமா? ஒரு பொழுதும் சொல்ல முடியாது. ஆகவே இக்காலத்தில் நடைபெறும் இக்கொடிய விவாஹத்தை முதலாவதானப் பிராம்ஹ விவாஹத்தில் உறுதியாய்ச் சேர்ப்பதற்கில்லை.

சங்கை—கன்னிகையின் பிதா முதலியோர் ஆங்கிலங் கற்றவர்க்கே பெண்ணைக்கொடுப்பதென உறுதிசெய்துகொண்டு, அலைவதால்தான் அவர்கள் சமயம் பார்த்து அவ்விதம் ஹிம்ஸிக்கின்றனர். வேதாத்யயனஞ் செய்தவற்கட்குப் பெண்ணைக்கொடுத்தால் அவர்கள் மூலம் மேற்சொல்லிய கஷ்டங்கள் எதுவும், பெண்ணைப்பெற்றவர்க்கு வரமாட்டாது. ஆகவே வேதம்படித்த வைதிககுடும்பங்களில் நடைபெறும் விவாஹம் பிராம்ம விவாஹமாக ஆகலாமன்றோ?

உத்தரம்—ஆங்கிலங் கற்றவர்களின் அநேகக் குடும்பங்களில் பொலிகாளையை விற்பதுபோல பிள்ளைகளை விற்கும் வழக்கமே முற்றிலுமில்லாதிருப்பதை நாம் நேரில் வெகு விடங்களில் கண்டிருக்கிறோம். வேதம்படித்தவ னென்றும், சாஸ்திரம் படித்தவ னென்றும், அந்த வம்சத்தைச் சேர்ந்தவனென்றும், இந்த வம்சத்தைச் சேர்ந்தவனென்றும், ஆஹிதாக்னி என்றும்

சொல்லிக்கொள்பவர்களே தத்காலம் உறுதியாய் மேற்சொன்ன காளேவிற்கும் வழக்கத்தை வெகு ஸாவதானமாகக் கையாண்டு வருகின்றனர். ஆனல் ஓர் விஷயத்தில் இவருக்கும் மற்றவர்க கும் வித்தியாசமுண்டு. அதாவது—இவர்கள் தாங்கள் கற்ற ஸம்ஸ்கிருதபாஷையால் விலே கூறுகின்றனர். மற்றவர்களோ தங்களுக்குத் தெரிந்த பாஷையால் விலே கூறுகின்றனர். என் பதேயாம். ஆகவே வேதம் சாஸ்திரம் வந்த வைதிகர்கட்கும், அவைவராத மற்றவர்க்கும் விலே கூறும்பாஷையில் மட்டும் வித் தியாசமுண்டேயொழிய பொலிகாளேயை விற்பதில் வைதிகர்கள் எவ்விதத்திலும் பொலிகாளேயைவிற்கும் மற்றவர்க்குத் தாழ்ந் தவர்களல்லர். ஆகவே இக்காலத்தில் ஆர்யன் என்றும் ஆஸ்தி கன் என்றும் சொல்லிக்கொள்ளும் இம்மஹான்களின் குடும் பத்தில் நடைபெறும் விவாஹ மொன்ருவது மேற்கூறிய மனு வசனத்திற் சொல்லிய 8 விதப் பிரிவுகளில் சேர்ந்ததாகாவென் பது திண்ணம். ஆயினும் மனுவசனத்திற் கூறிய பிரிவுகளில் சேரக்கூடியதும் தர்மத்தை விட்டகலாததுவுமான முறையில் எவ்வார்ய குடும்பத்திலேனும் எங்கேனும் சாஸ்திரீய விவாஹம் நடைபெற்றிருக்கிறதானல், நடைபெறுகிறதானல், நடைபெறு மானல் அவர்களே உண்மையான ஆஸ்திக ஆர்யர்களென்றும், அம்மஹான்களாலேயே இக்கொடுமையான காலத்திலும் நமது தேயத்தில் ஆங்காங்கு சில நன்மைகள் உண்டாகின்றனவென் றும், உறுதியாய் நாம் கூறக்கூடும்.

(அ-கை) முதல் மந்திரத்தால் பிராம்மணர்களே யனுப்பி இரண்டாவது மந்திரத்தால் அவர்கள் போகும் வழியில் எவ் விதத்திங்கும் அவர்கட்கு நேரா வண்ணமும், அவர்கள் எடுத்த காரியம் எவ்வித இடையூறின்றி நடைபெறுமாறும் அருள்புரிய வேண்டுமாறு தேவதைகள்வேண்டப் படுகின்றனர்—

2. (ப-ரை) हे देवाः=ஓ தேவர்காள்! नः=எங்களுடைய सखायः= தோழர்களான பிராம்மணர்கள் येभिः=எந்த வழிகளால் वरेयम्= வரிக்கத்தகுந்த (யாசிக்கத்தகுந்த) கன்னிகையின் பிதா முதலி யோரைக்குறித்து यन्ति=செல்லுகின்றனரோ (ते=அந்த) पन्थाः=

வழிகள் अनृक्षरा:=கல்முள் முதலியனவற்றனவாகவும் ऋजव:= நேரில்கொண்டு சேர்க்கக்கூடியனவாகவும் सन्तु=இருக்கட்டும். न:=என்னையும், கன்னிகையையும் अर्यमा=அர்யமா என்ற தேவன் संनिनीयात्=நன்கு சேர்த்துவைக்கட்டும் भग:=பகன் என்ற தேவனும் (न:=எங்களை) संनिनीयात् = நன்கு சேர்த்து வைக்கட்டும். (आवयोश्च=எங்களுடைய) जास्पत्यम्=ஜாயாபதித்தன்மை (தாம்பத்தியம்) யானது समम्=குற்றமற்றதாயும் सुयमम्=நன்கு சேர்க்கப்பட்டதாயும் अस्तु=ஆகவேண்டும்.

(தா - ம்) வரன் தனது மித்திரர்களான பிராம்மணர்களைக் குறித்து "வேகமாக நல்வழிநடந்து கன்னிகையின் கிரஹஞ்செல்லவேண்டும்" என்று முதல் மந்திரத்தால் பிரார்த்தித்து இரண்டாவதான இம் மந்திரத்தால் கன்னிகையின் கிருஹத்தைக்குறித்துச் செல்லுங்கால் மார்க்கத்தில் ஸகலவிதமான ஸௌகரியங்களும் பிராம்மணர்களுக்குண்டாகவேண்டுமென்றுபிரார்த்திக்கின்றான்—ஓ தேவர்காள் இந்தப் பிராமணர்கள் செல்லும் வழி, முள்கல் முதலியனவற்றதாகவும் கன்னிகையின் கிருஹத்திற்கு நேரில் செல்லக்கூடியதாகவும், சுற்றுவழியாக இல்லாததாகவுமிருக்கவேண்டும். வரன், கன்னிகை இவர்களைச் சேர்த்துவைக்கும் விஷயத்தில் அதிகாரம் பெற்ற அர்யமா, பகன், என்ற இவ்விரு தேவர்களும் என்னையும் கன்னிகையையும் சேர்த்துவைத்து இணைபிரியாதவர்களாகவும் செய்யவேண்டும். (எ—று)

(அ - கை) सू०—स्वयं दृष्ट्वातृतीयां जपेत् வரன்தானே நேரில் கன்னிகையைப்பார்த்து மூன்றாவது மந்திரத்தைப்படிக்கவேண்டும் என்று சொல்லியபடி பின் எழுதப்படுகின்ற மந்திரத்தைக் கன்னிகையைப்பார்த்து ஜபிக்கவேண்டும்—

(मन्त्र:) अभ्रातृघ्नीं वरुणाऽपतिघ्नीं बृहस्पते ।
इन्द्राऽपुत्रघ्नीं लक्ष्म्यं तामस्यै सवितस्सुव ॥ ३ ॥

(ப - ரை) वरुण=ஓ வருண! (त्वम्=நீர்) अस्यै இந்தக் கன்னிகையின்பொருட்டு अभ्रातृघ्नीम्=உடன் பிறந்தவர்களை ஹிம்ஸிக்

காததாயிருக்கிற **लक्ष्यम्**=லக்ஷ்மியை அதாவது லக்ஷணத்தை **सुव**=கொடுப்பீராக. **बृहस्पते**=ஓ பிருஹஸ்பதியே! **त्वम्**=நீர் **अप-तिघ्नीम्**=பதிஹிம்ஸையைச் செய்யாததாக இருக்கின்ற(**लक्ष्यम्**=லக்ஷணத்தை **सुव**=கொடுப்பீராக) **इन्द्र**=ஓ இந்திரனே! (**त्वम्**=நீர்) **अपुत्रघ्नीम्**=புத்திரஹிம்ஸையைச் செய்யாததாக இருக்கிற (**लक्ष्यम्**=லக்ஷணத்தை **सुव**=கொடுப்பீராக) **सवितः** எல்லா ஜகத்தையு முண்டுபண்ணும் தேவனே! (**त्वम्**=நீர்) **ताम्**=எல்லாவிதமான லக்ஷணத்தையும் (**सुव**=கொடுப்பீராக.)

(தா - ம) பொதுவாய் ஸ்திரீகளுக்குரிய ஸாமுத்திரிகா லக்ஷணங்களையும், கன்னியின் குணங்களையும் முன்னர் தன்னால் அனுப்பப்பட்ட பிராம்ஹணர்கள் மூலம், வரன் தெரிந்து கொண்டு ஸாமுத்திரிகா லக்ஷணங்களிலோ அவளது குணங்களிலோ எவ்விதக்குறைவும் நேராதிருப்பதை யறிந்தபிறகே அவளை மணம்புரிய யத்னம் செய்திருக்கிறானாயினும், தான் அனுப்பிய பிராம்மணர்களால் நேரில் கண்டு அறியக்கூடாதபடி கன்னிகையின் ரஹஸ்யமான விடங்களிலோ, கவனக்குறைவால் பிராம்ஹணர்களால் அறியப்படாமல் பாஹ்ய ஸ்தானங்களிலோ உள்ள அங்கங்களின் அமைப்பால் நேரக்கூடிய தோஷங்களை ஸர்வசக்தி வாய்ந்த தேவர்கள் விலக்கக் கூடுமாதல் பற்றி அவர்களை ஸ்தோத்திரஞ்செய்தால் அத்தோஷங்களை விலக்கி மேன்மேலும் க்ஷேமத்தையே தரத்தக்க ஸாமுத்திரிகாலக்ஷணம் வாய்ந்தவளாக இக்கன்னிகையைச் செய்துவிடுவார்களெனக் கருதி கன்னிகையைப் பொதுவாய் பார்த்தவுடன் பின் வருமாறு அந்தந்தத் தேவதைகளை வேண்டுகிறான்—ஸஹோதராவிருத்தி என்பது வருணன் என்ற தேவன் மூலம் ஏற்படவேண்டுமானது பற்றி அவ்விதம் எனது ஸஹோதரனுடைய விருத்திக்குத் தடையாக இருக்கக் கூடிய அவயவங்களின் அமைப்பு ஏதேனும் இக்கன்னிகையின் சரீரத்திலிருக்குமானால் அவ்வமைப்பை மாற்றி எனது ஸஹோதர விருத்திக்குரிய அவயவங்களின் அமைப்பை இக்கன்னிகைக்குண்டுபண்ணவேண்டும் என்று முதலில் வருணன் பிரார்த்திக்கப்படுகின்றான். பிறகு ஓ பிருஹஸ்பதே! ஒரு குடும்பத்திலுள்ள ஸ்திரீயினுடைய பதிக்கு எவ்.

விதக்குறைவுமுண்டாகாம லிருப்பதென்பது தங்களுடையப் பிர ஸாதத்தால் உண்டாகவேண்டுமானதுபற்றி இக்கன்னிகையினது அவயவ அமைப்பில் அறிந்தும், அறியாமலும் பதிக்குத் தோஷத்தைத் தரக்கூடிய லக்ஷணங்களிருக்குமாயின் அவற் றைப்போக்கிப் பதியின் க்ஷேமத்திற்குரிய அவயவ அமைப்பை இக்கன்னிகைக்கு உண்டுபண்ணி அருள்புரியவேண்டும் என்று பிருஹஸ்பதி பிரார்த்திக்கபபடுகிருர். பிறகு, **सत्पुत्रेण कुलम्** என் றும், **नापुत्रस्य तु लोकोऽस्ति** என்றும் கூறியபடி வம்சாபிவிருத்தி யானது புத்திரப் பிராப்தியாலேற்படவேண்டியதாக ஆகின்றது. ஆதலால் ஒ இந்திரனே! தாங்கள் இக்கன்னிகையினிடம் அறி யக்கூடியனவாயும், அறியக்கூடாவனவாயும் அமைந்துள்ள புத் திரப் பிராப்திக்குப் பிரதிபந்தகமான லக்ஷணங்களைமாற்றிப் புத் திர விருத்திக்குரிய லக்ஷணத்தை இக்கன்னிகைக்குண்டு பண்ணி அருள்புரியவேண்டும் என்று இந்திரன் பிரார்த்திக்கப் படுகிருன். மேலும் இந்தக் கன்னிகையின் சரீராவயவத்தில் மற்றும் தோஷத்தையுண்டுபண்ணக்கூடிய அமைப்பு யாதேனு மிருக்குமாயின் அதைப்போக்கிச் சகலவிதமான க்ஷேமத்தை யும் தருவதென்பது எல்லாவற்றையும் படைத்த பகவானுலாகக் கூடுமாதல்பற்றி, ஸர்வ ஜகத்தையும் உண்டுபண்ணுகின்ற தேவதாசிரேஷ்டனுன ஒ பிரபுவே! தாங்கள் ஸர்வவிதமான க்ஷேமத்திற்கும் காரணமான லக்ஷணத்தை இக் கன்னிகைக்கு உண்டுபண்ணவேண்டும் என்று தேவதாசிரேஷ்டனுன பகவான் பிரார்த்திக்கப்படுகிருர். (எ—று)

(அ - கை) **ஸூ०। चतुर्थ्या समीक्षते** நான்காவதான **अघोरचक्षुः** என்ற மந்திரத்தால் கன்னிகையின் ஒவ்வொரு அவயவங்களை யும் வரன் உற்றுநோக்கவேண்டும் என்று கிருஹ்ய ஸூத்திரத் தில் சொல்லபபட்டிருக்கிறது. அவ்விதம் கன்னிகையின் ஒவ் வொரு அங்கங்களையும் உற்றுநோக்குங்கால் ஜபிக்கவேண்டிய மந்திரம் பின் வருமாறு—

(मन्त्रः) अघोरचक्षुरपतिघ्न्येधि शिवा पतिभ्यस्सुमनास्सुवर्चाः ।
जीवसूर्देवकामा स्योना शंनो भव द्विपदे शञ्चतुष्पदे ॥ ४ ॥

(ப - ரை) (देवधु=ஓ கன்னிகையே! त्वम्=நீ) अघोरचक्षुः=கெடுதலற்ற கண்ணுள்ளவளாகவும், अपतिघ्नी = பதிஹிம்ஸையைச் செய்யாதவளாகவும் एधि=விருத்தியடைவாயாக पतिभ्यः பர்த்தா, மைத்துனன் முதலியோருக்கு शिवा=அனுகூலையாகவும் सुमनाः= நல்ல மனதுள்ளவளாகவும், सुवर्चाः=நல்ல சரீர காந்தியுள்ளவளாகவும் जीवसूः=உயிருடன் கூடிய குழந்தைகளை யுண்டுபண்ணுகிறவளாகவும், देवकामा=தேவர்களைப் பூஜிப்பதில் விருப்பமுள்ளவளாகவும் स्योना=சுகத்தையுண்டுபண்ணுகிறவளாகவும், नः=எங்களுடைய द्विपदे=மனிதர்களுக்கும் (பந்துக்களுக்கும்) चतुष्पदे=பசு, குதிரை முதலியவற்றிற்கும் शम्=க்ஷேமத்தைச் செய்பவளாகவும் (भव=இருப்பாயாக)

(தா - ம்) ஓ கன்னிகையே! நீ கொடூரமான பார்வையற்றவளாகவும், எவ்விதத்திலும் பதியை ஹிம்ஸிக்காத வளாகவும், ஒவ்வொரு நாளும் விருத்தியடைந்து வருவதுடன் எனக்கும் எனது ஸஹோதரர் முதலியவர்க்கும் எப்பொழுது மனுகூலையாகவு மிருக்க வேண்டும். மேலும் எக்காரணம் பற்றியும் எச்சமயத்திலும் மாறுதலையடையாது மனத்தை நல்வழியில் செலுத்துவதுடன் சரீரத்தில் எவ்வித அசுத்தமுமில்லாது சுத்தமாகவும் வைத்துக் கொள்வாயாக. இவ்விதம் நடக்கும் உனக்குப் பிறக்கும் குழந்தைகள் யாவும் நீடித்த காலம் ஜீவித்திருக்க வேண்டுமாறு நான் வேண்டுகிறேன். அதற்குத் தேவதாராதனம் இன்றியமையாததானதுபற்றிதேவதைகளையாராதிப்பதில் உனக்கு விருப்பமிருக்கவேண்டும். மேலும் நீ எனது குடும்பத்திலுள்ள மனித வர்க்கத்திற்கும், பசு, குதிரை முதலிய வற்றிற்கும் எப்பொழுதும் நன்மையையே செய்பவளாகவு மிருப்பாயாக. (எ-று)

(அ - கை) ஸூ॰। अङ्गुष्ठेनोपमध्यमयाचाङ्गुल्या दर्भं संगृह्य उत्तरेण यजुषा तस्या भ्रुवोरन्तरं संमृज्य प्रतीचीनं निरस्येत् (க॰ 4. ஸூ॰ 5.) கட்டைவிரலாலும் பவித்திர விரலாலும் தர்ப்பத்தைப் பிடித்துக் கொண்டு பின் எழுதப்படும் மந்திரத்தை ஜபித்து அக்கன்னிகையினுடைய இரண்டு புருவங்களைத்துடைத்து கன்னிகைக்குப்

பின்புறமாகப் போடவேண்டும் என்று சூத்திரத்திற் சொல்லிய படி செய்யும்பொழுது படிக்கவேண்டிய மந்திரம் பின்வருமாறு—

(मन्त्रः) इदमहं या त्वयि पतिघ्न्यलक्ष्मिस्तान्निर्दिशामि । ५ ॥

(ப - ரை) (हेवधु=ஓ கன்னிகையே! त्वयि=உன்னிடத்தில் पतिघ्नी=பதிஹிம்ஸையைச் செய்கின்ற या अलक्ष्मिः=எந்த அவலக்ஷணமுண்டோ ताम्=அதை अहम्=நான் निर्दिशामि=தர்ப்பத்தால் துடைப்பதென்ற இக்கார்யத்தால் போக்குகிறேன். इदम्=துடைத்த தர்ப்பத்தை எரிதலானது (अलक्ष्म्या एव निरसनम्=அவலக்ஷணத்தையே விலக்கினதாக भवेत्=ஆகும்.)

(தா - ம்) தர்ப்பத்தைக்கையிலெடுத்து மேற்படித்த மந்திரத்தைச் சொல்லிக் கன்னிகையின் இரண்டு புருவங்களையும் துடைத்து, அவளது பின்புறத்தில் துடைத்த தர்ப்பத்தைப் போடுதலால் கன்னிகையி னிடத்துள்ள பதிஹிம்ஸைக்குரிய அவலக்ஷணத்தையே நீக்கிவிட்டதாக ஆகிறது. (எ-று)

(அ - கை) सू०। प्राप्ते निमित्ते उत्तरां जपेत् । (ख० 4. सू० 6.) தாய் முதலியோரோ, கன்னிகையோ ஒருவரை யொருவர் விட்டுப் பிரியவேண்டிவருவதை மனத்தால் எண்ணும் பொழுது துக்கம் மேலிட்டு ரோதனம் (கண்ணீர் வடித்தல்) ஏற்பட்டால் அப்பொழுது 6 வது மந்திரத்தை ஜபிக்க வேண்டும் என்று கிருஹ்யஸூத்திரத்திற் சொல்லப்பட்டிருக்கிறது. அம்மந்திரம் பின்வருமாறு—

(मन्त्रः) जीवां रुदन्ति विमयन्ते अध्वरे दीर्घामनुप्रसितिं दीधियुर्नरः ।
वामं पितृभ्यो य इदं समेरिरे मयः पतिभ्यो जनयः परिष्वजे॥ ६ ॥

(ப-ரை) ये=எந்தக் கன்னிகையின் பந்துஜனங்கள் पितृभ्यः=பிதுருக்களுக்கு वामम्=திருப்திகரமானதும் पतिभ्यः=பர்தாவான நமக்கு मयः=சுகத்தை யுண்டுபண்ணக்கூடியதும் जनयः=கன்னிகையினுடைய परिष्वजे=ஆலிங்கனத்திற்கு (पर्याप्तम्=சாதனமான தூமான) इदम्=இந்த விவாஹகார்யத்தை समेरिरे=நடத்திவைத்த

னரோ ते=அந்த नरः=மனிதர்கள் जीवाम्=உயிருடனிருக்கிற கன்னிகையைக்குறித்து अध्वरे=ஹிம்ஸையற்ற இவ்விவாஹ கார்யத்தில் रुदन्ति=அழுகின்றனர். (इतियत्=என்பது யாதுண்டோ तत्=அதனால்) विमयन्ते=மாறுதலான கார்யத்தைச் செய்கின்றவர்களாகின்றனர். அதாவது சந்தோஷப்படவேண்டிய காலத்தில் அதற்கு மாறாக துக்கப்படுகின்றனர். (तद्दुःखमुत्सृज्य=அந்தத் துக்கத்தை விட்டு) दीर्घाम्=நீண்ட காலம் தொடர்ச்சியாக இருக்கக்கூடிய प्रसितिम्=எங்களது மனத்தின் ஒற்றுமையை अनुदीधितियुः=அடிக்கடித் தியானஞ் செய்யக்கடவர்.

(தா - ம்) வெகுகாலம் பிரேமையுடன் வளர்த்துவந்த கன்னிகையின் பிதா மாதா முதலியோருக்கு கன்னிகையைப் பிறர்க்குத் தானஞ் செய்யும் சமயத்தில் குழந்தையை விட்டுப்பிரிதல் காரணமாய்த் துக்கம்மேலிட்டு கண்ணில்நீர்வடியக் கூடுமாயினும், அவர்கள் அவ்விதஞ்செய்வது தகாதகாரியமேயாகும். ஏனெனில் கன்னிகையைப் பிறர்க்குத் தானஞ் செய்துவிட்டபோதிலும் உயிருடன் தானே இருக்கிறாள். அவ்விதமுயிருடனிருக்கும் கன்னிகையைக் குறித்து இவர்கள் கண்ணீர் விடுவது தவறானகார்யமே. மேலும் இக்கன்னிகையும், நானும் நீண்டகாலம் ஒருவரையொருவர் நேசித்து மிக்கப்பிரேமையுடன் வாழப்போவதையுத்தேசித்து சந்தோஷத்தையடையவேண்டியதாக இருக்க இவர்கள் இவ்விதஞ் செய்வது தவறானகார்யமாகும். மேலும் பிதுருக்களின் கடனைத் தீர்த்துக்கொள்ளுவதற்கும் எனக்குச் சுகமுண்டாவதற்கும் இந்த விவாஹகார்யம் சாதனமாக இருக்கின்றதுபற்றி சுபகாலத்தில் கண்ணீர் வடிப்பது தகாதகாரியமேயாகும். (எ-று.)

(அ-கை) सू०। युग्मान्समवेतान् मन्त्रवत उत्तरया अद्भ्यः प्रहिणुयात्। (खण्डः 4. सूत्र-7.) கன்னிகைக்கு ஸ்நானஞ்செய்து வைப்பதற்காகத் தீர்த்தத்தைக்கொண்டு வரவேண்டித்தனது(வரனது) கார்யத்தையேச் சொந்தக்கார்யமாகக் கருதுகின்றவர்களும்,மந்திரம், பிராம்மணம் இவைகளை நன்கறிந்தவர்களுமான இரட்டைப் படையான பிராம்மணர்களை व्युत्क्रूरम् என்ற மந்திரத்தால் வரன்

அனுப்பவேண்டும் என்று கிருஹ்யஸூத்திரத்திற் சொல்லப் பட்டிருக்கிறது. அம்மந்திரம் பின்வருமாறு—

(मन्त्रः) व्युक्षत्क्रूरमुदचन्त्वापः, आस्यै ब्राह्मणास्स्नपनꣳहरन्तु ।

अवीरघ्नीरुदचन्त्वापः ॥ ७ ॥

(ப - ரை) (**अपाम्**=ஜலத்தினுடைய) **क्रूरम्**=தீமைக்குச் சாதனமான பாகங்கள் **व्युक्षत्**=விலகிவிடட்டும். **आपः**=நன்மைக்குச் சாதனமான தீர்த்தம் **उदचन्तु**=வெளிக்கிளம்பிவரட்டும். **ब्राह्मणाः**=பிராம்மணர்கள் **आस्यै**=இந்தக் கன்னிகைக்கு **स्नपनम्**=ஸ்னனத்திற்காக வேண்டிய தீர்த்தத்தை **हरन्तु**=கொண்டுவரட்டும். **अवीरघ्नीः**=புத்திரநாசத்தையுண்டுபண்ணாத **आपः**=தீர்த்தங்கள் **उदचन्तु**=வெளிக்கிளம்பிவரட்டும்.

(தா - ம்) சாஸ்திரம் அனுபவம் இவைமூலம் அறியக் கூடியனவாய் ஜலத்திற் சில குணதோஷங்களிருக்கின்றன வாதலானும், அவைகள் அந்த ஜலத்தை உபயோகிக்கின்றவர்களிடம் ஸங்கிரமிக்குமாதலானும், கன்னிகைக்கு ஸ்னனஞ்செய்து வைக்க வேண்டித் தீர்த்தத்தைக் கொண்டுவருவதற்காக அனுப்பப்பட்டப் பிராம்மணர்கள் புத்திரநாசத்தைக் கொடுக்கும் தோஷமற்றதும், இதற்குமுன் ஒருவரும் விழுந்து மரணத்தையடையாததும், மற்றும் தீமைகளுக்குரிய சகலவிதமான தோஷமற்றதுமான தீர்த்தத்தை எடுத்துவரவேண்டும் என்று வரன் இம்மந்திரத்தால் பிரார்த்திக்கிறான். **अवीरघ्नीः** என்ற விசேஷணத்தைச் சொல்லுவதற்காக மறுபடியும் **आपः उदचन्तु** என்ற இவ்விரண்டு பதங்களும் படிக்கப்படுகின்றன. (எ - று)

(அ - கை) **सू० । उत्तरेण यजुषा तस्याश्शिरसि दर्भेण्वं निधाय** (**ख**-4. **सू**-8.) **अर्यम्णो अग्निम्** என்ற மந்திரத்தால் கன்னிகையின் சிரஸில் தர்ப்பத்தால் செய்த கலவடையை வைக்கவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அம்மந்திரம் பின்வருமாறு—

(मन्त्रः) अर्यम्णो अग्निं परियन्तु क्षिप्रं प्रतीक्षन्ताꣳश्वश्र्वो देवराश्च । ८ ॥

.(ப - ரை) **श्वश्रुवः**=என்னுடையவும், கன்னிகையினுடையவும் தாய்மார்களும், **देवराश्च**=என்னுடையவும், கன்னிகையினுடையவும் ஸஹோதரர்களும் **अर्यम्णः**=சூர்யனுடைய (**प्रसादात्** = அனுக்கிரஹத்தால் **क्षिप्रम्**=சீக்கிரமாக **अग्निम्**=விவாஹாக்னியை **परियन्तु**=சூழ்ந்து நிற்கட்டும். (**परीत्यच**=சூழ்ந்து நின்று) **प्रतीक्ष-न्ताम्**=பார்த்துக்கொண்டிருக்கட்டும்.

(தா - ம்) ஓ அர்யமா என்ற தேவனே! இந்தக் கன்னிகையின் சிரஸில் வைக்கப்பட்ட தர்ப்பமயமான கலவடையானது எவ்விதம் வட்டமாக இருக்கின்றதோ அவ்விதம் என்னுடையவும், கன்னிகையினுடையவும் தாய், ஸஹோதரன் இவர்கள் இந்த விவாஹாக்னியைச் சூழ்ந்து நின்றுகொண்டு உமது பிரஸாதத்தால் இந்த விவாஹகார்யத்தைப் பார்த்துக்கொண்டிருக்கவேண்டும். கன்னிகை, நான் ஆக இருவருடைய பந்துவர்க்கங்களும் விவாஹாக்னியைச் சூழ்ந்துநின்று எங்களுடைய விவாஹத்தைப் பார்த்துக்கொண்டு எங்களிருவருக்கும் க்ஷேமத்தைப் பிரார்த்திப்பார்கள். அவ்விதமவர்கள் பிரார்த்திப்பது தங்களதுப் பிரஸாதத்தால் நிறைவேறவேண்டும் என்று கருத்து. (எ - று)

(அ - கை) **सू० ॥ तस्मिन्नुत्तरया दक्षिणं युगच्छिद्रं प्रतिष्ठाप्य ।** (**ख०-4. सू०-8.**) கன்னிகையின் சிரஸில் வைக்கப்பட்ட தர்ப்பமயமான கலவடையில் நுகத்தடியின் வலதுத்துவாரத்தை **खेऽनसः** என்ற மந்திரத்தால் வைக்கவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அம்மந்திரம் பின்வருமாறு—

खेऽनसः खेरथः खेयुगस्य शचीपते ।
अपालामिन्द्र त्रिः पूत्व्यकरत्सूर्यवर्चसम् ॥ ९ ॥

(ப - ரை) **शचीपत्ते**=இந்திராணியின் பதியான **इन्द्र**=ஓ இந்திரனே! **अपालाम्**=அபாலை என்ற கன்னிகையை **अनसः**=சக்கிரத்தினுடைய **खे**=துவாரத்திலும், **रथः**=ரதத்தினுடைய மேலுள்ள **खे**=துவாரத்திலும் **युगस्य** = நுகத்தடியினுடைய **खे**=துவாரத்திலும் (**प्रवेश्य**=நுழைத்து **बहिर्निर्गमय्य**=வெளியிலிழுத்து) **त्रिः**=மூன்

று சாதனம் வாயிலாக **पूत्वी**=பரிசுத்தையாகவும், **सूर्यवर्चसम्**=சூர்யனுக் கொப்பான காந்தியுள்ளவளாகவும் **अकरत्**=செய்தாய்.

(தா-ம்) ருக்ஸம்ஹிதையில் **कन्यावारवायति**=(ருக்ஸம்ஹிதை. 6-6-14) என்றவர்க்கத்தின் உபோத்காத(முகவுரை)த்தில் ருக்வேதப்பிராம்மணத்தில் பின் எழுதப்படும் பிரகாரம் ஓர் இதிஹாஸம் சொல்லப்பட்டிருப்பதாய் கூறப்பட்டிருக்கிறது. அதாவது— அபாலே என்று ஒரு கன்னிகை இருந்தாள். அவளுக்குச்சரீரத்தில் வெள்ளைக் குஷ்டம் என்ற ரோக முண்டாயிற்று. அந்த ரோகத்தை விலக்கிக் கொள்வதற்காக இந்திரனைக்குறித்து வெகு காலம் தவஞ் செய்து வந்தாள். முடிவில் இந்திரன் பிரசன்னனாய் தனது ரதத்தில் ஏறிவந்து அந்த அபாலே என்ற கன்னிகையைத் தனது ரதத்தின் சக்கிரத்தினுடைய துவாரத்தில் நுழைத்து வெளியே இழுத்தான். அவ்வித மிழுக்கும் பொழுது அவளுடைய சரீரத்திலுள்ள தோஷம் முள்ளம் பன்றி உருவம் கொண்டு வெளிப்பட்டது. பிறகு இந்திரன் ரதத்திலுட்காருமிடத்திலுள்ள துவாரத்தில் அபாலேயை நுழைத்து வெளியே இழுத்தான். அச்சமயத்தில் அவளது சரீரத்திலுள்ள தோஷம் உடும்பு உருவங்கொண்டு வெளிப்பட்டது. இந்திரன்மறுபடியும் அபாலேயைத் தனது ரதத்தினுடைய நுகத்தடியின் துவாரத்தில் நுழைத்து வெளியே இழுத்தான். அச்சமயத்தில் அவளது சரீரத்திலுள்ள தோஷம் ஓணன் உருவங்கொண்டு வெளிப்பட்டது. இவ்விதம் மூன்று சாதனங்களில் இந்திரன் நுழைத்து நுழைத்து எடுக்கவே அபாலேயின் சரீரத்திலுள்ள தோஷங்கள் யாவும்விலகி சூரியனுக்கொப்பான சரீரகாந்தியுள்ளவளாகிவிட்டாள் என்பதேயாம். இந்த இதிஹாஸத்தை மனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

ஓ இந்திரனே! அபாலே என்ற கன்னிகையை எவ்விதம் அவளது சரீரத்திலிருக்கின்ற தோஷங்கள் யாவையும் விலக்கி சூரியனுக்கொப்பான காந்தியுள்ளவளாகச் செய்தாயோ அவ்விதமே இந்தக் கன்னிகையையும் சரீரத்திலுள்ள தோஷங்கள் யாவையும் விலக்கி சூர்யனுக் கொப்பான சரீர காந்தியுள்ளவ

ளாகச் செய்யவேண்டும் என்று கருத்து. அபாலே என்ற கன்னிகைக்குச் சரீரகாந்தியை நுகத்தடியின் துவாரத்தில் நுழைத்து வெளியிலிடுப்பது என்ற உபாயத்தால் ஏற்படுத்தியபடியால் நுகத்தடியைக் கன்னிகையின் சிரஸில் வைத்துக்கொண்டு இம் மந்திரம் படிக்கப்படுக்கின்றது.

(அ - கை) **छिद्रे सुवर्णमुत्तरयाऽ न्तर्द्धाय (ख०-4. सू०-8)** அந்த நுகத்தடியின் வலது துவாரத்தில் **शन्ते हिरण्यम्** என்ற மந்திரத்தால் சுவர்ணத்தை வைக்கவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அம்மந்திரம் பின்வருமாறு

शन्ते हिरण्यꣳशमु* सन्त्वापश्शन्ते मेधी भवतु शंयुगस्य तृद्म ।
शन्त आपश्शतपवित्रा भवन्त्वथा पत्या तन्वꣳसꣳसृजस्व ॥ १० ॥

(ப - ரை) (**हेवधु**=ஓ கன்னிகையே !) **हिरण्यम्**=நுகத்தடியின் துவாரத்தில் வைக்கப்பட்ட சுவர்ணமானது **ते**=உனக்கு **शम्**=சுகத்தை விளைவிப்பதாக (**अस्तु**=ஆகவேண்டும்.) **आपः** ஜலம் **शम्**=ஸுகத்தை விளைவிப்பதாக **सन्तु** ஆகவேண்டும். **मेधी**=இந்த நுகத்தடியானது **ते**=உனக்கு **शम्**=சுகத்தை விளைவிப்பதாக **भवतु**=ஆகவேண்டும். **युगस्य**=நுகத்தடியினுடைய **तृद्म**=துவாரம் **शम्**=ஸுகத்தை விளைவிப்பதாக **भवतु**=ஆகவேண்டும். **शतपवित्राः**=அநேகம் வஸ்துக்களுக்குச்சுத்தியைக் கொடுக்கின்ற **आपः**=ஜலம் **ते**=உனக்கு **शम्**=ஸுகத்தை விளைவிப்பதாக **भवन्तु**=ஆகவேண்டும். **अथ**=இவ்விதம் அவ்வவற்றால் கிடைக்கின்ற க்ஷேமத்தைப் பெற்றபிறகு **पत्या**=பர்த்தாவான என்னுடன் **तन्वम्**=சரீரத்தை (**संभोगकाले**=சம்போக காலத்தில்) **संसृजस्व**=சேர்ப்பாயாக.

(தா - ம்) ஓ கன்னிகையே! உனது சிரஸில் வைக்கப்பட்ட நுகத்தடி, அதன் துவாரம், அதில் வைக்கப்பட்ட சுவர்ணம், பிராம்மணர்களால் கொண்டு வரப்பட்ட தீர்த்தம் இவைகளில்

---

* **शमुसन्त्वापः** என்றவிடத்திலுள்ள **उ** என்றபதத்திற்கு அர்த்தமில்லை என்று பாஷ்யத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

வெளியில் புலப்படாமல் யாதேனும் அனிஷ்டத்தை விளைவிக்கின்ற தோஷங்களிருக்குமாஞல் அவைகள் யாவும் விலகி உனக்கு க்ஷேமத்தை விளைவிக்கின்றனவாக ஆகவேண்டும். உனது சரீரத்தைச் சம்போககாலத்தில் எனது சரீரத்துடன் சேர்க்கவேண்டும். **शतपवित्राः** என்ற விசேஷணத்தை உபதேசிப்பதற்காக **आपः**=என்றபதம் மறுபடியும் போடப்பட்டிருக்கிறது. (எ - று)

முதல்கண்டம் முற்றிற்று.

இரண்டாவது கண்டம்

(அ - கை) **सू० उत्तराभिः पञ्चभिस्स्नापयित्वा** (**ख०**-4. **सू०**-8.) இரண்டாவது கண்டத்தில் படிக்கப்படுகின்ற முதல் ஐந்து மந்திரங்களால் கன்னிகைக்கு ஸ்னனஞ்செய்து வைக்கவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அம்மந்திரங்கள் பின்வருமாறு—

(मन्त्रः) हिरण्यवर्णाश्शुचयः पावकाः प्रचक्रमुर्हित्वा ऽवद्यमापः । शतं पवित्रा वितताह्यासु ताभिष्ट्वादेवस्सविता पुनातु ॥ १ ॥ हिरण्यवर्णाश्शुचयः पावका यासु जातः कश्यपो यास्वग्निः। या अग्निं गर्भं दधिरे सुवर्णास्तास्त आपश्शꣳस्योना भवन्तु ॥ २ ॥ यासाꣳराजा वरुणो याति मध्ये सत्याऽनृते अवपश्यञ्जनानाम् । या अग्निं गर्भं दधिरेसुवर्णास्तास्त आपश्शꣳस्योना भवन्तु ॥ ३ ॥ यासां देवादिवि कृण्वन्ति भक्षं या अन्तरिक्षे बहुधा निविष्टाः । या अग्निं गर्भं दधिरे सुवर्णास्तास्त आपश्शꣳस्योना भवन्तु ॥ ४ ॥ शिवेन त्वा चक्षुषा पश्यन्त्वापश्शिवया तन्वोपस्पृशन्तु त्वचं ते । घृतश्च्युतश्शुचयो याः पावकास्तास्त आपश्शꣳस्योना भवन्तु ॥ ५ ॥

1 (ப - ரை) **हिरण्यवर्णाः**=தங்கம்போல் களங்கமற்ற காந்தியுள்ளவைகளும் **शुचयः**=ஸ்வயம் சுத்திபெற்றவைகளும் **पावकाः**=மற்றவஸ்துக்களுக்கும் சுத்தியைக் கொடுக்கின்றவைகளுமான,

आपः=ஜலங்கள் **अवद्यम्**=தோஷத்தை **हित्वा**=தள்ளிவிட்டு **प्रचक्रमुः**= இந்தக்கன்னிகையினிடம் பிரவிருத்திக்கட்டும். அதாவது: இந்தக் கன்னிகையின் சரீர சம்பந்தத்தைப்பெறட்டும். **आसुहि**=இந்த ஜலங்களிலல்லவா **शतम्**=நூற்றுக்கணக்கான **पवित्राः**=பரிசுத்த மான தீர்த்தங்கள் **वितताः**=பரவி இருக்கின்றன. (புண்யதீர்த்தங்க ளென வழங்கப்படும் கங்கை, யமுனை முதலியவற்றின் சுவரூப மாக ஜலமே யாவதாலிவ்விதஞ் சொல்லப்படுகிறது) **ताभिः**=அந்த ஜலங்களால் **सविता**=ஸகலப் பிராணிகளையும் தூண்டுகின்ற **देवः**= ஸர்வேச்வரன் **त्वा**=உன்னை **पुनातु**=சுத்திபெற்றவளாகச் செய்யட் டும்.

2 (ப - ரை) **कश्यपः**=பிராணிகளின் ஸகலவிதமான நடத் தைகளையும் நேரில் பார்க்கின்ற ஸூர்யன் **यासु**=எந்த ஜலத்தில் **जातः**=உண்டாயினனோ (காலையில் சூரியன் உதயமடையும்பொழுது சமுத்திரக்கரையிலிருந்து பார்ப்பவர்களுக்கு ஜலத்தினின்றும் வெளிக்கிளம்புவதாய் தோற்ற முண்டாவதாலிவ்விதம் சொல்லப் படுகிறது.) **यासु**=எந்த ஜலத்தில் **अग्निः**=அக்னி **जातः**=உண்டா யிற்றோ (மின்னல் என்ற அக்னி ஜலத்தினுலுண்டாவதாலிவ் விதஞ் சொல்லப்படுகிறது) **याः**=எந்த ஜலம் **अग्निम्**=அக்னியை **गर्भम्**=மத்தியில் **दधिरे**=தரித்திருக்கின்றதோ (பஞ்சீகரணப்பிரக்கிரி யைப்படி ஜலத்தைப்பரிசோதித்துப் பார்த்தால் ஜலத்தில் அக்னி இருக்கின்றது புலப்படும். நவீன பௌதிகசாஸ்திரக்காரர்களும் இதை அங்கீகரிக்கின்றனர்) **ताः**=அந்த **हिरण्यवर्णाः**=சுவர்ணம் போல் களங்கமற்ற காந்தியை யுடையதாயும் **शुचयः**=ஸ்வயம் சுத்திபெற்றதாயும், **पावकाः**=மற்ற வஸ்துக்களையும் சுத்தியுள்ள தாய்ச் செய்கின்றதாயு மிருக்கின்ற **आपः**=ஜலம் **ते**=உனக்கு **शम्**=ஐஹிகஸௌகத்தைக் கொடுக்கின்றதாகவும், அல்லது துக்க நிவிருத்தியைச் செய்கின்றதாகவும் **स्योनाः**=பாரலௌகிக ஸௌகத் தைக் கொடுக்கின்றதாகவும் **भवन्तु**=ஆகவேண்டும்.

3 (ப - ரை) **यासाम्**=எந்த ஜலங்களுக்கு **राजा**=அரசனான **वरुणः**=வருணன்என்றதேவன் **जनानाम्**=ஜனங்களுடைய **सत्यानृते**= நற்செய்கை கெட்ட செய்கை இவற்றை **पश्यन्**=பார்த்துக்கொண்டு

(கவனித்துக்கொண்டு) **मध्ये**=ஜலத்தின் மத்தியில் **अवयाति**=செல்லுகின்றனே, சஞ்சரிக்கின்றனே, *याः= எந்த ஜலங்கள் **अग्निम्**= அக்கினியை **गर्भम्**=மத்தியில் **दधिरे**=தரித்திருக்கின்றனவோ **ताः**=அந்த **सुवर्णाः**=சுத்தமான நிறமுள்ள **आपः**=தீர்த்தங்கள் **ते**= உனக்கு **शम्**=ஐஹிகஸுகத்தைக் கொடுக்கின்றனவாகவும், **स्योनाः**=ஆமுஷ்மிக ஸுகத்தைக் கொடுக்கின்றனவாகவும் **भवन्तु**= ஆகவேண்டும்.

4 (ப - ரை) **यासाम्**=எந்த ஜலங்களுடைய **भक्षम्**=போஜனத்தை **दिवि** = ஆகாசத்திலிருக்கின்ற **देवाः**=தேவர்கள் **कृण्वन्ति**= செய்கின்றனரோ. **याः**=எந்த ஜலங்கள் **अन्तरिक्षे**=ஆகாசத்தில் **बहुधा**=அனேகம் விதமாக **निविष्टाः**=இருக்கின்றனவோ (தேவர்களும் தீர்த்தத்தை பருகுகின்றனர் என்பதும், மேகங்களில் ஜலங்கள் பலவாருகப் பிரிந்திருக்கின்றனவென்பதும் கருத்து) **याः**=எந்தஜலங்கள் **अग्निम्**=பாடபாக்னியை **गर्भम्**=மத்தியில் **दधिरे**= தரித்திருக்கின்றனவோ **ताः**=அந்த **सुवर्णाः**=களங்கமற்ற காந்தியையுடைய **आपः**=ஜலங்கள் **ते**= உனக்கு **शम्**=ஐஹிக சுகத்தைக் கொடுக்கின்றவைகளாகவும் **स्योनाः**=ஆமுஷ்மிக ஸுகத்தைக் கொடுக்கின்றவைகளாகவும் **भवन्तु**=ஆகவேண்டும்.

5 (ப - ரை) (**हेवधु**=புதிதாய் கல்யாணஞ் செய்யப்பட்ட ஓ கன்னிகையே!)**आपः**=ஜலங்கள் **त्वा**=உன்னை **शिवेन**=மங்களகரமான **चक्षुषा**=கண்ணினுல் **पश्यन्तु**=பார்க்கட்டும். **शिवया**=மங்களகரமான **तन्वा**=சரீரத்தால் **ते**=உன்னுடைய **त्वचम्**=தோலே **उपस्पृशन्तु**= தொடட்டும். **याः**=எந்த ஜலங்கள் **घृतश्च्युतः**=நெய்யின் ஸாராம்சத்தைப் பெருகவிடுகின்றனவோ, **शुचयः**=ஸ்வயம் சுத்தி பெற்றவைகளோ, **ताः**=அந்த **आपः**=ஜலங்கள் **ते**=உனக்கு **शम्**=ஐஹிக சுகத்தைக் கொடுக்கின்றவைகளாகவும் **स्योनाः**=ஆமுஷ்மிக சுகத்தைக் கொடுக்கின்றவைகளாகவும் **भवन्तु**=ஆகட்டும்.

---

* இதனுல் ஜலத்தில் காறி உமியுதல், மலமூத்திரங்களே விடுதல், வஸ்திரமின்றி ஸ்னனஞ் செய்தல் முதலிய கெட்டகார்யங்களேச் செய்பவர்களே ஜலாதிபதியான வருணன் சிக்ஷைக்குள்ளாக்குவான் என்று கூறப்படுகிறது.

(அ - கை) ஸூ॥ उत्तरया अहतेन वाससा आच्छाद्य-(आ.गृ. ख-4, ஸூ 8) இவ்விதம் கன்னிகைக்கு ஸ்னானஞ்செய்து வைத்த பிறகு परित्वागिर्वण: என்ற மந்திரத்தால் புதிய புடவையைக் கொடுத்து தரிக்கும்படி செய்யவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அம்மந்திரம் பின் வருமாறு—

(मन्त्रः) परि त्वा गिर्वणो गिर इमा भवन्तु विश्वतः ।

वृद्धायुमनुवृद्धयो जुष्टा भवन्तु जुष्टयः ॥ ६ ॥

(ப - ரை) (इन्द्र!=ஒ இந்திரனே! त्वम्=நீர்) गिर्वणः = ஸ்துதி ரூபமான சப்தங்களால் ஸேவிக்கத் தகுந்தவராகவோ, ஸேவிக்கப் பட்டவராகவோ ஆகின்றீர். (तादृशम्=அத்தகைய மஹிமை வாய்ந்த) त्वा=உம்மை इमाः=என்னுடைய இந்த ஸ்தோத்திர ரூபமான गिरः=வார்த்தைகள் सर्वतः (यथा)=இந்தப் புதியபுடவையானது இந்தக்கன்னிகையை எவ்விதம் எங்கும் சூழ்ந்து கொண்டிருக்கிறதோ அவ்விதம் परिभवन्तु=வசப்படுத்தட்டும். वृद्धायुम्= பெரியோர்களைச் சேவிக்கின்ற உன்னை अनुवृद्धयः=விருத்தியை யடைந்த வாக்குகள் जुष्टाः=சேவிக்கின்றவைகளாக भवन्तु=ஆக வேண்டும். (त्वया=உன்னால் गिरः=எனதுஸ்தோத்திரங்கள்) जुष्टयः= கவுரவிக்கத் தகுந்தவைகளாகவும் भवन्तु ஆகவேண்டும்.

(தா - ம்) ஓ இந்திரனே? இந்தக்கன்னிகை எவ்விதம் இந்தப் புதிய வஸ்திரத்தால் சரீரம் முழுவதும் சூழப்பட்டிருக்கிறாளோ அவ்விதமே யாவராலும் ஸ்துதிக்கத்தக்க மஹிமைவாய்ந்தவரும், பெரியோர்களைச் சேவிக்கின்றவருமான தாங்களும் தங்களுடைய பிரசாதத்தால் பெருக்கையடைந்த எனது ஸ்தோத்திர ரூபமான வாக்குகளால் வசப்படுத்தப் பட்டவராக ஆகவேண்டும். யாவராலும் ஸ்துதிக்கப் படுவதற்குரிய மஹிமை பெரியோர்களை ஸேவிப்பதாலேற் படுகின்றதென்பதுப் பிரசித்தம். அதையே वृद्धायुम् என்ற பதமும் தெரிவிக்கின்றது. ஆகவே இந்திரன் எனது ஸ்தோத்திரத்திற் கிணங்கி இந்தக் கன்னிகைக்கு ஸௌபாக்யத்தை விருத்தி செய்யவேண்டுமென்று கருத்து. अनु वृद्धयः என்ற விடத்திலுள்ள अनु என்ற பதத்திற்குப் பொரு

ளில்லை என்று பாஷ்யத்திற் சொல்லபபட்டிருக்கிறது. (எ - று)

(அ - கை) सू०॥ उत्तरया योक्रेण संनह्यति (ஆ.கு. ख-4, सू० 8.) आशासाना என்ற மந்திரத்தால், தர்ப்பத்தால் முறுக்கப்பட்ட கயிற்றை இடுப்பில் கட்டவேண்டு மென்று சொல்லப்பட்டிருக்கிறது. அம்மந்திரம் பின்வருமாறு—

(मन्त्रः) आशासानेत्येषा ॥ ७ ॥

இது மந்திரத்தின் ஆரம்பம் மாத்திரமே யன்றி இத்துடன் மந்திரம் பூர்த்தியடைவதில்லை. இதன் மீதமுள்ள பாகங்கள் தைத்திரீயஸம்ஹிதை முதல் காண்டம் முதல் பிரச்னம் 10வது அனுவாகத்தில் படிக்கப் பட்டிருக்கின்றன. அவற்றையும் இங்கு எழுதி வியாக்யானஞ் செய்கிறோம்—

आशासाना सौमनसं प्रजाꣳसौभाग्यं तनूम् ।

अग्नेरनुव्रता भूत्वा सन्नह्ये सुकृताय कम् ॥

(ப - ரை) **सौमनसम्** = மனத்திற்குச் சமாதானத்தையும், **सौभाग्यम्**=நல்லபாக்யத்தையும் **प्रजाम्**=ஆண்பெண்குழந்தையையும் **तनूम्** = சரீர விருத்தியையும் **आशासाना** = விரும்புகின்றவளான (**इयम्**=இந்தக் கன்னிகை) **अग्नेः**=அக்னியை **अनुव्रता**=அனுஸரித்தவளாக **भूत्वा**=ஆகி (**तिष्ठति**=இருக்கின்றாள். **एताम्**=இந்தக் கன்னிகையை **योक्त्रेण**=தர்ப்பத்தால் முறுக்கின கயிற்றினால்) **सुकृताय**=விவாஹம் என்ற புண்யகர்மாவில் அதிகாரம் ஏற்படுவதற்காக **कम्**=சுகமுண்டாகு மாறு **सन्नह्ये**=கட்டுகிறேன்.

(தா - ம்) ஓ அக்னியே! தங்களை யாராதிக்கும் விஷயத்தில் என்னுடன் ஒற்று நடக்கின்ற இந்தக் கன்னிகை, மனத்திற்கு எப்பொழுதும் கலக்கமற்ற நிலையையும், ஆண் பெண் சந்ததிப் பெருக்கையும், தனம், தான்யம், வீடு முதலிய பாக்யங்களையும், சரீரத்தின் காந்தி வளர்ச்சி முதலியவற்றையும் விரும்புகிறாள். மேற்குறித்த காமனைகள் நிறைவேறுவதற்காகவும், விவாஹம் என்றகர்மாவில் அதிகாரம் சித்திப்பதற்காகவும் தர்ப்பத்தால்

முறுக்கின கயிற்றை இந்தக்கன்னிகையின் இடுப்பில் கட்டுகிறேன். (எ - று)

(அ - கை) सू०॥ अथैनामुत्तरया दक्षिणे हस्ते गृहीत्वा अग्निमभ्यानीय, अपरेणाग्निमुदगग्रं कटमास्तीर्य तस्मिन्नुपविशत उत्तरो वरः (ஆ. गृ. ख-4, सू०. 9.) பிறகு पूषात्वेतो नयतु என்ற மந்திரத்தைப் படித்து கன்னிகையின் வலது கையைப் பிடித்து அக்னி சமீபம் அழைத்துவந்து அக்னிக்கு மேற்புறத்தில் வடக்கு நுணியாகப் பாயைவிரித்துப்போட்டு தென் புறத்தில் கன்னிகையும், வடபுறத்தில் வரனுமாக உட்காரவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. கன்னிகையை அக்னிசமீபத்தில் அழைத்துவரும் பொழுது ஜபிக்கவேண்டிய மந்திரம் பின்வருமாறு—

(मन्त्रः) पूषा त्वेतो नयतु हस्तगृह्याऽश्विनौ त्वा प्रवहतां रथेन ।
गृहान् गच्छ गृहपत्नी यथाऽसो वशिनी त्वं विदथमावदासि ॥ ८ ॥

(ப - ரை) पूषा=பூஷா என்ற தேவன் त्वा=உன்னை हस्तगृह्य=கையைப் பிடித்து इतः=இவ்விடமிருந்து (அக்னியின் அருகாமையைக் குறித்து) नयतु=அழைத்துச் செல்லட்டும். रथेन=(அக்னி ஸமீபஞ் சென்று ஹோமங்களை யனுஷ்டித்த பிறகு) வண்டியால் अश्विनौ=அச்வினீ தேவர்கள் त्वा=உன்னை प्रवहताम्=எனது கிருஹத்தைக் குறித்து அழைத்துச் செல்லட்டும். அதாவது அச்வினீதேவர்கள் நீ எனது கிருஹத்தைக் குறித்து வருவதில் அனுமதி கொடுக்கவேண்டும். அவர்களின் அனுமதி பெற்று எனது கிருஹத்திற்கு நீவருவாயாகில் உனக்கும், எனக்கும் மற்றுமுள்ள சுற்றத்தார்க்கும் ஆரோக்கிய · முண்டாகு மென்று கருத்து. (ततश्च=பிறகு) गृहान्=எனது வீட்டை यथा=எவ்விதம் गृहपत्नी=வீட்டிற்கு யஜமானியாக असः=ஏற்படுவாயோ तथा=அவ்விதம் गच्छ=அடைவாயாக. எனது கிருஹத்திற்கு வந்ததும் நீயே எனது கிருஹத்திற்கு யஜமானியாக ஆகக்கடவாய் என்று கருத்து. वशिनी = யஜமானியாக ஆன त्वम्=நீ विदथम्=யாகம் முதலிய சத்விஷயங்களைப்பற்றி आवदासि=சொல்லுவாயாக. யா

கம் முதலிய ஸத்கர்மங்களை யனுஷ்டிக்குமாறு நீயே என்னைத் தூண்டவேண்டும் என்று கருத்து.

இரண்டாவது கண்டம் முற்றிற்று.

மூன்றாவது கண்டம்

(அ - கை) सू॰॥ अग्नेरुपसमाधानाद्याज्यभागान्ते अथैनामादितो द्वाभ्यामभिमन्त्रयेत. (आ. गृ. ख. 4, सू॰ 10) அக்னிப் பிரதிஷ்டை முதல் ஆஜ்யபாகம் என்ற கர்மம் வரைச்செய்து முடித்துப் பின்னர் இந்தக் கன்னிகையைப் பார்த்து மூன்றாவது கண்டத்திலுள்ள முதல் இரண்டு மந்திரங்களைப் படிக்கவேண்டும் என்று சொல்லப் பட்டிருக்கிறது. அம்மந்திரங்கள் பின்வருமாறு—

(मन्त्रः) १ सोमः प्रथमो विविदे गन्धर्वो विविद उत्तरः ।
तृतीयो अग्निष्टे पतिस्तुरीयस्ते मनुष्यजाः ॥

२ सोमोऽददद्गन्धर्वाय गन्धर्वोऽददग्नये ।
रयिं च पुत्रांश्चादादग्निर्मह्यमथो इमाम् ॥

(ப-ரை)(1) सोमः=ஸோமன் என்றதேவன் (त्वाम्=உன்னை) प्रथमः= முதலாவதாக இருந்து கொண்டு विविदे=அடைந்தான். गन्धर्वः= கந்தர்வன் उत्तरः=இரண்டாவதாக இருந்துகொண்டு (त्वाम्=உன்னை) विविदे=அடைந்தான். अग्निः=அக்னிதேவன் ते = உனக்கு तृतीयः=மூன்றாவதான पतिः=பதியாக ஆகின்றான். मनुष्यजाः= மனுஷ்ய வகுப்பைச் சேர்ந்த நான் ते=உனக்கு तुरीयः=நான்காவதான (पतिः=நாயகன்.)

(2) முதல் மந்திரத்தால் உபதேசிக்கப்பட்ட ஸமாசாரமே வேறுப்பிரகாரத்தை யனுசரித்து இம்மந்திரத்தாலு முபதேசிக்கப் படுகிறது—(ப-ரை) सोमः=ஸோமன் என்றதேவன் गन्धर्वाय= கந்தர்வன் என்ற தேவனைக் குறித்து अददत्=கொடுத்தான். गन्धर्वः=கந்தர்வன் என்றதேவன் अग्नये=அக்னியின் பொருட்டு

अददत्=கொடுத்தான். **अथो**=பிறகு **अग्निः**=அக்னி என்ற தேவன் **रयिंच**=பணத்தையும் **पुत्रान् च**=புத்திரர்களையும் **इमाम्**=இந்தக் கன்னிகையையும் **मह्यम्** எனக்கு **अदात्** கொடுத்தார்.

(தா - ம்) ஸோமன் என்ற தேவன் இந்தக் கன்னிகையை முதலில் அபிமானிக்கிறுன். இரண்டாவதாக கந்தர்வன் அபிமானிக்கிறுன். மூன்றாவதாக அக்னி அபிமானிக்கிறுன். இவ்விதம் மஹானுபாவர்களான தேவர்களால் அபிமானிக்கப்பட்ட பிறகு இக்கன்னிகையை மனுஷ்யனான நான் அடைகிறேன். ஆகவே ஸோமன், கந்தர்வன், அக்னி ஆகிய தேவர்கள் இக்கன்னிகைக்குத் தனப்பெருக்கு, சந்தானவிருத்தி முதலியன உண்டாகுமாறு அருள் புரிந்த பின்னரே நான் இந்தக் கன்னிகையை அடைவதால் அதன் மூலம் எனக்கும் கன்னிகைக்கும் சகலவித நன்மைகளும் உண்டாகும் * (எ - று)

(அ - கை) **अथास्यै दक्षिणेन नीचा हस्तेन दक्षिणमुत्तानं हस्तं गृह्णीयात्** (ஆ. **गृ. ख** 4, **सू०** 11) பிறகு கவிழ்க்கப்பட்ட வலது கையினுல் கன்னிகையின் நிமிர்க்கப்பட்ட வலது கையினுடைய உயரத்தூக்கி இருக்கின்ற கட்டைவிரலின் மேலுள்ளபாகத்தைப் பிடிக்கவேண்டும். **सू०॥ यदि कामयेत स्त्रीरेव जनयेयमिति अङ्गुलीरेव गृह्णीयात्** (ஆ. **गृ. ख** 4, **सू०** 12) ஸ்திரீ பிரஜை மட்டுமே பிறக்கவேண்டுமென்று எண்ணினுல் கன்னிகையின் கட்டைவிரலைநீக்கி பாக்கியுள்ள விரல்களை மட்டுமே பிடிக்கவேண்டும். **सू०॥ यदि कामयेत पुमांस एव जनयेयमिति अङ्गुष्ठमेव सोभीवाङ्गुष्ठमभीव**

---

* இதுபோன்ற மந்திரங்களை யாதாரமாகக் கொண்டு ருதுமதீ விவாஹஞ் செய்தலே சாஸ்திர சம்மதமான தெனச்சிலர் கூறுவதற்கு, காலஞ் சென்ற மஹாமஹோ பாத்தியாய, வேதாந்த கேசரீ பங்காரு பிரும்மஸ்ரீ கணபதி சாஸ்திரிகளவர்கள் "வயோ நிர்ணயம்" என்றதொரு கிரந்தத்தில் மறுப்புரை எழுதியிருக்கின்றனர். இவ்விரண்டையும் ஆராய்ந்து பார்த்ததில் நமக்குத் தோன்றிய வபிப்பிராயத்தை இம்மந்திரப்பிரச்னத்தின் முகவுரையில் விரிவாய் ஆக்ஷேப சமாதானங்களுடன் பின்னர் வெளியிடுவதாய் சங்கற் பித்திருக்கிறேம். அம்முகவுரை மந்திரப் பிரச்ன மொழி பெயர்ப்பு முடிந்ததும் வெளிவரும்.

लोमानि गृह्णाति (ஆ·க்ரு· ஸ 4, ஸூ॰ 13) புருஷப் பிரஜை மட்டுமே உண்டாகவேண்டும் என்று விரும்பினல் கன்னிகையின் கட்டை விரலை மட்டும் தனது விரல்களின் ரோமங்கள் மேல் நோக்கி இருக்குமாறு பிடிக்கவேண்டும். இவ்விதம் கூறியதிலிருந்து கன்னிகையின் கட்டைவிரலும் வரனுடைய கட்டைவிரலும் மல்லாக்காகவே (நிமித்தப்பட்டதாகவே) யிருக்கவேண்டுமென்று பெறப் பட்டது. **ஸூ॰ ॥ गृभ्णामि ते इत्येताभिश्चतसृभिः** (ஆ· க்ரு· ஸ 4, ஸூ॰ 14.) மேற் சொல்லியபடி கையைப்பிடிக்கும் பொழுது **गृभ्णामिते** என்றது முதலிய நான்கு மந்திரங்களைப் படிக்கவேண்டும் என்று சொல்லப் பட்டிருக்கிறது. அம்மந்திரங்களாவன—

(मन्त्रः) ३ गृभ्णामि ते सुप्रजास्त्वाय हस्तं मया पत्या जरदष्टिर्यथाऽसः ।
भगो अर्यमा सविता पुरन्धिर्मह्यं त्वादुर्गार्हपत्याय देवाः ॥

४ ते ह पूर्वे जनासो यत्र पूर्ववहो हिताः ।
मूर्धन्वान् यत्र सौभ्रवः पूर्वो देवेभ्य आतपत् ॥

५ सरस्वति प्रेदमव सुभगे वाजिनीवति ।
तां त्वा विश्वस्य भूतस्य प्रगायामस्यग्रतः ॥

६ य एति प्रदिशस्सर्वा दिशोऽनु पवमानः ।
हिरण्यहस्त ऐरम्मस्सत्वा मन्मनसं कृणोतु ॥

3 (ப-ரை) (**हेकन्ये!** ஓ கன்னிகே!) **ते**=உன்னுடைய **हस्तम्**=கையை **सुप्रजास्त्वाय**=நல்ல ஸந்ததிகள் உண்டாவதற்காக, **पत्या**=பர்த்தாவான **मया**=என்னுடன் **जरदष्टिः** = கிழத்தனத்தை யடைந்தவளாக **यथा**=எவ்விதம் **असः**=ஆவாயோ **तथा**=அவ்விதம் **गृभ्णामि**=பிடிக்கிறேன். **भगः**=பகன் என்ற தேவனும், **अर्यमा**= அர்யமா என்ற தேவனும் **सविता**=சூர்யனும் **पुरंधिः**=இந்திரனும் **देवाः**=மற்றுமுள்ள தேவர்களும் **त्वा**=உன்னை **मह्यम्**=என்னுடைய பொருட்டு **गार्हपत्याय**=கிருஹஸ்தாச்ரமத்திற்காக **अदुः**=கொடுத்தனர்.

(தா - ம்) ஓ கன்னிகே! நல்ல சந்ததிகள் உனக்கு உண்டாவதற்காகவும், என்னுடன் இணைபிரியாது கிழப்பருவம் ஏற்படும்வரைச் சுகமாய் வாழ்வதற்காகவும் உன்னுடைய கையை நான் பிடிக்கின்றேன். பகன், அர்யமா முதலிய தேவர்கள் யாவரும் எனக்குக் கிருஹஸ்தாச்ரமத்தை ஏற்படுத்துவதற்காக உன்னைக் கொடுத்திருக்கின்றனர். அதாவது—அர்யமா முதலிய தேவர்களின் சம்மதியின் பேரில் இந்தப்பாணிக்கிரஹணம் என்ற கார்யம் நடைபெறுகின்றது. (எ - று)

4 यत्र=எந்த கிருஹஸ்தாச்ரமத்தில் पूर्वबह:=ஆதிகாலத்தில் விவாஹத்தைச் செய்துகொண்ட पूर्वे=முந்தின जनास:=ஜனங்களான ते=அந்தப் பகன் முதலிய தேவர்கள் हिता:=இருந்தனரோ देवेभ्य:=தேவர்களுள் प्रथम:=முந்தினவரான सौभ्रव:=அக்னி यत्र=எந்தக் கிருஹஸ்தாச்ரமத்தில் मूर्धन्वान्=தலைமை வஹித்தவராக आतपत्=பிரகாசித்தாரோ (तस्मै गार्हस्थ्याय=அந்தக்கிருஹஸ்தாச்ரமத்திற்காக) मह्यं त्वादु:=உன்னை என்னையும் பொருட்டு கொடுத்தனர்.

5 (ப - ரை) सुभगे!=நல்லபாக்யம் பெற்றவளும், वाजिनीवति=அன்ன ஸமிருத்தியைப் பெற்றவளுமான, அல்லது யாவராலும் ஸ்துதிக்கப் பட்டவளுமான सरस्वति=ஓ ஸரஸ்வதீதேவியே! इदम्=இந்தப் பாணிக்கிரஹணம் என்ற கார்யத்தை प्राव=நன்றாய்க் கார்ப்பாயாக. இதன் மூலம் நான் கன்னிகை ஆகிய இருவருக்கும் நன்மை யுண்டாகவேண்டும் என்று கருத்து. ताम्=ஜகத்தில் பிரஸித்திபெற்ற त्वा=உன்னை विश्वस्य=சகல விதமான भूतस्य=பிராணிகளுக்கு अग्रत: = முன்னிலையில் प्रगायामसि=நன்றாய் ஸ்தோத்திரஞ் செய்கிறோம்.

(தா - ம்) ஓ ஸரஸ்வதீ தேவியே ! நீ எவ்விதம் அளவற்ற பாக்யத்தையும், அன்னஸமிருத்தியையும் பெற்றிருக்கின்றாயோ அவ்விதமே நாங்களிருவம் இந்தப் பாணிக்கிரஹணம் என்ற கர்மாவைச் செய்துகொண்டது முதல் தனம், தான்யம், முதலிய போக்யவஸ்துக்களையும் போகங்களையும் அடைந்து வாழவேண்டுமாறு அனுக்கிரஹிக்கவேண்டும். அவ்விதம் நீ என்னை அனுக்

கிரஹிப்பதற்காக உனது மஹிமைகளைச் சகலப்பிராணிகளின் முன்னிலையிலும்வெளியிட்டு ஸ்தோத்திரஞ் செய்கிறேன். (எ-று)

6 (ப - ரை) यः पवमानः=எல்லாவற்றையும் சுத்திசெய்கின்ற எந்த வாயு सर्वाः=சமஸ்தமான प्रदिशः=கிழக்கு மேற்கு முதலிய மஹாதிக்குகளையும் दिशः=மூலைத் திக்குகளையும் अन्वेति=கிரமமாய் அடைகின்றாரோ. வாயுவினால் வியாபரிக்கப் படாத திக்கு கிடையாவென்பது கருத்து. हिरण्यहस्तः=தன்னை ஸ்துதிப்பவர்களுக்குக் கொடுப்பதற்காகச் சுவர்ணத்தைக் கையில்தரித்தவரும் ऐरम्मः=அன்னத்தை யுண்டுபண்ணுக்கின்ற அக்னிக்குச் சுஹிருத்துமான सः=அந்தவாயு त्वा=உன்னை मन्मनसम्=என்னிடம்பற்றுள்ளவளாக करोतु=செய்யவேண்டும்.

(தா - ம்) கிழக்குமுதலிய மஹாதிக்குகள், தென்கிழக்கு முதலிய அவாந்தரதிக்குகள் (மூலைத்திக்குகள்) முதலிய சகல திசைகளிலும் சஞ்சரிக்கும் வலிமையுள்ளவரும், எல்லா வஸ்துக்களுக்கும் சுத்தியைச் செய்கின்றவரும், உணவுப் பொருள்களை வேகும்படிச்செய்து உண்ணக்கூடிய நிலையை ஏற்படுத்துவதால் உணவைக்கொடுக்கின்ற அக்னிக்குத்தோழனும், தன்னை ஸ்துதிப்பவர்களுக்குக் கொடுப்பதற்காகத் தயாராய் கையிலேயே சுவர்ணத்தை வைத்துக் கொண்டிருப்பவருமான வாயுதேவன் உனது மனத்திற்குள் பிரவேசித்து என்னிடம் இடைவிடாத ஸ்நேஹத்தை யடையுமாறு செய்யவேண்டும். (எ - று)

விவாஹம் என்ற கர்மாவில் செய்யவேண்டிய முக்யமான கார்யங்களுள் இம்மந்திரத்தைச்சொல்லி கன்னிகையின்கையைப் பிடித்தல் என்பது மொன்றாகும். இதுவே "பாணிக்கிரஹணம்" என்றதாலும் குறிக்கப்படுகின்றது. இந்தப் பாணிக்கிரஹணத்திற்கு முன்னால் "மாங்கள்யதாரணம்" என்றதொருகார்யம் நமது சம்பிரதாயத்தில் நடைபெறுகின்றது. சாஸ்திரப்பயிற்சியற்றவர்கள் அதையே பிரதான கார்யமாகக்கருதி லக்னம் முதலியன தவறாவண்ணம் மிக்க ஜாக்கிரதையுடன் நடத்திவருகின்றனர் என்பது பிரத்யக்ஷமே. ஆயினும் கிருஹ்ய சூத்திரங்

களிலோ, மந்திரங்களிளோ இவ்விஷயத்தைப் பற்றிக் கொஞ்சமேனும் கூறவில்லை. பாணிக்கிரஹணம், சப்தபதீ முதலியனவே பிரதானமாய் உபதேசிக்கப் பட்டிருக்கின்றன. இக்கார்யங்களுள் ஒன்றான பாணிக்கிரஹணத்தைத்தான் நல்ல லக்னத்தில் தவறுவண்ணம் நடத்தவேண்டும் என்று சாஸ்திரமூலம் வெளியாகின்றது. ஆயினும் மாங்கள்யதாரணத்திற்கு மூலம்யாது என்பது முதலியவற்றைப்பற்றி முகவுரையில் விசாரிப்பாம்.

(அ - கை) **सू०॥ अथैनामुत्तरेणाग्निं दक्षिणेन पदा प्राचीमुदीचीं वा दिशमभिक्रमयति, एकमिष इति (आ. गृ. ख 4, सू०. 15)** பிறகு அக்னிக்கு வடவண்டையில் கன்னிகையை வலதுகாலால் கிழக்குதிசையைக் குறித்தோ வடக்குதிசையைக்குறித்தோ நடக்கும்படிச் செய்யவேண்டும். (அதாவது—வரன் கன்னிகையின் வலது காலைப்பிடித்து 7 அடி எடுத்து வைக்கவேண்டும்) என்று சொல்லப்பட்டிருக்கிறது. இஃதே "சப்தபதீ" என்ற விவாஹாங்கமாகும் அச்சமயம் ஜபிக்கவேண்டியமந்திரம் பின்வருமாறு—

७ एकमिषे विष्णुस्त्वान्वेतु, ८ द्वेऊर्जे, ९ त्रीणि व्रताय, १० चत्वारि मायोभवाय, ११ पञ्च पशुभ्यः, १२ षड्ऋतुभ्यः, १३ सप्त सप्तभ्यो होत्राभ्यो विष्णुस्त्वाऽन्वेतु ॥

(ப - ரை) இங்கு படிக்கப்பட்ட 7 மந்திரங்களுள் முதல் மந்திரத்தில் படிக்கப்பட்ட **विष्णुस्त्वान्वेतु** என்றபாகத்தைப் பின்னர்வருகின்ற 5 மந்திரங்களிலும் சேர்த்துக் கொள்ளவேண்டும். இவ்விதம் சேர்த்துக் கொள்வதற்காகவே 7வது மந்திரத்திலும் **विष्णुस्त्वान्वेतु** என்ற பாகம் மறுபடியும் படிக்கப்பட்டிருக்கிறது. **विष्णुः**=சகலப் பிரபஞ்சத்தையும் வியாபரித்திருக்கின்ற ஸ்ரீமன் நாராயணன் **इषे** = உனக்கு அன்னசமிருத்தி யுண்டாவதற்காக **एकम्**=ஓர் அடிதூரம் **त्वा**=உன்னை **अन्वेतु**=அனுசரித்து வரவேண்டும். **विष्णुः**=நாராயணன் **ऊर्जे**=உனக்கு பல விருத்தியுண்டாவதற்காக **द्वे**=இரண்டடி தூரம் **त्वा**=உன்னை **अन्वेतु**=அனுஸரித்து வரவேண்டும். **विष्णुः**=நாராயணன் **व्रताय**=உனக்கு சத்கர்மங்கள் சித்தி பெறுவதற்காக **त्रीणि**=மூன்றடி தூரம் **त्वा**=உன்னை **अन्वेतु**=தொடர்ந்து வரவேண்டும். **विष्णुः**=நாராயணன் **मायोभवाय**=சுகக்

தை யுண்டுபண்ணுவதற்காக **चत्वारि**=நான்கு அடி தூரம் **त्वा**=உன்னை **अन्वेतु**=அனுஸரித்து வரட்டும். **विष्णुः**=நாராயணன் **पशुभ्यः**=உனக்குப் பசுக்களின் ஸமிருத்தி ஏற்படுவதற்காக **पञ्च**=ஐந்தடி தூரம் **त्वा**=உன்னை **अन्वेतु**=அனுஸரிக்கவேண்டும். **विष्णुः**=நாராயணன் **ऋतुभ्यः**=6 ருதுக்களிலும் க்ஷேமமுண்டாவதற்காக **षट्**=ஆறடி தூரம் **त्वा**=உன்னை **अन्वेतु**=அனுஸரித்து வரவேண்டும். **विष्णुः**=நாராயணன் **सप्तभ्यः**=ஏழு **होत्राभ्यः**=ஹோதா, பிரசாஸ்தா, பிராம்மணாச்சம்ஸி, போதா, நேஷ்டா, அச்சாவாகன், ஆக்னீத்ரன் என்ற ருத்விக்குகளைக்கொண்டு நடைபெறுகின்ற ஸோம யாகம் முதலிய சத்கர்மங்களை யனுஷ்டிப்பதற்குரிய பாக்ய முண்டாவதற்காக **सप्त**=ஏழடி தூரம் **त्वा**=உன்னை **अन्वेतु**=அனுஸரித்து நடந்துவரவேண்டும். ஓ கன்னிகே! ஸ்ரீபதியான நாராயணன் நீ என்னுடன் 7 அடி தூரம் நடந்து வருவதற்குள் ஒவ்வொரு அடிக்கும் இதிற்சொல்லிய ஒவ்வொரு பலன் வீதம் உனக்குக் கொடுத்து அருள்புரிய வேண்டுமாறு நான் பிரார்த்திக்கிறேன் என்று கருத்து.

(அ - கை) **सू०॥ सखेति सप्तमे पदे जपति** (आ. गृ. ख 4 सू 16) ஏழாவது அடியை எடுத்து வைத்ததும் **सखा सप्तपदाभव** என்றது முதலிய மந்திரங்களைப் படிக்கவேண்டும்.

(मन्त्रः) १४ सखा सप्तपदा भव, सखायौ सप्तपदा बभूव, सख्यन्ते गमेयꣳसख्यात्ते मा योषꣳसख्यान्मे मायोष्ठास्समयाव संकल्पावहै, संप्रियौ रोचिष्णू सुमनस्यमानौ। इषमूर्जमभिसंवसानौ सन्नौ मनाꣳसि संव्रता समुचित्तान्याकरम्। सात्वमस्य मूहममूहमस्मि सात्वं, द्यौरहं पृथिवीत्वꣳरेतोहꣳ रेतोभृत्वं मनोहमस्मि वाक्त्वꣳसामाहमस्म्यृक्त्वꣳसा मा मनुव्रता भव पुꣳसे पुत्राय वेत्तवै श्रियै पुत्राय वेत्तवा एहि सूनृते ॥

(ப - ரை) **सप्तपदा**=என்னுடன் 7 அடி தூரம் நடந்துவந்த நீ **सखा**=எனக்குத் தோழியாக **भव**=ஆகவேண்டும். **सप्तपदा**=7 அடி தூரம் நடந்து சென்ற நாமிருவரும் **सखायौ**=சினேகிதர்களாக **बभूव**=ஆகக்கடவோம். வது, வரன் இரண்டுபேர்களும் எப்பொ

முழுதும் ஸ்நேஹிதர்களாகவே இருக்கவேண்டுமென்பதில் மிக்க ஆதரவினுல் பல தடவை ருஷியோர்களுக்கு ஒருவருக்கொருவரிடமுண்டாக வேண்டிய ஸ்னேஹமே பிரார்த்திக்கப்படுகின்றது. ते=உன்னுடன் सख्यम् = சினேகத்தை गमेयम्=அடையவேண்டும் (कन्ये=ஓ கன்னிகே!) ते=உன்னுடைய सख्यात्=சினேஹத்தினின்றும் मायोषम=பிரிவையடைய வேண்டாம். (त्वम्=நீ) मे=என்னுடைய सख्यात्=சினேஹத்தினின்றும் मायोष्ठाः=பிரிவையடைய வேண்டாம். நம்மிருவருக்கும் ஒரு சமயத்திலும் சினேஹ பங்கம் நேரிட வேண்டாமென்று கருத்து. (आवाम्=நாமிருவரும்) संप्रियौ=ஒருவரை யொருவர் அடைந்ததால் சந்தோஷத்தை யடைந்தவர்களாகவும் रोचिष्णू=ஒருவரை யொருவரடைந்ததால் மிக்கச் சரீரகாந்தியை யடைந்தவர்களாகவும், सुमनस्यमानौ=மனத்திற்குச் சமாதானத்தை (கலக்கமற்ற நிலையை) ப்பெற்றவர்களாகவும் इषम्=அன்னத்தையும் ऊर्जम् = பலத்திற்குக் காரணமான ரஸங்களையும் अभिसंवसानौ=சேர்ந்தே அனுபவிக்கின்றவர்களாகவும் (भूत्वा=ஆகி) समयाव=நன்கு சேர்ந்து இல்லறத்தை நடத்திக்கொண்டு செல்வோமாக. संकल्पावहै=செய்யவேண்டிய கார்யங்கள் யாவற்றையும் நாமிருவரும் சேர்ந்தே ஆலோசிப்போமாக. नौ=நம்மிருவருடைய मनांसि=மனதை समकरम्=சேர்ந்ததாக (ஒற்றிருப் பவைகளாக) ச் செய்வோமாக. व्रता = தர்மகார்யங்களை समकरम्=சேர்ந்தே அனுஷ்டிப்போமாக. चित्तानि=பாஹ்யேந்திரியங்களை समकरम् = சேர்ந்தவைகளாகச் செய்வோமாக. பாஹ்யேந்திரியங்களாலோ மனஸினுலோ அனுபவிக்கப்படுகின்ற விஷயங்களை நாமிருவரும் சேர்ந்தே அனுபவிக்கவேண்டும் என்றும், தர்மகார்யங்களை நாமிருவரும் சேர்ந்தே அனுஷ்டிக்கவேண்டும் என்றும் கருத்து.

त्वम्=நீ सा=ருக்காக असि=இருக்கின்ருய் अहम्=நான் अमः=சாமாவாக (अस्मि=இருக்கின்றேன்) अहम्=நான் अमः=சாமாவாக अस्मि=இருக்கின்றேன் त्वम्=நீ सा=ருக்காக (असि = இருக்கின்ருய்.) ருக் ஸாமம் இரண்டும் இணைபிரியாது எவ்விதம் எச்சமயத்திலும் சேர்ந்தே இருக்குமோ அவ்விதமே நீயும், நானும் சேர்ந்திருக்கவேண்டும் என்பதைப் பிரார்த்திப்பதில் மிக்க ஆதரவி

ஞல் ஒரேஸமாசார மிரண்டுதடவை படிக்கப்பட்டது. अहम्=நான் द्यौः=த்யுலோகமாக (இருக்கின்றேன்) त्वम्=நீ पृथिवी=பூமியாக (இருக்கின்ருய்) பூமி கீழாகவும் த்யுலோகம் மேலாகவும் எவ்வித மிருக்கின்றதோ அவ்விதமே நான் உனக்கு மேலானவஞகவும் யஜமானஞகவும்) நீஎனக்குக் கீழ்ப்படிந்து நடப்பவளாகவும் ஆக வேண்டும் என்று கருத்து. अहम्=நான் रेतः=சுக்கிரம் என்ற தாது வாக இருக்கிறேன். கார்யமான சுக்கிலத்திற்கும், காரணமான புருஷனுக்கும் அபேதத்தைக் கருதி रेतोऽहं=என்று சொல்லப்படு கிறது. त्वम्=நீ रेतोभृत्=என்ஞல் கர்ப்பாசயத்தில் செலுத்தப்பட்ட சுக்கிரம் என்ற தாதுவைத் தரிக்கின்றவளாகின்ருய். अहम्=நான் मनः=மனஸாக अस्मि=இருக்கின்றேன் त्वम्=நீ वाक्=வாக் என்ற இந்திரியமாக இருக்கின்ருய். எவ்விதம் மனது நினைக்கின்ற சமா சாரத்தையே வாக் வெளியிடுகின்றதோ அவ்விதமே நம்மிருவ ருக்கும் ஒற்றுமை ஏற்பட வேண்டுமெனக் கருத்து. अहम्=நான் साम=ஸாமாவாக अस्मि=இருக்கின்றேன். त्वम्=நீ ऋक्=ருக்காக (असि=இருக்கின்ருய்) அதிக ஆதரவினுல் மறுபடியும் இவ்விஷ யம் படிக்கபபட்டது. सा=மேற் சொல்லியபடியுள்ள நீ माम्= என்னை पुंसेपुत्राय=புருஷப்பிரஜையை वेत्तवै=அடைவதற்காக अनु-व्रता=அனுஸரித்தவளாக भव=இருப்பாயாக. श्रियै=சம்பத்தையும் पुत्राय=புருஷப் பிரஜையையும் वेत्तवै=அடைவதற்காக (मामनुव्रता-भव=என்னை அனுஸரித்தவளாக ஆகவேண்டும்) புத்திரலாபத்தை இரண்டாவது தடவையாகக் கூறியது மிக்க ஆதரவினுல் என்று கண்டுகொள்ளவேண்டும். सूनृते=பிரியமாய் பேசுகின்ற ஓ கன் னிகே ! एहि=என்னுடன் வருவாயாக.

மூன்ருவது கண்டம் முற்றிற்று.

நான்காவது கண்டம்.

(அ - கை) ஸூ॥ प्राग्घोमात्प्रदक्षिणमग्निं कृत्वा यथास्थानमुपवि-श्याऽन्वारब्धायामुत्तरया आहुतीर्जुहोति सोमायजनिविदे स्वाहेत्येतैः प्रति-मन्त्रम् (आ. गृ. ख 5; सू० 1.) பிறகு ஹோமஞ் செய்வதற்கு முன்

அக்னியைப் பிரதக்ஷிணஞ்செய்துவந்து தென்பக்கத்தில் கன்னிகையும் வடபக்கத்தில் வரனுமாக உட்கார்ந்து பத்தினி தன்னைத் தொட்டிருக்கும் பொழுது பின்னர் படிக்கப்படுகின்ற **सोमायजनिविदे स्वाहा** என்றது முதலிய மந்திரங்களால் ஒவ்வொரு மந்திரத்திற்கும் ஒவ்வொரு ஆஹுதிவீதம் ஹோமஞ் செய்யவேண்டும் என்று சொல்லப் பட்டிருக்கிறது. அம்மந்திரங்களாவன—

१ सोमाय जनिविदे स्वाहा । २ गन्धर्वाय जनिविदे स्वाहा । ३ अग्नये जनिविदे स्वाहा। ४ कन्यला पितृभ्यो यती पतिलोकमवदीक्षामदास्थ स्वाहा । ५ प्रेतो मुञ्चाति नामुतस्सुबद्धा ममु तस्करत् । यथेयमिन्द्र मीढ्वस्सुपुत्रा सुभगाऽसति ॥ ६ इमां त्वमिन्द्र मीढ्वः सुपुत्रांᳲसुभगां कुरु । दशास्यां पुत्रानाधेहि पतिमेकादशं कृधि ॥ ७ अग्निरैतु प्रथमो देवतानाᳲसोऽस्यै प्रजां मुञ्चतु मृत्युपाशात् । तदयᳲराजा वरुणोऽनुमन्यतां यथेयᳲस्त्री पौत्रमघं न रोऽदात् ॥ ८ इमामग्निस्त्रायतां गार्हपत्यः प्रजामस्यै नयतु दीर्घमायुः । अशून्योपस्था जीवतामस्तु माता पौत्रमानन्दमभि प्रबुध्यतामियम् ॥ ९ मा ते गृहे निशि घोष उत्थादन्यत्र त्वद्रुदत्यस्संविशन्तु । मा त्वं विकेश्युर आवधिष्ठा जीवपत्नी पतिलोके विराज पश्यन्ती प्रजाᳲसुमनस्यमानाम् ॥ १० द्यौस्ते पृष्ठᳲरक्षतु, वायुरूरू, अश्विनौ च स्तनं, धयन्तᳲसविताऽभिरक्षतु । आवाससः परिधानाद्बृहस्पतिर्विश्वेदेवा अभिरक्षन्तु पश्चात् ॥ ११ अप्रजस्तां पौत्रमृत्युं पाप्मानमुत वाऽघम् । शीर्ष्णः स्रजमिवोन्मुच्य द्विषद्भ्यः प्रतिमुञ्चामि पाशम् ॥ २२ इमं मे वरुण, १३ तत्वायामि, १४ त्वन्नो अग्ने, १५ सत्वन्नो अग्ने, १६ त्वमग्ने अयास्ययासन्मनसाहितः । अयासन् हव्यमूहिषे ऽयानोधेहि भेषजम् ॥

(ப - ரை) (1, 2, 3) **जनिविदे**=இந்தக்கன்னிகையை யடைந்தவரான **सोमाय**=சோமன் என்ற தேவனைக் குறித்து **स्वाहा**=இந்த ஆஜ்ய (நெய்யானது) மானது அக்னியில் விடப்பட்டதாயாகவேண்டும். **जनिविदे**=இந்தக் கன்னிகையை யடைந்தவரான **गन्धर्वाय**=கந்தர்வனைக் குறித்து **स्वाहा**=இந்த ஆஜ்யத்திரவ்யம் அக்னியில்

விடப்பட்ட தாயாகவேண்டும். **जनिविदे**=இந்தக் கன்னிகையை யடைந்திருப்பவரான **अग्नये**=அக்னிஎன்ற தேவனைக்குறித்து **स्वा-हा**=இந்த ஆஜ்யத் திரவ்யம் அக்னியில் விடப்பட்டதா யாகவேண்டும். **सोमःप्रथमोविविदे** என்ற சாஸ்திரப்படி விவாஹமாகின்ற கன்னிகையை ஸோமன், கந்தர்வன், அக்னி என்ற மூன்றுதேவர்களும் ஒருவருக்குப் பின் ஒருவராக அபிமானிக்கின்ற படியால் அவர்கள் இந்தக் கன்னிகையையடைந்தவர்களாக ஆகின்றனர். அவர்கள் திருப்தி யடைவதற்காக அக்னியில் இந்த ஆஜ்யம் என்றத் திரவ்யத்தை விடுகிறேன் என்று கருத்து.

(4) **कन्यला**=இந்தக் கன்னிகை **पितृभ्यः**=பிதா முதலியோர்களிடமிருந்து **पतिलोकम्**=பர்த்தாவினுடையகுலத்தை **यती**=அடைந்தவளாகி **दीक्षाम्**=கன்னிகையின் பருவத்திற்கு ஏற்பட்ட நியமங்களை **अवदास्थ**=விட்டுவிட்டாள். **स्वाहा**=கன்னிகையின் பருவத்திற்கு ஏற்பட்ட நியமங்களில் யாதானும் குறைவு நேர்ந்திருந்தாலும் அதைப்போக்கி அதனாலுண்டாகின்ற கெடுதல்களை விலக்குவதற்காக இந்த ஆஜ்யத்தை அக்னியில் விடுகிறேன்.

(5) **मीढ्वः**=அபீஷ்டங்களை வர்ஷிக்கின்ற **इन्द्र**=ஓ இந்திரனே! (**इमाम्**=இந்தக் கன்னிகையை) **इतः**=அவளது பிதாவின் குலத்தினின்றும் **प्रमुञ्चाति** = விடுவிக்கவேண்டும். **अमुतः**=பர்த்தாவான என்னுடைய குலத்தினின்றும் **न**=விடுவிக்கக்கூடாது. (**किन्तु**=பின்னையோ வெனில்) **अमु**=இந்த எனது குலத்தில் **सुबद्धाम्**=நன்றாய்ச் சம்பந்தம் பெற்றவளாக **अकरत्**=செய்யவேண்டும். **यथा**=எவ்விதம் **इयम्**=இந்தக் கன்னிகை **सुवद्धा**=எனது குலத்தில் நன்றாய்ச் சம்பந்தம் பெற்றவளாகி **सुपुत्रा**=நல்ல ;புத்திர சந்ததியைப் பெற்றவளாகவும் **सुभगा**=நல்ல பாக்யம் பெற்றவளாகவும் **असति**=ஆவாளோ (அவ்விதம் செய்யவேண்டும்) அபீஷ்டங்களைக்கொடுக்கின்ற ஓ இந்திரனே! இந்தக் கன்னிகைக்குப் பிதாவின் குலத்திலுள்ள அபிமானம் விலகி எனது குலத்திலபிமானம் விருத்தியடையுமாறும், நல்ல புத்திர சந்ததி, தனம், தான்யம், பசு முதலிய பாக்யங்கள் இவைகளைப் பெற்றவளாக ஆகுமாறும் அனுக்கிரஹிக்கவேண்டும் என்றுகருத்து.

(6) मीढ्वः=அபீஷ்டங்களை வர்ஷிக்கின்ற इन्द्र = ஓ இந்திரனே! त्वम्=நீர் इमाम्=இந்தக் கன்னிகையை सुपुत्राम्=நல்ல புத்திர சந்ததியைப் பெற்றவளாகவும் सुभगाम्=நல்ல பாக்யத்தையடைந்தவளாகவும் कुरु=செய்வீராக. अस्याम् = இந்த மணப்பெண்ணிடம் दशपुत्रान्=10 புத்திரர்களை आधेहि=உண்டுபண்ணவேண்டும். पतिम्=பர்த்தாவான என்னை एकादशम्=பதினொன்றாவது புத்திரனாக कृधि=செய்வீராக.

(7) देवतानाम्=தேவர்களுள் प्रथमः=முந்தினவரான अग्निः=அக்னி एतु=இங்கு வரவேண்டும். सः=அந்த அக்னி (இங்கு வந்த பிறகு) अस्यै=இந்த மணப்பெண்ணுக்கு (जनिष्यमाणाम्=பிறக்கப்போகின்ற) प्रजाम्=ஸந்ததியை मृत्युपाशात्=அபமிருத்யுவிணிட்மிருந்து मुञ्चतु=விடுவிக்கவேண்டும். यथा=எவ்விதம் அபமிருத்யுவை விலக்கினால் इयम्=இந்த स्त्री=மணப்பெண் पौत्रम्=புத்திரநிமித்தமுண்டான अघम्=துக்கத்தைக் காரணமாகக்கொண்டு नरोदात्=கண்ணீர்விட்டு அழமாட்டாளோ तथा=அவ்விதம் राजा=ஜலாதிபதியான वरुणः=வருணன் என்ற தேவன் तत्=அக்னியால் செய்யப்படுகின்றதை (அபமிருத்யு நிவாரணத்தை) अनुमन्यताम्=அனுமதிக்க வேண்டும்—சம்மதிக்க வேண்டும். இந்த மணப்பெண்ணுக்கு இனி உண்டாகப் போகின்ற ஆண் பெண் சந்ததிகள், அபமிருத்யுதோஷ மற்றவைகளாக இருக்குமாறும், சந்ததிகள் மறிப்பதாலுண்டான துக்கத்தால் இந்தப் பெண் கண்ணீர் வடித்து அழும்படியான நிலை உண்டாகாமலிருக்குமாறும் அக்னி, வருணன் இவ்விரண்டு தேவர்களும் அருள் புரிவதற்காக இந்த ஆஜ்யத்தை அவர்களைக்குறித்து அக்னியில் ஹோமஞ் செய்கிறேன் என்று கருத்து.

(8) गार्हपत्यः=வைவாஹிகமான अग्निः=அக்னி इमाम्=இந்த மணப்பெண்ணை त्रायताम्=சகலவிதமான ஆபத்தினின்றும் காப்பாற்றவேண்டும். अस्यै=இந்த மணப்பெண்ணினுடைய प्रजाम्=ஸந்ததியை दीर्घम्=நீண்டதான आयुः=ஆயுளை नयतु=அடைவிக்கவேண்டும். अशून्योपस्था=புத்திரோத்பாதனம் செய்யப்போதிய யோக்யதையை யடையாத பெண்குறியையுடையவளாக ஆகாத

வளாகவும், அதாவது: போதிய புத்திரோத்பாதனம் செய்து புத்திரனால் அலங்கரிக்கப்பட்ட மடியையுடையவளாகவும் **जीवताम्**=உயிருடனிருக்கின்ற சந்ததிகளுக்கு **माता**=தாயாகவும் **अस्तु**=ஆகவேண்டும். **इयम्**=இந்த மணப்பெண் **पौत्रम्**=புத்திரனால் ஏற்படுகின்ற **आनन्दम्**=ஆனந்தத்தை **अभि**=முன்னிட்டு **प्रबुध्यताम्**=விழித்துக்கொள்ளவேண்டும் காலையில் எழுந்தவுடன் புத்திரனை மடியில்வைத்து லாலனை (கொஞ்சுவது) செய்வதாலுண்டான ஆனந்தத்தை யனுபவிக்கவேண்டும் என்று கருத்து.

(9) (**हेवधु**=ஓ மணப் பெண்ணே!) **ते**=உன்னுடைய **गृहे** = வீட்டில் **निशि**=இரவில் **घोषः**=அழுகுறல் **मोत्थात्**=உண்டாகவேண்டாம். **रुदत्यः**=அழுகின்ற **सर्वाः**=எல்லாவிதமான துர்த்தேவதைகளும் **त्वत्तः**=உன்னிடமிருந்து **अन्यत्र**=வேறிடத்திற்கு **संविशन्तु**=போய்ச்சேரவேண்டும். இரவு வேளையில் வீட்டில்பிரவேசித்து தீன ஸ்வரஞ்செய்து பயமுருத்துகின்ற துர்த்தேவதைகள் இந்த மணப்பெண்ணினுடைய வீட்டில் பிரவேசிக்காமலிருக்கவேண்டும். **त्वम्**=நீ ***विकेशी**=அங்குமிங்கும் சிதறிக்கிடைக்கின்றகேசங்களையுடையவளாய்க்கொண்டு **उरः**=மார்பை **माविधिष्ठाः**=அடித்துக்கொள்ளாம லிருக்கவேண்டும். தலைமயிரை விரித்துப்போட்டுக்கொண்டு மார்பில் அடித்துக்கொள்ளும் நிலை உனக்கு ஏற்படாமலிருக்கவேண்டும். **जीवपत्नी**=நீண்டகாலம் ஜீவிக்கின்ற புருஷனையுடையவளாக **पतिलोके**=கணவனுடைய கிருஹத்தில் **सुमनस्यमानाम्**=அனுகூலமாக இருக்கின்ற **प्रजाम्**=சந்ததியை **पश्यन्ती**=பார்த்துக்கொண்டு **विराज**=விளங்குவாயாக. பர்த்தாவைவிட்டுப் பிரிதலோ, புத்திரனை விட்டுப்பிரிதலோ நீ கண்ணீர் வடிப்பதற்குக் காரணமாகும். அவ்விரண்டும் உனக்கு நேராமலிருப்பதற்காக அக்னியில் இந்த ஆஜ்யத்தை ஹோமஞ்செய்கிறேன் என்று கருத்து.

(10) **ते**=உன்னுடைய **पृष्ठम्**=பிட்டத்தை **द्यौः**=த்யுலோகாபி

---

* **विकेशी** என்ற பதத்திற்குச் சிலர் **विगतकेशी** என அர்த்தம் செய்து தலைமயிரற்றவள் எனக் கூறுகின்றனர். அதனுண்மையை அவர் சளையேக் கேட்கவேண்டும்.

மானிதேவதை रक्षतु=காப்பாற்றட்டும். ऊरू=இரண்டு துடைகளை वायुः=வாயுதேவன் रक्षतु=காப்பாற்றட்டும். अश्विनौ = அச்வினீ தேவர்கள் स्तनम्=ஸ்தனங்களை (रक्षताम्=காப்பாற்றவேண்டும்) धयन्तम्=உனது புத்திரனை सविता=ஸவிதா என்ற தேவன் अभिरक्षतु=காப்பாற்றவேண்டும். (त्वाम्=உன்னை) आवाससः परिधानात्=परित्यागिर्वरा: என்ற மந்திரத்தை யுச்சரித்துச் செய்யப்படும் வஸ்திர தாரணம்வரையில் बृहस्पतिः = பிருஹஸ்பதி (रक्षतु=காப்பாற்றவேண்டும்) पश्चात्=பிறகு विश्वेदेवाः=எல்லாத்தேவர்களும் अभिरक्षन्तु=காப்பாற்றவேண்டும்.

(11) अप्रजस्ताम् = புத்திரப்பிராப்திக்குப் பிரதிபந்தகமான தோஷத்தையும் पौत्रमृत्युम् = புத்திர நாசத்திற்குக் காரணமான தோஷத்தையும் पाप्मानम्=பாபத்தையும் उतवा=மேலும் अघम् = பாபத்தாலுண்டாகின்ற துக்கத்தையும் शीर्ष्णः=தலையினின்றும் स्रजमिव=வாடிப்போன புஷ்பமாலையைப் போல் त्वत्तः= உன்னிடமிருந்து उन्मुच्य=பிடுங்கி எடுத்து पाशम्=மேற் சொன்ன தோஷங்களை द्विषद्भ्यः=உனது சத்துருக்களிடம் प्रतिमुञ्चामि= விட்டுவிடுகிறேன். நான் ஸங்கல்பிக்கிரபடியெல்லாம் உனக்கு நன்மை ஏற்படுவதற்காக அக்னியில் இந்த ஆஜ்யத்தை ஹோமஞ் செய்கிறேன் என்று கருத்து.

12, 13, 14, 15 வது மந்திரங்களின் ஆரம்பம்மட்டுமே இந்தமந்திரப் பிரச்னத்தில் குறிக்கப்பட்டிருப்பதால் அம்மந்திரங்களின் மீதமுள்ள பாகங்களையும் இங்கு எழுதி வியாக்யானஞ் செய்கிறோம்.

१२ इमं मे वरुण श्रुधी हवमद्या च मृडय ॥ त्वामवस्युराचके ॥

(12) (ப - ரை) वरुण=ஓ வருண! मे=என்னுடைய इमम्= இந்த हवम्=ஸ்தோத்திரத்தை श्रुधि=கேழ்கவேண்டும். (श्रुत्वा च= கேட்டபிறகு) अद्य च=இப்பொழுதே मृडय=சுகத்தைக் கொடுக்கவேண்டும். (अहम्=நான்) अवस्युः=உம்மால் காப்பாற்றப்படுவதை விரும்பியவனாய்க் கொண்டு त्वाम्=உம்மை आचके=நன்றாய்ஸ்தோத்திரஞ் செய்கின்றேன்.

१३ तत्वा यामि ब्रह्मणा वन्दमानस्तदाशास्ते यजमानोहविर्भिः ।
अहेडमानो वरुणेहबोध्युरुशꣳस मान आयुः प्रमोषीः ॥

(13) (ப - ரை) **अहम्**=நான் **ब्रह्मणा**=வேதமந்திரத்தால் **वन्दमानः**=ஸ்தோத்திரஞ்செய்து கொண்டு **तत्**=என்னைக் காப்பாற்றிக் கொள்வதற்காக **त्वा**=உம்மை **यामि**=சரணமடைகிறேன். **यजमानः**= யாகத்தை யனுஷ்டிக்கின்றவன் **हविर्भिः**=சரு, புரோடாசம் முதலிய வற்ருல் **तत्**=தன்னைக்காப்பற்றிக் கொள்வதையே **आशास्ते**= விரும்புகிறுன். யாகஞ் செய்கின்ற யஜமானர்கள் சரு, புரோடாசம் முதலியவற்றைத் தங்களையுத்தேசித்து அக்னியில் ஹோமஞ் செய்து தன்னைக் காப்பாற்றவேண்டும் என்றே பிரார்த்திக்கின்றனர். அதையே நானும் வேதமந்திரங்களால் ஸ்துதி செய்யும் வாயிலாக பிரார்த்திக்கின்றேன் என்று கருத்து. **उरुशꣳस**=அநேகம் யஜமானர்களால் ஸ்துதிக்கப்பட்ட **वरुण**=ஓ வருணனே! **अहेडमानः**="செய்" என்று விதித்த கர்மங்களைச் செய்யாமல் விட்டுவிடுதல், "செய்யாதே" என்று விலக்கிய கர்மங்களையனுஷ்டித்தல் முதலிய குற்றங்களால் என்னிடம் கோபமடையாமல் **इह**= இப்பொழுது **बोधि**=என்னைக்கவனிக்கவேண்டும். **नः** = என்னுடைய **आयुः**=ஆயுஸ்ஸை **माप्रमोषीः**=திருடாமலிருக்க வேண்டும். எனக்கு பிராரப்த கர்மமூலம் ஏற்பட்ட ஆயுளைக்குறைத்து விடாமலிருக்க வேண்டும் என்றுகருத்து.

१४ त्वन्नो अग्ने वरुणस्य विद्वान् देवस्य हेडोऽवयासिसिषीष्ठाः ।
यजिष्ठो वन्हितमश्शोशुचानो विश्वा द्वेषाꣳसि प्रमुमुग्ध्यस्मत् ॥

(14) (ப - ரை) **अग्ने**=ஓ அக்னியே! **विद्वान्**=எல்லாவற்றையுமறிந்தவரான **त्वम्**=நீர் **देवस्य**=பிரகாசிக்கின்ற **वरुणस्य**=வருணனுடைய **नः**=எங்கள் விஷயமாக ஏற்பட்டிருக்கின்ற **हेडः**=கோபத்தை **अवयासिषीष्ठाः**=குறைத்து விடுவீராக. **यजिष्ठः**=பூஜிக்கத்தகுந்தவர்களுட் சிறந்தவரும் **वन्हितमः**=தேவர்களைக்குறித்து கொடுக்கப்படுகின்ற ஹவிஸ்ஸை மிக்க சாவதானமாய்த் தூக்கிச் செல்பவரும். **शोशुचानः**=மிகவும் நன்ருய்பிரகாசிக்கின்றவருமான (**त्वम्** நீர்) **विश्वा** = சமஸ்தமான **द्वेषाꣳसि** = வெறுக்கத்தக்க பலன்களை **अस्मत्**=நம்மிடமிருந்து **प्रमुमुग्धि**=நன்ருய் விலக்கிவிட வேண்டும்.

१५ सत्वन्नो अग्नेऽवमो भवोती नेदिष्ठो अस्या उषसोव्युष्टौ ।
अवयक्ष्व नो वरुणꣳरराणो वीहि मृडीकꣳसुहवो न एधि ॥

(15) (ப - ரை) अग्ने=ஓ அக்னியே! अवमः = தேவர்களுள் முதலில் பூஜிக்கத்தகுந்தவராயிருப்பது பற்றி மற்ற தேவர்களுக்குக் காரணபூதரான सत्वम्=அந்த நீர் नः=எங்களை ऊती=சம்ரக்ஷிப்பதற்காக अस्याः=இந்த उषसः=விடியற்காலம் व्युष्टौ = நன்றாய் ஏற்பட்ட போது—அதாவது நன்றாய் பொழுதுவிடிந்தபோது. இதை உபலக்ஷணமாகவைத்துக்கொண்டு எப்பொழுதுமேஎன்று கருத்துக்கொள்ளவேண்டும். नेदिष्ठः=மிகவும் ஸமீபத்திலிருப்பவராக भव=ஆகவேண்டும். वरुणम्=தனது பாசங்களைப் பிரயோகித்து ஹிம்ஸிகின்ற வருணன் என்றதேவனை अवयक्ष्व=என்னிடம் வராவண்ணம் செய்யவேண்டும். नः=எங்களுக்கு. रराणः=இஷ்டங்களைக்கொடுத்துக்கொண்டு मृडीकम् = தங்களுக்குச் சுகத்தைக் கொடுக்கின்ற எங்களால் கொடுக்கப்படுகின்ற புரோடாசம் முதலியவற்றை वीहि=சாப்பிடவேண்டும். नः=எங்கள் விஷயத்தில் सुहवः=நல்ல கூப்பிடுதலையுடையவராக भव=ஆகவேண்டும். தங்களை அழைத்தல் எங்களுக்கு நன்மையை விளைவிப்பதாக ஆகவேண்டும் என்று கருத்து.

(16) (ப - ரை) अग्ने=ஓ அக்கினியே! त्वम्=நீர் अयाः=உபாஸகர்களா லடையத்தகுந்தவராகவோ, உபாஸகர்களைத் தானே நேரில் அடைபவராகவோ असि=இருக்கின்றீர். अयाः=உபாஸகர்களாலடையத்தகுந்தவராக सन्=இருப்பதால் मनसा=மனஸ்ஸினால் हितः=அடையப்பட்டவராக (असि=ஆகின்றீர்) ஓ அக்னியே! நீர் உபாஸகர்களுக்குச் சுலபராக இருப்பதால் உம்முடைய பிரஸாதத்தைப் பெறுவதற்காக உம்மை மனஸினால் தியானஞ் செய்கின்றேன் என்று கருத்து. अयाः, सन्=உபாஸகர்களால் சுலபமாயடையக்கூடியவராக இருக்கின்ற (त्वम्=நீர்) हव्यम्=எங்களால் கொடுக்கப்படுகின்ற ஹவிஸ்ஸை ऊहिषे=தேவர்களிடம் சேர்ப்பிப்பதற்காகச் சுமக்க வேண்டும். ஓ அக்னியே! என்னால் அந்தந்த தேவர்களைக் குறித்துக்கொடுக்கப்படுகின்ற ஹவிஸ்ஸை ஸ்வீகரித்துக்கொண்டு அவரவர்களிடம் கொண்டுபோய்ச் சேர்த்து அதன்

மூலம் எனக்கு க்ஷேமத்தைத் விளேவிக்கவேண்டும் என்றுகருத்து. **अया:**=சுலபமா யடையத்தகுந்தவரான (**त्वम्**=நீர்) **नः**=எங்களுக்கு **भेषजम्**=மருந்தை (பாபக்ஷயத்தை) **धेहि**=கொடுக்கவேண்டும்.

நான் காவது கண்டம் முற்றிற்று.

ஐந்தாவது கண்டம்.

(அ-கை) **सू०। अथैनामुत्तरेणाग्निं दक्षिणेन पदा, अश्मानमास्थापयति आतिष्ठेति ॥** (आ. गृ. ख०5, सू०2.) பிறகு இந்தமணப்பெண்ணை அக்னிக்கு வடபக்கத்தில் வைக்கப்பட்ட கல்லில் வலது காலால் மிதித்து ஏறும்படிச் செய்யவேண்டும். அதாவது: வரன் கன்னிகையின் வலதுகாலேப்பிடித்துக் கல்லின்மேலேற்றிவைக்க வேண்டும். அப்பொழுது ஜபிக்க வேண்டிய மந்திரம் பின் வருமாறு—

(मन्त्रः) आतिष्ठेममश्मानमश्मेव त्वꣴस्थिरा भव ।
अभितिष्ठ पृतन्यतस्सहस्व पृतनायतः ॥

(ப - ரை) (**हेवधु**=ஓ மணப்பெண்ணே!) **इमम्**=இந்த **अश्मानम्**=கல்லில் **आतिष्ठ**=ஏறுவாயாக. **त्वम्**=நீ **अश्मेव**=கல்லேப்போல் **स्थिरा**=ஸ்தைர்யத்தைப் பெற்றவளாக (மனத்தளர்ச்சியற்றவளாக) **भव**=ஆகவேண்டும். **पृतन्यतः**=யுத்தஞ் செய்ய விரும்புகின்றவர்கள் விஷயத்தில் **अभितिष्ठ**=எதிர்த்து நிற்பாயாக. **पृतनायतः**=சத்துருக்களே **सहस्व**=அவமதிப்பாயாக. ஓ கன்னிகே! உனது சத்துருக்கள் உன்னிடம் சண்டைபோடவந்த சந்தர்ப்பத்தில் பயமடையாது இந்தக் கல்லேபோல் உறுதியான மனத்துடன் எதிர்த்து நின்று அவர்களே வெல்லவேண்டும் என்று கருத்து.

सू०॥ अथास्या अञ्जलावुपस्तीर्य द्विर्लाजानोप्य अभिघारयति। तस्यास्सोदर्यो लाजानावपतीत्येके ॥ (ख० 5, सू०3, 4,) பிறகு அக்னிக்கு மேல் பக்கத்தில் அவரவர்களின் ஸ்தானத்தில் வதூவரர்கள் உட்காரவேண்டும். பிறகு இந்தக் கன்னிகையை இரண்டு கைகளேயும் ஒன்று சேர்த்துக் கொள்ளுமாறு செய்து, அவ்விரண்டு கைகளிலும் ஆஜ்யத்தைத் தடவி, இரண்டுதடவை

நெல் பொரியை அதன்மேல் எடுத்துப்போட்டு அதன்மேல் ஆஜ்யத்தை விடவேண்டும். பொரியை மாத்திரம் கன்னிகையின் சஹோதரன் எடுத்துப் போடவேண்டும் என்று சிலர் சொல்லுகின்றனர். **सू०॥ जुहोतीयं नारीति** (**ख०5. सू०5.**) பிறகு அவளது கையைப்பிடித்து அவளது கையின் நுனி பாகத்தால் ஹோமஞ் செய்யவேண்டும் அப்பொழுதுபடிக்கவேண்டிய மந்திரம் பின் வருமாறு—

(मन्त्रः) २ इयं नार्युपब्रूते कुल्पान्यावपन्तिका ।
दीर्घायुरस्तु मे पतिर्जीवातु शरदश्शतम् ॥

(ப - ரை) **कुल्पानि**=நெல்பொரிகளை **आवपन्तिका**=அக்னியில் ஹோமஞ்செய்கின்ற **इयम्**=இந்த **नारी**=கன்னிகை **मे** = என்னுடைய **पतिः**=புருஷன் **दीर्घायुः**=நீண்டவாயுளுள்ளவனாக **अस्तु**=ஆகவேண்டும். அதாவது—**शरदः, शतम्**=நூறுவருஷங்கள் **जीवातु**=ஜீவிக்கவேண்டும். (**इति**=என்று) **उपब्रूते**=வேண்டுகிறாள். ஓ அக்னியே! லாஜஹோமத்தால் இந்தக் கன்னிகையானவள் தனது புருஷனுக்கு நீண்ட வாயுளைப் பிரார்த்திக்கின்றாள். நீர் அவ்விதமே நீண்ட வாயுளைக்கொடுத்து அருள்புரியவேண்டும் என்பது கருத்து.

(அ - கை) **सू०॥ उत्तराभिस्तिसृभिः प्रदक्षिणमग्निं कृत्वा अश्मानमास्थापयति यथा पुरस्तात्** (**ख० 5, सू० 6**) பிறகு பின்னர் படிக்கப்படுகின்ற மூன்று மந்திரங்களால் அக்னியைப் பிரதக்ஷிணஞ் செய்து முன்போல் கல்லிலேற்றிவைக்கவேண்டும். அம் மந்திரங்கள் பின் வருமாறு—

(मन्त्रः)३ तुभ्यमग्ने पर्यवहन्त्सूर्यां वहतुना सह ।
पुनः पतिभ्यो जायां दा अग्ने प्रजया सह ॥

४ पुनः पत्नीमग्निरदादायुषा सह वर्चसा ।
दीर्घायुरस्या यः पतिस्स एतु शरदश्शतम् ॥

५ विश्वा उत त्वया वयं धारा उदन्या इव । अतिगाहेमहि द्विषः ॥

६ आतिष्ठेममश्मानम् ॥

(3) (ப - ரை) பிரதக்ஷிணஞ்செய்யும்பொழுது ஜபிக்கவேண்டிய மந்திரங்கள்—**अग्ने**=ஓ அக்னியே ! **तुभ्यम्** = உம்மையும் பொருட்டு **अग्रे**=ஜகத் சிருஷ்டி தொடங்கியபொழுது **वहतुनासह**=ஸ்திரீதனத்துடன் (இதை 'மஞ்சட்காணி' என்பர்) **सूर्याम्**=விவாஹம் என்ற கர்மாவிற்கோ, கல்யாணஞ் செய்யப்படுகின்ற பெண்ணுக்கோ அதிஷ்டாத்ரு தேவதையான சூர்யனுடைய கன்னிகையை **पर्यवहन्**=கொடுத்தனர். **पुनः**=இப்பொழுது **पतिभ्यः**=பதிகளான எங்கள் போன்றவர்களுக்கு **प्रजयासह** = சந்ததிவிருத்தியுண்டாவதற்குரிய பாக்யத்துடன்கூடிய **जायाम्** = பத்தினியை **दाः**=கொடுப்பீராக.

(தா - ம்) ஓ அக்னியே! விவாஹஞ் செய்யப்படுகின்ற பெண்களுக்கு அபிமானி தேவதையான "சூர்யை" என்ற கன்னிகையை நீர்மணந்திருப்பதால் உலகிலுள்ள எல்லாக்கன்னிகைகளும் உமது வசத்திலிருப்பவர்களாகவே ஆகின்றனர். ஆகவே இப்பொழுது சந்ததிவிருத்திக்குப் பிரதிபந்தகமான தோஷமற்ற கன்னிகையை எனக்குக்கொடுத்து அனுக்கிரஹிக்க வேண்டுமாய் நான் உம்மைப் பிரார்த்திக்கிறேன். (எ - று)

(4) (ப - ரை) **अग्निः**=அக்னிதேவன் **पुनः**=இப்பொழுது **आयुषा**=நீண்ட வாயுளுடனும், **वर्चसा**=சரீரகாந்தியுடனும் **सह**=கூட **पत्नीम्**=மனைவியை **अदात्**=கொடுக்கவேண்டும். நீண்ட வாயுளையும், சரீரத்தில் நல்ல அழகையும் பெற்ற பார்யையை எனக்குக் கொடுக்கவேண்டும் என்பது கருத்து. **अस्याः**=இந்தக் கன்னிகைக்கு **यः**=எவன் **पतिः**=கணவனோ **सः**=அவன் **दीर्घायुः**=நீண்ட வாயுளைப் பெற்றவனாக (**भवतु**=ஆகவேண்டும்) அதாவது—**शतम्**=நூறு **शरदः**=வருஷங்களை **एतु**=அடையவேண்டும்.

(5) (ப - ரை) **अग्ने**=ஓ அக்னியே **उत**=மேலும் **वयम्**=நாங்கள் **विश्वाः**=சகலவிதமான **द्विषः**=சத்துருக்களையும் **त्वया**=எங்களை ரக்ஷிப்பதற்குத் தயாராக இருக்கின்ற உம்மால் (உமது சஹாயத்தால்) **उदन्याः**=ஜலத்தினுடையதான **धाराइव** = பிரவாஹத்தைப் போல் **अतिगाहेमहि**=கடந்து விடவேண்டும்.

(5) आतिष्ठेमं என்பது இந்த 5வது கண்டத்தின் முதல் மந்திரம். அம்மந்திரத்தைப் பூராவாகவும் மறுபடியும் படிக்கவேண்டுமென்று கருத்து.

(அ - கை) ஸூ॥ होमश्चोत्तरया [ख०5, सू० 7] பின் படிக்கப் படுகின்ற 7 வது மந்திரத்தால் லாஜஹோமஞ் செய்யவேண்டும். ஸூ॥ परिक्रमणम् (ख०5, सू० 8) 8,9,10வது மந்திரங்களைப்படித்து அக்கினியைப் பிரதக்ஷிணஞ் செய்யவேண்டும். ஸூ॥ आस्थापनम्= (ख० 5, सू० 9) 11 வது மந்திரத்தால் கல்லில் ஏற்றிவைக்க வேண்டும்.

(मन्त्रः)७ अर्यमणं नु देवं कन्या अग्निमयक्षत ।
स इमां देवो अध्वरः प्रेतो मुञ्चाति नामुतस्सुबद्धाममु तस्करत् ॥
८ तुभ्यमग्ने पर्यवहन् ९ पुनःपत्नीमग्निरदात् ।
१० विश्वा उत त्वया वयम् ११ आतिष्ठेममश्मानम् ॥

(ப - ரை) (7) कन्याः=கன்னிகைகள் नु=சீக்கிரமாக अर्यमणम्=உபாஸகர்களா லடையத்தகுந்தவரும் देवम्=பிரகாசிக்கின்றவருமான अग्निम्=அக்னி என்ற தேவனை अयक्षत=பூஜை செய்தனர். अध्वरः=ஒருவராலும் ஹிம்ஸிக்கத்தகாதவரான सदेवः=அந்த அக்னிதேவன் इमाम्=இந்தக் கன்னிகையை इतः=தகப்பன்மார்களின் குலத்தினின்றும் प्रमुञ्चाति=விடுவிக்கவேண்டும். अमुतः= பர்த்தாவின் குலத்தினின்றும் न=விடுவிக்கவேண்டாம் अमु= இந்தப் பதிகுலத்தில் सुबद्धाम्=மிகவும். பற்றுள்ளவளாக तस्करत्=செய்யவேண்டும். ஓ அக்னிதேவனே! இதற்கு முன் எவ்வளவோ கன்னிகைகள் தங்களை லாஜ ஹோமத்தால் ஆராதனஞ் செய்து நன்மையை யடைந்திருக்கின்றனர். அவ்விதமே இந்தக் கன்னிகையும் நன்மையை யடையவிரும்பி லாஜ ஹோமஞ் செய்கின்றாள். அதைத் தாங்கள் பெற்றுக்கொண்டு தனது ஜன்ம குலத்தில் பற்றுதலின் குறைவையும் எனது குலத்தில் மிக்கப் பற்றையும் கொடுத்தருள்புரியவேண்டும் என்பது கருத்து. (8) तुभ्यमग्रेपर्यवहन् இம் மந்திரத்தின் மீதமுள்ளபாகங்கள் இந்தக்

கண்டத்தின் 3 வது மந்திரத்திலிருக்கின்றன. அர்த்தமும் அங்கு எழுதப்பட்டிருக்கிறது. (9) **पुनः पत्नीमग्निरदात्**=இம்மந்திரத்தின் மீதமுள்ளபாகங்கள் இந்தக் கண்டத்தின் நான்காவது மந்திரத்திலிருக்கின்றன. அர்த்தத்தையும் அங்கு கண்டு கொள்க. (10) **विश्वा उतत्वयावयम्** இதன் மீதபாகங்கள் இந்தக் கண்டம் 5 வது மந்திரத்தில் படிக்கப்பட்டிருக்கின்றன.(11)**आतिष्ठेमम्** இதன் மீதபாகங்கள் இந்தக் கண்டம் முதல் மந்திரத்தில் படிக்கப்பட்டிருக்கின்றன.

(அ - கை) ஸூ। **होमश्चोत्तरया** (ஃ० 5, ஸூ० 10) பின் படிக்கப்படும் 12 வது மந்திரத்தால் மறுபடியும் லாஜஹோமஞ் செய்யவேண்டும். ஸூ० **पुनः परिक्रमणम्** (ஃ० 5, ஸூ०11) பின் படிக்கப்படும் 13, 14, 15 வது மந்திரங்களால் அக்னியைப் பிரதக்ஷிணஞ் செய்யவேண்டும். ஸூ। **जयादिप्रतिपद्यते** (ஃ० 5, ஸூ० 12) **चित्तंच-स्वाहा** என்று தொடங்கி சில மந்திரங்களைப்படித்து ஆஜ்யத்தால் ஹோமஞ் செய்யவேண்டும். அதற்கு ஜயாதி ஹோமம் என்று பெயர். அதை இங்கு செய்யவேண்டும். இந்த ஹோமத்தால் அனுஷ்டிக்கப்பட்ட கர்மத்திற்குப் பலனைத்தரும் சக்தி விசேஷமாய் விருத்தியடைகின்றது.

(मन्त्रः) १२ त्वमर्यमा भवसि यत्कनीनां नाम स्वधावत्स्वर्यं बिभर्षि ।
अंजन्ति वृक्षꣳसुधितं न गोभिः यद्दंपती समनसा कृणोषि ॥

१३ तुभ्यमग्रेपर्यवहन् १४ पुनःपत्नीमग्निरदात् १५ विश्वा उतत्वया वयम् ॥

(ப - ரை) 12 **यत्**=யாதுகாரணம்பற்றி **स्वधावत्**=அன்னத்துடன் கூடியதும், **स्वर्यम्**=சுவர்க்கசாதனமுமான **कनीनाम्**=கன்னிகைகளுடைய **नाम**=அடைவித்தல் என்ற கார்யத்தில் அதிகாரத்தை **बिभर्षि**=பரித்து வருகின்றீரோ (**तस्मात्**=அதனால்) **त्वम्**=நீர் **अर्यमा**=கன்னிகையைக் கொடுப்பவராக **भवसि**=ஆகின்றீர். **यत्**=யாதுகாரணம்பற்றி **दंपती**=ஸ்திரீபுருஷர்களை **समनसा**=ஒற்றிருக்கின்ற மனத்தையுடையவர்களாய் **कृणोषि**=செய்கின்றீரோ (**तस्मा-त्**=அதனால்) **सुधितम्**=நாட்டப்பட்ட **वृक्षन**=மரத்தைப்போல்

गोभिः=பசுவின் ஆஜ்யத்தால் (त्वाम्=உம்மை) अञ्जन्ति=நனேக்கின்றனர்.

(தா - ம்) யாகாதி கர்மங்களே யனுஷ்டிப்பதற்கு பத்தினீ ரஹிதனுக்கு அதிகார மில்லேயாதலால் அதன் மூலமுண்டாகின்ற சுவர்க் காதிகளுக்கு கன்யாப்பிராப்தி யானது நிமித்தமாக ஆகின்றது. ஆகவே ஓ அக்கினியே! சுவர்க்காதி களேயடைவதற்குச் சாதனமானதும், அன்னசமிருத்தியுடன் கூடியதுமான "கன்யகா பிராபணம்" என்ற கார்யத்தில் தாங்கள் அதிகாரம் பெற்றிருப்பதால் தங்களேயே 'दाता' என்று சொல்லுதல் மிகவும் பொருந்தும். தம்பதிகளுக்கு ஒருவருக் கொருவர் ஒற்றி ருத்தலேத்தாங்களே ஏற்படுத்து வதால் மாத்திற்குத் தாராளமாய் ஜலம் விடுவதுபோல் தங்களேயுத் தேசித்து பசுவின் ஆஜ்யத்தை தம்பதிகள் ஹோ மஞ் செய்கின்றனர். ஆகவே எங்களிருவருக்கும் மனவொற்றுமையை நீர் ஏற்படுத்த வேண்டும். (எ - று)

13, 14, 15 வது மந்திரங்களின் மீத முள்ளபாகங்கள் இவ்வைந்தாவது கண்டம் 3, 4, 5 வது மந்திரங்களில் படிக்கப்பட்டிருக்கின்றன. உரையும் அங்கு எழுதப்பட்டிருக்கின்றது.

(அ-கை) सू०॥ परिषेचनान्तं कृत्वा उत्तराभ्यां योक्त्रं विमुच्य तां ततः प्रवावाहयेत्, प्रवाहारयेत्, (ख० 5. सू० 13) பரிஷேசனம் என்ற கர்மம்வரைச்செய்துமுடித்துப் பின்னர் முன்பத்தினியின் இடுப்பில் கட்டப்பட்ட தர்ப்பக்கயிற்றை பின்னர் எழுதப்படும், 16, 17வதுமந்திரங்களால் அவிழ்த்தெரிந்து யானே குதிரை முதலியவற்றிலோ, பல்லாக்கு வண்டி முதலியவற்றிலோ ஏறிச்செல்ல ஏற்பாடுசெய்யவேண்டும்—

(मन्त्रः) १६ प्रत्वा मुञ्चामि वरुणस्य पाशाद्यमबध्नीत सविता सुकेतः।
धातुश्च योनौ सुकृतस्य लोके स्योनं ते सह पत्या करोमि ॥

१७ इमं विष्यामि वरुणस्य पाशं यमबध्नीत सविता सुशेवः।
धातुश्च योनौ सुकृतस्य लोकेऽरिष्टां त्वा सह पत्या कृणोमि॥

(16) (ப - ரை) **सुकेत:**=நல்ல மனத்தையுடைய **सविता**=சகலப்பிராணிகளேயும் தூண்டுகின்ற பரமேச்வரன் **येन**=எந்த வருணபாசத்தால் **त्वा**=உன்னை **अवध्नात्**=கட்டினரோ (**तस्मात्**=அந்த) **वरुणस्य**=வருணன் என்ற தேவனுடைய **पाशात्**=கயிற்றினின்றும் (**त्वा**=உன்னை) **प्रमुञ्चामि**=விடுவிக்கிறேன் **सुकृतस्य**=புண்யஞ்செய்தவர்களுக்கு **लोके** = ஸ்தானமான **धातु:** = பிரும்மதேவனுடைய **योनौ**=லோகத்தில் **पत्यासह**=பர்த்தாவான என்னுடன் **स्योनम्**=ஸுகத்தை விளைவிக்கின்ற ஸ்தானத்தை **करोमि** = செய்கிறேன். ஓ கன்னிகே! சர்வேச்வரனுனபகவான் இந்தத் தர்ப்பக்கயிற்றை இடுப்பில் சுற்றுதல் என்ற வியாஜமாய் வருணனுடைய பாசத்தாலேயே உன்னைக்கட்டியிருந்தார். இந்தத் தர்ப்பகக் கயிற்றை அவிழ்த்து விடுவதால் வருணபாசத்தையே உன்னிடமிருந்து விலக்கிவிடுகிறேன். புண்யஞ் செய்தவர்களால் மட்டும் அடையக்கூடியப் பிரும்மலோகத்தை நாமிருவரும் இவ்வுலகில் சுகமாய் வாழ்ந்து பலபுண்ய கர்மங்களை யனுஷ்டித்துப் பின்னர் அடைவோமாக என்றுகருத்து

(17) (ப - ரை) **सुशेव:**=பக்தர்களுக்குச் சுகத்தை விளைவிக்கின்ற **सविता**=பரமேச்வரன் **यम्**=எந்த வருணபாசத்தை **अवध्नीत**=கட்டினரோ **इमम्**=இந்த **वरुणस्य**=வருணனுடைய **पाशम्**=கயிற்றை **विष्यामि**=அவிழ்த்துவிடுகிறேன். **सुकृतस्य**=புண்யசாலிகளின் **लोके**=ஸ்தானமான **धातु:**=பிரும்ம தேவனுடைய **योनौ**=லோகத்தில் **पत्यासह**=பர்தாவான என்னுடன் கூட **अरिष्टाम्**=வருணபாசபயமற்றவளாக **करोमि**=செய்கிறேன்.

(அ - கை) **ஸூ॰॥ समोप्यैतमग्निमनुहरन्ति** (**ख॰** 5, **ஸூ॰** 14) இந்த விவாஹாக்னியை ஒரு மண்பாத்திரத்தில் எடுத்துப்போட்டு கன்னிகைக்கும், அக்னிவைத்திருக்கும் பாத்திரத்திற்கும் மத்தியில் வேறு ஒரு வஸ்து வையும் போடாவண்ணம் கன்னிகையுடன் சேர்ந்தபடியாகவே எடுத்துச் செல்லவேண்டும். **ஸூ॰॥ नित्य:** (**ख॰** 5, **ஸூ॰** 15) உயிருள்ளவரையிலும் இவ்வக்னியைப் பரிபாலித்து வரவேண்டும். **ஸூ॰॥ धार्य:** (**ख॰** 5, **ஸூ॰**16) வெளியூர்களுக்குச்செல்ல வேண்டிய சந்தர்ப்பம் நேர்ந்தாலும், ஆத்மாவி

லோ, சமித்திலோ, அரணிக்கட்டையிலோ மற்ற அக்னிகளைப் போல் ஸமாரோபணஞ்செய்து கொள்ளாமல் அக்னியையும் தூக்கிக் கொண்டே செல்லவேண்டும். **ஸூ॥ अनुगतोमंथ्यः** (கம் 5, ஸூ 17) விவாஹாக்னி அணைந்தோ, கெட்டோபோய்விட்டால் அரணிக்கட்டையைக் கடைந்து அக்னியை எடுத்துக்கொள்ளவேண்டும். **ஸூ॥ श्रोत्रियागाराद्वाऽऽहार्यः** (கம் 5, ஸூ 18) வேதத்தை அத்தியயனஞ் செய்து அதன்படி கர்மானுஷ்டானம் செய்கின்றவன் வீட்டிலிருந்தாவது அக்னியை எடுத்து வரவேண்டும். **ஸூ॥ उपवासश्चान्यतरस्य भार्यायाः पत्युर्वा** (கம் 5, ஸூ 19) பத்தினியோ புருஷனோ ஒருவேளை போஜனஞ் செய்யாமலிருக்கவேண்டும். இது பிராயச்சித்தம். **ஸூ॥ अनुगतेऽपिवोत्तरया जुहुयान्नोपवसेत्** (கம் 5, ஸூ 20) அல்லது அக்னியைச் சம்பாதித்து உபவாஸத்திற்குப் பதிலாகப்பின் படிக்கப்படும் 18 வது மந்திரத்தால் நெய்யை எடுத்து ஹோமஞ் செய்யவேண்டும். போஜனத்தை விலக்கவேண்டாம்.

(मन्त्रः) १८ अयाश्चाग्नेऽस्यनभिशस्तीश्च सत्यमित्वमया असि ।
अयसा मनसा धृतोऽयसा हव्यमूहिषे ऽयानोधेहि भेषजम् ॥

(ப - ரை) 18 (**अग्ने**=ஓ அக்னியே ! **त्वम्**=நீர்) **अयाः**=பக்தர்களால் சுலபமாயடையத்தகுந்தவராக **असि**=இருக்கின்றீர். **अनभिशस्तीः, च**=தோஷமற்றவராகவும் (**असि**=இருக்கின்றீர்) **सत्यमित्**=சத்தியமாகவே **अयाः** = பக்தர்களால் ஸுலபமாயடையத்தகுந்தவராக **असि**=இருக்கின்றீர். (**एवं भूतस्त्वम्** = இத்தகைய மஹிமைவாய்ந்த நீர் **अस्माभिः**=எங்களால்) **अयसा**=தங்களை வந்தடைந்த **मनसा** = மனத்தினால் **धृतः**=தியானிக்கப்பட்டவராய்க் கொண்டு **अयसा**=தனது பக்தர்களைவந்தடைகின்ற(**त्वदीयेन**=உமது **मनसा**=மனஸினால்)**हव्यम्**=எங்களால் கொடுக்கப்பட்ட ஹவிஸ்ஸை **ऊहिषे**=தேவர்களிடம்கொண்டுபோய்ச்சேர்ப்பீராக. **अयाः**=பக்தர்களால் சுகமாய் அடையத்தகுந்த (**त्वम्**=நீர்) **नः**=எங்களுக்கு **भेषजम्**=மருந்தை **धेहि**=கொடுப்பீராக. ஆரோக்யத்தைக்கொடுப்பீராக.

முதல் பிரச்னத்தில் ஐந்தாவது கண்டம் முற்றிற்று.

ஆருவது கண்டம்

(அ - கை) सू०॥ उत्तरा रथस्योत्तंभनी (ख० 5, सू० 21) 6வது கண்டம் முதல் மந்திரத்தைப் படித்து வண்டியைத் தூக்கவேண்டும்—

(मन्त्र) १ सत्येनोत्तभिता भूमिस्सूर्येणोत्तभिता द्यौः ।
ऋतेनादित्यास्तिष्ठन्ति दिवि सोमो अधिश्रितः ॥

1 (ப - ரை) भूमिः=பூமியானது सत्येन=மனது, வாக், சரீரம் மூன்றிலுமுண்டான सत्येन=ஸத்யத்தால் उत्तभिता= தரிக்கப் பட்டதாகவும், (மனஸ், வாக், சரீரம் என்ற இம்மூன்றிலும் எவனுக்கு உண்மை இருக்கின்றதோ அவனிடமே பூமியானது நிலைத்திருக்குமென்று கருத்து. அல்லது இந்தப் பூமி நிராதாரமான விடத்தில் ஸத்யத்திற்குக் கட்டுப்பட்டு நிற்கின்து என்ருவது கருத்துக்கொள்ளவேண்டும்) द्यौः = ஆகாசம் सूर्येण=சூர்யனுல் उत्तभिता=தரிக்கப்பட்டதாக (अस्ति=இருக்கின்றது.) சூர்யனுல் ஆகாசம் பிரகாசப்படுத்தப் படுவதால் தரிக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. आदित्याः=சூர்யன்கள் (ஒவ்வொரு மாதத்திற்கும் சூர்யனின் குணங்கள் மாறுபடுவதை யொட்டிச் "சூர்யர்கள் பலர்" என்று இங்கு வழங்கப்படுகிருர்.) ऋतेन=யாகத்தினுல் तिष्ठन्ति=வஸிக்கின்றனர். सोमः=ஸோமலதை दिवि=சுவர்க்கலோகத்தை अधिश्रितः=ஆச்ரயத்திருக்கின்றது. பூமி முதலியவைகள் எவ்விதம் சத்யம் முதலியவற்ருல் தரிக்கப்பட்டதாயாகின்றதோ அவ்விதமே என்னுல் இந்த வண்டி தரிக்கப்பட்டதா யாகட்டும் என்று கருத்து.

(அ - கை) वाहावुत्तराभ्यां युनक्ति दक्षिणमग्रे (ख० 5, सू० 22) பின்னர் படிக்கப்படும் 2, 3மந்திரங்களால் வண்டியில் மாட்டையோ, குதிரையையோ கட்டவேண்டும். அவ்விதம் கட்டும் பொழுது வலது பக்த்தில் முதலில் கட்டவேண்டும்.

(मन्त्रः) २ युञ्जन्तिब्रध्नं ३ योगेयोगे ॥

இம்மந்திரங்களின் மீதமுள்ள பாகங்கள் பின் வருமாறு—

२ युञ्जन्ति ब्रध्नमरुषं चरन्तं परितस्थुषः। रोचन्ते रोचनादिवि ॥

३ योगेयोगे तवस्तरं वाजे वाजे हवामहे। सखाय इन्द्रमूतये ॥

2 (ப - ரை) (मानवाः=மனிதர்கள்) अरुषम्=நன்கு ஓடுவதற்குச் சக்திவாய்ந்ததும், तस्थुषः=ஸ்தாவர வஸ்துக்களை परि=கடந்து चरन्तम्=ஓடுகின்றதும் (ஓரிடம்விட்டு மற்றோரிடம் செல்வதற்குள் அநேகம் ஸ்தாவர வஸ்துக்களைக் கடந்தே செல்லவேண்டுமாதலா லிவ்விதஞ் சொல்லப்படுகின்றது) ब्रध्नम् = பெரிதான குதிரையையோ, காளையையோ दिवि=ஆகாசத்தில் (नक्षत्राणि=நக்ஷத்திரங்கள்) यावत्. रोचन्ते=பிரகாசிக்கும் காலம் வரையில் यु न्ति=வண்டியில் கட்டி வேலைசெய்யும்படித் தூண்டுகின்றனர்

3. (ப-ரை) सखायः=சிநேஹிதர்களான நாங்கள் तवस्तरम्=சீக்கிர கதியையுடைய इन्द्रम्=இந்திரனை योगे, योगे=வண்டியில் குதிரையையோ, காளையையோ கட்டும்படியாக நேர்ந்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் वाजे, वाजे=ஒவ்வொரு யுத்த சந்தர்ப்பத்திலும் ऊतये=ரக்ஷிப்பதற்காக हवामहे=கூப்பிடுகின்றோம். எந்தக் கார்யத்தைச் செய்வதாக விருந்தாலும் இந்திரனைப் பிரார்த்தித்து அவரது அனுமதியைப்பெற்ற பிறகே அதைச் செய்யவாரம்பிக்கின்றோம், இவ்விதம் செய்தால் அக்கார்யத்திற்கு எவ்விதக்கெடுதலும் நேராதென்பது கருத்து.

(அ - கை) सू०॥ आरोहतीमुत्तराभिरभिमन्त्रयते॥ (ख० 5, सू० 23) விவாஹஞ் செய்யப்பட்ட பெண் வண்டியில் ஏறும் பொழுது பின்னர் எழுதப்படும் மந்திரங்களைப்படிக்க வேண்டும்.

(मन्त्रः) ४ सुकिंशुकꣳशल्मलिं विश्वरूपꣳ हिरण्यवर्णꣳसुवृतꣳसुचक्रम्।
आरोह वध्वमृतस्य लोकꣳस्योनं पत्ये वहतुं कृणुष्व ॥

५ उदुत्तरमारोहन्ती व्यस्यन्ती पृतन्यतः।
मूर्द्धानं पत्युरारोह प्रजया च विराड्भव ॥

६ सम्राज्ञी श्वशुरे भव सम्राज्ञी श्वश्र्वां भव ।
ननान्दरि सम्राज्ञी भव सम्राज्ञी अधिदेवृषु ॥

७ स्नुषाणाꣳश्वशुराणां प्रजायाश्च धनस्य च ।
पतीनां च देवृणां च सजातानां विराड् भव ॥

4 (ப - ரை) वधु=ஓ பெண்ணே! सुकिꣳशुकम्=உபத்திரவத்தைக் கொடுக்காத முள்ளுடன்கூடிய இலைகளையுடைய மரத்தினால் செய்யப்பட்டதும் शल्मलिम्=*இலவமரத்தினால் செய்யப்பட்டதும் विश्वरूपम्=பலவித வர்ணங்களா லலங்கரிக்கப்பட்டதும் हिरण्यवर्णम्=தங்கம்போல் பிரகாசிக்கின்ற நிறமுள்ளதும் सुवृतम्=நன்றாய் ஓடுகின்றதும் सुचक्रम्=நல்ல சக்கிரத்தையுடையதுமான (रथम्=வண்டியை) आरोह = ஏறுவாயாக. अमृतस्य=நீண்ட வாயுளையுடைய என்னுடைய लोकम्=சொந்த வீட்டை குறித்து (नेतुम्=கொண்டுபோவதற்காக) पत्ये=பர்த்தாவான எனக்கு स्योनम्=சுகத்தையுண்டுபண்ணுகின்றதான वहतुम्=உனது பிதாவின் குலத்தினின்றும் கிடைத்த தனத்தை कृणुष्व=இந்த வண்டியிலேயே ஏற்றிவைத்துக் கொள்வாயாக.

5 (ப - ரை) (हेवधु=ஓ பெண்ணே!) उत्तरम् = சிறந்ததான வண்டியை उदारोहन्ती=ஏறுகின்ற (त्वम्=நீ) पृतन्यतः = சண்டைபோட விருப்பமுள்ளவர்களை व्यस्यन्ती=சிதரவடித்துக்கொண்டு पत्युः=பர்த்தாவான என்னுடைய मूर्द्धानम्=தலையில் आरोह=ஏறுவாயாக. அதாவது எனக்கும் நீயே யஜமானியாக ஆவாயாக— என்னாலும் கௌரவிக்கத் தகுந்தவளாயாகவேண்டும் என்பது கருத்து. प्रजया=புருஷ ஸந்ததியால் विराट्=விராட் என்ற சந்தஸ்ஸைக் கொப்பாக भव=ஆகவேண்டும். விராட் என்ற சந்தஸ்ஸானது 10 அக்ஷரமுள்ளது. ஆகவே அது எவ்விதம் 10 அக்ஷர

---

* सुकिꣳशुकम्, शल्मलिम् என்று கூறியதை உபலக்ஷணமாக வைத்துக்கொண்டு எல்லாமரத்தையுமே கிரஹித்துக் கொள்ளவேண்டும். ஆகவே மரத்தினால் செய்யப்பட்டதென்பதுமட்டும் இரண்டு பதத்தின் கருத்தாகின்றது.

முள்ளதாயிருக்கின்றதோ அவ்விதமே நீயும் 10 புத்திர சந்ததிகளையுடையவளாக ஆகவேண்டும் என்பது கருத்து. அல்லது **विराट्**=விசேஷமாய் விளங்குகின்றவளாக **भव** = ஆகவேண்டும் என்ருவது பொருள்கொள்ளவேண்டும்.

6 (ப - ரை) **श्वशुरे** = மாமனரிடம் **सम्राज्ञी** = யஜமானியாக **भव**=ஆவாயாக. **श्वश्र्वाम्**=மாமியாரிடம் **सम्राज्ञी** = யஜமானியாக **भव**=ஆவாயாக. **ननान्दरि**=நாத்தனரிடம் **सम्राज्ञी** = யஜமானியாக **भव**=ஆவாயாக. **देवृषु**=எனது சஹோதரர்களிடம் **सम्राज्ञी**=யஜமானியாக **भव**=ஆகவேண்டும்.

7 மேற்படித்த மந்திரத்தினல் சொல்லப்பட்டதே மறுபடியும்சொல்லப்படுகின்றது. (ப-ரை) **स्नुषाणाम्**=நமதுவீட்டிலுள்ள நாட்டுப்பெண்களுக்கும் **श्वशुराणाम्** = உனது மாமனர், அவர் சஹோதரர்கள் இவர்களுக்கும் **प्रजायाः**, **च**=இனி பிறக்கப்போகின்ற ஸந்ததிகளுக்கும் **धनस्यच**=தனத்திற்கும், **पतीनाम्**=எனக்கும், என்னைப்போன்றவர்களுக்கும், **देवृणांच**=எனது சஹோதரர்களுக்கும், **सजातानाम्**=என்னுடன் எனது கிருஹத்தில் பிறந்து வஸிக்கின்றவர்களுக்கும் **विराट्**=யஜமானியாக **भव** = ஆகவேண்டும். எனது கிருஹத்திலுள்ள உனது மாமனர், மாமியார் முதலியவர்கள் எவ்விதம் உன்னையே யஜமானியாகக் கருதி கவுரவிப்பார்களோ அவ்வித யோக்கியதையை நீ பெறவேண்டும் என்று மேற்படித்த இரண்டு மந்திரங்களின் கருத்து.

(அ—கை) **सू०॥ सूते वर्त्मनो र्व्यवस्तृणात्युत्तरया नीलं दक्षिणस्यां, लोहितमुत्तरस्याम् ॥ (ख० 5, सू० 24)** வண்டியின் சக்கிரங்களின் இரண்டு பாதைகளிலும் நூலைக்குறுக்காகப் பரப்பவேண்டும். நீல நிறமான நூலை வலது சக்கிரத்தின் பாதையிலும் சிவப்பு நிறமான நூலை இடது சக்கிரத்தின் பாதையிலும் பரப்பவேண்டும். அப்பொழுது பின் எழுதப்படும் மந்திரத்தைப் படிக்கவேண்டும்.

(मन्त्रः) ८ नीललोहिते भवतः कृत्या सक्तिर्व्यज्यते ।
एधन्तेऽस्या ज्ञातयः पतिर्बन्धेषु बध्यते ॥

(ப - ரை) (**मया व्यवस्तीर्यमाणे एते सूत्रे**=என்னால் பரப்பப்படுகின்ற இந்த இரண்டு நூற்களும்) **नीललोहिते**=ஒன்று நீல நிறமுள்ளதாயும், மற்றொன்று சிவப்பு நிறமுள்ளதாயும். **भवतः**= இருக்கின்றன. **कृत्यासक्तिः**=(பரப்பப்பட்ட நூற்களால்) **कृत्या**= மற்றவர்களால் ஏவப்பட்ட கெடுதலை விளைவிக்கின்ற துர்த்தேவதையினுடைய **सक्तिः**=விலக்குதல் **व्यज्यते**=உண்டாகின்றது. (**तत-श्च**=அதனால் பிறர்களின் கெட்ட சூழ்ச்சிகள் நாசமடைந்து விட்டபடியால்) **अस्याः**=இந்தப் பெண்ணினுடைய **ज्ञातयः**=பந்துக்கள் **एधन्ते**=விருத்தி யடைகின்றனர். **पतिः**=பர்த்தாவான புருஷனும் **बन्धेषु**=சினேஹிக்கவேண்டிய விடங்களில் **बध्यते**=ஸ்நேஹபாசத்தாற் கட்டுப்படுகிறான். ஓ கன்னிகே! உனக்கும், எனக்கும், மற்றுமுள்ள க்ஞாதிகளுக்கும் ஒருவருக்கொருவரிடம் விசேஷமான ஸ்னேஹம் விருத்தியடையா வண்ணம் தடை செய்வதற்காகவும், நாமிருவரும் இங்கிருந்து செல்லும்பொழுது மத்தியில் தீங்கை விளைவிப்பதற்காகவும் நமது சத்துருக்களால் யாதானும் கெட்டப் பிரயோகங்களைச்செய்து அதனின்றும் துர்த்தேவதைகள் ஒருக்கால் தூண்டப்பட்டிருக்குமாயினும் அவைகள் இதனால் நாசமடைந்துவிடும் என்று கருத்து.

(அ-கை) **सू०॥ ते उत्तराभिरभि याति** (**ख० 5, सू० 25,**) கீழ் விரிக்கப்பட்ட நூற்களின்மேல் வண்டியைச் செல்லும்படி செய்யவேண்டும். அச்சமயம் பின்வரும் மந்திரங்களை ஜபிக்க வேண்டும்.

(मन्त्रः) ९ ये वध्वश्चन्द्रं वहतुं यक्ष्मा यन्ति जनाꣳअनु ।
पुनस्तान् यज्ञिया देवा नयन्तु यत आगताः ॥
१० मा विदन्परिपन्थिनो य आसीदन्ति दंपती ।
सुगेभिर्दुर्गमतीतामपद्रान्त्वरातयः ॥
११ सुगं पन्थानमारुक्षमरिष्टꣳ स्वस्तिवाहनम् ।
यस्मिन्वीरो न रिष्यत्यन्येषां विन्दते वसु ॥

9 (ப-ரை) **चन्द्रम्**=சந்தோஷத்தைக் கொடுக்கின்ற **वध्वः**=

இந்தக்கன்னிகையினுடைய **वहतुम्**=பிதாவின் குலத்தினின்றும் கிடைத்தபொருளை (**अपहर्तुम्**=திருடுவதற்காக) **ये**=எந்த **यक्ष्माः**= ரோகத்தைப்போல் ஹிம்ஸையைச் செய்கின்ற திருடர்கள் **जनान्**, **अनु**=ஜனங்களுக்குச் சமீபத்தில் **यन्ति**=வருகின்றனரோ. **तान्**= அவர்களை **यज्ञियाः**=யாகத்தில் ஹவிர்ப்பாகம்பெற்ற **देवाः**=தேவர்கள் **यतः**=எந்தவிடமிருந்து **आगताः**=வந்தனரோ (அந்த விடத்தையே) **पुनः**=மறுபடியும் **नयन्तु**=அடையும்படிச் செய்யட்டும். திருடர்களால் உபத்திரவம் ஏற்படாமலிருக்கவேண்டும் என்று கருத்து.

10 (ப—ரை) **ये**=எந்தத் திருடர்கள் **दंपती**=ஸ்திரீ புருஷர்களை **आसीदन्ति**=வந்தடைகின்றனரோ (**ते**=அந்த) **परिपन्थिनः**=வழியை மறைத்துக்கொண்டு திருடுகின்றவர்கள் **माविदन्** = எங்களைவந்தடைய வேண்டாம். அல்லது நாங்கள் வழியிற் செல்லுகின்றதையே அவர்கள் அறிய வேண்டாம். **सुगेभिः**=சுகமாய்ச் செல்லக்கூடிய பாதைகளால் **दुर्गम्**=அபாயம் நிறைந்த பிரதேசத்தை **अतीताम्**=கடக்கவேண்டும். **अरातयः**=சத்துருக்களான திருடர்கள் **अपद्रान्तु**=எங்களைவிட்டு விலகிச் செல்லட்டும்.

11 (ப—ரை) **यस्मिन्**=எந்தமார்க்கத்தில் **वीरः**=நமது சேவகன் **नरिष्यति**=துன்பமடையமாட்டானோ, **अन्येषाम्**=திருடர்களுடைய **वसु**=தனத்தை **विन्दते**=அபஹரித்து விடுவானோ (**तादृशम्**= (அத்தகையதும்) **सुगम्**=சுகமாய்ச் செல்லக்கூடியதும் **अरिष्टम्**= கெடுதலற்றதும் **स्वस्तिवाहनम्** = வாஹனங்களுக்குத் தீமையை விளைவிக்காததுவுமான **पन्थानम्**=மார்க்கத்தை **आरुक्षम्**=அடைந்துவிட்டேன். எந்தமார்க்கத்தால் சென்றால் எனது சேவகர்கள் திருடர்களால் தோல்வியை யடையமாட்டார்களோ, அதற்கு மாறாக திருடர்களின்பணத்தையே அபஹரித்துவிடுவார்களோ, எந்தப்பாதையில் வண்டிக்கோ, காளைகட்க்கோ தீங்கு நேரிடாதோ அத்தகையமார்க்கத்தை யடைந்து க்ஷேமமாய் ஊர் போய்ச் சேரவேண்டும் என்று கருத்து.

முதல் பிரச்னத்தில் ஆறுவது கண்டம் முற்றிற்று.

ஏழாவது கண்டம்

(அ—கை) सू०॥ तीर्थस्थाणुचतुष्पथव्यतिक्रमे चोत्तरां जपेत् (ख० 5, सू० 26,) வரன் கன்னிகையைப் பாணிக்கிரஹணஞ்செய்து கொண்டு வண்டியில்தானும் கன்னிகையும் ஏறித் தனதுகிருஹத்தைக் குறித்துச் செல்லுங்கால் மத்தியில்—புண்ய தீர்த்தங்கள் (ஆறுகள்) பசுக்கள் உறைந்துகொண்டு தெனவைப் போக்கிக் கொள்வதற்காக பூமியில் புதைக்கப்பட்ட கட்டைகள், நாச்சந்துகள் இவைகளைக்கடக்கும்படி நேர்ந்தால் 7 வது கண்டத்தின் முதல்மந்திரத்தைப் படிக்கவேண்டும்—

(मन्त्रः) १ तामन्दसाना मनुषो दुरोण आधत्तꣳरयिꣳदशवीरं वचस्यवे ।
कृतं तीर्थꣳसुप्रपाणꣳशुभस्पती स्याणुं पथेष्ठामपदुर्मतिꣳहतम् ॥

(ப—ரை) இம்மந்திரத்தால் அச்வினீ தேவர்கள் பிரார்த்திக்கப்படுகின்றனர்—**मनुषः**=மனுஷ்யனுடைய **दुरोणे**=வீட்டில் **मन्दसानौ**=ஸ்துதிக்கப்படுகின்ற **तौ**=பிரசித்தர்களான அச்வினீதேவர்கள் **वचस्यवे**=அச்வினீதேவர்களை ஸ்துதிக்க விரும்புகின்ற எனக்கு **दशवीरम्**=10 புத்திரசந்ததிகளுடன்கூடிய **रयिम्**=தனத்தை **आधत्तम्**=கொடுக்கட்டும். (**किञ्च**=மேலும்) **शुभस्पती**=ஜலத்திற்கு யஜமானர்களான அச்வினீ தேவர்கள் **तीर्थम्**=தீர்த்தத்தை **सुप्रपाणम्**=சுகமாயருந்தக்கூடியதாக **कृतम्**=செய்யட்டும். **पथेष्ठाम्**=வழியிலிருக்கின்ற **स्थाणुम्**=கட்டையையும், **दुर्मतिम्**=கெட்ட புத்தியுள்ள திருடர் முதலியோரையும் **अपहतम्**=நாசஞ்செய்ய வேண்டும். ஓ அச்வினீ தேவர்காள்! மனிதர்களால் அவரவர்களது கிருஹத்தில் ஸ்துக்கப்படுகின்ற தங்களை நானும் ஸ்தோத்திரஞ் செய்கிறேன். எனது ஸ்தோத்திரத்தால் திருப்தியடைந்து பிரஜாவிருத்தியுடன்கூடிய சம்பத்தைக் கொடுக்கவேண்டும். மேலும் தீர்த்தங்களை ஆரோக்யத்தையும் தாஹசாந்தியையும் கொடுக்கின்றவைகளாக வழியில் ஏற்படுத்த வேண்டும். பாதைகளில் நீட்டிக்கொண்டு கமனத்திற்குத் தடையாக விருக்கின்ற கட்டைகளையும், திருடர்களையும் நாசஞ் செய்யவேண்டும் என்று கருத்து.

(அ—கை) सू॥ नावमुत्तरया ऽनुमन्त्रयते (ख०6, सू०1) நதியைக் கடந்து செல்ல ஓடத்திலேற வேண்டி நேர்ந்தால் அப்பொழுது 7வது கண்டம் முதல் மந்திரத்தால் ஓடத்தை அனுமந்திரணஞ் செய்யவேண்டும். (ஓடத்தைத் தொட்டுக்கொண்டு ஷெ மந்திரத்தை ஜபிக்கவேண்டும்)

(मन्त्रः) २ अयं नो मह्याः पारꣳस्वस्ति नैषद्वनस्पतिः ।
सीरा नस्सुतरा भव दीर्घायुत्वाय वर्चसे ॥

(ப—ரை) वनस्पतिः=மரத்தினால் செய்யப்பட்ட अयम्=இந்த ஓடம் नः=எங்களை मह्याः=பெரிதான ஆற்றினுடைய पारम्=கரையை स्वस्ति=க்ஷேமமாக नेषत्=அடைவிக்க வேண்டும். सीरा=ஓ ஓடமே नः=எங்களை सुतरा=சுகமாய் நதியைக்கடக்கும்படிச் செய்வதாகவும், दीर्घायुत्वाय=நீண்டவாயுளுக்கும், वर्चसे=சரீரகாந்திக்கும் (निमित्तम्=நிமித்தமாகவும்) भव=ஆவாயாக.

(அ—கை) सू॥ न च नाव्यांस्तरती वधूः पश्येत् ॥ (ख०6, सू०2) கன்னிகையானவள் ஓடதில் ஏறிச் செல்லும் பொழுது ஓடத்தை ஓட்டுகின்றவர்களைப் பார்க்கக்கூடாது. सू॥ तीर्त्वोत्तरां जपेत्= (ख० 6, सू० 3) கரையை வந்தடைந்த பிறகு 7வது கண்டம் மூன்றுவது மந்திரத்தைப்படிக்க வேண்டும்.

(मन्त्रः) ३ अस्य पारे निर्ऋतस्य जीवा ज्योतिरशीमहि ।
मह्या इन्द्रस्स्वस्तये ॥

(ப—ரை) निर्ऋतस्य=தாண்டப்பட்ட अस्य=இந்த நதியினுடைய पारे=அக்கரையை जीवाः=உயிருடன் கூடியவர்களாய் (प्राप्ताः=அடைந்துவிட்டோம். ஓடதில் ஏறிவரும் பொழுது மத்தியில் நதியில் ஓடம் கவிழ்ந்துபோய் உயிர்துறந்துவிடாமல் சாவதானமாய் அக்கரையைவந்தடைந்துவிட்டோம் என்று கருத்து) (ते = அந்த நாங்கள்) ज्योतिः = பயமற்ற ஸ்தானத்தை अशीमहि = அடைவோமாக. (नः=எங்களுக்கு) इन्द्रः=இந்திரன். मह्यै=பெரிதான स्वस्तये=க்ஷேமத்தையும் பொருட்டு भवतु=ஆகவேண்டும்.

3. (ப—ரை) हिरण्ययी=சுவர்ணமயமான अरणी = அரணிக் கட்டைக் கொப்பான புருஷலிங்கத்தால் अश्विना=அச்வினீ தேவர்கள் यम्=எந்தக்கர்ப்பத்தை निर्मथत:=அரணிக்கட்டையில் கடைதல் போன்ற வியாபாரத்தால் (जनितवन्तौ=உண்டு பண்ணினரோ) तम्=அத்தகைய गर्भम्=கர்ப்பத்தை दशमेमासि=10வது மாதத்தில் सूतवे = பிரஸவிப்பதற்காக हवामहे = விரும்புகிறோம். அச்வினீ தேவர்கள்மிக்க அழகுவாய்ந்தவர்கள் என்பதுபிரசித்தம். ஆனது பற்றி அவர்களால் அவர்களது மனைவியினிடம் உண்டு பண்ணப் பட்ட ஸந்ததியானது எவ்வளவு அழகு பொருந்தியதாக விருக்குமோ அவ்வளவு அழகு வாய்ந்த ஸந்ததி உன்னிடம் உண்டாக வேண்டும் என்று கருத்து.

४ यथेयं पृथिवी मही तिष्ठन्ती गर्भमादधे ।
एवं त्वं गर्भमाधत्स्व दशमे मासि सूतवे ॥

५ यथा पृथिव्यग्निगर्भा द्यौर्यथेन्द्रेण गर्भिणी ।
वायुर्यथा दिशां गर्भ एवं गर्भं दधामि ते ॥

६ विष्णो श्रेष्ठेन रूपेणास्यां नार्यां गवीन्याम् ।
पुमाꣳसं गर्भमाधेहि दशमे मासि सूतवे ॥

4. (ப—ரை) मही=பெரிதான इयम्=இந்த पृथिवी=பூமியானது तिष्ठन्ती=தற்சமயம் நாம் காணுகின்ற பிரகாரம் மல்லாக்காகவே இருந்துகொண்டு गर्भम्=ஆகாசத்தினின்றும் மேகங்களால் வர்ஷிக்கப்பட்ட மழையாகிற ரேதஸ்ஸை கிரஹித்து அதனின்று முண்டான பயிர்களாகிற கர்ப்பத்தை आदधे=தரிக்கின்றதோ एवम्=இவ்

விதம் त्वम्=நீ दशमेमासि=10வது மாதத்தில் सूतवे=பிரஸவிப்பதற்காக गर्भम्=கர்ப்பத்தை आधत्स्व=தரிப்பாயாக.

5. (ப—ரை) पृथिवी=பூமி यथा=எவ்விதம் अग्निगर्भा=அக்னியை மத்தியிலுடையதாக (भवति=ஆகின்றதோ) பூமியின் மத்திய பாகத்தில் மிக்க உக்கிரமான அக்னியிருப்பது எரிமலை, பூகம்பம் இவைகள் வாயிலாலனுமிக்கப்படுவது பற்றி இவ்விதம் சொல்லப்படுகின்றது. द्यौः=த்யுலோகம் यथा=எவ்விதம் इन्द्रेण=இந்திரனால் गर्भिणी=கர்ப்பமுள்ளதா யாகின்றதோ (த்யுலோகத்தில் பிரதான பூதராய் இந்திரனிருப்பதாலும் அவர் த்யுலோகத்தில் வஸிப்பதாலு மிவ்விதம் சொல்லப்படுகின்றது.) वायुः=காற்று दिशाम्=திக்குகளுடைய गर्भः=கர்ப்பமாக यथा=எவ்விதம் भवति=ஆகின்றதோ एवम्=இவ்விதம் ते=உனக்கு गर्भम्=கர்ப்பத்தை दधामि=கொடுக்கின்றேன். பிருதிவீ முதலியவைகள் அக்னி முதலியவற்றைக் கர்ப்பமாய்த் தரிப்பதுபோல் நீயும் என்னால் கொடுக்கப்படும் கர்ப்பத்தைத் தரிப்பாயாக என்று கருத்து.

6 (ப—ரை) विष्णो=ஓ மஹா விஷ்ணுவே! गवीन्याम्=காதல் கொள்ளத் தகுந்தவளான अस्याम्=இந்த नार्याम् = ஸ்திரீயினிடம் श्रेष्ठेन=சிறந்ததான रूपेण=ரூபத்துடன்கூடியதான पुमांसम्=புருஷ பிரஜாரூபமான गर्भम्=கர்ப்பத்தை दशमेमासि=10-வது மாதத்தில் सूतवे=பிரஸவிப்பதற்காக आधेहि=உண்டு பண்ணுவீராக.

(मन्त्रः) ७ नेजमेष परापत*सपुत्रः पुनरापत ।
अस्यै मे पुत्रकामायै गर्भमाधेहि यः पुमान् ॥

८ व्यस्य योनिं प्रति रेतोगृहाण पुमान्पुत्रो धीयतां गर्भो अन्तः।
तं माता दशमासोबिभर्तु स जायतां वीरतमस्स्वानाम् ॥

आ ते गर्भो योनिमेतु पुमान्बाण इवेषुधिम् ।
आवीरो जायतां पुत्रस्ते दशमास्यः ॥

---

* सुपुत्रः என்றும் வைதிகர்கள் படிக்கின்றனர்.

7. (ப - ரை) **नेजमेष**=ஓ நேஜமேஷன் என்ற தேவனே! (சுப்ரமண்ய ஸ்வாமியின் பரிவாரங்களுள் ஒருவருக்கு நேஜமேஷர் என்று பெயர். கர்ப்பவிச்சேதம் செய்வது அவரது தொழில். அவர் இங்கு குறிக்கப்படுகின்றார்.) **परापत** = இவ்விடம் விட்டு வேறிடத்திற்குச் சென்றுவிடுவீராக. இங்குவருவதாக இருந்தால் **सपुत्रः**=எனக்குக் கிடைக்கவேண்டிய புத்திரஸந்ததியுடன் **पुनः**= மறுபடியும் **आपत** = இங்குவருவீராக. ஓ நேஜமேஷன் என்ற தேவனே! நீர் இவ்விடம் விட்டு வேறிடம் சென்றுவிடும். அங்கிருந்து மறுபடியும் இங்கு திரும்ப வரவேண்டிய அவச்யகார்யம் நேருமாயின் புத்திரனுடனேயே இங்கு வரவேண்டும். அதாவது எனக்கு புத்திர ஸந்தானத்தைக் கொடுக்கவேண்டும் என்று கருத்து. **मे**=என்னைச் சேர்ந்தவளான **पुत्रकामायै**=புத்திரனைவிரும்புகின்ற **अस्यै**=இந்த எனது மனைவியினிடம் **यः**=எந்தக் கர்ப்பம் **पुमान्**=புருஷப்பிரஜா ரூபமாயாகுமோ **तादृशम्**=அத்தகைய **गर्भम्**= கர்ப்பத்தை **आधेहि**=உண்டு பண்ணுவீராக

8. (ப - ரை) (**जाये**=ஓ பத்தினியே!) **योनिम्** = யோனியை **व्यस्य**=விரித்துக்கொண்டு **रेतः**=என்னால் விடப்படுகின்ற ரேதஸ்ஸை **प्रतिगृहाण**=பெற்றுக்கொள்வாயாக. (**तेन**=அதனால்) **पुमान्**, **पुत्रः**=புருஷப் பிரஜாரூபமான **गर्भः**=கர்ப்பம் **अन्तः**=சரீரத்திற்குள் **धीयताम्**=ஏற்படட்டும். **तम्**=அந்தக் கர்ப்பத்தை **माता**=தாய் **दश**, **मासः**=பத்து மாதம் **बिभर्तु**=தரித்துவரட்டும். **सः**=அந்தப் புருஷப் பிரஜையானது **स्वानाम्**=தன்னைச் சேர்ந்தவர்களுள் **वीरतमः**= மிக்க சூரத்தன்மைவாய்ந்ததாக **जायताम्**=உண்டாகட்டும்.

9. (ப—ரை) **पुमान्**=புருஷப் பிரஜாரூபமான **गर्भः** = கர்ப்பம் **इषुधिम्**=பாணப்பையை **बाण इव**=அம்புபோல **ते** = உன்னுடைய **योनिम्**=யோநியை **एतु**=அடையட்டும். (**यदा**=எப்பொழுது **गर्भः**= கர்ப்பம்) **दशमास्यः**=10 மாதம் தரிக்கப்பட்டதா யாகின்றதோ (**तदा**=அப்பொழுது) **वीरः**=சூரத்தன்மை வாய்ந்த **पुत्रः** = புத்திரஸந்ததிரூபமாய் **आजायताम्**=வெளியில் பிறவியை யடையட்டும்.

முதல் பிரச்னத்தின் பதின்மூன்றுவது கண்டம் முற்றிற்று.

பதினுன்காவது கண்டம்.

(मन्त्रः) १ करोमि ते प्राजापत्यमागर्भो योनिमेतु ते ।
अनूनः पूर्णो जायतामश्लोणोऽपिशाचधीतः ॥
२ पुमांस्ते पुत्रो नारि तं पुमाननु जायताम् ।
तानि भद्राणि बीजान्यृषभा जनयन्तु नौ ॥
३ यानि भद्राणि बीजान्यृषभा जनयन्ति नः ।
तैस्त्वं पुत्रान्विन्दस्व सप्रसूर्धेनुका भव ॥
४ कामप्रमृद्धयतां मह्यमपराजितमेव मे ।
यं कामं कामये देव तं मे वायो समर्द्धय ॥

1. (ப - ரை) (**हेपत्नि**=ஓ பத்தினியே!) **ते**=உனக்கு **प्राजापत्यम्**=பிரஜாபதி தேவனின் கார்யமான ரேதஸ்ஸேகத்தை **करोमि**=செய்கிறேன். **ते**=உன்னுடைய **योनिम्**=யோனியை **गर्भः**=கர்ப்பம் **एतु**=அடையட்டும். (**सच**=அந்தக் கர்ப்பம்) **अनूनः**=அங்கக் குறைவற்றதாகவும் **पूर्णः**=காலபூர்த்தியுள்ளதாகவும் (10 மாதம் கர்ப்பாசயத்தில் கர்ப்பம் தங்கியிருந்து பின்னர் வெளிவரவேண்டும் என்று கருத்து) **अश्लोणः**=நொண்டி, செவிடு முதலிய தோஷமற்றதாகவும் **अपिशाचधीतः** = பிசாசம் முதலிய துர்த்தேவதைகளால் தியானிக்கப்படாததாகவும், பிசாசங்களால் கெடுக்கப்படாததாகவும் (**भवतु**=ஏற்படட்டும்)

2. (ப - ரை) **नारि**=ஓ மனைவியே! **ते**=உனக்கு **पुमान् पुत्रः**=புருஷப்பிரஜை **जायताम्** = உண்டாகட்டும். **तम्**=அந்தப் புத்திரனை **पुमान्**=புருஷப்பிரஜை **अनुजायताम्**=தொடர்ந்து உண்டாகட்டும். முதல்கர்ப்பம் புருஷப்பிரஜையாக ஏற்படுவதுபோல் இரண்டாவது முதலிய கர்ப்பங்களும் புருஷப்பிரஜையாகவே ஏற்படவேண்டும் என்று கருத்து. **ऋषभाः**=பிரஜாபதி முதலிய தேவர்கள் **भद्राणि**=மங்களகரமான **तानिबीजानि**=புருஷ சந்ததிக்குக் காரணமான வீர்யத்தை **नौ**=எங்களிருவருக்கும் **जनयन्तु**=உண்டு

பண்ணட்டும். மேன்மேலும் புத்திர ஸந்ததியே உண்டாவதற் குரிய வீர்யத்தை எங்களிருவருக்கும் பிரஜாபதி முதலிய தேவர்கள் உண்டு பண்ணவேண்டும் என்று கருத்து.

3. (ப - ரை) **भद्राणि** = மங்களகரமான **यानिवीजानि** = எந்த வீர்யங்களை **नः** = எங்களிருவருக்கும் **ऋषभाः** = பிரஜாபதி முதலிய தேவர்கள் **जनयन्ति** = உண்டுபண்ணினரோ **तैः** = அந்த வீர்யங்களால் **त्वम्** = நீ **पुत्रान्** = ஸந்ததிகளை **विन्दस्व** = அடைவாயாக. **सा** = அந்த நீ **प्रसूः** = சந்ததிகளைப் பெறுபவளாகவும், **धेनुका** = பசுவுக்கொப்பாகவும் **भव** = ஆவாயாக. பசுவானது கன்றினல் எவ்விதம் ஊட்டப்படுகின்றதோ அவ்விதமே நீயும் பிள்ளையினல் பானம் செய்யப்படுகின்ற ஸ்தன்யத்தை யுடையவளா யாகவேண்டும். என்று கருத்து.

4. (ப - ரை) **वायोदेव** = ஓ வாயுதேவனே! (**इदम्** = இந்த ரேதஸ்ஸேகம் என்ற கார்யம்) **मह्यम्** = எனக்கு **कामप्रम्** = விரும்பியதைப் பூர்த்திசெய்வதாக **ऋद्ध्यताम्** = விருத்தியை யடையட்டும் (**इदम्** = இந்தக்கார்யம்) **मे** = எனக்கு **अपराजितमेव** = வியர்த்தமா யாகாததாகவே (**भवतु** = ஆகட்டும்) **यम्** = எந்த **कामम्** = பலனை **कामये** = விரும்புகின்றேனே **तम्** = அந்தப் பலனை **समर्द्धय** = விருத்தி செய்வீராக. ரேதஸ்ஸேகமானது சரீரத்திலுள்ள வாயுவினல் தூண்டப்பட்டு எற்படுவதால் வாயுதேவன் இவ்விதம் பிரார்த்திக்கப்படுகின்றார்.

விவாஹப்பிரகரணமும், கர்ப்பாதானப் பிரகரணமும் முற்றிற்று.

(அ - கை) **अथप्राध्वस्यपरिप्लवे परिकासने चाप उपस्पृश्योत्तरे यथालिङ्गं जपेत्** (**ख०** 9, **सू०** 2) இனி தோஷபரிஹாரம் முதலியவற்றிலுபயோகிக்கப் படுகின்ற மந்திரங்கள் படிக்கப்படுகின்றன. தர்மானுஷ்டானம் செய்வதற்காகப் பொருள்தேடவேண்டி வெளிக்கிளம்பியபொழுது தும்பல், கோட்டாய் விடுதல் என்ற அபசகுனம் நேர்ந்தால் தீர்த்தத்தை ஆசமனஞ்செய்து மந்திரலிங்கத்தை யனுஸரித்து பின்னர் எழுதப்படும் மந்திரங்களை ஜபிக்கவேண்டும். அதாவது: 5வது மந்திரத்தை தும்பல் நேர்ந்த பொழு

தும், 6 வது மந்திரத்தை கொட்டாய்விடுதல் ஏற்பட்டபொழுதும் ஜபிக்கவேண்டும்.

(मन्त्रः) ५ अनुहवं परिहवं परीवादं परिक्षपम् ।
दुःस्वप्नं दुरुदितं तद्द्विषद्भ्यो ददाम्यहम् ॥

६ अनुहूतं परिहूतꣳशकुनेर्यदशाकुनम् ।
मृगस्य सृतमक्ष्णया तद्द्विषद्भ्यो दिशाम्यहम् ॥

5. (ப - ரை) **अनुहवम्**=பின் நின்று கூப்பிடுதல், **परिहवम्**=நான்கு பக்கங்களிலும் நின்று கூப்பிடுதல், **परीवादम्**=வெட்டு, குத்து முதலிய கொடூரவார்த்தைகள் **परिक्षपम्**=தும்பல் **दुःस्वप्नम्**=கெட்டசுவப்னம் **दुरुदितम्**='மூர்க்கன் மூடன்' முதலிய தூஷண வார்த்தைகள் (**इतियत् दुर्निमित्तम्** = மேற்கூறியது போன்ற யாதொரு அபசகுனமுண்டோ) **तत्**=அதை **द्विषद्भ्यः**=சத்துருக்களையும் பொருட்டு **अहम्**=நான் **दिशामि**=கொடுத்துவிடுகிறேன். ஷெதுர்நிமித்தங்களா லறிவிக்கப்படுகின்ற கெட்டபலன்கள் எனது சத்துருவுக் குண்டாகவேண்டுமே யல்லாது எனக்குண்டாகக் கூடாதென்பது கருத்து. 6வது மந்திரத்திற்கும் இவ்விதமே கருத்துக்கொள்ளவேண்டும்.

6. (ப - ரை) **यत्**=யாதொரு **अनुहूतम्**=பின்னின்று கூப்பிடுதலுண்டோ **यत्**=யாதொரு **परिहूतम्**=நான்குபக்கங்களிலும் நின்றுகொண்டு கூப்பிடுதலுண்டோ **शकुनेः**=பறவையினுடைய **यत्**=யாதொரு **अशाकुनम्**=துர்நிமித்தமுண்டோ. (சகுனசாஸ்திரத்தில் பிரயாணகாலத்தில் இன்னின்ன பக்ஷி இன்னின்னவிதமாய்க் கற்றினல் இன்னின்னபலனுண்டாகும் என்றும், அவைகள் வலத்திலும், இடத்திலும் சஞ்சரிப்பதால் இன்னின்ன பலனுண்டாகும் என்றும் சொல்லப்பட்டிருக்கின்றது.) **मृगस्य**=ஓநாய் முதலிய மிருகங்களுடைய **यत्**=யாதொரு **अक्ष्णया**=குறுக்கான **सृतम्**=கமனமுண்டோ **तत्**=அதை **अहम्**=நான் **द्विषद्भ्यः**=சத்துருக்களையும் பொருட்டு **दिशामि**=கொடுக்கின்றேன்.

(அ-கை) सू०॥ **एवमुक्तरैर्यथालिङ्गं चित्रियं वनस्पतिंशकृद्वीतिं सिग्वातं शकुनिमिति** (ख० 9, सू० 3.) பொருள் சம்பாதிப்பதற்காகப் புறப்பட்டவன் உலகில் பிரசித்திபெற்ற மரத்தையோ, கோமயக் குவியலையோ, *வஸ்திரத்தின் காற்றையோ அமங்களமாய் சப்திகின்ற பறவையையோ ஸந்தித்தால் தீர்த்தத்தால் ஆசமனம் செய்து 7, 8, 9, 10,வது மந்திரங்களால் லிங்கத்தை யனுஸரித்து ஷி மரம் முதலியவற்றை அபிமந்த்ரணம் செய்யவேண்டும்.

(मन्त्रः) ७ आरात्ते अग्निरस्त्वारात्परशुरस्तुते ।
निवाते त्वाऽभिवर्षतु स्वस्तितेऽस्तुवनस्पते स्वस्तिनोऽस्तुवनस्पते ॥

८ नमश्शकृत्सदे रुद्राय नमो रुद्राय शकृत्सदे ।
गोष्ठमसि नमस्तेऽस्तु मा माहिंसीः ॥

९ सिगसि नसि वज्रो नमस्तेऽस्तु मा माहिंसीः ॥

१० उद्गातेव शकुने साम गायसि ब्रह्मपुत्र इव सवनेषु शंसिस ।
स्वस्तिनश्शकुने अस्तु प्रतिनस्सुमना भव ॥

7. (ப-ரை) பிரஸித்தமான மரத்தைச் சந்தித்தால் இம் மந்திரத்தால் அபிமந்த்ரணம் செய்யவேண்டும். **वनस्पते**=ஓ மரமே! **ते**=உனக்கு **आरात्**=வெகுதூரத்தில் **अग्निः**=அக்னியானது **अस्तु**=இருக்கட்டும். **ते**=உனக்கு **आरात्**=வெகுதூரத்தில் **परशुः**=கோடறியானது **अस्तु**=இருக்கட்டும். ஓ மரமே நீ தீக்கிரையாக வேண்டாம், உன்னை கோடறிகொண்டு ஒருவரும் வெட்டவும் வேண்டாம் என்று கருத்து. **विवाते**=காற்றில்லாத சந்தர்ப்பத்தில் (**पर्जन्यः**=பர்ஜன்யன் என்ற தேவன்) **त्वा**=உன்னைக்குறித்து **अभिवर्षतु**=வர்ஷிக்கட்டும். மழையுடன் காற்று சேர்ந்தால் மரம் முறிந்து விடுமாதலால் காற்றில்லாத பொழுது வர்ஷிக்கட்டும் என்று பிரார்த்திக்கப்படுகின்றது. **वनस्पते**=ஓமரமே **ते**=உனக்கு **स्वस्ति**=க்ஷேமமுண்டாகட்டும். **वनस्पते**=ஓ மரமே! **मे**=எனக்கும்

---

* ஒருவன் வஸ்திரத்தை உதரும் பொழுது அதனாலுண்டாகின்ற காற்று சரீரத்தில் படுமானல் அது அமங்களத்தைத் தருவதாகவாகும்.

स्वस्ति=க்ஷேமம் अस्तु=உண்டாகட்டும். அசேதனமான மரத்தினிடம் பிரார்த்தனை பொருந்தாதாகையால் அதன் அபிமானி தேவதையினிடம் க்ஷேமம் பிரார்த்திக்கப்படுவதாகக் கருத்துக் கொள்ளவேண்டும்.

8 (ப - ரை) கோமயக்குவியலை இம்மந்திரத்தால் அபிமந்திரணம் செய்யவேண்டும் शकृत्सदे=கோமயத்தில் வஸிக்கின்ற रुद्राय=ருத்திரனையும் பொருட்டு नमः=நமஸ்காரம். மிகுந்த வாதரவால் இரண்டுதடவை நமஸ்காரம் செய்யப்படுகின்றது (हेशकृत्=ஓ கோமயமே त्वम्=நீ) गोष्ठम्=பசுவினிடமிருப்பதாக असि=இருக்கின்றாய். ते=உனக்கு नमः=நமஸ்காரம் अस्तु=இருக்கட்டும் मा=என்னை माहिंसीः=ஹிம்ஸிக்க வேண்டாம்.

9 (ப - ரை) இம்மந்திரத்தால் வஸ்திரத்தின் காற்றை அபிமந்திரணம் செய்யவேண்டும். त्वम्=நீ सिक्=வஸ்திரத்தின் நுனியால் உண்டு பண்ணப்பட்டவனாக असि=இருக்கின்றாய். वज्रः=வஜ்ரமாக, வஜ்ரம்போல் ஹிம்ஸிப்பவனாக नासि=இல்லை. ते=உனக்கு नमः=நமஸ்காரம் अस्तु=இருக்கட்டும். मा=என்னை माहिंसीः=ஹிம்ஸிக்க வேண்டாம். ஓ வஸ்திரத்தா லுண்டுபண்ணப்பட்ட காற்றே! நீ வஸ்திரத்தின் காற்றாகமட்டு மிருக்கவேண்டுமேயல்லாது வஜ்ரம்போல் ஹிம்ஸிப்பவனாக ஆகக்கூடாதென்று கருத்து.

(10) (ப - ரை) இம்மந்திரத்தால் பக்ஷியை அபிமந்த்ரணம் செய்யவேண்டும். शकुने=ஓ பரவையே! त्वम्=நீ उद्गातेव=உத்காதாவென்ற ருத்விக்கைப்போல் साम=ஸாமத்திற் கொப்பானதை गायसि=கானஞ் செய்கிறாய். ஓ பரவையே! சில சமயத்தில் நீ சப்திப்பது உத்காதாவென்ற ருத்விக் கானவன் கானம் செய்வது போலிருக்கின்றது என்று கருத்து. * सवनेषु=பிராதஸ்ஸவனம்

*ஸோமயாகத்தில் காலையிலும் மத்தியான்ஹத்திலும், மாலையிலும் ஹோமஞ் செய்யவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அக்காலங்களுக்கு முறையே, பிராதஸ்ஸவனம், மாத்யந்தினஸவனம், திருதீயஸவனம் எனப்பெயர்.

முதலியவற்றில் ब्रह्मपुत्र इव=பிரும்மவர்க்கத்தைச் சேர்ந்த "பிராம்மணச்சம்ஸீ" என்ற ருத்விக்குபோல் शंससि=ஸ்தோத்திரம் செய்கிருய். शकुने=ஓ பறவையே नः=எங்களுக்கு स्वस्ति=க்ஷேமமும் अस्तु=உண்டாகட்டும். नः प्रति=எங்கள் விஷயத்தில் सुमनाः=நல்ல மனதுள்ளவனுக பவ=ஆவாயாக. ஓ பறவையே! நீ எதிர்ப்படுவதாலோ, சப்தம் செய்வதாலோ ஏற்படுகின்ற தோஷங்கள் எனக்குண்டாக வேண்டாம் என்று கருத்து.

முதல் பிரச்னத்தில் பதினுன்காவது கண்டம் முற்றிற்று.

பதினைந்தாவது கண்டம்.

(அ-கை) सू०॥ उभयोर्हृदयसंसर्गेप्सुस्त्रिरात्रावरं ब्रह्मचर्यं चरित्वा स्थालीपाकंश्रपयित्वाऽग्नेरुपसमाधानाद्याज्यभागान्ते अन्वारब्धायांस्थालीपाकादुत्तरा आहुतीर्हुत्वा जयादि प्रतिपद्यते परिषेचनान्तं कृत्वातेन सर्पिष्मता युग्मान्ब्र्यवरान् ब्राह्मणान् भोजयित्वा सिद्धिं वाचयीत ॥ (ख० 9, सू० 4) ஓர் தம்பதிகளுக்கு ஒருவருக்கொருவரிடம் ஸ்னேஹக் குறைவிருந்து அவர்களுக்கு ஒருவருக்கொருவரிடம் ஸ்னேஹமுண்டாவதைப் பந்துக்கள் விரும்பினுல் அவ்விதம் விரும்புகிறவன் மூன்று நாளைக்குக் குறைவின்றி முதலில் பிரும்மசரிய விரதத்தை யனுஷ்டித்து தனது ஔபாஸனுக்னியில் ஹவிஸ்ஸைச் சமையல்செய்து, பிறகு அக்னிப் பிரதிஷ்டை முதல் ஆஜ்யபாகம் என்ற கர்மம்வரை செய்துகொண்டு பர்த்தாவின் சினேஹத்தைப் பெறவேண்டிய ஸ்திரீயானவள் தன்னைத் தொட்டுக்கொண்டிருக்கும்பொழுது முன் தயார் செய்துவைத்த ஹவிஸ்ஸினின்று மெடுத்து பின்னர்படிக்கப்படும் ஏழு மந்திரங்களால் ஏழுதடவை ஹோமஞ்செய்து ஜயாதிஹோமம் செய்யவேண்டும். பிறகு பரிஷேசனம் என்ற கர்மம்வரைச் செய்து முடித்துக் கொண்டு ஹோமஞ்செய்து மிஞ்சின அன்னத்தில் ஆஜ்யத்தைச் சேர்த்து இரண்டுக்குக் குறைவுபடாத இரட்டைப் படையான பிராம்மணர்களுக்குப் போஜனம் செய்வித்து அவர்களிடமிரு

ந்து "அனுஷ்டித்த கர்மம் சபலமாகுக" என்ற அனுக்கிரஹத்தைப் பெறவேண்டும்.

(मन्त्रः) १ प्रातरग्निं प्रातरिन्द्रꣳहवामहे प्रातर्मित्रावरुणा प्रातरश्विना ।
प्रातर्भगं पूषणं ब्रह्मणस्पतिं प्रातस्सोममुत रुद्रꣳहुवेम ॥

२ प्रातर्जितं भगमुग्रꣳहुवेम वयं पुत्रमदितेर्यो विधर्ता ।
आध्रश्चिद्यं मन्यमानस्तुरश्चिद्राजा चिद्यं भगं भक्षीत्याह ॥

३ भग प्रणेतर्भग सत्यराधो भगेमां धियमुदव ददन्नः ।
भग प्रणो जनय गोभिरश्वैर्भग प्रनृभिर्नृवन्तस्स्याम ॥

४ उतेदानीं भगवन्तस्स्यामोतप्रपित्व उत मध्ये अन्हाम् ।
उतोदिता मघवन्त्सूर्यस्य वयं देवानाꣳसुमतौ स्याम ॥

५ भग एव भगवाꣳअस्तु देवास्तेन वयं भगवन्तस्स्याम ।
तन्त्वा भग सर्व इज्जोहवीमि स नो भग पुर एता भवेह ॥

६ समध्वरायोषसो नमन्त दधिक्रावेव शुचये पदाय ।
अर्वाचीनं वसुविदं भगन्नो रथमिवाश्वा वाजिन आवहन्तु ।

७ अश्वावतीर्गोमतीर्न उषासो वीरवतीस्सदमुच्छन्तु भद्राः ।
घृतं दुहाना विश्वतः प्रपीना यूयं पातस्स्वस्तिभिस्सदा नः ॥

1 (ப-ரை) தம்பதிகளுக்கு ஸ்னேஹ விருத்திக்காக ஹவிஸ்ஸை எடுத்து ஹோமஞ் செய்யும்பொழுது உபயோகிக்கவேண்டிய மந்திரங்கள். **प्रातः**=காலை வேளையில் **अग्निम्**=அக்னியையும் **प्रातः**=காலை வேளையில் **इन्द्रम्**=இந்திரனையும் **प्रातः**=காலை வேளையில் **मित्रावरुणा**-மித்திரன் வருணன் என்றதேவதைகளையும் **प्रातः**-காலை வேளையில் **अश्विना**=அச்வினீ தேவர்களையும் **हवामहे**=கூப்பிடுகிறோம். **प्रातः**=காலை வேளையில் **भगम्**=பகன் என்ற தேவனையும், **पूषणम्**=பூஷா என்ற தேவனையும் **ब्रह्मणस्पतिम्**=வேதநாயகனையும் அல்லது: பிரும்ம தேவனையும் **हुवेम**=கூப்பிடுகின்றோம். **प्रातः**=

காலை வேளையில் सोमम्=ஸோமன் என்ற தேவனையும் रुद्रमुत=ருத்திரன் என்ற தேவனையும் हुवेम=கூப்பிடுகிறோம். அக்னி, இந்திரன் முதலிய தேவர்களை ஹவிர்ப்பாகத்தைப் பெற்றுக் கொள்வதற்காக நான் கூப்பிடுகிறேன் என்று கருத்து.

2 (ப - ரை) यः=எந்தப் பகன் என்ற தேவன் विधर्ता=எல்லா ஜனங்களையும் மழை முதலியவற்றை யுண்டுபண்ணிச் சம்ரக்ஷிக்கின்றாரோ. यम्=எந்தப் பகன் என்ற தேவனை आध्रः,=चित्=தரித்திரனும், यम्=எந்த பகன் என்ற தேவனை तुरः, चित्=மிக்க ஆதுரனும், यम्=எந்த भगम्=பகன் என்ற தேவனை राजा-चित्=ராஜனும் मन्यमानः=அறிந்துகொண்டு भक्षीति=பஜனை செய் என்று आह=சொல்லுகின்றனரோ (तादृशम्=அத்தகைய மஹிமை வாய்ந்தவரும்) प्रातर्जितम्=காலை வேளையில் மிக்கப் பிரகாசிக்கின்றவரும். उग्रम्=மிக்கக் காந்தியுள்ளவரா யிருப்பதால் மற்றவர்களால் நெருங்கத் தகாதவரும் अदितेः=அதிதி என்ற தேவியின் पुत्रम्=புத்திரனா யிருப்பவருமான भगम्=பகன் என்ற தேவனை वयम्=நாங்கள் हुवेम=கூப்பிடுவோமாக.

(தா - ம்) மழை முதலியவற்றை யுண்டுபண்ணி ஜனங்களைக் காப்பாற்றுகின்றவரும், காலை வேளையில் மிக்கப்பிரகாசத்துடன் வெளிக் கிளம்புகின்றவரும், அரசனாலும், தரித்திரனாலும் அனைவராலும் மிக்கப் பிரேமையுடன் உபாஸிக்கத் தகுந்தவரும் அதிதி தேவியின் புத்திரனுமான பகன் என்ற தேவனை ஹவிர்ப்பாகத்தைப் பெற்றுக்கொள்வதற்காக காலை வேளையில் கூப்பிடுகிறேன் (எ - று.)

3. (ப - ரை) भग=ஓ பகனே! प्रणेतः=எல்லாப் பிராணிகளையும் தூண்டுகின்றவராக (असि=இருக்கின்றீர்) भग=ஓ பகனே! सत्यराधः=அழிவற்ற தனத்தையுடையவராக (असि=இருக்கின்றீர்) नः=எங்களுக்கு ददत्=விரும்பியவற்றைக் கொடுத்துக்கொண்டு इमांधियम=எனது சங்கல்பத்தை उदव=ஒன்றின்பின் ஒன்றாய்க் காப்பாற்றுவீராக. भग=ஓ பகனே! गोभिः=பசுக்களுடனும் अश्वैः=குதிரைகளுடனும் (सहितान्=கூடியவர்களாக) नः=எங்களை प्रजनय=செய்வீராக. भग=ஓ பகனே! (त्वत्प्रसादात्=உமது

பிரஸாதத்தால்) **नृभिः**=ஸேவக ஜனங்களாகிற **नृवन्तः**=மனிதர்களை யுடையவர்களாக **प्रस्याम**=ஆகவேண்டும். ஓ பகனே! உமது பிர ஸாதத்தால் எனக்கு அனேகம் ஸேவக ஜனங்க ளேற்படவேண் டும் என்று கருத்து.

4. (ப-ரை) **मघवन्**=தனத்துடன்கூடிய ஓ பகனே! **इदानीम्**, **उत**=இந்தக்கர்மத்தை யனுஷ்டித்து வரும்பொழுதும் **प्रपित्वे**, **उत**=ஸாயங்காலத்திலும் **अह्नाम्**=பகலினுடைய **मध्ये, उत**=மத்ய காலத்திலும், அதாவது: மத்தியாஹ்னத்திலும் **सूर्यस्य**=ஸூர்யனு டைய **उदिता, उत** =உதயகாலத்திலும் **वयम्** = நாங்கள் **भगवन्तः**= பகனையுபாஸிப்பவர்களாக **स्याम**=ஆகக்கடவோம். என்னேரத் திலும் பகன் என்ற தேவனை உபாஸிப்பவர்களாக ஆகவேண்டும் என்பது கருத்து. **देवानाम्**=மற்றத் தேவர்களுடைய **सुमतौ**= அனுக்கிரஹ புத்தியில் **स्याम**=இருக்கவேண்டும். ஓ பகனே! உமது பிரஸாதத்தால் மற்றத்தேவர்களும் எனக்கு நன்மையுண் டாகுமாறு ஸங்கல்பிக்கவேண்டும் என்று கருத்து.

5. (ப-ரை) **देवाः**=ஓ தேவர்காள் **भग एव**=பகன் என்ற தேவன்தான் **भगवान्** பகன் என்ற தேவனுக்கு நிகராக **अस्तु**= இருக்கக்கூடும். அல்லது **भगवान्**—பகன் என்ற தேவனை யாரா திப்பவனாக விருக்கக்கூடும். பகன் என்ற தேவனின் ஸ்வரூப ஸ்வபாவாதி குணங்களையுள்ளது உள்ளபடி அறிந்து ஆராதிக்க மற்ற எந்த மனிதனாலும் முடியாது என்று கருத்து. **तेन**=அந் தப்பகன் என்ற தேவனால் **भगवन्तः**=ஐசுவர்யம் வாய்ந்தவர்க ளாக **स्याम**=ஆகவேண்டும். **हे भग**=ஓ பகனே! **तम्**=மேற்சொல் லிய மஹிமைவாய்ந்த **त्वा**=உன்னைக்குறித்து **सर्वइत्**=எல்லாஜனங் களும் **जोहवीमि**=ஹவிஸ் முதலியவற்றை ஹோமஞ்செய்கின்றன. **भग**=ஓ பகனே! **सः**=அந்த நீர் **इह**=இக்கார்மாவில் **नः**=எங்களு க்கு **पुरः**=முன் **एता**=செல்பவராக **भव**=ஆகவேண்டும்.

6. (ப-ரை) **शुचये**=சுத்தமான **पदाय**=ஸ்தானத்தின் பொரு ட்டு **दधिक्रावेव**=அக்னி தேவன்போல, அல்லது சூரியன்போல **अध्वराय**=என்னால் அனுஷ்டிக்கப் படுகின்ற இந்தக் கர்மத்திற்கு **उषसः**=உஷஸ் என்ற தேவதைகள் **संनमन्त**=வந்து சேரட்டும்.

சூரியகிரண சம்பந்தத்தாலோ, அக்னியின் சம்பந்தத்தாலோ எவ்விதம் அசுத்தமான இடமும் சுத்தியைப் பெற்றதா யாகின்றதோ அவ்விதமே இந்த எனது ஹோமமும்உஷஸ் என்ற தேவதையின் ஸம்பந்தத்தால் மிக்கப் பரிசுத்தமா யாகிவிடும் என்று தாத்பர்யம். **वाजिनः**=வேகமாய் ஓடுகின்ற **अश्वाः** = குதிரைகள் **रथमिव**=ரதத்தைப்போல (**उषसः** = உஷஸ் என்ற தேவதைகள்) **वसुविदम्**=தனத்தைக் கொடுக்கின்ற **भगम्**=பகன் என்ற தேவனை **नः**=எங்களுக்கு **अर्वाचीनम्**=எதிராக **आवहन्तु**=அழைத்து வரட்டும். உஷோதேவதைகள் பகனை அழைத்து வரட்டும் என்று கருத்து.

7. (ப - ரை) **भद्राः**=தம்மை யாராதிப்பவர்களுக்கு மங்களத்தைக் கொடுக்கின்ற **उषासः**=உஷஸ் என்ற தேவதைகள் **नः**= எங்களுக்குக் கொடுப்பதற்காக **अश्वावतीः**=குதிரைக ளுள்ளவைகளாகவும் **गोमतीः**=பசுக்களுள்ளவைகளாகவும் **वीरवतीः** = புத்திரனுள்ளவைகளாகவும் (**भूत्वा**=ஆகி) **सदम्**=எப்பொழுதும் **उच्छन्तु**= வந்தடையட்டும். உஷோதேவதைகள் பசு, குதிரை, புத்திரன் முதலியவற்றை எனக்குக் கொடுக்கவேண்டும் என்று கருத்து. (**अस्मिन्सूक्ते निर्दिष्टा अग्न्यादयोदेवाः**=இந்தச் சூக்தத்தில் சொல்லப்பட்ட ஓ அக்னிமுதலிய தேவர்காள்) **यूयम्**=நீங்கள் **घृतम्**=நெய்யைப்போன்ற ஸாரவஸ்துக்களை **दुहानाः**=கொடுக்கின்றவர்களாகவும் **विश्वतः**=எங்கும் **प्रपीनाः** = விருத்தி யடைந்தவர்களாகவும் (**भूत्वा**=ஆகி) **नः**=எங்களை **स्वस्तिभिः** = நன்மைகளால் **पात**=காப்பாற்ற வேண்டும். அதாவது: நன்மைகளைக் கொடுக்கவேண்டும்.

முதல் பிரச்னத்தில் பதினைந்தாவது கண்டம் முற்றிற்று.

பதினாறுவது கண்டம்.

(அ - கை) **श्वस्तिष्येणेति त्रिस्सतैर्यवैःपाठां परिकिरति यदि वारुण्यसि वरुणात्त्वा निष्क्रीणामि यदि सौम्यसि सोमात्त्वा निष्क्रीणामीति (ख० 9, सू० 5)** ஒரு ஸ்திரீயின் கணவன் மற்றொரு களத்திரத்தி

னிடம் மிக்கப் பிரேமையையும் முதல் களத்திரத்தினிடம் வெறுப்பையு மடைந்திருப்பானுயின் அப்பொழுது அந்த முதல் களத்திரத்தின் தகப்பனே ஸஹோதரனே புனர்வஸு நக்ஷத்திரத்தில் மேற்சொல்லிய ஹோமத்தை யனுஷ்டிக்க வேண்டும். பிறகு அன்றே பர்த்தாவின் சிநேஹத்தையும் சக்களத்தியின் விலக்கையும் விரும்பிய ஸ்திரீயானவள் **पाठा**=(இந்த ஓஷதி தென் மொழியில் "வட்டத்திருப்பி" என்று வழங்கப்படும். மருந்துக் கடைகளில் கிடைக்கக்கூடியது) என்ற ஓஷதி எங்கு முளைத்திருக்கின்றதோ அவ்விடம் சென்று அந்தப்பாடை என்ற ஓஷதிக்கு நான்கு பக்கங்களிலும் 21நெல்விதையை **यदिवारुणायसिवरुणात्वा निष्क्रीणामि** என்றும், **यदि सौम्यसि सेमात्त्वा निष्क्रीणामि** என்றும் சொல்லி வாரி இரைக்கவேண்டும். **सू०। श्वोभूत उत्तरयोत्थाप्योत्तराभिस्तिसृभिरभिमन्त्र्योत्तरयाप्रतिच्छन्नाᳲहस्तयोराबध्य शय्याकाले बाहुभ्यां भर्तारं परिगृह्णीयादुपधानलिङ्गया (ख०9, सू०6)** மறுதினம் அந்த ஸ்திரீயானவள் 16 வது கண்டம் முதல் மந்திரத்தால் அந்தப் பாடா என்ற ஓஷதியை வேருடன் மண்வெட்டி முதலியவற்றால் கல்லி எடுத்து 2, 3. 4 வது மந்திரங்களால் அதை அபிமந்த்ரணம் செய்து பிறகு அதன் வேரை இரண்டு துண்டாகவெட்டித் தனது கணவனுக்குப் புலப்படாவண்ணம் இரண்டு கைகளிலும் 5 வது மந்திரத்தால் கட்டிக்கொண்டு இரவில் கணவனுடன் படுத்துக்கொள்ளும் பொழுது 6 வது மந்திரத்தால் கணவனை ஆலிங்கனம் செய்து கொள்ளவேண்டும். இவ்விதம் செய்தால் கணவன் வசப்பட்டுவிடுவான். சக்களத்தியினிடம் கணவனுக்கு வெறுப்பு முண்டாகும்.

(मन्त्रः) १ इमां खनाम्योषधीं वीरुधं बलवत्तमाम् ।
यया सपत्नीं बाधते यया संविन्दते पतिम् ॥

२ उत्तानपर्णे सुभगे सहमाने सहस्वति ।
सपत्नीं मे पराधम पतिं मे केवलं कृधि ॥

३ उत्तराहमुत्तर उत्तरेदुत्तराभ्यः ।
अथा सपत्नी या ममाधरा साऽधराभ्यः ॥

४ न ह्यस्यै नाम गृभ्णामि नो अस्मिन् रमते जने ।
परामेव परावतꣳ सपत्नीं नाशयामसि ॥

५ अहमस्मि सहमानाऽथ त्वमसि सासहिः ।
उभे सहस्वती भूत्वा सपत्नीं मे सहावहै ॥

६ उपतेऽधाꣳसहमानामभित्वाऽधाꣳसहीयसा ।
मा मनु प्र ते मनो वत्सं गौरिव धावतु पथा वारिव धावतु ॥

1. (ப-ரை) இம்மந்திரத்தால் பாடா என்ற ஒஷதியை வேருடன் கல்லி எடுக்கவேண்டும். यया=எந்த பாடா என்ற ஒஷதியால் (सर्वस्त्रीजनः=எல்லா ஸ்திரீஜனமும் (सपत्नीम्=சக்களத்தியை बाधते=ஹிம்ஸிக்கின்றதோ यया=எந்தப் பாடா என்ற ஒஷதியால் पतिम्=தனது கணவனை संविन्दते = தனக்கு அசாதாரணமாக (தன்னிடத்தில் மாத்திரம் பற்றுள்ளவனாக) அடைகின்றதோ (तादृशीम्=அத்தகைய மஹிமைவாய்ந்ததும் वीरुधम्=பலவிதமான கிளைகளுடன் கூடியதும் बलवत्तमाम्=அதிக பலம்வாய்ந்ததுவுமான इमाम्=இந்த ओषधीम् = பாடா என்ற ஒஷதியை खनामि கல்லுகிறேன். இதிற் சொல்லிய லக்ஷணங்களைக்கொண்டு இந்த ஒஷதியைக் கண்டறியலாம்.

2. (ப-ரை) இனிவரும் மூன்று மந்திரங்களால் பிடுங்கி எடுத்த ஒஷதியை அபிமந்திரணம் செய்யவேண்டும் उत्तानपर्णे= மல்லாக்காக விருக்கின்ற இலைகளையுடையதும் सुभगे=ஸ்திரீகளுக்கு கணவனின் பிரீதியைச் சம்பாதித்து வைப்பதும் सहमाने= சக்களத்தியைப் பாதிக்கின்றதும் सहस्वति=பலம் பொருந்தியதுமான ஓ பாடா என்ற ஒஷதியே! मे=என்னுடைய सपत्नीम्=சக்களத்தியை पराधम=எனது கணவனிடமிருந்து பிரித்து விடுவாயாக. पतिम्=கணவனை मे=எனக்கு केवलम् = அசாதாரணமாக कृधि=செய்வாயாக. எனது கணவனை எனக்கு மாத்திரம் சொந்தமாக ஏற்படுமாறு செய்வாயாக.

3. (ப-ரை) उत्तरे=மற்ற ஒஷதிகளுள் சிறந்ததான ஓபாடா என்ற ஒஷதியே! अहम्=நான் उत्तरा, इत्=சுயமாகவே மேலானவ

ளாக இருக்கின்றேன். उत्तराभ्यः=சிறந்தவர்களுள் उत्तरा=சிறந்தவளாக (भूयासम्=ஆகவேண்டும்) अथा=மேலும் मे=என்னுடைய यासपत्नी எந்தச்சக்களத்தியுண்டோ सा=அவள் अधराभ्यः=கீழ்பட்டவர்களிலும் अधरा=கீழ்பட்டவளாக (भूयात्=ஆகவேண்டும்)

4. (ப-ரை) (यतः = யாதுகாரணம்பற்றி सा=அந்தச் சக்களத்தியானவள்) अस्मिन्, जने=இந்த என்னிடம் नोरमते=சிநேஹமாக விருக்கவில்லையோ (तेन=அதனால்) अस्यै=இந்தச் சக்களத்தியினுடைய नाम=பெயரை नगृभ्णामि=சொல்லமாட்டேன். परां परावतम्=வெகுதூரத்தில் सपत्नीम्=சக்களத்தியை नाशयामसि=விலக்கித் தள்ளி நாசம் செய்யக்கடவோம்.

5. (ப-ரை) இம்மந்திரத்தால் பாடா என்ற ஓஷதியின் வேரை இரண்டு துண்டாகவெட்டி கையில் கணவனுக்குப் புலப்படாவண்ணம் கட்டிக்கொள்ளவேண்டும். हे पाठे=பாடா என்ற ஓஷதியே! अहम्=நான் सहमाना=சக்களத்தியை யவமதிப்பவளாக अस्मि=இருககின்றேன். अथ=மேலும் त्वम्=நீயும் सासहिः=சக்களத்தியை யவமதிப்பவளாக असि=இருக்கின்றாய். उभे=நாமிருவரும் (ஒன்று சேர்வதால்) सहस्वती=மிக்க பலம்பெற்றவர்களாக भूत्वा=ஆகி मे=என்னுடைய सपत्नीम्=சக்களத்தியை सहावहै=அவமதிப்போமாக.

6. (ப-ரை) இம்மந்திரத்தால் கணவனை ஆலிங்கனம்செய்துகொள்ளவேண்டும். கணவனைக்குறித்து மனைவி சொல்லுகிறாள். सहमानाम्=எனது சக்களத்தியை யவமதிக்கின்ற (इमाम्=இந்த பாடா என்ற ஓஷதியை) ते=உமக்கு उपाधाम्=கீழ்பாகத்திலிருப்பதாகவும், सहीयसा=எனது சக்களத்தியை மிகவு மவமதிக்கின்ற சக்தியுடன்கூடிய (इमाम्=இந்த ஓஷதியை) त्वा=உமக்கு अभ्यधाम्=மேலாக இருப்பதாகவும் (करोमि=செய்கிறேன்.) பர்த்தாவானவன் படுக்கையில் படுத்திருக்கும்பொழுது ஒரு கையை அவனது சரீரத்திற்குக் கீழாகவும், மற்றொருகையை அவனது சரீரத்திற்கு மேலாகவும் வைத்துக்கொண்டு ஆலிங்கனம் செய்துகொள்ளவேண்டும் என்று ஏற்படுகின்றது. ते = உன்னுடைய मनः=மனது मामनु=என்னைக்குறித்து वत्सम्=இளங்கன்றை गौरिव

பசுப்போல் **प्रधावतु**=ஓடிவரட்டும். **पथा**=தாழ்ந்த மார்க்கத்தால் **वाः, इव**=ஜலம்போல் **प्रधावतु**=ஓடிவரட்டும்.

முதல் பிரச்னத்தில் பதினாறுவது கண்டம் முற்றிற்று.

பதினேழாவது கண்டம்.

(அ - கை) **एतेनैव कामेनोत्तरेणाऽनुवाकेन सदाऽऽदित्यमुपतिष्ठते (ख० 9, सू० 9)** சக்களத்தியை வெல்ல விரும்பியவள் 17வது கண்டத்திலுள்ள மந்திரங்களால் எப்பொழுதும் (சக்களத்தியை பாதித்த பிறகும் தனது பர்த்தாவின் ஆயுளுள்ளவரை) சூரியனை ஸ்தோத்திரம் செய்யவேண்டும்.

१ उदसौ सूर्यो अगादुदयं मामको भगः ।
अहन्तद्विद्वला पतिमभ्यसाक्षि विषासहिः ॥

२ अहं केतुरहं मूर्धाऽहमुग्रा विवाचनी ।
ममेदनु क्रतुं पतिस्सेहानाया उवाचरेत् ॥

३ मम पुत्राश्शत्रुहणोऽथो मे दुहिता विराट् ।
उताऽहमस्मि संजया पत्युर्मे श्लोकउत्तमः ॥

४ येनेन्द्रो हविषा कृत्यभवद्दिव्युत्तमः ।
अहन्तदक्रि देवा असपत्ना किलाभवम् ॥

५ असपत्ना सपत्निघ्नी जयन्त्यभिभूवरी ।
आवित्सि सर्वासाꣳराधो वर्चो अस्थेयसामिव ॥

६ समजैषमिमा अहꣳसपत्नीरभिभूवरीः ।
यथाऽहमस्य वीरस्य विराजामि धनस्य च ॥

1. (ப - ரை) **असौ** = இந்த **सूर्यः**=சூரியன் **उदगात्**=கிளம்பிவிட்டார். **तमनु**=அந்தச்சூரியனை யனுசரித்து **मामकः**=என்னு

டைய भगः=பாக்கியமானது उद्गात्=விருத்தி யடையவேண்டும். சூரியன் உதயமடைந்த பிறகு எவ்விதம் விருத்தி யடைகின்றானோ அவ்விதமே எனதுபாக்கியமும் விருத்தி யடைய வேண்டும் என்று கருத்து. तद्विद्वला = அந்தச் சூரியனை யறிந்திருக்கின்ற அதாவது: உபாஸிக்கின்ற अहम्=நான் विषासहिः = விசேஷமாய் சக்களத்தியையவமதிப்பவளாயாகி पतिम्=பர்த்தாவை अभ्यसाक्षि= வசப்படுத்தவேண்டும்.

2. (ப - ரை) अहम्=நான் केतुः=பிறந்தவம்சம், பர்த்தாவின் வம்சம் இரண்டிற்கும் கொடிமரம்போலும். अहम्=நான் मूर्द्धा= சிரஸ்போலும் अहम्=நான் उग्रा=மற்றவர்களால் நெருங்கி அவமதிக்கத்தகாதவளாகவும் विवाचनी=சந்தேஹ மேற்பட்ட சமயத்தில் நிச்சயத்தை யுண்டுபண்ணுகிறவளாகவும் भूयासम् = ஆகவேண்டும். सेहानायाः=சக்களத்தியை யவமதித்தவளான ममेत्= என்னுடையவே क्रतुम्=சங்கல்பத்தை पतिः = எனது கணவன் अनुव्राचरेत् = அனுசரித்து நடக்கவேண்டும். நான் எந்தக்கார்யத்தை எவ்விதம் செய்யவேண்டுமாய் சங்கல்பிக்கின்றேனோ அவ்விதமே எனது கணவனும் ஒத்து நடக்கவேண்டும் என்று கருத்து.

3 (ப - ரை) मम=என்னுடைய पुत्राः=பிள்ளைகள் शत्रुहणः= சத்துருக்களைக் கொல்பவர்களாக (भवन्तु=ஆகவேண்டும்.) अथो= மேலும் मे=என்னுடைய दुहिता=பெண் विराट्=தனது கணவனிடம் நன்றாய்ச் சுகமாய்வாழுகின்றவளாக भवतु=ஆகட்டும். उत= மேலும் अहम्=நான் सञ्जया=சக்களத்திகளை நன்றாய் ஜயித்தவளாக अस्मि = ஆகவேண்டும். पत्युः=பர்த்தாவினுடைய उत्तमः= மேலான श्लोकः=சிலாகையானது अस्तु = உண்டாக வேண்டும். எனதுகணவனும் என்னைநன்றாய்ப்புகழவேண்டும்என்றுகருத்து.

4 (ப - ரை) (आदित्य=ஓ ஆதித்யனே !) इन्द्रः = இந்திரன் येन=எந்த हविषा=ஹவிஸ்ஸினால் कृती = அடைய வேண்டியதையடைந்தவனாகவும் दिवि=சுவர்க்கலோகத்தில் उत्तमः=சிறந்தவனாகவும், அதாவது: சுவர்க்கலோகத்திற்குத் தலைவனாகவும் अभवत्=

ஆனரோ तत्=அந்த ஹவிஸ்ஸையே अहम्=நான் अकृषि=செய்கின்றேன். ஓ சூரியனே! இந்திரன் எத்தகைய ஹவிஸ்ஸை உம்மைக்குறித்து ஹோமஞ்செய்து தான் கோறியபலனைப்பெற்றானே அத்தகைய ஹவிஸ்ஸையே நானும் உம்மைக்குறித்து ஹோமஞ் செய்கின்றேன் என்று கருத்து. देवाः=ஓ தேவர்காள் अहम्=நான் असपत्ना=சத்துருவற்றவளாக असवंकिल=ஆகவேண்டும்.

5. (ப - ரை) असपत्ना=சத்துருவற்றவளாகவும் सपत्निघ्नी=சக்களத்திகளை ஹிம்ஸிக்கிறவளாகவும் जयन्ती = ஜயிக்கிறவளாகவும் अभिभूवरी=சத்துருக்களை யவமதிப்பவளாகவு மிருக்கின்ற अहम्=நான் अस्थेयसाभ्=தைரியமற்றவர்களுடைய (धनमिव=தனத்தைப்போல்) सर्वासाम् = சக்களத்திகள் யாவருடையவும் राधः=தனத்தையும் वर्चः=சரீரகாந்தியையும் आविदि=பிடுங்கிக்கொள்ள வேண்டும். துர்பலர்களிடமுள்ள பொருளை எவ்விதம் மற்றவர்கள் பலாத்காரமாய் பிடிங்கிக் கொள்வார்களோ அவ்விதமே நானும் எனது சக்களத்திகளின் தனம், சரீரகாந்தி முதலியவற்றைப் பிடுங்கிக்கொள்ளவேண்டும். அதாவது எனது சக்களத்திகள் தனமற்றவர்களாகவும், சரீர காந்தியற்றவர்களாகவு மாக வேண்டும் என்பது கருத்து.

6. (ப - ரை) अभिभूवरी=என்னை அலக்ஷ்யம் செய்கின்ற इमाः=இந்த सपत्नीः=சக்களத்திகளை अहम्=நான் समजैषम्=ஜயிக்கவேண்டும். यथा=எவ்விதம் ஜயிப்பதால் अहम्=நான் अस्य=இந்த वीरस्य=பர்த்தாவுக்கும் धनस्यच=அவரது பொருளுக்கும் विराजामि=நாயகியாவேனோ. சக்களத்திமார்களை ஜயித்து நான் கிருஹத்திற்கு யஜமானியாக விளங்கவேண்டும் என்று கருத்து.

முதல் பிரச்னத்தில் பதினேழாவது கண்டம் முற்றிற்று.

பதினெட்டாவது கண்டம்.

(அ - கை) यद्यगृहीतामन्यां वा ब्रह्मचर्ययुक्तः पुष्करसंवर्तमूलैरुत्तरैर्यथालिङ्गमङ्गानि संमृश्य प्रतीचीनं निरस्येत्= (ख० 9 सू० 10) தனது

மனேயாள் ராஜயக்ஷ்மா என்ற ரோகத்தாலோ, அல்லது குஷ்டம் முதலிய ரோகத்தாலோ பீடிக்கப்பட்டிருந்தால் அப்பொழுது மூன்று தினங்களுக்குக் குறைவுபடாமல் பிரும்மசர்ய விரதத்தை யனுஷ்டித்த பிறகு; தாமரையின் இலே கிழங்கு இவற்ருல் மந்திர லிங்கத்தை யனுஸரித்து அந்தந்த அங்கங்களேத் தடவி பின்புறத் தில் எரியவேண்டும். இவ்விதம் செய்தால் ராஜயக்ஷ்மா முதலிய ரோகங்கள் நிவிருத்தியை யடைந்துவிடும்.

१ अक्षीभ्यान्ते नासिकाभ्यां कर्णाभ्यां चिबुकादधि ।
यक्ष्मꣳशीर्षण्यं मस्तिष्काज्जिह्वाया विवृहामि ते ॥

२ ग्रीवाभ्यस्त उष्णिहाभ्यः कीकसाभ्यो ऽनूक्यात् ।
यक्ष्मꣳदोषण्यमꣳसाभ्यां बाहुभ्यां विवृहामि ते ॥

३ आन्त्रेभ्यस्ते गुदाभ्यो वनिष्ठोर्हृदयादधि ।
यक्ष्मं मतस्नाभ्यां यक्नः प्लाशिभ्यो विवृहामि ते ॥

४ ऊरुभ्यान्ते ऽष्ठीवद्भ्यां जंघाभ्यां प्रपदाभ्याम् ।
यक्ष्मꣳश्रोणीभ्यां भासदाध्वꣳससो विवृहामि ते ॥

५ मेहनाद्वलंकरणाल्लोमभ्यस्ते नखेभ्यः ।
यक्ष्मꣳसर्वस्मादात्मनस्तमिमं विवृहामि ते ॥

६ अङ्गादङ्गाल्लोम्नो लोम्नो जातं पर्वणि पर्वणि ।
यक्ष्मꣳसर्वस्मादात्मनस्तमिमं विवृहामि ते ॥

1. (ப-ரை) மேற்படித்த மந்திரங்களால் மந்திரலிங்கத்தை யனுஸரித்து ராஜயக்ஷ்மா என்ற ரோகத்தை யடைந்தஸ்திரீயின் அவயவங்களேத் தாமரை இலேயால்தடவி பின்புறமாக எரியவேண்டும். **ते**=உன்னுடைய **शीर्षण्यम्**=கழுத்திற்கு மேலுள்ள பாகத்தி லிருக்கின்ற **यक्ष्मम्**=ராஜயக்ஷ்மா என்ற ரோகத்தை **विवृहामि**= வழித்துத் தள்ளுகிறேன். அதாவது: **ते**=உன்னுடைய **अक्षीभ्याम्**= இரண்டுகண்களினின்றும் **नासिकाभ्याम्**=இரண்டு நாசிகாத் துவா

ரங்களினின்றும் कर्णाभ्याम्-காதுகளினின்றும் चिबुकात्-மோவாய்க் கட்டையினின்றும் मस्तिष्कात्=மண்டையோட்டிற்குக் கீழுள்ள மாம்சத்தினின்றும் जिह्वायाः=நாக்கினின்றும் यक्ष्मम्=ராஜயக்ஷ்மா என்ற ரோகத்தை विवृहामि=வழித்துத்தள்ளுகிறேன்.

2. ते=உன்னுடைய ग्रीवाभ्यः=கழுத்தினின்றும் उष्णिहाभ्यः=கழுத்திலுள்ள நாடிகளினின்றும் कीकसाभ्यः=கழுத்திலிருக்கின்ற எலும்புகளினின்றும் अनूक्यात्=முதுகின் எலும்பினின்றும் यक्ष्मम्=ராஜயக்ஷ்மா என்ற ரோகத்தை विवृहामि=வழித்துத்தள்ளுகிறேன். ते=உன்னுடைய दोषण्यम्=கையிலிருக்கின்ற यक्ष्मम्=ராஜ யக்ஷ்மா என்ற ரோகத்தை विवृहामि=வழித்துத் தள்ளுகிறேன். அதாவது: अंसाभ्याम्=தோள்பட்டையினின்றும், बाहुभ्याम्=முழங்கைக்கு மேல்பட்ட பாகங்களினின்றும் यक्ष्मम्=ராஜ யக்ஷ்மா என்ற ரோகத்தை विवृहामि=வழித்துத் தள்ளுகிறேன்.

3. ते=உன்னுடைய आन्त्रेभ्यः=நரம்புகளினின்றும் गुदाभ्यः=மலம் வெளிவருவதற்குரிய நாடியினின்றும் वनिष्ठोः=நரம்புகளின் தடிப்பான பிரதேசங்களினின்றும் हृदयात्=ஹிருதய கமலத்தினின்றும் मतस्नाभ्याम्=மாம்பழம்போன்ற உருவத்தையுடைய ரக்தத்தையும், நீரையும் பிரிக்குமிடத்தினின்றும் प्लाशिभ्यः = பக்க எலும்புகளினின்றும் यक्ष्मम् = ரோகத்தை विवृहामि=வழித்துத் தள்ளுகிறேன்.

4. ते=உன்னுடைய ऊरुभ्याम् = துடைகளினின்றும் अष्ठीवद्भ्याम् = துடை கணுக்கால் இவ்விரண்டின் சந்திப்பிரதேசத்தினின்றும், जंघाभ्याम्=இரண்டுகணுக்கால்களினின்றும் प्रपदाभ्याम्=பாதத்தினுடைய நுணிபாகத்தினின்றும் श्रोणीभ्याम् = இரண்டு பிருஷ்டபாகத்தினின்றும் भासदात्=குஹ்யத்திலிருக்கின்ற ஓர் வித அவயவத்தினின்றும் भंससः=உந்தியினின்றும் यक्ष्मम्=ராஜ யக்ஷ்மா என்ற ரோகத்தை विवृहामि=வழித்துத் தள்ளுகிறேன்.

5. ते=உன்னுடைய वलङ्करणात्==எல்லோரையும் வசப்படுத்துகின்ற मेहनात्=பெண்குறியினின்றும் लोमभ्यः=உரோமங்களினின்றும் नखेभ्यः=நகங்களினின்றும் ते=உன்னுடைய सर्वस्मात्;

आत्मनः=இங்கு சொல்லப்படாமலிருக்கின்ற மற்றுமுள்ள எல்லா அவயவத்தினின்றும் **तमिम्**=அத்தகைய இந்த **यक्ष्मम्**=ராஜயக்ஷ்மா என்ற ரோகத்தை **विवृहामि**=வழித்துத் தள்ளுகிறேன்.

6 **ते**=உனக்கு **जातम्**=உண்டான **यक्ष्मम्**=ராஜயக்ஷ்மா என்ற ரோகத்தை **अङ्गादङ्गात्**=ஒவ்வொரு அங்கத்தினின்றும், **लोम्नः**, **लोम्नः**=ஒவ்வொரு ரோமங்களினின்றும் **विवृहामि**=வழித்துத்தள்ளுகிறேன். **पर्वणि, पर्वणि**=ஒவ்வொரு கணுக்களிலும் **जातम्**=உண்டாயிருக்கின்ற **यक्ष्मम्**=ரோகத்தையும் **सर्वस्मात् आत्मनः**=மற்றுமுள்ள எல்லா அங்கங்களினின்றும் **तमिमंयक्ष्मम्** அந்த ராஜயக்ஷ்மா என்ற ரோகத்தை **विवृहामि**=வழித்துத்தள்ளுகிறேன்.

(அ·கை) **सू०॥ वधूवास उत्तराभिरेतद्विदे दद्यात् (ख० 9, सू०11)** மேற்சொல்லிய முறைப்படி தாமரையிலையைத் தடவி எரிந்த பிறகு ராஜயக்ஷ்ம ரோகமுள்ளவள் தரித்திருந்த வஸ்திரத்தை மேற்படித்த மந்திரம், அதனர்த்தம் இவற்றை நன்கறிந்திருக்கின்ற பிராம்மணனையும் பொருட்டு பின்னர் எழுதப்படும் மந்திரங்களால் கொடுக்கவேண்டும்.

७ परादेहि शाबल्यं ब्रह्मभ्यो विभजा वसु ।
कृत्यैषा पद्धती भूत्वा जाया विशते पतिम् ॥

८ अश्लीला तनूर्भवति रुशती पापयाऽमुया ।
पतिर्यद्वध्वै वाससा स्वमङ्गमभिधित्सति ॥

९ क्रूरमेतत्कटुकमेतदपाष्ठवद्विषवन्नैतदत्तवे ।
सूर्यां यः प्रत्यक्षं विद्यात्सएतत्प्रतिगृह्णीयात् ॥

१० आशसनं विशसनमथो अधिविचर्तनम् ।
सूर्यायाः पश्य रूपाणि तानि ब्रह्मोत शंसति ॥

(பி - ரை) ஹரதத்தாசாரியர், விவாஹகாலத்தில் மணப்பெண்ணுக்கு **परित्वागिर्वणः** என்ற மந்திரத்தால் வரன் தாரணம்

செய்திருந்த வஸ்திரத்தை விவாஹம் முடிந்தவுடன் விவாஹமந்திரங்கள், அவற்றின் அர்த்தம் இவற்றையறிந்திருக்கின்ற பிராம்மணனுக்குக் கொடுக்கவேண்டுமெனத் தமது பாஷ்யத்தில் கூறியிருக்கிறார். சமீபத்தில் கூறிய "ராஜயக்ஷ்ம பரிஹாரம்" என்ற கர்மாவை விடுத்து தூரத்திலிருக்கின்ற விவாஹகர்மாவை ஸ்வீகரித்துக் கொள்வதில் பிரமாணமில்லாததால் ஏற்கத்தக்கதல்லவென்று சுதர்சனாசாரியர் கூறியிருக்கிறார்-**शावल्यम्** = சரீரத்திலிருக்கின்ற ரோகத்தால் அழுக்கடைந்து தவிட்டு நிறமடைந்திருக்கின்ற வஸ்திரத்தை **परादेहि** = விட்டுவிடு. **वसु**=தனத்தை **ब्रह्मभ्यः** = பிராம்மணர்களையும் பொருட்டு **विभज** = பிரித்துக்கொடு. **जाया**=ராஜயக்ஷ்ம ரோகமுள்ள பார்யையானவள் **पद्वती**=சரணத்துடன்கூடிய **कृत्या**=கிருத்யை என்ற துர்த்தேவதையாக **भूत्वा**= ஆகி **पतिम्**=பர்த்தாவை **आविशते**=அடைகிறாள். ராஜயக்ஷ்ம ரோகமுள்ள ஸ்திரீயானவள் நடந்து சஞ்சரிக்கின்ற துர்த்தேவதைக்கு நிகராகையால் அவளுக்குமேற் சொல்லிய ராஜயக்ஷ்ம ரோக பரிஹாரத்தை யனுஷ்டித்தபிறகு ரோகமுள்ள சந்தர்ப்பத்தில் தரித்திருந்த வஸ்திரத்தை பிராம்மணனிடம் கொடுத்துவிட வேண்டும். இல்லையேல் "கிருத்தியா" என்ற துர்த்தேவதைபோல் பர்த்தாவினிடமும் அந்த ரோகம் பரவிவிடும் என்று கருத்து.

8. **पतिः**=புருஷன் **वध्वै**=ராஜயக்ஷ்மரோகமுள்ள ஸ்திரீயினுடைய **वाससा**=வஸ்திரத்தால் **स्वम्**=தனது **अङ्गम्**=அங்கத்தை **यत्**, **अभिधित्सति**=மறைத்துக்கொள்ள விரும்பினால், அதாவது: அவளது வஸ்திரசம்பந்தம் பெற்றால் **पापया**=மிக்க துஷ்டமான **अमुया** இந்த ராஜயக்ஷ்மா என்ற ரோகமாகிற துர்த்தேவதையால் **तनूः**= புருஷசரீரம் **अश्लीला**=சோபையற்றதாகவும் **रुशती**=ஹிம்ஸிக்கப்பட்டதாகவும் **भवति**=ஆகிவிடும்.

9. **एतत्** = ராஜயக்ஷ்ம ரோகமுள்ள ஸ்திரீயினால் தரிக்கப்பட்ட வஸ்திரமானது **क्रूरम्**=நாசத்தை யுண்டுபண்ணக்கூடியதாகவிருக்கின்றது. **एतत्**=இந்த வஸ்திரம் **कटुकम्** = ரோகத்தை யுண்டுபண்ணக்கூடியதாக விருக்கின்றது. **अपाष्ठवत्**=நிந்திக்கக் கூடியது. **विषवत्**=விஷத்தின் சம்பந்தம் பெற்றது. **तस्मात्**=

ஆகையால் एतत्=இந்த வஸ்திரம் अत्तवे=அனுபவிப்பதற்குத் தகுதியாக न=ஆவதில்லை. सूर्याम्=ராஜயக்ஷ்ம பரிஹாரத்திற்காக ஏற்பட்ட மந்திரங்களை यः=எவன் प्रत्यक्षम्=அர்த்தத்துடன் विद्यात्=அறிவனே सः=அவன் एतत्=இந்த வஸ்திரதைத் प्रतिगृह्णीयात्=வாங்கிக் கொள்ளவேண்டும்.

10. (राजयक्ष्म गृहीतवधूवासः=ராஜயக்ஷ்மா என்ற ரோகத்தால் பீடிக்கப்பட்ட ஸ்திரீயின் வஸ்திரமானது) आशसनम्=குத்திக் காயத்தை யுண்டுபண்ணக்கூடிய சூலமாகவும், विशसनम्=சரீரத்தைத் துண்டிக்கின்ற கத்தியாகவும் अथो=மேலும் विचर्तनम्=தோலைச் சேதிக்கின்றதாகவும் (भवति=ஆகின்றது) (पूर्वोक्तानि=முன்சொல்லிய கத்தி, சூலம் முதலியவைகளை) सूर्यायाः=யக்ஷ்மரோகாபிமானி தேவதையினுடைய रूपाणि=ரூபங்களாக पश्य=அறியவேண்டும். तानि=அந்த உருவங்களை ब्रह्म=பிராம்மணன் उत=நிச்சயமாக शंसति=சொல்லுகிறான். அறிகிறான். ராஜயக்ஷ்மஹரமான மந்திரத்தை எந்தப்பிராம்மணன் அறிவானோ அவன் ரோகிணியான ஸ்திரீயினால் தரித்த வஸ்திரத்தைக் கிரஹிப்பானாயின் அவனுக்கு எவ்விதத் தீங்கும் நேராது என்று கருத்து.

முதல்பிரச்னத்தில் பதினேட்டாவது கண்டம்
முற்றிற்று.

முதல்பிரச்னம் முற்றிற்று

இரண்டாவது பிரச்னம்

முதல் கண்டம்

(அ - கை) இனி உபநயணம் என்ற கர்மாவில் உபயோகிக்கப்படுகின்ற மந்திரங்கள் வியாக்யானம் செய்யப்படுகின்றன. **ஸூ॥ उपनयनं व्याख्यास्यामः** (ஃ 10, ஸூ 1) புத்திரனை வேதம் முதலிய வித்தைகளைக் கற்பதற்காக ஆசார்யரின் ஸமீபத்திற்கு அனுப்புதல் "உபநயனம்" எனப்படும். அவ்வுபநயனம் என்ற கர்மாவை பூர்வாங்கம், உத்தராங்கம் இவற்றுடன் விரித்துக்கூறுவாம். **गर्भाष्टमेषु ब्राह्मणमुपनयीत** (ஃ 10, ஸூ 2) பிராம்மணவகுப்பில் பிறந்தவனுக்கு கர்ப்பம் முதல் 8வதானவயதில், அதாவது பிறந்த பிறகு 7வது வயதில் உபனயனம் என்ற ஸம்ஸ்காரத்தை நடத்தி வைக்கவேண்டும். **ஸூ॥ गर्भैकादशेषु राजन्यं गर्भद्वादशेषु वैश्यम्** (ஃ 10, ஸூ 3) கர்ப்பம் முதல் 11வது வயதில், அதாவது பிறந்த பிறகு 10வது வயதில் க்ஷத்திரிய வகுப்பில் பிறந்தவனுக்கும், கர்ப்பம் முதல் 12வது வயதில், அதாவது: பிறந்த பிறகு 11வது வயதில் வைசிய வகுப்பில் பிறந்தவனுக்கும் உபனயனம் என்ற சம்ஸ்காரத்தை நடத்திவைக்க வேண்டும். **ஸூ॥ वसन्तोग्रीष्मश्शरदित्यृतवोवर्णानुपूर्व्येण** (ஃ 10, ஸூ 4) பிராம்மணர், க்ஷத்திரியர், வைசியர் இம்மூவருக்கும் முறையே வஸந்தருது, கிரீஷ்மருது, சரத்ருது இவைகள் உபனயனத்திற்குரிய காலங்களாகும். **ஸூ॥ब्राह्मणान् भोजयित्वा आशिषो वाचयित्वा, कुमारं भोजयित्वा, अनुवाकस्य प्रथमेनयजुषाऽऽपस्सꣳसृज्य, उष्णाश्शीतास्वानीय, उत्तरया शिरउनत्ति ॥** (ஃ 10, ஸூ 5) நாந்தீ சிராத்தத்தில் பிராமணர்களுக்கு போஜனம் செய்வித்து பிறகு அவர்கள் முகத்தினின்றும் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டு, *குமாரனுக்குப்போஜ

---

* குமாரனுக்கு போஜனம் செய்விப்பதற்குமுன் **यज्ञोपवीतं परमं पवित्रं** என்ற மந்திரத்தைச் சொலிவைத்து யக்ஞோ விததாரணம் செய்

னம். செய்வித்து இரண்டாவது பிரச்னம், முதல் கண்டத்திலு ள்ள முதல் மந்திரத்தால் சூடான ஜலத்தை குளிர்ந்த ஜலத்தில் விட்டு இரண்டாவது மந்திரத்தால் குமாரனுடைய தலையைக் கிழ்திசை முதல் பிரதக்ஷிணமாய் நனைக்கவேண்டும்.

(मन्त्रः) १ उष्णेन वायावुदकेनेह्यदितिः केशान् वपतु ॥

२ आप उन्दन्तु जीवसे दीर्घायुत्वाय वर्चसे । ज्योक्च सूर्यं दृशे ॥

(ப - ரை) 1. இம்மந்திரத்தால் சூடான ஜலத்தைக் குளிர்ந்த ஜலத்தில் விடவேண்டும். **वायो**=ஓ வாயுதேவனே! **उष्णेन**= சூடான **उदकेन**=ஜலத்துடன் **एहि**=வருவீராக. **अदितिः**=தேவ மாதாவான அதிதி என்ற.தேவதையானவள் **केशान्**=கேசங்களை **वपतु**=போக்கட்டும். நான் இந்த மாணவகனுடைய சிரஸ்ஸில் உஷ்ணஜலத்துடன் கலந்த குளிர்ந்த ஜலத்தைத்தடவி சிரஸ்ஸிலிருக்கின்ற கேசங்களை போக்கப்போகிறேன். ஆகவே உஷ்ண ஜலத்தை குளிந்த ஜலத்தில் விடுவது என்ற கார்யத்தைச் செய்வதில் வாயு என்ற தேவனும், கேசவபனம் செய்வதில் அதிதி என்ற தேவதையும் அனுமதி கொடுக்க வேண்டும் என்று இதனல் பிரார்த்திக்கப் படுகின்றது. மஹானுபாவர்களான தேவர்களின் அனுமதியின்மேல் எந்தக் கார்யமும் நடத்தப்படுமானல் அதன் மூலம் எவ்விதக் குறைவு மேற்படாதென்பதே இது போன்ற மந்திரங்களுக்குக் கருத்துக் கொள்ளவேண்டும்.

2. இம்மந்திரத்தால் ஜலத்தைச் சிரஸில் தடவவேண்டும். **आपः**=ஜலாபிமானி தேவதைகள் **दीर्घायुत्वाय, जीवसे**=நீண்டகாலம் ஜீவித்திருப்பதர்க்காகவும், **वर्चसे**=சரீர காந்தியுண்டாவதற்காகவும், **ज्योक्**=நீண்டகாலம் **दृशेच** = கண்களால் விஷயங்களைக் கிர

விக்கவேண்டும் என்று ஸுதர்சனுசாரியரின் பாஷ்யத்தில் கூறப்பட்டிருக்கிறது. தற்சமயத்தி லனுஷ்டானமும் இவ்விதமே இருக்கின்றது. ஆயினும் இங்கு சூத்திரக்காரர் நூல் பூணல் தரிப்பதைக் கூருது விடுத்ததிலிருந்து நூல்பூணல் போட்டுக் கொள்வது சூத்திரக்காரர் காலத்திலில்லாதிருந்த தென்றும், பின்னரே இது ஏற்பட்டிருக்கவேண்டும் என்றும் சிலர் கூறுகின்றனர்.

ஹிப்பதற்காகவும் (**ते**=உன்னுடைய **शिरः** = சிரஸ்ஸை) **उन्दन्तु**= நனைக்கட்டும். ஓ ஜலாபிமானிதேவதைகளே! இந்தக் குமாரன் நீண்டகாலம் ஜீவித்திருப்பவனாகவும், சரீரகாந்தி யுள்ளவனாக வும், இந்திரிய வலுவுள்ளவனாகவுமாக வேண்டும் என்று இத னால் பிரார்த்திக்கப் படுகின்றது.

(அ - கை) **सू०॥ त्रींस्त्रीन्दर्भानन्तर्धायोत्तराभिश्चतसृभिः प्रतिमन्त्रं प्रतिदिशं प्रवपति** (**ख०** 11 **सू०** 5) குமாரனுடைய சிரஸ்ஸில் ஒவ் வொரு திசைக்கும் மூன்று மூன்று தர்ப்பங்களைக் கேசங்களுடன் சேர்த்து வைத்துக்கொண்டு இனிவரும் மந்திரங்களுள் ஒவ் வொரு மந்திரத்தாலும் கிழக்குத் திசைமுதல் பிரதக்ஷிணமாய் கேசங்களை வபனம் செய்யவேண்டும்.

(मन्त्रः)३ येनावपत्सविता क्षुरेण सोमस्य राज्ञो वरुणस्य विद्वान् ।
तेन ब्रह्माणोवपतेदमस्यायुष्माञ्जरदष्टिर्यथाऽसदयमसौ ॥

४ येन पूषा बृहस्पतेरग्नेरिन्द्रस्य चायुषेऽवपत् ।
तेनास्यायुषे वप सौश्लोक्याय स्वस्तये ॥

५ येन भूयश्चरात्ययं ज्योक्च पश्याति सूर्यम् ।
तेनास्यायुषे वप सौश्लोक्याय स्वस्तये ॥

६ येन पूषा बृहस्पतेरग्नेरिन्द्रस्य चायुषे वपत् ।
तेन ते वपाम्यसा वाऽयुषा वर्चसा यथा ज्योक्सुमना असाः ॥

(ப - ரை) 3. இம்மந்திரத்தால் ஆசாரியன் குமாரனுடைய சிரஸ்ஸில் கீழ்த்திசையில் வபனம் செய்யவேண்டும் **येन**=எந்த **क्षुरेण**=கத்தியினால் **विद्वान्**=க்ஷெளரம் செய்யும் முறையை நன் கறிந்தவரான **सविता**=ஸவிதா என்ற தேவன் **राज्ञः**=ஒஷதீசனான **सोमस्य**=சோமன் என்ற தேவனுடையவும், **वरुणस्य**=வருணன் என்ற தேவனுடையவும் **केशान्**=கேசங்களை **अवपत्** = வபனம் செய்தாரோ. **ब्रह्माणः**=ஓ பிராமணர்காள் **यथा**=எவ்விதம் வபனம் செய்தால் **असौ**=யக்ஞசர்மா, தேவதத்தன் முதலிய பெயர்களை

யுடைய **अयम्**=இந்தக் குமாரன் **आयुष्मान्**=நீண்டவாயுளை யுடையவனுகவாகிப் பிறகு **जरदष्टिः** = கிழப்பருவத்தை யடைந்தவனுகவும் **असत्**=ஆவனே **तथा**=அவ்விதம் **तेन** = ஸவிதாவின் கையிலிருந்த கத்தியின் வகுப்பைச்சேர்ந்த இந்தக் கத்தியால் **इदम्**= இந்தக்குமாரனுடைய சிரஸ்ஸை **वपत** = வபனம் செய்யுங்கள். அதாவது: வபனம் செய்யுமாறு எனக்கு அனுமதி கொடுங்கள் என்று கருத்து.

2. இம்மந்திரத்தால் குமாரனுடைய சிரஸ்ஸில் தென்பக்கத்தில் வபனம் செய்யவேண்டும். **पूषा**=பூஷா என்ற தேவன் **बृहस्पतेः**=பிருஹஸ்பதி என்ற தேவனுடையவும் **अग्नेः**= அக்கினியினுடையவும் **इन्द्रस्य**=இந்திரனுடையவும் (**शिरः**=சிரஸ்ஸை) **आयुषे** மேற்கூறிய பிருஹஸ்பதி முதலான தேவர்களுக்கு ஆயுள் விருத்தியையும் பொருட்டு **येन**=எத்தகையதான (**क्षुरेण**=கத்தியினுல்) **अवपत्**=வபனம் செய்தாரோ **तेन**=அத்தகைய (அந்தவகுப்பைச் சேர்ந்த) கத்தியினுல் **अस्य**=இந்தக்குமாரனுடைய (**शिरः**=சிரஸ்ஸை) **आयुषे**=ஆயுள் விருத்தி யுண்டாகுமாறும். **सौश्लोक्याय**= நல்லகீர்த்தி யுண்டாகுமாறும் **स्वस्तये**=க்ஷேமமுண்டாகுமாறும் **वप**=வபனம் செய்வாயாக. இங்கு வபனம் செய்யவேண்டிய ஆசாரியன் முதலியோர் தம்மையே எதிர் நிலையாகப் பாவித்து ஏவிக்கொள்வதாகக் கருத்துக்கொள்ளவேண்டும்.

3. இம்மந்திரத்தால் குமாரனுடைய சிரஸ்ஸில் பின்பக்கத்தில் வபனம் செய்யவேண்டும். **येन**=எத்தகைய கத்தியால் (**अयं माणवकः उप्तश्चेत्**=இந்தக் குமாரன் வபனம் செய்விக்கப்பட்டால்) **भूयः**=உலகில் மேன்மையை யடைந்தவனுக **चराति** = சஞ்சரிப்பானே **सूर्यम्**=சூர்யனை **ज्योक्**=நீண்டகாலம் **पश्याति** = பார்ப்பானே அதாவது இந்திரியங்களின்வலுவுடன் நீண்டகாலம் ஜீவிப்பானே **तेन**=அத்தகையதான கத்தியால் **अस्य**=இந்த மாணக்கனுடைய (**शिरः**=சிரஸ்ஸை) **आयुषे**=நீண்ட வாயுளுண்டாகுமாறும் **सौश्लो-क्याय**=நல்ல கீர்த்தி யுண்டாகுமாறும் **स्वस्तये**=க்ஷேமமுண்டாகுமாறும் **वप**=வபனம் செய்வாயாக.

4. இம்மந்திரத்தால் ஆசாரியன் குமாரனுடைய சிரஸ்ஸில் வடபக்கத்தில் வபனம் செய்யவேண்டும். **असौ**=தேவதத்தன்,

யக்ஞசர்மா முதலிய பெயர்களையுடைய ஓமாணவகனே! येन=எந்தக்கத்தியினுல் पूषा=பூஷா என்ற தேவன் बृहस्पतेः=பிருஹஸ்பதி என்பவருடையவும் अग्नेः=அக்கினியினுடையவும் इन्द्रस्य=இந்திரனுடையவும் (शिरः=சிரஸ்ஸை) आयुषे=ஆயுர்விருத்தியையும் பொருட்டு अवपत्=வபனம் செய்தாரோ तेन=அந்த வகுப்பைச்சேர்ந்ததான கத்தியினுல் यथा=எவ்விதம் வபனம் செய்தால் आयुषा=ஆயுளுடனும் वर्चसा=சரீரகாந்தியுடனும் युक्तः=கூடியவனுயும் ज्योक्=நீண்டகாலம் सुमनाः=மனக்கலக்கமற்றவனுயும் असाः=இருப்பாயோ (तथा=அவ்விதம்) ते=உன்னுடைய शिरः=சிரஸ்ஸை वपामि=வபனம் செய்கிறேன்.

(அ - கை) सू॰॥ वपन्तमुत्तरया अनुमन्त्रयते दक्षिणतो माता ब्रह्मचारी वा (ख॰ 10, सू॰ 7) மாணவகனுக்குத் தென்பக்கத்தில் அவனது தாயோ, வேறு ஒரு பிரும்மசாரியோ உட்கார்ந்துகொண்டு இவ்விதம் வபனம் செய்கின்ற ஆசாரியனை 7வது மந்திரத்தால் அபிமந்த்ரணம் செய்யவேண்டும். இங்கு சிலர் மாணவகனுடைய சிரஸ்ஸில் கொஞ்சபாகத்தை ஆசாரியன் மந்திரபூர்வகமாய் வபனம் செய்துவிட்டு மீதமுள்ள பாகத்தை நாபிதனைக்கொண்டு வபனம் செய்யச்சொல்லி அப்பொழுது ஆசாரியன் நாபிதனைப் பார்த்து இம்மந்திரத்தால் அபிமந்த்ரணம் செய்யவேண்டும் என்கின்றனர். இதுவே பாஷ்யகாரரின் கருத்தாகவுமிருக்கின்றது. ஸுதர்சனுசாரியரோவெனில் சூத்திரகாரர் நாபிதனைகொண்டு வபனம் செய்யவேண்டும் என்று உபதேசம் செய்யாதபடியால் முற்றிலுமே ஆசாரியனே வபனம் செய்யவேண்டும் என்கின்றுர். நமது சம்பிரதாயமோ வெனில் இரண்டு முறையையும் அனுசரியாது அந்தந்தத்திக்கில் தர்ப்பத்தைவைத்து அதைமட்டும் நறுக்கி எறிந்து கேசங்களை நாபிதனைக் கொண்டு வபனம் செய்யும் முறையை யனுசரித்ததாக விருக்கின்றது.

७ यत्क्षुरेण मर्चयता सुपेशसा वप्ता वपसि केशान् ।
शुन्धि शिरो मास्याऽऽयुः प्रमोषीः ॥

(ப - ரை) मर्चयता=கூர்மை வாய்ந்ததாயும் सुपेशसा = நல்லரூபம் வாய்ந்ததாயும் वप्ता=கேசங்களை எடுக்கின்றதாயு மிருக்

கின்ற क्षुरेण=கத்தியினால் यत्=எப்பொழுது केशान्=இந்த மாண வகனுடைய கேசங்களை वपसि=வபனம் செய்கின்றாயோ (तदा= அப்பொழுது) शिरः=சிரஸ்ஸை शुन्धि=சுத்தப்படுத்து. கேசங்களை விட்டுவிடாமல் மூலத்துடன் வழித்துத்தள்ளி சுத்தம் செய்வா யாக என்றுகருத்து. अस्य=இந்தமாணவகனுடைய आयुः=ஆயுளை माप्रमोषीः=திருடிவிடவேண்டாம். வபனம் என்பது இயற்கையில் அமங்களமாகையால் இவ்விதம் பிரார்த்திக்கப்படுகின்றது. வப னம் அமங்களம் என்பதை रिक्तोवा एषो योऽनपिहितो, यन्मुण्डः= (சிரஸ்ஸில் கேசங்களில்லாதவன் ஒன்றுமேயில்லாத தரித்திரனு க்கு ஒப்பானவன்) என்ற பிராம்மண வாக்கியமும் கூறுகின்றது. என பாஷ்யகாரர் சொல்லுகிறார்.

(அ - கை) सू० ॥ आनडुहे शकृत्पिण्डे यवान्निधाय तस्मिन्केशानुपयम्योत्तरयोदुंबरमूले दर्भस्तंबे वा निदधाति । (ख० 10, सू० 8) காளை யினுடைய சாணத்தில் நெல்விதைகளைப் போட்டு அதில் வபனம் செய்த கேசங்களை எடுத்துப்போட்டு 8-வது மந்திரத்தால் அவ ற்றை அத்திமரத்தினடியிலோ, தர்ப்பத்தின் அடியிலோ போட்டு விடவேண்டும். இக்கார்யத்தை மாதாவோ, வேறு ஒரு பிரும்ம சாரியோ செய்யவேண்டும்.

(मन्त्रः) ८ उप्त्वाय केशान्वरुणस्य राज्ञोबृहस्पतिस्सविता सोमो अग्निः ।
तेभ्यो निधानं बहुधाऽन्वविन्दन्नन्तरा द्यावापृथिवी अपस्सुवः॥

(ப - ரை) இம்மந்திரத்தால் கேசங்களை அத்திமரத்தினடி முதலியவற்றில் போட்டுவிடவேண்டும். बृहस्पतिः=பிருஹஸ்பதி யும் सविता=சவிதா என்ற தேவனும் सोमः = ஸோமன் என்ற தேவனும், अग्निः=அக்னி என்ற தேவனும் वरुणस्य, राज्ञः=வருண மஹாராஜனுடைய केशान्=கேசங்களை उप्त्वाय=வபனம் செய்து तेभ्यः=அந்தக் கேசங்களுக்கு अन्तरा, द्यावापृथिवी = த்யுலோகம், பூலோகம் இவற்றின் நடுவு, अपः=ஜலம் सुवः = சுவர்க்கலோகம் (इति=இவ்விதம்) बहुधा=அநேகவிதமுள்ளதாய் निधानम्=போட்டு விடவேண்டிய இடத்தை अन्वविन्दन् = கண்டு கொண்டனர். பிருஹஸ்பதி முதலியவர்கள் வருணனுடைய கேசங்களை எவ்வி

தம் ஜலம் முதலிய விடங்களில் போட்டனரோ அவ்விதமே நானும் இந்த மாணவகனுடைய கேசங்களை அத்திமரத்தினடியிலோ, தர்ப்பத்தின் அடியிலோ போட்டுவிடுகிறேன் என்று கருத்து.

இரண்டாவது பிரச்னம் முதல் கண்டம் முற்றிற்று

இரண்டாவது கண்டம்

(அ - கை) सू०॥ स्नातमग्नेरुपसमाधानाद्याज्यभागान्ते पालाशीँ समिधमुत्तरयाऽऽधाप्यउत्तरेणाग्निं दक्षिणेन पदाऽश्मानमास्थापयति—आतिष्ठेति। (ख०10, सू० 9) வபனம் செய்தபிறகு மாணவகனுக்கு ஸ்னானம் செய்துவைத்து அக்னிப்பிரதிஷ்டை முதல் ஆஜ்யபாகம் என்ற கர்மம்வரை செய்துகொண்டு முதல் மந்திரத்தை ஆசாரியன் படித்து மந்திரத்தின் முடிவில் மாணவகனைக்கொண்டு ஓர் ஸமித்தை அக்னியில்போடச்சொல்லி பிறகு ஆசாரியனே 2-வது மந்திரத்தைப்படித்து அக்னிக்கு வடக்குபக்கத்தில் வைக்கப் பட்டிருக்கும் கருங்கல்லில் வலதுகாலால் ஏறும்படி செய்ய வேண்டும்.

(मन्त्रः) १ आयुर्दा देव जरसं गृणानो घृतप्रतीको घृतपृष्ठो अग्ने ।
घृतं पिबन्नमृतं चारु गव्यं पितेव पुत्रं जरसे नयेमम् ॥

२ आतिष्ठेममश्मानमश्मेव त्वँस्थिरो भव ।
अभितिष्ठ पृतन्यतस्सहस्व पृतनायतः ॥

(ப - ரை.) **अग्ने देव**=ஓ அக்னி தேவனே! **आयुर्दाः**=ஆயுளைக் கொடுப்பவரும் **घृतप्रतीकः**=பிரகாசிக்கின்ற அவயவங்களை யுடையவரும் **घृतपृष्ठः** = ஆஜ்யத்தை பின்பாகத்தி லுடையவருமான அதாவது: ஆஜ்யத்தால் விருத்தியடைகின்றவருமான (**त्वम्**=நீர்) **जरसम्**=ஸ்தோத்திரத்தை **गृणानः**=கிரஹித்துக்கொண்டும் **गव्यम्**=பசுவினுடையதும் **चारु**=நறுமணம் பொருந்தியதும் **अमृतम्**=அமி

ருதத்திற் கொப்பானதுமான **घृतम्**=நெய்யை **पिबन्**=சாப்பிட்டுக் கொண்டும் (**अनयासमिदाहुत्याचप्रीतः**=இந்தச் சமித்தின் ஹோமத்தால் பிரஸன்னராயாகிக்கொண்டும்) **पिता**=தகப்பன் **पुत्रमिव**=பிள்ளையைப்போல் **इमम्**=இந்த மாணவகனை **जरसे**=கிழப்பருவத்தின் பொருட்டு **नय**=அழைத்துச் செல்லுவீராக. தகப்பன் தனது குமாரனுக்கு எல்லாமுறையாலும் எவ்விதம் நீண்டவாயுளையே தேடுவானோ அவ்விதமே நீரும் இந்த மாணவகனுக்குச் செய்ய வேண்டும்.

2. இம் மந்திரத்திற்கு 46-வது பக்கத்தில் உரை எழுதப் பட்டிருப்பதால் அங்கு அதைக் கண்டுகொள்க.

(அ - கை) **सू० वासस्सद्यःकृत्तोतमुत्तराभ्यामभिमन्त्र्य उत्तराभिस्तिसृभिः परिधाप्य परिहितमुत्तरयानुमन्त्रयते ।** (**ख०**, 10, **सू०** 10) நீண்ட வஸ்திரத்தினின்றும் தற்சமயமே கிழிக்கப்பட்ட ஓர் வஸ்திரத்தை 3, 4வது மந்திரங்களா லபிமந்த்ரணம்செய்து 5, 6, 7 வது மந்திரங்களால் அந்த வஸ்திரத்தை தரிப்பித்து 8-வது மந்திரத்தால் வஸ்திரதாரணம் செய்விக்கப்பட்ட மாணவகனை அபிமந்த்ரணம் செய்யவேண்டும்.

(मन्त्रः)३ रेवतीस्त्वा व्यक्ष्णन्कृत्तिकाश्चाकृन्तꣳस्त्वा ।
धियोऽवयन्नवग्ना अवृंजन् सहस्रमन्ताꣳअभितो अयच्छन् ॥

४ देवीर्देवाय परिधी सवित्रे । महत्तदासामभवन्महित्वनम् ॥

५ या अकृन्तन्नवयन् या अतन्वत याश्च देवीरन्तानभितोऽददन्त ।
तास्त्वा देवीर्जरसे संव्ययन्त्वायुष्मानिदं परिधत्स्व वासः ॥

६ परिधत्त धत्त वाससैनꣳशतायुषं कृणुत दीर्घमायुः ।
बृहस्पतिः प्रायच्छद्वासएतत्सोमाय राज्ञे परिधातवा उ ॥

७ जरां गच्छासि परिधत्स्व वासो भवा कृष्टीनामभिशस्तिपावा ।
शतञ्च जीव शरदस्सुवर्चा रायश्च पोषमुपसंव्ययस्व ।

८ परीदं वासो अधिधास्स्वस्तयेऽभूरापीनामभिशस्तिपावा ।
शतं च जीव शरदः पुरूचीर्वसूनि चार्यो विभजासि जीवन् ॥

(ப-ரை) 3 (**वासः** = ஓவஸ்திரமே) **त्वा** = உன்னை **रेवतीः** = ரேவதி என்றதேவதைகள் **व्यदणन्** = பஞ்ஜுரூபமா யிருந்தபொழுது உன்னிடமிருந்த கொட்டைகளை வெளிப்படுத்துவதற்காகப் பலவிதமாயடித்தனர். **कृत्तिकाश्च**=கிருத்திகை என்ற தேவதைகள் **त्वा**=உன்னை **अकृन्तन्**=நூலாகச்செய்தனர். **धियः**=தியः என்ற தேவதைகள் (**त्वा**=உன்னை) **अवयन्**=வஸ்திரமாக நெய்தனர். **ग्नाश्च** க்ஞ என்ற தேவதைகள் (**त्वा**=உன்னை) **अवृञ्जन्** = நீண்டதான வஸ்திரத்தினின்றும் நடுவில் நறுக்கி எடுத்தனர். **सहस्रम्**=ஆயிரக்கணக்கான ****देवीः**=தேவதைகள் **अन्तान्**=கரைநூல்களை **अभितः** இரண்டு நுணிகளிலும் **अयच्छन्** = கொடுத்தனர். (சேர்த்தனர்) பஞ்சடித்தல், நூல்நூற்றல் முதலிய கர்மங்கள் பிரத்யக்ஷமாய் ஒருமனிதனால் செய்யப்படுவதாகக் காணப்படினும், அக்கார்யங்களை அந்தந்தத் தேவதைகளே செய்வதாகப்பாவித்தால் வஸ்திரத்தில் விஜாதியமான ஓர் சக்தி ஏற்பட்டு அதன் மூலம் அந்த வஸ்திரத்தைதரிப்பவனுக்கு விசேஷநன்மைகள் உண்டாகுமென்பது மொத்தமான கருத்து. இக்கருத்தையே இனிவரும் மந்திரங்களிலும் கண்டுகொள்ள வேண்டும். இதனின்று மொவ்வொருவனும் தனக்கு வேண்டிய வஸ்திரத்தை தேவதாத்தியானத்துடன் தானே தயாரித்துக்கொள்ள வேண்டும் என்றேற்படுகிறது.

4. **देवायसवित्रे**=சவிதா என்ற தேவனுடைய **परिधी**=வஸ்திரதாரணகாலத்தில் **आसाम्**=வஸ்திரத்தின் கரையை உண்டு பண்ணின தேவதைகளுடைய **तत्**, **महित्वनम्**=அந்த மாஹாத்மியமானது **महत्**=பெரிதாக **अभवत्**=ஆயிற்று. சவிதா என்ற தேவனுக்குக்கூட வஸ்திரத்தை நெய்து கொடுத்திருப்பதால் வஸ்திரத்தின் கரையை ஏற்படுத்திய தேவதைகளின் மாஹாத்மியம் அளவிடமுடியாததாகவிருக்கின்றது. அத்தகைய தேவதைகளால்

* 4வது மந்திரத்தின்றும் **देवीः** என்றபதம் சேர்த்துக்கொள்ளப்பட்டது.

இந்த வஸ்திரமும் உண்டுபண்ணப்பட்டிருப்பதால் விசேஷமான நன்மைகளை யுண்டாக்கும் என்று கருத்து.

5. இனிவரும் மூன்று மந்திரங்களால் மாணவகனுக்கு அந்தப்புதிய வஸ்திரத்தை தாரணம் செய்யவேண்டும். याः=எந்தத் தேவதைகள் अकृन्तन्=நூல்நூற்றனவோ, याः=எந்தத் தேவதைகள் अवयन्=வஸ்திரமாக நெய்தனவோ, याः=எந்தத் தேவதைகள் अतन्वत=விஸ்தாரப்படுத்தினவோ, याः=எந்த देवीः=தேவதைகள் अन्तान्=கரைநூல்களை अभितः=இரண்டு பக்கங்களிலும் अददन्त=கொடுத்தனரோ, அதாவது சேர்த்தனரோ ताः=அந்த देवीः=ரேவதி முதலிய தேவதைகள் त्वा=உன்னை जरसे=கிழப்பருவத்தையும் பொருட்டு संव्ययन्तु=சேர்த்து வைக்கட்டும். त्वम्-நீ आयुष्मान्=நீண்டவாயுளையுடையவனுய்க் கொண்டு इदम्=இந்த वासः=வஸ்திரத்தை परिधत्स्व=தரிப்பாயாக.

6. (हेरेवत्यादयोदेव्यः = ஓ ரேவதீ முதலிய தேவதைகாள்) एनम्=இந்த மாணவகனை वाससा=வஸ்திரத்தால் परिधत्त=மறையுங்கள் परिधत्त=மறையுங்கள். அதிக ஆதரவைக் காண்பிப்பதற்காக இரண்டுதடவை परिधत्त=என்றபதம் போடப்பட்டது. एनम्=இந்த மாணவகனை शतायुषम्=நீண்ட வாயுளையுடையவனுக कृणुत செய்யுங்கள். बृहस्पतिः=பிருஹஸ்பதியானவர் दीर्घमायुः=நீண்டவாயுளையடைவதற்கு நிமித்தமான एतद्वासः=இந்த வஸ்திரத்தை सोमाय,राज्ञे=ஓஷதீசனுன சோமன் என்ற தேவனையும் பொருட்டு परिधातवे = தரித்துக் கொள்வதற்காக प्रायच्छत् = கொடுத்தார் சொமன் என்ற தேவனுக்கு ஆயுள்விருத்தி ஏற்படுவதற்காக பிருஹஸ்பதியானவர் இதுபோன்ற புதிய வஸ்திரத்தைத் தரிப்பித்தபடியால் நானும் இந்த வஸ்திரத்தை இந்த மாணவகனுக்கு ஆயுள் விருத்தி ஏற்படுவதற்காக தாரணம் செய்விக்கிறேன் என்று கருத்து.

7. (हेमाणवक=ஓர் மாணவகனே!) वासः=வஸ்திரத்தை परिधत्स्व=தரித்துக்கொள்வாயாக. (परिधायच = தரித்துக்கொண்டு) जराम्=கிழப்பருவத்தை गच्छासि=அடைவாயாக. கிழப்பருவம்

ஸூ॥ एवमहरहरानिर्दशतायाः (ख० 15, सू० 7) பிரஸவகிருஹத்தை ஸம்ரக்ஷித்துவரும் வேலைக்காரர்கள் பிரஸவதினம் முதல் 10-தினம் வரையில் ஒவ்வொரு தினத்திலும் மந்திரமின்றியே அக்னியில் தவிட்டுடன் கலந்த கடுகுகளை ஹோமம் செய்யவேண்டும். இங்குள்ள आङ् என்றதற்கு மர்யாதை அதாவது: "அதுவரை" என்று பொருள் கொள்ள வேண்டும்.

நாமகரணப் பிரகரணம்.

ஸூ॥ दशम्यामुत्थितायां स्नातायां पुत्रस्य नाम दधाति पिता माते ति (ख० 15, सू० 8) பிரஸவித்ததினம் முதல் 10-வது தினத்தில் பிரஸவித்த ஸ்திரீயானவள் பிரஸவ அறையினின்றும் வெளி

---

* षष्ठ्यर्थे चतुर्थी ॥ † संबोधनार्थे चतुर्थी ॥

வந்து ஸ்னானம் செய்த பிறகு, தகப்பன் தாய் இருவரும் பிள்ளைக்குப் பெயரிட வேண்டும். இவ்விதம் கூறியதிலிருந்து 10-வது தினத்தன்றே பிரஸவித்த ஸ்திரீ ஸ்னானம் செய்ய வேண்டும் என்று ஏற்படுகின்றது. இங்குள்ள **इति**=என்ற பதத்திற்கு **च** என்றபதத்தின் பொருளான ஸமுச்சயத்தைப் பொருளாகக் கொள்ளவேண்டும். ஆகவே தாய்தகப்பன் இருவரும் சேர்ந்தே பெயர்வைக்கவேண்டும் என்று ஏற்படுகின்றது. இவ்விஷயத்தைப்பற்றி வேறு மந்திரமும் கூறுகின்றது. அம்மந்திரமாவது:—
मम नाम प्रथमं जातवेदः, पिता माता च दधतुर्यदग्रे (तै-सं-काएड 1, प्र 5, अ 10)

सू०॥ द्व्यक्षरं चतुरक्षरंवा नामपूर्वमाख्यातोत्तरं दीर्घाभिनिष्ठानान्तं, घोषवदादि,अन्तरन्तस्थम्॥ (ख०15,सू०9) புத்திரனுக்குவைக்கப்படும் பெயரானது இரண்டு எழுத்துள்ள தாகவோ, நான்கு எழுத்துள்ளதாகவோ இருப்பதாகவும், திரவ்யத்தைக் குறிப்பிடும் ஸுப ந்த பதத்தை முதல் பதமாகவுடையதாகவும், கிரியையைக் குறிப்பிடுகின்றதும், "க்விப்" என்ற பிரத்யயத்தை முடிவிலுடையதுமான சப்தத்தைக் கடைசி பதமாகவுடையதாகவும், தீர்க்காக்ஷரம், விஸர்க்கம் இவற்றைக் கடைசியிலுடையதாகவும், கோஷவத் எனப்படும் **ग. घ. ङ, ज. झ. ञ, ड. ढ. ण, द. ध. न, ब. भ. म, य. र. ल. व. ह.** இவ்வெழுத்துக்களுள்யாதானுமோர் எழுத்தை முதலக்ஷரமாயுடைய தாகவும், நடுவில் அந்தஸ்தம் எனப்படும் **य. र. ल. व** இவற்றையுடைய தாகவுமிருக்கவேண்டும். **द्व्यक्षरम्, चतुरक्षरम्** என்று கூறியதின் கருத்து, வைக்கப்படும் பெயர் ஸமஸ்த பதமாக விருக்கவேண்டும் என்பதே. விஸர்க்கத்திற்கு **अभिनिष्ठानः** என்று பூர்வாசார்யர்கள் பெயரிட்டிருப்பதால் **अभिनिष्ठान** என்றதால் விஸர்க்கம் எடுத்துக் கொள்ளப்பட்டது இரண்டு அக்ஷரமுள்ளதும் மேற்கூறிய லக்ஷணமுள்ளதுமான பெயராவது:— "**वार्दाः, गीर्दाः,**" என்பது முதலியன. **वाः ददातीतिवार्दाः** ஜலத்தைக் கொடுப்பதுபற்றி **वार्दाः** எனப்படுவன் என்றும், **गीः ददातीतिगीर्दाः** வாக்கைக்கொடுப்பதுபற்றி **गीर्दाः** எனப்படுவன் என்றும்

முறையே பொருளாகும். நான்கு அக்ஷரமுள்ள பெயராவது:— **हिरण्यदाः, युवतिदाः**, என்பது முதலியன.

युवतिदाः, என்ற உதாஹரணத்தில் மேற்சொல்லிய லக்ஷணங்கள் யாவும் பொருந்தி யிருக்கின்றன. அதாவது:— **युवतिदाः** என்பது நான்கு அக்ஷரமுள்ளதாயும், **युवति** என்ற பதத்திற்கு யௌவனப்பருவ மடைந்த பெண் என்று பொருளாகையால் ஓர் திரவியத்தைக் குறிப்பிடும் ஸம்பந்த பதமாகவான **युवति** என்ற பதத்தை முதல் பதமாக உடைய தாகவும், **दाः** என்ற பதத்திற்கு கொடுக்கிறவன் என்று பொருளாகையால் கொடுத்தல் என்ற கிரியையைக் குறிப்பிடும் கிரியாபதத்தை இரண்டாவது பதமாகவுடைய தாகவும், **दाः** என்ற விடத்தில் தீர்க்காக்ஷரமும் விஸர்க்கமும் இருப்பதால் தீர்க்கம், விஸர்க்கம் இவற்றைக் கடையிலுடையதாகவும், கோஷவத் எனப்படும் யகாரத்தை முதல் எழுத்தாக உடையதாகவும், அந்தஸ்தம் எனப்படும் வகாரத்தை மத்தியிலுடைய தாகவுமாகின்றது. இவ்விதமே மற்ற உதாஹரணங்களிலும் லக்ஷணத்தைப் பொருத்திப் பார்த்துக் கொள்ள வேண்டும்.

ஸூ॥ **अपि वा यस्मिन् स्वित्युपसर्गः स्यात् तद्धि प्रतिष्ठितमिति हि ब्राह्मणम्** (**ख**० 15, **सू**० 10) அல்லது எந்தப் பெயரில் **सु** என்ற உபஸர்க்கமானது சேர்ந்திருக்கின்றதோ அந்தப் பெயரானது நீண்டவாயுளைக் கொடுப்பதாகவும், யாகம் முதலிய ஸத்கர்மங்களில் உபயோகித்துக் கொள்வதற்குத் தகுதியுள்ள தாகவுமாகின்றது என பிராம்மணவாக்கியம் கூறுவதால் **सु** என்ற உபஸர்க்கத்தை முதலாவதாகவுடைய எந்த சப்தத்தையும் பெயராக வைக்கலாம். உதாஹரணம் **सुजातः, सुदर्शनः** என்பது முதலியன. இந்தச் சூத்திரத்தில் பிராம்மணம் என்று சொல்லி யிருப்பதால் புத்திரனுக்கு வைக்கப்படும் பெயரானது முந்திய சூத்திரத்தில் சொல்லிய லக்ஷணம் பொருந்திய தாகவோ, அல்லது முற்கூறிய லக்ஷண மில்லாது **सु** என்ற உபஸர்க்கத்தை மாத்திர முடைய தாகவோ இருக்கலாம் என்று ஸுதர்சன பாஷ்யத்திற் கூறப்பட்டிருக்கிறது. இவ்விஷயமாய் போதாயனர் கூறுவதாவது: **ऋष्य**

णूकं देवताऽणूकं वा यथैवैषां पूर्वपुरुषाणां नामानि स्युः। अणूकम्—अभिधायकम् ருஷிகளைக் குறிப்பிடுவதாகவோ, தேவதைகளைக் குறிப்பிடுவதாகவோ, தகப்பன் பாட்டன் முதலியோரைக் குறிப்பிடுவதாகவோ இருக்கின்ற பதத்தை தனது குழந்தைக்குப்பெயராக வைக்கலாம். உதாஹரணமாய் ருஷிகளின் பெயராவது:—வஸிஷ்டர், நாரதர் முதலியன. தேவதைகளின் பெயராவது:—ராமன், கிருஷ்ணன், சங்கரன், முதலியன. தகப்பன் பாட்டன் முதலியோரின் பெயராவது:—யக்ஞசர்மா, ஸோமசர்மா, என்பது முதலியன.

सू०॥ अयुजाक्षरं कुमार्याः (ख० 15, सू० 11) अयुगक्षरमिति भाष्ये अयुजाक्षरमितिछान्दसं रूपम्। பெண் குழந்தைக்கு வைக்கப்படும் பெயரானது ஒற்றைப் படையெழுத்தான क, ग, ङ, च, ज, ञ, ट, ड, ण, त, द, न, प, ब, म, य, र, ल, श, स, இவ்வெழுத்துக்களுள் யாதேனும் ஓர் எழுத்தையுடையதாக விருக்கவேண்டும். உதாஹரணம்:—श्रीः, भारती, पार्वती, कमला, என்பது முதலியன. பெண் குழந்தைக்கு வைக்கப்படும் பெயரானது முக்கியமாய் ஒற்றைப் படையான எழுத்துள்ளதாகவாக வேண்டுமே யல்லாது 9-வது சூத்திரத்தில் கூறிய லக்ஷணங்கள் பொருந்தியதாகவுமிருக்க வேண்டும் என்ற நியமமில்லை.

अमन्त्रिका तु कार्येयं स्त्रीणामावृदशेषतः।
संस्कारार्थं शरीरस्य यथाकालं यथाक्रमम्॥

(मनुस्मृति-अ० २-श्लो० ६६)

என்றதால் பெண் குழந்தைக்கும் ஜாதகர்மம் முதல் சவுளம் வரையுள்ள ஸம்ஸ்காரங்களை மந்திரமின்றியே அவ்வற்றிற் கேற்பட்ட காலத்தில் சரீர சுத்திக்காக செய்ய வேண்டுமென மனுஸ்மிருதியில் கூறியிருப்பதால் மேற்கூறிய ஸம்ஸ்காரங்களைப் பெண் குழந்தைகளுக்கும் செய்தலவசியம். அவ்விதம் செய்யும் பொழுது பிராசனம், வபனம், முதலிய வற்றை மட்டும் பெண் குழந்தைக்குச் செய்விக்க வேண்டுமே யல்லாது ஹோமங்களைச் செய்

யவேண்டியதில்லை. இவ்விதமே சிஷ்டாசாரமு மிருக்கின்றது-ஸ்மிருத்யர்த்த ஸாரமென்னும் கிரந்தத்திலும் இவ்விதமே கூறப் பட்டிருக்கின்றது.

(அ-கை) **सू०॥ प्रवासादेत्य पुत्रस्योत्तराभ्याममभिमन्त्रणं मूर्धन्यव घ्राणम्** (खं० 15, सू० 12) வெளியூருக்குச் சென்றுவந்தவுடன் அடியில் எழுதப்படும் 3 - 4 வது மந்திரங்களைப் படித்து பிள்ளைக்கு அபிமந்த்ரணத்தையும், மேற்படி மந்திரங்களைப் படித்து உச்சி முகருதலையும் செய்யவேண்டுமென்று ஸூத்ர்சஞசாரியர் உரை செய்திருக்கிறார். ஹரதத்தா சாரியரின் பாஷ்யத்திலோ மூன்றாவது மந்திரத்தால் அபிமந்த்ரணத்தையும், நான்காவது மந்திரத்தால் உச்சி முகருதலையும் செய்யவேண்டு மெனப்பிரித்து வினியோகம் செய்யப் பட்டிருக்கிறது. அபிமந்த்ரணம், உச்சி முகருதல், வலது காதில் மந்திரத்தை ஜபித்தல் என்ற இக் காரியங்களை ஒவ்வொரு புத்திரனுக்கும் செய்யவேண்டும்.

(मन्त्रः) ३ अङ्गादङ्गात्संभवसि हृदयादधिजायसे ।
वेदो वै पुत्रनामासि स जीव शरदश्शतम् ॥

४ अश्मा भवेत्येषा ॥

(ப-ரை) 3. **अङ्गादङ्गात्** என்ற மந்திரத்தின் முதல் பாதிக்கு 211-வது பக்கத்தில் உரை எழுதப்பட்டிருக்கிறது. **पुत्रनामा**= பிள்ளை எனப்பெயரிய **वेदः**=தனமாக **असि**=ஆகின்றாய் (**इति**=என்பது) **वै** பிரஸித்தமானதே. அல்லது:—**वेदः**=வேத வித்யை, தர்மம் இவற்றிற்குச் சாதனமாக **असि**=ஆகின்றாய். **सः**=அந்த நீ **शतम्**= நூறு **शरदः**=வருஷங்கள் **जीव**=ஜீவித்திருப்பாயாக.

अश्मा भव என்ற மந்திரத்திற்கு 211-வது பக்கத்தில் உரை எழுதப்பட்டிருக்கிறது.

(அ-கை) **दक्षिणे कर्णे उत्तरान्मन्त्रान्जपेत्** (खं० 15, सू० 12) குமாரனுடைய வலது காதில் அடியில் எழுதப்படும் நான்கு மந்திரங்களையும் ஜபிக்கவேண்டும்.

(मन्त्र:) ५-९ अग्निरायुष्मानिति पञ्च ॥

अग्निरायुष्मान् முதலிய ஐந்து மந்திரங்களாவன.

५ अग्निरायुष्मान् थ्स वनस्पतिभिरायुष्मान्तेन
त्वाऽऽयुषाऽऽयुष्मन्तं करोमि ॥

६ सोम आयुष्मान् थ्स ओषधीभिरायुष्मान्तेन
त्वाऽऽयुषाऽऽयुष्मन्तं करोमि ॥

७ यज्ञ आयुष्मान् थ्स दक्षिणाभिरायुष्मान्तेन
त्वाऽऽयुषाऽऽयुष्मन्तं करोमि ॥

८ ब्रह्माऽऽयुष्मत्तद्ब्राह्मणैरायुष्मत्तेन त्वाऽऽयुषाऽऽयुष्मन्तं करोमि ॥

९ देवा आयुष्मन्तस्ते ऽमृतेनाऽऽयुष्मन्तस्तेन
त्वाऽऽयुषाऽऽयुष्मन्तं करोमि ॥

(ப-ரை) 5. **आयुष्मान्**=நீண்டவாயுளுடன்கூடிய (**यः**=எந்த) **अग्निः**=அக்னியுண்டோ. **सः**=அந்த அக்னி தேவன் **वनस्पतिभिः**= மரங்களால் **आयुष्मान्**=ஆயுளுடன் கூடியவனாக (**भवति** = ஆகின்றான்) அக்னியில் மரக்கட்டைகளை மேன் மேலும் போடுவதால் அக்னியின் ஸ்வரூபமணையாம லிருப்பதுபற்றி **वनस्पतिभिरायुष्मान्** என்று கூறப்பட்டது. **तेन**=அந்த அக்னியினுடையதான **आयुषा** நீண்ட வாயுளால் **त्वा**=உன்னை **आयुष्मन्तम्** = நீண்டவாயுளுடன் கூடியவனாக **करोमि**=செய்கின்றேன். அக்னிதேவன் நீண்டவாயுளுடன் கூடியவனா யிருப்பதுபோல நீயும் நீண்டவாயுளுடன் கூடியவனாக வாகவேண்டும் என்று கருத்து. இவ்விதமே மற்ற மந்திரங்களிலும் கருத்துக் கொள்ள வேண்டும்.

आयुष्मान्=நீண்டவாயுளுடன் கூடிய (**यः**=எந்த) **सोमः**=ஓஷதிகளுக்கு அபிமானி தேவனுண்டோ. **सः**=அவர் **ओषधीभिः**= ஓஷதிகளால் **आयुष्मान्**=நீண்டவாயுளுடன் கூடியவனாக **भवति**= ஆகின்றான். ஓஷதிரஸமாகிற அமிருதத்தால் விருத்தியடைகின்றசரீரத்தை யுடையவனாக சோமன் என்ற தேவனாவதால்

ओषधीभिरायुष्मान्=என்று கூறப்பட்டது. तेन=அந்த ஸோமனுடையதான आयुषा=நீண்ட வாயுளால் त्वा=உன்னை आयुष्मन्तं=நீண்டவாயுளுள்ளவனுக करोमि=செய்கிறேன்.

आयुष्मान्=நீண்டவாயுளுடன்கூடிய (यः=எந்த) यज्ञः=யாகமுண்டோ सः=அந்த யாகமானது दक्षिणाभिः = தக்ஷிணைகளால் आयुष्मान्=நீண்டவாயுளுள்ளதாக (भवति=ஆகின்றது) मृतोयज्ञस्त्वदक्षिणः=சாஸ்திர முறைப்படி தக்ஷிணை கொடுக்கப்படாவிடில் யாகம் நஷ்டமாகிவிடும், அதாவது:—பலனைத் தரமாட்டாது என்று கூறி இருப்பதால் தக்ஷிணையால் யாகம் ஆயுளுடன் கூடியதாக வாகின்றது என்று கருத்து. तेन=அந்த யாகத்தினுடையதான आयुषा=ஆயுளால் त्वा=உன்னை आयुष्मन्तम्=நீண்ட வாயுளுடன் கூடியவனுக करोमि=செய்கிறேன்.

8. आयुष्मत्=நீண்ட வாயுளுடன் கூடிய (यत् = எந்த) ब्रह्म=வேதமுண்டோ तत्=அந்த வேதமானது ब्राह्मणैः=பிராம்மணர்களால் आयुष्मत्=நீண்டவாயுளுள்ளதாக (भवति=ஆகின்றது. பிராம்மணர்களால் அத்யயனுத்யாபன முறையால் வேதம் அழிந்து போகாவண்ணம் காப்பாற்றப்படுவதால் ब्राह्मणैराष्युमत् = என்று கூறப்பட்டது. तेन=அந்த வேதத்தினுடையதான आयुषा=ஆயுளால் त्वा=உன்னை आयुष्मन्तम् = நீணட வாயுளுடன் கூடியவனுக करोमि=செய்கிறேன்.

9 आयुष्मन्तः=நீண்ட வாயுளுடன் கூடிய (ये=எந்த) देवाः=தேவர்களுண்டோ ते=அவர்கள் अमृतेन=அமிருதத்தால் आयुष्मन्तः நீண்ட வாயுளுடன் கூடியவர்களாக (भवन्ति=ஆகின்றனர்) तेन=அந்தத் தேவர்களுடையதான आयुषा=நீண்டவாயுளால் त्वा=உன்னை आयुष्मन्तम्=நீண்டவாயுளுள்ளவனுக करोमि=செய்கிறேன்.

(அ-கை) सू॥ कुमारीमुत्तरेण यजुषाऽभिमन्त्रयते (ख० 15, सू० 13) அடியில் எழுதப்படும் 10-வது மந்திரத்தால் பாணிக்கிரஹணமாகாத பெண் குழந்தையை வெளியூருக்குச் சென்று வந்ததும் அபிமந்த்ரணம் செய்யவேண்டும். பெண் குழந்தைக்கு

அபிமந்த்ரணத்தை மட்டும் செய்ய வேண்டுமேயல்லாது உச்சி முகர்தலையும், வலது காதில் மந்திரஜபத்தையும் செய்யவேண்டியதில்லை. ஸூத்திரக்காரர் அவற்றைச் செய்யவேண்டும் என்று கூறுமல் விடுத்ததே அதன் காரணமாகும் என்று ஸுதர்சன பாஷ்யத்தில் கூறப்பட்டிருக்கிறது.

(मन्त्रः) १० सर्वस्मादात्मनस्संभूतासि सा जीव शरदश्शतम् ॥

(ப - ரை) (हे **कुमारि**=ஓ குமாரியே! **यात्वम्**=எந்த நீ) **सर्वस्मात्**=எல்லாவிதமான **आत्मनः**=அங்கத்தினின்றும் **संभूता**=உண்டானவளாக **असि**=ஆகின்றுயோ **सा**=அந்த நீ **शतम्**=நூறு **शरदः**=வருஷங்கள் **जीव**=ஜீவித்திருப்பாயாக.

அன்னப்பிராசன பிரகரணம்

(அ - கை) **सू०॥ जन्मनोऽधिषष्ठे मासि ब्राह्मणान् भोजयित्वा आशिषो वाचयित्वा, दधि, मधु, घृतमोदनमिति संसृज्योत्तरैर्मन्त्रैः कुमारं प्राशयेत् (ख०16, सू०1)** குழந்தைபிறந்ததினம் முதல் 6-வது மாதத்தில் பிராம்மணர்களுக்கு போஜனம் செய்வித்து, ஆசீர்வதிக்கும்படிசெய்து தயிர், தேன், நெய், அன்னம் இவற்றைக்கலந்து அடியில் எழுதப்படும் நான்கு மந்திரங்களேயும் படித்து முடிவில் ஒரு தடவை நெய் முதலிய வற்றுடன் கலந்த அன்னத்தைக் குழந்தைக்குப் *பிராசனம் செய்விக்கவேண்டும். எந்த மாஸத்தில் எந்ததினத்தில் குழந்தை பிறந்ததோ அந்த தினம் முதல் ஆறுமாதத்தைக் கணக்கிடவேண்டுமேயல்லது சித்திரைமாதம் 20-தேதியில் பிறந்தவனுக்கு சித்திரையை ஒருமாதமாகக் கணக்கிட்டு அதனின்றும் ஆருவதுமாதத்தில் அன்னபிராசனம் செய்விக்கவேண்டும் என்று கருத்துக்கொள்ளக் கூடாது. இவ்விதமே **पञ्चाशद्दिवसात्त्विद्मात् पश्चात्त्रिहतषष्ठिकात् । अर्वागेवोत्तमा भुक्तिः ॥** குழந்தை பிறந்ததினம் முதல் 150 தினத்திற்குப் பின்னும், 180 தினங்களுக்கு முன்னுமாக குழந்தைக்கு அன்னப்பிராசனம் செய்விக்கவேண்டும்" என்றதால் பிருஹஸ்பதியும் நாள் கணக்கு

செய்தே அன்னப்பிராசனத்தை உபதேசித்திருக்கின்றார். **सू०॥ तैत्तिरीयेणमांसेनेत्येके** (ख० 16, सू० 2) தித்திரி பக்ஷியின் மாம்ஸத்தைப் பிராசனம் செய்விக்கவேண்டும் என்று சிலர் சொல்லுகின்றனர்.

(मन्त्रः) ११ भूरपां त्वौषधीनांरसं प्राशयामि शिवास्त आप ओषधयस्सन्त्वनमीवास्त आप ओषधयस्सन्त्वसौ ॥ १२ भुवोऽपां १३ सुवरपां १४ भूर्भुवस्सुवरपां त्वौषधीनांरसं प्राशयामि शिवास्त आप ओषधयस्सन्त्वनमीवास्त आप ओषधयस्सन्त्वसौ ॥

(ப-ரை.) 11 **भूः, भुवः, सुवः, भूर्भुवस्सुवः** என்று 11, 12, 13, 14-வது மந்திரங்களின் துவக்கத்திற் படிக்கப்பட்டுள்ள பதங்கள் உச்சாரண மாத்திரத்தாலேயே அன்னப்பிராசனம் என்ற கர்மத்திற்கு உபகாரகமாகின்றனவென்று பாஷ்யத்திற் கூறப்பட்டிருக்கிறது. 12, 13-வது மந்திரங்களிலும் **त्वौषधीनांरसम्** என்றது முதல் **सन्त्वसौ** என்றது வரையுள்ள 11-வது மந்திரத்தின் பாகத்தைச் சேர்த்துக் கொள்ளவேண்டும். இந்நான்கு மந்திரங்களிலுமுள்ள **असौ** என்றபதத்தால் குழந்தைக் கிடப்பட்ட பெயரை ஸம்போதனப் பிரதமாந்தமாய் கிரஹித்துக் கொள்ளவேண்டும். **असौ**=ஓ யக்ஞசர்மா முதலிய பெயரையுடைய புத்திரனே **अपाम्**=ஜலங்களுடையவும் **ओषधीनाम्**=ஓஷதிகளுடையவும் **रसम्**=ஸாரபாகத்தை **त्वा**=உன்னை **प्राशयामि**=பிராசனம் செய்விக்கிறேன். **आपः**=ஜலமும் **ओषधयश्च**=ஓஷதிகளும் **ते**=உனக்கு **शिवाः** க்ஷேமத்தைக் கொடுப்பனவாக **सन्तु**=ஆகட்டும். **आपः**=ஜலமும் **ओषधयः**=ஓஷதிகளும் **ते**=உனக்கு **अनमीवाः**=ரோகத்தைத் தராதவைகளாகவும், ஆரோக்யத்தைக் கொடுக்கின்றவைகளாகவும் **सन्तु** ஆகட்டும்.

12, 13, 14-வது மந்திரங்களுக்கும் முன்போலவே கருத்துக்கொள்ளவேண்டும்.

சௌளப்பிரகரணம்

सू०॥ जन्मनोधितृतीयेवर्षेचौळंपुनर्वस्वोः (**ख०** 16, **सू०** 3) பிறந்த தினம் முதற்கொண்டு மூன்றாவது வருஷத்தில் புனர்வஸு நக்ஷத்திரம் கூடும் சுபதினத்தில் குடுமிவைத்தல் என்ற காரியத்தைச் செய்யவேண்டும். எந்தக் கர்மாவில் **चूडा** எனப்படும் குடுமி வைக்கப்படுமோ அக்கர்மத்திற்கு சௌளம் என்று பெயர். **चौडमिति भाव्ये चौळमिति रूपं डलयोरभेदात् । सू०॥ ब्राह्मणानां भोजनमुपायनवत्** (**ख०** 16, **सू०** 4) உபநயனமே உபாயனம் என்ற பதத்தால் குறிக்கப்படுகின்றது. உபநயனப் பிரகரணத்திற் கூறியபடி முதன் முதலில் பிராம்மணர்களுக்குப் போஜனம் செய்வித்து ஆசீர்வாதத்தைப் பெறவேண்டும். குமாரனுக்கும் குடுமிவைக்கும்முன் போஜனம் செய்விக்கவேண்டும். **सू०॥ सीमन्तवदग्नेरुपसमाधानादि** (**ख०** 16 **सू०** 5) ஸீமந்தபிரகரணத்திற் கூறியபடி அக்னிபிரதிஷ்டைமுதல் பரிஷேசனம் என்ற கர்மம் வரை செய்யவேண்டும். ஆகவே குமாரன் தன்னைத் தொட்டுக் கொண்டிருக்கும்பொழுது ஸீமந்தத்தில் செய்த பிரதான ஹோமத்தையும் இங்கு செய்யவேண்டும்.

सू०॥ अपरेणाग्निं प्राञ्चमुपवेश्य त्र्येण्या शलल्यात्रिभिर्दर्भपुंजीलैः शलालुग्लप्सेनेति तूष्णीं केशान्विनीयथर्षि शिखा निदधाति ॥ (**ख०** 16 **सू०** 6) அக்னிக்கு மேற்குதிசையில் குழந்தையை கிழக்குமுகமாயுட்காரவைத்து மூன்றிடத்தில் வெள்ளைநிறம் பொருந்திய முள்ளம்பன்றியின் முள், மூன்று தர்ப்பக்கொத்து, பேஅத்தியின் கொத்து, இவற்றால் வபனம் செய்துவிடவேண்டிய கேசங்களையும், சிகையாக மீதம் வைக்கவேண்டிய கேசங்களையும் முதலில் பிரித்து எவன் எந்தக் கோத்திரத்தைச் சேர்ந்தவனோ அவனுக்கு எவ்வளவு ருஷிகள் ப்ரவரத்தில் கூறப்பட்டிருக்கின்றனரோ அந்த ருஷிகளின் எண்ணுக்கொப்பாக சிகையை வைக்கவேண்டும். அதாவது: ஒரே ருஷியை யுடையவனாயிருந்தால் ஒரு சிகையையும், இரண்டு ருஷியையுடையவனாயிருந்தால் இரண்டு சிகையையும் வைக்கவேண்டுமென்பதாம். **सू०॥ यथावैषां कुलधर्मः स्यात्** (**ख०** 16, **सू०** 7) எவ்வளவு சிகையை வைப்பது அவரவர்

களின் குலாசாரமோ அவ்வளவு சிகையை வைத்துக்கொள்ள லாம்.

குறிப்பு:— மேற்படித்த 2 - சூத்திரங்களால் கோத்ரப் பிர வர்த்தகர்களான ருஷிகளின் எண்ணை யனுசரித்தோ, குலாசாரத் தை யனுசரித்தோ, குடுமி வைத்துக்கொள்ளவேண்டும் என்று மட்டும் ஏற்படுகின்றதே யல்லாது முன்பாகத்தில் வைத்துக்கொள்ளக் கூடாதென்றும் நிச்சயிக்க இடமேற்படவில்லை. ஆகையால் தனது குலாசாரத்தை யனுசரித்து முன்னே, பின்னே குடுமி வைத்துக்கொள்வது தவறாக ஒருபொழுதுமாகாதென்று இத னின்று மேற்படுகிறது.

ஸூ॥ अपांसंसर्जनाद्याकेशनिधानात्समानम् (஖ం 16, ஸூ 8) உபநயன பிரகரணத்தில் செய்த மாதிரி ஜலம் தடவுதல் முதல் வபனம் செய்த கேசங்களை அத்திமரத்தினடியில் போடுதல் வரையுள்ள காரியங்களை இங்கும் செய்யவேண்டும். ஆகவே உபநய னப் பிரகரணத்தில் எங்கெந்த மந்திரங்களைப் படித்து எங்கெந் தக் காரியம் செய்யப்பட்டதோ அந்தந்த மந்திரத்தைப் படித்து அக்கார்யத்தை இங்கும் செய்யவேண்டும்.

(मन्त्रः) १५ उष्णेन वाय वुदकेनेत्येषः ॥

(தா - ம்.) **उष्णेनवायो** என்று தொடங்கப்படும் அனுவாகத் தில் படித்த மந்திரங்களைப் படித்து அந்தந்த கார்யங்களைச் செய்யவேண்டும். இவ்வனுவாகத்திற்கு அர்த்தம் 119 - வது பக்கம்முதல் 123 - வது பக்கம் முடியவுள்ள பாகங்களில் எழு தப்பட்டிருக்கிறது.

ஸூ॥ क्षुरं प्रक्षाल्य निदधाति (஖ం 16, ஸூ 9) பிறகு கத்தியை அலம்பிவைக்கவேண்டும். இங்கு "கத்தியை அலம்பவேண்டும்" என்பது மட்டும் விதிக்கப்படுகின்றதே யல்லாது "கீழே வைக்க வேண்டும்" என்பதும் விதிக்கப்படவில்லை. அர்த்தப் பிராப்த மானதே அனுவதிக்கப் படுகின்றது. **ஸூ॥ तेन त्र्यहं कर्मनिवृत्तिः** (஖ం 16, ஸூ 10) அந்தக்கத்தியால் மூன்று தினம் க்ஷௌரம் செய் யக்கூடா. **ஸூ॥ वरं ददाति** (஖ం 16, ஸூ 11) குழந்தைக்கு

வபனம் செய்தவன் தகப்பனைவிட வேறு பிராம்மணனுயின் தென்திசையில் உட்கார்ந்திருக்கும் அந்தப் பிராம்மணனுக்கு தகப்பன் பசுவைக் கொடுக்கவேண்டும்

सू०॥ एवं गोदानमन्यस्मिन्नपि नक्षत्रे षोडशे वर्षे (ख०16, सू० 12) கோதானம் என்பது ஓர்வித கர்மத்தின் பெயராகும். எந்தக் கர்மத்தில் கோதானம் எனப்படும். சிரஸ்ஸின் இரண்டு பிரதேச விசேஷங்களை வபனம்செய்தல் அங்கமாகின்றதோ அக்கர்மம் கோதானம் எனப்படும். அக்கார்யத்தை சௌளத்தைச்செய்த மாதிரி 16-வது வயதில் செய்யவேண்டும். அதாவது: சௌளப் பிரகரணத்தில் கூறியபடி பிராம்மணபோஜனம் முதல் பசுதானம் வரை செய்யவேண்டியதைச் செய்யவேண்டும். புனர்வஸு நக்ஷத்திரம் தவிர வேறு நக்ஷத்திரத்திலும் மேற்கூறியதைச் செய்யலாம்.

सू०॥ अग्निगोदानो वा स्यात् (ख० 16, सू० 13) பிரும்மசாரியானவன் அக்னியையும் பொருட்டு கோதானம் என்ற கர்மத்மத்தைச் செய்து முடிக்கவேண்டியவனுகிறுன். இதை ஆக்னேய விரதம் என்றும் கூறுவர். இதில் ஆஜ்யபாகம்செய்து முடித்த பின்னர் **अग्नये काण्ड ऋषये स्वाहा** என்றுசொல்லி ஆஜ்யத்தாலேயே ஒரு பிரதானுஹுதி செய்து பிறகு ஜயாதிமுதல் க்ஷுரப்பிரக்ஷாளனம் வரையுள்ள கார்யங்களைச் செய்யவேண்டும். **सू०॥ संवत्सरं गोदानव्रतमित्येक उपदिशन्ति** (ख० 16, सூ 14) வேதாத்யயனம் செய்தபின்னரும்கூட 'ஸம்வத்ஸர கோதானவிரதம்' என்கிற பிரும்மசர்யானுஷ்டானஞ் செய்யவேண்டு மெனச் சிலருபதேசிக்கின்றனர்.

இதுவரை கூறிய ஆக்னேயம் ஸாம்வத்ஸரிகம் என்ற இவ்விரு கோதான கர்மங்களுக்கும் சௌளத்தை விட வேறுகவுள்ள ஒரு விசேஷமானது உபதேசிக்கப்படுகிறது. **सू०॥ एतावन्नाना सर्वान् केशान्वापयते** (ख० 16, सू० 15) எல்லாக்கேசங்களை வபனம் செய்தல் என்ற இவ்வளவுதான் சௌளத்திற்கும் கோதானங்களுக்குமுள்ள வேற்றுமை. **वापयते** என்று **णिच्** என்ற பிரத்ய

யத்துடன் கூறியதிலிருந்து ஆசார்யனே கோதான கர்மத்தைச் செய்யவேண்டும் என்று ஏற்படுகிறது. ஆகவே **वरंददाति** என்றதால் விதிக்கப்பட்ட வரதானமும் ஆசாரியனுக்குச் செய்யப்படல் வேண்டும். ஆகவே இப்பக்ஷத்தில் **सत्र** என்ற யாகத்தைப்போல சிகைக்கும்கூட வபனம் செய்தல்வேண்டும். **एतावन्नाना सर्वान् केशान्वापयते** என்ற ஸூத்திரத்திலுள்ள **सर्वान् केशान्** என்ற பதமே அதில் பிரமாணமாகும். ஆனால் **रिक्तो वा एषो अनपिहितोऽयं मुण्डः तस्यैतदपिधानं यच्छिखेति । सत्रेषु तु वचनाद्वपनं शिखायाः (आप ध. प्र. 1, ख० 10, सू० 8, 9,)** "தலையில் சிகையில்லாது மொட்டை யடித்துக்கொள்ளும் இந்த மனிதனானவன் தலையில் ஒருவித மறைவு மற்று சூன்யனாகவேயாகிறான். ஆகவே அவ்வித மொட்டை மனிதனுக்குக் குடுமிவைத்தலானது தலைக்கு ஓர் மறைவாகவேயாகின்றது. ஸத்ரம் என்ற யாகத்தில் சிகையையும் எடுத்து விடும்படி வசனமிருப்பதாலேயே அங்கு அவ்விதம் செய்யப்படுகிறது'' என்றதால் ஆபஸ்தம்பர் ஸத்ரம் என்ற யாகத்தைத் தவிர வேறிடத்தில் சிகை முதலியபாவையும் எடுத்தல் தகாதென மறுத்திருப்பதால் இங்கும் சிகையையும் சேர்த்து வபனம் செய்தல் கூடாதென சிலர் கூறுகின்றனர். **सू०॥ उदकोपस्पर्शनमिति छन्दोगाः (ख० 16, सू० 16)** ஸாம்வத்ஸரிக கோதான விரதம் செய்யும் பக்ஷத்தில் ஒவ்வொரு நாளும் உதகோபஸ்பர்சனத்தை (ஸ்னானத்தை) ஸாமவேதிகள் விதிக்கின்றனர். ஆகவே ஸாம்வத்ஸரிக கோதானவிரதத்தில் ஸாமவேதிகளுக்கு ஒவ்வொருநாளும் ஸ்னானமுண்டென்றும், ஆபஸ்தம்பிகளுக்கில்லை என்றும் ஏற்பட்டது.

பதினான்காவது கண்டம் முற்றிற்று.

பதினைந்தாவது கண்டம்

கிருஹ நிர்மாணப் பிரகரணம்

(அ - கை.) யாகங்களில் அதிகாரத்தைப் பெறும் புருஷனுக்குச் சரீர சுத்தியைத்தரும் ஸம்ஸ்காரங்கள் இதுவரை உப

தேசிக்கப்பட்டன. அத்தகைய ஸம்ஸ்காரங்களை வேறிடத்திற் செய்யும்படி வசனமில்லாவிடில் கிருஹத்திலேயே செய்யவேண்டும். ஆதலால் சாஸ்திர முறைப்படி கட்டப்பட்ட கிருஹத்தில் சாஸ்திர முறைப்படி பிரவேசஞ் செய்வதால் எதிர்பார்க்கும் ஆயுள், யசஸும், தனம் முதலிய பலன் சித்திபெறும். ஆகவே மந்திரங்களிற் சொல்லிய கிரமத்தை யொட்டி கிருஹ நிர்மாணம் (வீடுகட்டல்) அதில் பிரவேசம் இவ்விரண்டும் செய்யும் முறை யானது இனி உபதேசிக்கப்படுகின்றது. ஸூ॥ **दक्षिणाप्रत्यक्प्रवणमगारावकाशमुद्धत्य पालाशेन शमीमयेन वोद्वहेनैतामेव दिशमुत्तरयोद्वहति** (ख० 17, ஸூ 1) வீடுகட்டுவதற்காக ஏற்படுத்தப்பட்ட பூமி யின் பாகம் யாதுண்டோ அந்தப்பாகத்தில் தென்மேற்கு திசை யில் பள்ளமான இடத்தை மண்வெட்டி முதலியவற்றைக்கொண்டு வெட்டி எடுத்து, பொரசமரத்தாலோ, வன்னிமரத்தாலோ தயார் செய்யப்பட்ட கூடை முதலியவற்றால் வெட்டிய மண்ணை அடி யில் எழுதப்படும் மந்திரத்தைப் படித்து தென்மேற்கு திசை யில் கொட்டவேண்டும். ஸூ॥ **एवं त्रिः** (ख० 17, ஸூ 2) இவ் விதமே மூன்று தடவை செய்யவேண்டும். அதாவது:—2-வது 3-வது தடவைகளிலும் பின்வரும் மந்திரத்தை படிக்கவேண்டும்.

(मन्त्रः) १ यद्भूमेः क्रूरं तदितो हरामि पराचीं निर्ऋतिं निर्वाहयामि ।
इदꣳ श्रेयोऽवसानमागन्म देवा गोमदश्वावदिदमस्तु प्रभूम ॥

(ப - ரை.) **भूमेः**=பூமியினுடையதான **यत्**=எந்த **क्रूरम्**=துஷ்டமான எலும்பு, முள் முதலியனவுண்டோ **तत्**=அதை **इतः**=இவ் விடத்தினின்றும் **हरामि**=வேறிடத்திற்குக் கொண்டுபோகிறேன். **निर्ऋतिम्**=இங்கு வஸிக்கின்ற அலக்ஷ்மியை **पराचीम्**=பராங்முகி யாகும்படி **निर्वाहयामि**=விரட்டுகிறேன். **देवाः**=ஓவாஸ்து தேவ தைகாள் **श्रेयः**=மிக்கச் சிறந்ததான **इदम्**=இந்த **अवसानम्**=ஸ்தா னத்தை **आगन्म**=வந்தடைந்துவிட்டோம். **इदम्**=இந்தக் கிருஹ மானது **गोमत्**=பசுவுள்ளதாகவும், **अश्वावत्**=குதிரைகளுள்ளதா கவும் **भूम**=ஐசுவர்யமுள்ளதாகவும் **प्रास्तु**=நன்றாயாகவேண்டும்.

(அ - கை.) **कृत्स्नमुत्तरयाऽभिमृश्य** (ख० 17, ஸூ 3) வடகிழக்கு

திசையில் தாழ்ந்ததாகச் செய்யப்பட்ட பிரதேசத்தை அடியில் எழுதப்படும் மந்திரத்தால் தொடவேண்டும்.

(मन्त्रः)२ स्योना पृथिवि भवाऽनृक्षरा निवेशनी। यच्छा नश्शर्म सप्रथाः॥

(ப - ரை.) पृथिवि=ஓ பூதேவியே स्योना=ஸுகத்தை விளைவிக்கின்ற தொடுகையையுடையவளாகவும் अनृक्षरा=கல், முள் முதலியனவற்றவளாகவும் निवेशनी=வஸிப்பதற்குத் தகுதியுள்ளவளாகவும் भव=ஆவாயாக. सप्रथाः=எங்கும் பிரஸித்தையான ஓ பூதேவியே (त्वम्=நீ) नः=எங்களுக்கு शर्म=சுகத்தை यच्छ=கொடுப்பாயாக.

(அ - கை.) ஸூ०॥ प्रदक्षिणं स्थूणागर्तान् खानयित्वा, अभ्यन्तरं पांसूनुदुप्य उत्तराभ्यां दक्षिणां द्वारस्थूणामवदधाति (ख०17, सू० 3) வடகிழக்கு திசையில் வேலைக்காரர்களைக்கொண்டு தூண்களை நாட்டுவதற்கு வேண்டிய குழிகளை பிரதக்ஷிணமாக தோண்டச் செய்து அதாவது:—வடகிழக்கு தொடங்கி வீட்டிற்குள் சுற்றிலும் வைக்கவேண்டிய தூண்களை நாட்டவேண்டிய குழிகளைத் தோண்டும்படி செய்து தோண்டி எடுத்த மண்ணை வீட்டினுள்ளேயே கொட்டி அடியில் எழுதப்படும் இரண்டு மந்திரங்களால், உள்ளிருந்து வெளிவருங்கால் வலது பக்கத்தில் வரக்கூடிய தூண் எதுவோ அந்தத் தூணை அக்குழியில் நாட்டவேண்டும். இவ்விதம் கூறியது வீட்டிற்குள் சுற்றிலும் நாட்டவேண்டிய தூண்களைப் பற்றிய முறையேயல்லாது நடுவிலுள்ள தூண்களைப்பற்றியதல்லவென்றும் சுதர்சனாசாரிய பாஷ்யத்தில் கூறப்பட்டிருக்கிறது. ஸூ०॥ एवमितराम् (ख० 17, सू० 4) ;வீட்டிலிருந்து வெளியே வரும்பொழுது இடது பக்கத்தில் வரக்கூடிய தூண் எதுவோ அதையும் அடியில் எழுதப்படும் மந்திரங்களாலேயே நாட்டவேண்டும்.

(मन्त्रः)३ इहैव तिष्ठ निमिता तिल्वला स्यादिरावती।
मध्ये तात्प्यस्य तिष्ठान्मात्वा प्रापन्नघायवः॥
४ आ त्वा कुमारस्तरुण आवत्सो जगता सह।
आ त्वा परिस्रुतः कुंभा आदध्नः कलशीरयन्॥

(ப - ரை.) 3 (हे स्थूणे!=ஓ தூணே !) इहैव = இந்த துவார பிரதேசத்திலேயே निमिता=நன்ருய் நாட்டப்பட்டதாக तिष्ठ=இருப்பாயாக. (किंच=மேலும்.) तिल्वला=தச்சனுல் அலங்காரமாயிடப்பட்ட பொட்டு முதலியவற்றுடன் கூடியதாகவும் इरावती=அன்னத்துடன் கூடியதாகவும் स्यात्=*ஆவாயாக. ஓ தூணே! நீ இங்கு வஸிப்பதால் இந்தக் கிருஹத்தில் அன்னத்திற்கு ஸமிருத்தி ஏற்படவேண்டும் என்று கருத்து. गृहस्य=வீட்டின் வாயிற்படியினுடைய मध्ये=நடுவில் तिष्ठात्=†வஸிப்பாயாக. त्वा=உன்னைக்குறித்து अघायवः = பிறருக்குக்கெடுதலை விரும்புகின்ற சத்துருக்கள் माप्रापन्=அடையவேண்டாம். அதாவது:—இந்தக் கிருஹத்தில் கெடுதலை விளைவிக்கின்ற சத்துருக்கள் பிரவேசிக்காவண்ணம் நீ தடை செய்யவேண்டும் என்று கருத்து.

4. (हेस्थूणे!=ஓ தூணே !) त्वा=உன்னை कुमारः=இளம்பருவமுள்ள பாலன் (आयातु=வந்தடையட்டும்.) ஓ தூணே ! வீட்டில் விளையாடிக்கொண்டிருக்கும் சிறு குழந்தை உன்னைப் பிடித்துக் கொண்டு நிற்பதற்காக உனது சமீபம் வரவேண்டும். அதாவது இந்தக் கிருஹத்தில் உன்மூலம் ஸந்தான ஸமிருத்தி யுண்டாக வேண்டும் என்று கருத்து. இவ்விதமே இனிவரும் பாகங்களுக்கும் கருத்துக்கொள்ளவேண்டும். तरुणः=யௌவனப்பருவத்திலிருப்பவனும் (त्वा आयातु = உன்னை வந்தடையட்டும்.) वत्सः= குமாரன் எனப்படுபவனைக்காட்டிலும் சிறியவயதுள்ள குழந்தையும்जगता=சஞ்சரிக்கின்றவனும் வத்ஸன்எனப்படும் குழந்தையைக்காட்டிலும் கொஞ்சமதிக வயதுள்ளவனுமான குழந்தையுடன் सह=கூட (त्वा=உன்னை आयातु=வந்தடையட்டும்.) परिस्रुतः=நெய்யினுடைய कुंभाः=குடங்கள் त्वा=உன்னை आयन् = வந்தடையட்டும். दध्नः=தயிரினுடைய कलशीः=குடங்கள் आयन्=வந்தடையட்டும். ஓ தூணே ! உனது ஸமீபத்தில் தயிர்கடைந்து வெண்ணையை எடுத்து குடம் குடமாய் நெய்யைக் காய்ச்சி வைக்க வேண்டும். அதாவது: இந்தக்கிருஹத்தில் பசுக்களும் எருமைகளும் அபரிமிதமாக விருத்திபடையவேண்டும் என்று கருத்து.

---

* अत्र पुरुषव्यत्ययश्छान्दसः । † अत्रापि पुरुषव्यत्ययःछान्दसः॥

(அ-கை) सू० ॥ यथाखातमितरा अन्त्रवधाय वंशमाधीयमानमुत्तरेण यजुषा अभिमन्त्रयते (ख० 17. सू० 5.) குழி தோண்டிய கிரமத்தை யனுஸரித்து மற்றத் தூண்களை மந்திரமின்றியே நாட்டி, தூண்களின் மேல் வைக்கப்படும் மூங்கிலை அடியில் எழுதப்படும் 5வது மந்திரத்தால் அபிமந்திரணம் செய்யவேண்டும்.

(मन्त्रः) ५. ऋतेन स्थूणावधिरोह वंशोग्रो विराजन्नपसेध शत्रून् ॥

(ப.ரை) वंश—ஓ மூங்கிலே! ऋतेन-அழிவற்றவனுப் स्थूणौ-தூண்களை अधिरोह- ஏறுவாயாக. (अधिरुह्य च—ஏறியபிறகு, उग्रः— மற்றவனுல் அவமதிக்கப்படாதவனுப் (भूत्वा—ஆகி) विराजन्-விளங்கிக்கொண்டு शत्रून्- எனது சத்துருக்களை अपसेध— விரட்டுவாயாக. ஓமூங்கிலே! நீ இந்த கிருகத்தின் தூண்களின் மேல் வைக்கப் பட்டிருப்பதைக் கண்ணுற்ற மாத்திரத்தில் எனது சத்துருக்கள் பயந்து ஓடி விடவேண்டும் என்று கருத்து.

(அகை) सू० ॥ सम्मितमुत्तरैर्यथालिङ्गम् । (ख० 17. सू० 6.) கட்டப்பட்ட வீட்டை அடியில் எழுதப்படும் மந்திரங்களால் மந்திர லிங்கத்தை யனுசரித்து அபிமந்திரணம் செய்யவேண்டும். அதாவது: 6-வது மந்திரத்தால் கீழ் திசையிலிருக்கும் தூண்களையும், 7வது மந்திரத்தால் தென் திசையிலிருக்கும் தூண்களையும், 8-வது மந்திரத்தால் மேற்கிலிருக்கும் தூண்களையும், 9-வது மந்திரத்தால் வடக்கு திசையிலுள்ள தூண்களையும், 10-வது மந்திரத்தால் பிரதானமான தூணையும் 11-வது மந்திரத்தால் முதுகு மூங்கிலையும் தொடவேண்டும். அடியி லெழுதப்படும் மந்திரங்கள் வீட்டின் அவயவமான தூண் முதலியவற்றைத் துதிக்கின்றனவாயினும் "அவயவஸ்துதியானது அவயவிஸ்துதியிலேயே முடிவடையும்" என்ற நியாயப்படி இங்கும் வீட்டின் அவயவமான தூண்களை ஸ்துதி செய்தல் அவயவியான வீட்டின் ஸ்துதியிலேயே முடிவதாய் கருத்துக் கொள்ள வேண்டும்.

(मन्त्रः) ६. ब्रह्म च ते क्षत्रञ्च पूर्वे स्थूणे अभिरक्षतु ॥

७. यज्ञश्च दक्षिणाश्च दक्षिणे ॥ ८. इषश्चोर्जश्चापरे ॥

९. मित्रश्च वरुणश्चोत्तरे ॥ १०. धर्मस्ते स्थूणाराजः ॥

११. श्रीस्ते स्तूपः ॥

(ப-ரை) (हेगृह = ஓவீடே!) ते = உன்னுடையதான पूर्वे = கிழக்குதிசையிலிருக்கின்ற स्थूणे=தூண்களே ब्रह्मच=பிராம்மணஜாதிக்கு அபிமானிதேவனும் क्षत्रंच=க்ஷத்திரியஜாதிக்கு அபிமானிதேவனும் अभिरक्षतु=காப்பாற்றட்டும்.

7. यज्ञश्च=யாகாபிமானி தேவனும் दक्षिणाश्च=வைதிககர்மங்களில்வேலைசெய்த ருத்விக்குகளுக்கு கொடுக்கப்படும் வேதனம் 'தக்ஷிணை' எனப்படும். அந்தத் தக்ஷிணையின் அபிமானி தேவனும் दक्षिणे=தெற்கு திசையிலிருக்கின்ற தூண்களே (अभिरक्षतु=காப்பாற்றட்டும்)

8. इषः, च, ऊर्जः, च=சரத்ருதுவிலடங்கிய மாதங்கள் 'இட்' என்றும், 'ஊர்க்'என்றும் சொல்லப்படும். ஆகவே அவ்விரு மாதங்களின் அபிமானி தேவதைகள், अपरे=மேற்கு திசையிலிருக்கின்ற தூண்களே (अभिरक्षतु=காப்பாற்றட்டும்)

9. मित्रः, च=மித்திரன் என்ற தேவனும் वरुणः च=வருணன் என்ற தேவனும் उत्तरे=வடக்கு திசையிலிருக்கின்ற தூண்களே (अभिरक्षतु=காப்பாற்றட்டும்)

10. ते உன்னுடையதான स्थूणाराजः=பிரதானமான தூணானது धर्मः=தர்மதேவதையைச் சேர்ந்ததாக வாகட்டும். 11 ते=உன்னுடையதான तूपः=முதுகு மூங்கிலானது श्रीः = லக்ஷ்மியைச் சேர்ந்ததாகவாகட்டும்.

கிருஹப் பிரவேச முறை.

(அ-கை) ஸூ ॥ पालाशं शमीमयं वेध्म (1) मादीप्य उत्तरयाऽग्निमुद्धृत्य, उत्तरेण यजुषाऽगारं प्रपाद्य, उत्तरपूर्वदेशेऽगारस्योत्तरयाऽग्निं प्रतिष्ठापयति (ख० 17, सू० 7) பொரசக் கட்டையையோ, வன்னிக் கட்டையையோ ஔபாஸனுக்னியினில் போட்டு ஜ்வலிக்கும்படி செய்து அடியில் எழுதப்படும் 12 வது மந்திரத்தால் அவ்வக்னியைத் தூக்கி, 13வது மந்திரத்தால் புதிய வீட்டிற்குள் எடுத்துச் சென்று, வீட்டில் வடகிழக்கு பாகத்தில் 14 வது மந்திரத்தால் அவ்வக்னியைப் பிரதிஷ்டை செய்யவேண்டும். அதாவது: வைக்கவேண்டும்.

(मन्त्रः १२ उद्ध्रियमाण उद्धर पाप्मनो मा यदविद्वान् यच्च विद्वाँश्चकार। अह्ना यदेनः कृतमस्ति पापँ रात्र्या यदेनः कृतमस्ति पापँ सर्वस्मान्मोद्धृतो मुञ्च तस्मात् ॥

१३ इन्द्रस्य गृहा वसुमन्तो वरूथिनस्तानहँसुमनसः प्रपद्ये ॥

१४ अमृताहुतिममृतायां जुहोम्यग्निं पृथिव्याममृतस्य जित्यै। तयानन्तं काममहं जयानि प्रजापतिर्यं प्रथमो जिगायाग्निमग्नौ स्वाहा ॥

(ப-ரை) 12. अग्ने-அக்னி தேவனே! मया-என்னால் उद्ध्रियमाणः-எடுக்கப்படுகின்ற त्वम् நீர் यत् (2) எந்தப்பாபத்தை विद्वान्-தெரிந்தும் यच्च-எந்தப் பாபத்தை अविद्वान्-தெரியாமலும் चकार-செய்தேனே तस्मात्-அந்த पाप्मनः-பாபத்தினின்றும் मा-என்னை, उद्धर-கரையேற்றுவீராக. அதாவது: பாபங்களைநாசம்செய்

(1) अत्र एकवचनमविवक्षितम् (2) अत्र लिङ्गव्यत्ययः छान्दसः,

துபரிசுத்தனுபாக்குவீராகஎன்றுகருத்து. மேற்கூறியதே மறுபடியும் விரிவாகக்கூறப்படுகின்றது:- **अग्ने**=ஓஅக்கினிதேவனே. **उद्धृतः**=ஔபாஸன குண்டத்தினின்றும் தனியே எடுக்கப்பட்டவராய்க் கொண்டு **अह्ना**-பகலில் **कृतम्**=செய்யப்பட்டதும் **पापम्**= 1அனுஷ்டிப்பவனை ஒணங்கும்படி செய்கின்றதுமான, அதாவது: நசிக்கும்படிசெய்கின்றதுமான **यत्**= எந்த **एनः**=பாபம் **अस्ति**=இருக்கின்றதோ **रात्र्या**= இரவில் **कृतम्**= செய்யப்பட்டதும் **पापम्**=அனுஷ்டிப்பவனை ஒணங்கும்படி செய்கின்றதுமான **यत्**=எந்த **एनः**=பாபம் **अस्ति**=இருக்கின்றதோ **तस्मात् सर्वस्मात्**=அந்தஎல்லாவித பாபங்களினின்றும் **मा**=என்னை **मुञ्च**=விடுவிப்பீராக. ஒருவனுக்கு நேரும் துக்கங்களுக்கு அவனது பாபகர்மமே மூல காரணமாகையால் பாபங்கள் நாச மடையவேண்டும் என்று பிரார்த்திக்கப்பட்டது.

13. **वसुमन्तः**=தனத்துடன் கூடியதும் **वरूथिनः**=பலவிதமான வீட்டின் அவயவமான கட்டுகளுடன் கூடியதுமான **इन्द्रस्य**=யஜமானனான என்னுடைய **ये**=எந்த (2) **गृहाः**=வீடுண்டோ **तान्**= அந்த வீட்டை (**अहम्**=நான்) (3) **सुमनसः**=சந்தோஷத்துடன் கூடிய வனுய் **प्रपद्ये**=இந்த அக்னியுடன் அடைகிறேன் (பிரவேசிக்கிறேன்).

14. **अमृताहुतिम्**= அழிவற்றி ருத்தலை யடைவதர்க்கு நிமித்தமான ஹோம திரவ்வியமாயிருப்பதான **अग्निम्**- அக்னியை **अमृतायाम्**=அழிவற்ற **पृथिव्याम्**= பூமியில் **अमृतस्य**= நாசமற்றிருத்தலை. **जित्यै**=அடைவதற்காக **जुहोमि**=வைக்கிறேன். **प्रथमः प्रजापतिः**=ஹிரண்ய கர்ப்பரானவர் **यम्**=எந்த **कामम्**- விரும்பிய பொருளை **जिगाय**—அடைந்தாரோ **तम्**—அந்த **अनन्तम्**—எல்லை கடந்த **कामम्**—விரும்பிய பொருளை **अहम्**—நான் **तया**—அக்னியைப் பிரதிஷ்டை செய்வதால் **जयानि** அடைவேனுக. **अग्निम्**—இந்த அக்னியை—**अग्नौ** பூமியில் **स्वाहा** வைக்கிறேன்—**इयं वा अग्निर्वैश्वानरः**

---

(1) पै ओवै शोषणे इत्यस्माद्धातोः पापमिति रूपम् । कर्तारं शोषयतीत्यर्थः ॥
(2) अत्र एकस्मिन् बहुवचनम् । (3) अत्र सुमनाः इति भाष्ये सुमनस इति वचनव्यत्ययः छान्दसः

என்ற வேறு வேத வாக்கியமானது பூமியை அக்னியாக வியவஹரித்திருப்பதால் இங்கு அக்னி என்ற பதத்தால் பூமி குறிக்கப்படுவதாகப் பொருள் செய்யப்பட்டது.

(அ-கை) **सू० ॥ तस्माद्दक्षिणमुदधानायतनं भवति (ख० 17, सू० 8)** பிரதிஷ்டை செய்யப்பட்ட அக்னிக்குத் தென் பாகத்தில் ஜலம் நிரைந்த குடத்தை வைப்பதற்கு ஆதாரமானதும் வாய கண்டதுமான மணிகம் என்ற மண் பாத்திரத்தை வைப்பதற்காக வேண்டிய ஸ்தானத்தை ஏற்படுத்தவேண்டும். **सू० ॥ तस्मिन्विषूचीनाग्रान्दर्भान् सꣳस्तीर्य तेषूत्तरया व्रीहियवान्युप्य, तत्रोदधानं प्रतिष्ठापयति (ख० 17, सू० 9.)** அவ்விடத்தில் அனேகம் திக்முகமான நுனியை யுடையனவாக தர்ப்பங்களைப் பரப்பி, அதன்மேல் அடியில் எழுதப்படும் 15வது மந்திரத்தால் நெல் 'யவம்' என்ற தான்யம் இவ்விரண்டையும் கலந்துபோட்டு அவற்றின்மேல் ஜலம் நிரைந்த குடத்தை வைப்பதற்கு ஆதாரமான வாயகண்ட மணிகம் என்ற பாத்திரத்தை வைக்கவேண்டும்.

(मन्त्रः) १५. अन्नपत इत्येषा ॥

இம்மந்திரத்தின் மீதமுள்ள பாகங்கள் பின் வருமாறு:—

अन्नपतेऽन्नस्य नो देह्यनमीवस्य शुष्मिणः ।
प्र प्रदातारं तारिष ऊर्जं नो धेहि द्विपदे चतुष्पदे ॥.

(ப - ரை) **अन्नपते**– அன்னத்திற்கு யஜமானனான ஓ தேவனே! **अनमीवस्य**–ஆரோக்கியத்தைக் கொடுக்கின்றதும் **शुष्मिणः**– பலத்தைக் கொடுக்கின்றதுமான **अन्नस्य**– அன்னத்தை **नः** எங்களுக்கு **देहि**-கொடுப்பீராக. **प्रदातारम्**-அன்னத்தை உம்மையும் பொருட்டு முறைப்படி ஹோமம் செய்கின்ற என்னை **प्रतारिषः**–நன்றாய் விருத்தி செய்வீராக. **नः** எங்களுடைய **द्विपदे**–இரண்டு காலுள்ள பிராணிக்கும் **चतुष्पदे**– நான்கு காலுள்ள பிராணிக்கும்

ऊर्जम्-அன்னத்தையோ,பலத்தையோ **धेहि**-கொடுப்பீராக. எனது கிருகத்தில் வஸிக்கின்றஎந்தப் பிராணியும் உண்ண உணவு கிடைக்காமல் வருந்தாவண்ணம் அன்ன ஸமிருத்தியைக் கொடுக்க வேண்டும் என்று கருத்து.

(அ-கை) **सू० ॥ तस्मिन्नुत्तरेण यजुषा चतुर उदकुंभानानयति-(ख० 17, सू०10)** அந்த வாயகண்ட மண் பாத்திரத்தின் மேல் அடியில் எழுதப்படும் மந்திரத்தால் ஜலம் நிரைந்த நான்கு குடங்களை வைக்க வேண்டும். ஒவ்வொரு குடத்தை வைக்கும் பொழுதும் ஒவ்வொரு தடவை மந்திரத்தை ஜபிக்கவேண்டும்.

(मन्त्रः)१६ अरिष्टा अस्माकं वीरास्सन्तु मापरासेचि मे धनम्॥

(ப-ரை) **अस्माकम्**-எங்களுடைய **वीराः** புத்திரர்கள் **अरिष्टाः** ஹிம்ஸையை யடையாதவர்களாக **सन्तु**- இருக்கவேண்டும். **मे**-என்னுடைய **धनम्** தனமானது **मापरासेचि**-வியர்த்தமாய் நாசமாக்கப்பட்டதா யாகவேண்டாம்.

(அ-கை) **सू० ॥ दीर्ण मुत्तरयाऽनुमन्त्रयते (ख० 17, सू०11)** குடங்களுக்கு ஆதாரமான மணிகம் எனப்படும் வாயகண்ட ஓர் வகை மண் பாத்திரமானது குடங்களை வைக்குங்கால் உடைந்து போய்விட்டால் அடியில் எழுதப்படும் 17வது மந்திரத்தால் அப்பாத்திரத்தை அனுமந்திரணம் செய்யவேண்டும். அதாவது: மந்திரத்தை ஜபித்துக்கொண்டு தொடவேண்டும்.

(मन्त्रः) १७. भूमिर्भूमिमगान्माता मातरमप्यगात् । भूयास्म पुत्रैः पशुभिर्यो नो द्वेष्टि स भिद्यताम् ॥

(ப-ரை) **भूमिः**-பூமியின் விகாரமான மணிகம் என்ற மண் பாத்திர மானது **भूमिम्**-தனது காரணமான பூமியை **अगात्**-அடைந்து விட்டது. மண்ணினுல் செய்யப்பட்ட பாத்திர முடை

ந்து விட்டால் அது திரும்பவும் மண்ணாகவே யாகி விடுகின்றது என்பது மிகப்பிரசித்த மானதே. இதுவே இம்மந்திரத்திலும் கூறப்படுகின்றது. **माता**—அப்பாத்திரத் திற்குள்ளிருக்கும் இடைவெளியாகிற ஆகாசமும் **मातरम्**—வெளியிலிருக்கும் மகா காசத்தை **अप्यगात्**—வந்தடைந்து விட்டது. அதாவது: வெளியிலிருக்கும் ஆகாசத்துடன் இரண்டறக் கலந்து விட்டது **वयम्**-நாம் **पुत्रैः**-பிள்ளைகளுடனும், **पशुभिः**—பசுக்களுடனும் **भूयास्म**—விருத்தியை யடைந்தவர்களாக ஆகவேண்டும் **यः**—எவன் **नः**— எங்களை **द्वेष्टि**-துவேஷிக்கிறுனே **सः**—அவன் **भिद्यताम्**— நாசத்தை யடையட்டும் இந்தக் குடத்திற்கு ஆதாரமான மணிகம் என்ற பாத்திரம் உடைந்து போகுதல் என்ற அசுபத்தால் எனக்கோ என்னைச் சேர்ந்த புத்திரன் பசு முதலியோருக்கோ எத்தகைய கெடுதலுமுண்டாகாமலிருக்கவேண்டும். எனது சத்துருக்கள் இதன் மூலம் நாசத்தை யடையவேண்டும் என்று கருத்து.

(அ-கை) **सू०॥ अग्नेरुपसमाधानाद्याज्यभागान्ते उत्तरा आहुतीर्हुत्वा जयादिप्रतिपद्यते (ख० 17. सू० 12.)** பிறகு அக்னிப்பிரதிஷ்டை முதல் ஆஜ்யபாகம் என்ற கர்மம்வரை செய்து முடித்துக் கொண்டு, பிறகு அடியில் எழுதப்படும்18-19-20-21 வது மந்திரங்களைப் படித்து செய்பினுல் நான்குபிரதானஹோமத்தைச் செய்து ஜயாதிஹோமம் முதலிய வற்றைச் செய்யவேண்டும்.

(मन्त्रः) १८–१९. वास्तोष्पत इति द्वे ॥

वास्तोष्पते என்று தொடங்கி படிக்கப்படும் மந்திரங்களாவன.

१८. वास्तोष्पते प्रतिजानीह्यस्मान् थ्स्वावेशो अनमीवो भवानः। यत्वेमहे प्रति तन्नो जुषस्व शं न एधि द्विपदे शं चतुष्पदे ॥

१९. वास्तोष्पते शग्मया सꣳसदा ते सक्षीमहि रण्वया गातुमत्या । आवः क्षेम उत योगे वरं नो यूयं पातस्वस्तिभिस्सदा नः ॥

२०. वास्तोष्पते प्रतरणो न एधि गोभिरश्वेभिरिन्दो अजरासस्ते सख्ये स्याम पितेव पुत्रान् प्रति नो जुषस्व ॥

२१. अमीवहा वास्तोष्पते विश्वा रूपाण्याविशन् । सखा सुशेव एधि नः ॥

(ப-ரை) 18 **वास्तोष्पते**=ஓ கிருஹாபி மானி தேவனே! **अस्मान्**=எங்களை **प्रतिजानीहि**=உம்மிடம் பக்திசெய்பவர்களாக அறிவீராக. நாங்கள் உம்மிடம் பக்திசெய்து வருவதை நீர் அறிய வேண்டும் என்று கருத்து(**अतः**= ஆனது பற்றி) **नः**=எங்களுக்கு **स्वावेशः** சுகத்தை விளைவிக்கின்ற ஸமீபஸ்திதியை யுடையவராகவும், அல்லது சுகமாய் நெருங்கிப்பழகக் கூடியவராகவும், **अनमीवः**- ஆரோக்யத்தைக் கொடுப்பராகவும், **भव**- ஆக வேண்டும். (**किंच** மேலும் **त्वा**-உம் மிடம் **यत्**-எந்தப் பொருளை **ईमहे**-யாசிக்கின்றோமோ **तत्**-அந்தப் பொருளை **नः**-எங்களுக்கு **प्रतिजुषस्व**-அடைவிப்பீராக. **नः**-எங்களுடைய **द्विपदे**-இரண்டுகாலுள்ள பிராணிகளுக்கும் **चतुष्पदे**- நான்கு காலுள்ள பிராணிகளுக்கும் **शम्**-சுகத்தை **एधि**- விருத்தி செய்வீராக.

19. **वास्तोष्पते**-ஓ கிருஹாபிமானி தேவனே! **शग्मया**-சுகரூபமாயும் **रण्वया**-விளையாடுகின்றதாயும் **गातुमत्या**-நல்ல வழியிற் செல்லுகின்றதாயு மிருக்கின்ற **ते**-உன்னுடைய **संसदा**-ஸபையுடன் **सक्षीमहि**-சேருவோமாக. உமது பந்து மித்திர வர்க்கங்களுள் என்னையும்ஒருவனுகச் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்று கருத்து. **नः**-எங்களை **क्षेमे**-கிடைத்த பொருளை ரக்ஷித்தல் என்ற க்ஷேமத்துடனும் **योगे**-கிடைக்காத பொருளைக் கிடைக்கும்படி செய்தல் என்ற யோகத்துடனும் **वरम्**-மிகவும் **आवः**- சேர்ப்பீராக. ஓ வாஸ்து தேவனே! நீர் எனக்குக் கிடைக்காத பொருள்களைக்கிடைக்கும் படி செய்வதுடன் கிடைத்த பொருள்

களைக் கார்க்கவும் வேண்டும் என்று பிரார்த்திப்பதில் கருத்து. (**देवा:** ஓ தேவர்காள்) **यूयम्**—நீங்கள்**न:**-எங்களை **स्वस्तिभि:**—நன்மைகளால் **सदा**—எப்பொழுதும் **पात**— காப்பாற்று வீர்களாக. ஓ தேவர்காள்! நீங்கள் எனக்கு எப்பொழுதும் நன்மையையே கொடுத்து அருள் புரியவேண்டும் என்று கருத்து. (1)

20 **इन्दो**— ஐசுவர்யம் நிரைந்த **वास्तोष्पते**— ஓ கிருஹாபிமானி தேவனே! **गोभि:**- பசுக்களாலும் **अश्वेभि:**— குதிரைகளாலும்**न:**—எங்களை**प्रतरण:**— விருத்தி செய்பவராக **एधि**—ஆவீராக. ஓ வாஸ்து தேவனே! உமது பிரஸாதத்தால் குதிரை, பசு முதலியவைகள் என்னிடம் மேன்மேலும் விருத்தியடைகின்றன வாக வாக வேண்டும் என்று கருத்து. **ते**— உம்முடைய **सख्ये**— நான் ஸ்துதிப்பவன், நீர் ஸ்துதிக்கப்படுபவர் என்ற முறையை யொட்டி ஏற்பட்டுள்ள ஸ்னேஹ பாவத்தில் **अजरास:**-கிழத்தன்மையற்றவர்களாக (**वयम्**—நாம்)**स्याम**—ஆகவேண்டும். நம்மிருவருக்கு மிருக்கின்ற ஸ்னேஹமானது ஒரு பொழுதும் அழியக்கூடாதென்று பிரார்த்திப்பதில் கருத்துக்கொள்ள வேண்டும் **पुत्रान्**— பிள்ளைகளை **पितेव**—தகப்பன் போல் **न:**—எங்களை **प्रतिजुषस्व**-பிரீதியுடன் அடைவீராக.

21. **वास्तोष्पते**— ஓ கிருஹாபிமானி தேவனே! **विश्वा**—எல்லாவிதமான **रूपाणि**—வஸ்துக்களையும் **आविशन्**—பிரவேசித்துக் கொண்டு **अमीवहा**—ரோகங்களை நாசம் செய்பவராகவும் **सखासु** சினேஹிதர்களான எங்களிடம் **शेव:**— ஸுகத்தைக் கொடுப்பவராகவும் **एधि**—ஆவீராக. ரோகநிவிருத்திக்கு எந்தெந்தப் பொருள்கள் முக்கிய சாதனங்களோ அவைகள்யாவற்றிலும் நீர்பிரவேசித்து ரோக நிவிருத்தியைக் கொடுக்க வேண்டும் என்று பிரார்த்திப்பதில் கருத்து.

(அ-கை) **सू० ॥ परिषेचनान्तं कृत्वोत्तरेण यजुषा कुंभेन त्रि: प्रदक्षिणमन्तरतोऽगारं निवेशनं वा परिषिच्य ब्राह्मणान् भोजयेदपूपैस्सक्तुभिरोदनेनेति॥ (ख० 17, सू० 13.)** பிறகு பரிஷேசனம் என்ற கர்மம் வரை செய்து கொண்டு, அடியில் எழுதப்படும் 22-வது மந்திர

(१) "योगे,क्षेमे," उभयत्रापि तृतीयार्थे सप्तमी ॥

த்தைப்படித்து முன்னமேயே அக்னிக்குத் தென் பாகத்தில் வைக்கப்பட்டிருக்கும் ஜலக்குடத்தால் (ஜலத்தால்) வீட்டின் உள் பாகத்தையோ, நிவேசனத்தையோ (1) பிரதக்ஷிணமாக மூன்று தடவை நனைத்து அபூபம், ஸக்து, அன்னம், இவற்றால் பிராம்மணர்களுக்கு போஜனம் செய்விக்க வேண்டும்.

(मन्त्रः) २२ शिवꣳ शिवम्. ॥

(ப-ரை) **इदंवास्तु**–இந்த கிருஹமானது **शिवम्**–மங்களகரமாக (**भवतु**– ஆகட்டும்.) **शिवम्**– மங்களகரமாக **भवतु**–ஆகட்டும்.

இரண்டாவது பிரச்னத்தில் பதினைந்தாவது கண்டம் முற்றிற்று.

பதினாறுவது கண்டம்:

(அ-கை) **सू० ॥ श्वग्रहगृहीतं कुमारं तपोयुक्तो जालेन प्रच्छाद्य कंसं किंकिणिं वा ह्रादयन्नद्वारेण सभां प्रपाद्य सभाया मध्ये अधिदेवनमुद्धत्या-वोक्ष्याऽक्षान्युप्य, अक्षेषूत्तानं निपात्य दध्ना लवणमिश्रेण अञ्जलिना उत्तरैरवोक्षेत् प्रातर्मध्यंदिने सायम्(ख० 18, सू० 1.)** எந்தத் துஷ்ட கிரஹத்தால் பீடிக்கப்பட்டால் மனிதன் நாயைப்போல் குறைப்பனோ, அல்லது நரயின் சேஷ்டைகளைச்செய்வனோ அந்தத் துஷ்டகிரஹத்திற்கு சுவக்கிரஹம் என்று பெயர். அந்த சுவக்கிரஹத்தால் பீடிக்கப்பட்ட குமாரனது தகப்பன் "நாம் சுத்தனாகிவிட்டோம்" என்று மனத்திற்கு த்திருப்தி ஏற்படும்வரை, போஜனத்தை விலக்கல், இந்திரியங்களையடக்கல் முதலிய தவத்தை ச்செய்து, பிறகு அந்தக்குமாரனை மீன்பிடிக்கும் வலையினால் மூடி, வெண்கலத்தால் செய்த சலங்கைகளை மற்றொரு புருஷனைக்கொண்டு சப்திக்கும்படி செய்து சூதாடுமிடத்திற்குப் பிரஸித்தமான பாதையால்செல்லாமல் சுவரைஇடித்து துவாரத்தை ஏற்படுத்தி அதன் வாயிலாக் குமாரனுடன்சென்று, அந்தச்சபையின் மத்தியில் சூதாடும் ஸ்தானத்தை மண்வெட்டியால் கல்லியெடுத்து விட்டு, தீர்த்தத்தால் புரோக்ஷணம் செய்து, சொக்கட்டான்காய்களை அவ்விடத்தில் பரப்பி அவற்றின்மேல் இந்தக்குமாரனை மல்லாக்காக ப்படுக்கச்

---

(1) நிவேசனம் என்றபதத்தின் பொருள் நமக்கு விளங்க வில்லை

செய்து உப்புக்கலந்த தயிரை அஞ்ஜலியால் எடுத்து அடியில் எழுதப்படும் மந்திரங்களால், காலே, நடுப்பகல், மாலே நேரங்களில் புரோக்ஷணம் செய்யவேண்டும். எல்லா மந்திரங்களுக்கும் முடிவில் ஒருதடவை புரோக்ஷணம் செய்யவேண்டும் என்றுசிலரும் ஒவ்வொருமந்திரத்தின் முடிவிலும் புரோக்ஷணம் செய்யவேண்டும் என்று சிலரும் சொல்லுகின்றனர். இக்கார்யத்தை மூன்று நல்ல தினத்தில் செய்ய வேண்டும். தயிரையெடுத்து புரோக்ஷணம் செய்யும் வரையில் சலங்கையைச் சத்தப் படுத்த வேண்டும். ஸூ॥ अगदो भवति (ஃ 18, ஸூ 2,) இவ்விதம் செய்தால் குமாரன் ரோகமற்றவனுயா கிவிடுவான்.

(मन्त्रः)१. कूर्कुरः सुकूर्कुरः कूर्कुरो बालबन्धनः ।
उपरिष्टाद्यदेजाय तृतीयस्या इतो दिवः ॥

२. औलब इत्तमुपाह्वयथार्जीङ्ख्यामश्शबल ः। अधो-
राम उलुंबलः सारमेयो ह धावति समुद्रमवचाकशत् ॥

३. बिभ्रन्निष्कं च रुक्मं च शुनामग्रगँसुबीरिणः ।
सुबीरिण सृज सृज शुनक सृजैकव्रात्य सृज च्छत् ॥-

४. तत्सत्यं यत्वेन्द्रोऽब्रवीद्गास्पाशयस्वेति तास्त्वँस्पा
शयित्वाऽऽगच्छस्तं त्वाऽब्रवीदविदहा ३ इत्यविदं ही-
ति वरं वृणीष्वेति कुमारमेवाहं वरं वृण इत्यब्रवीः ॥

५. विगृह्य बाहू प्लवसे द्यामवचाकशत् ॥

६. बिभ्रन्निष्कं च रुक्मं च शुनामग्रगँसुबीरिणः । सु-
बीरिण सृज सृज शुनक सृजैकव्रात्य सृज च्छत् ॥

७. तत्सत्यं यत्ते सरमा माता लोहितः पिता ।
अमी एके सरस्यका अवधावत तृतीयस्या इतो दिवः ॥

८. तेकश्च ससरमतण्डश्च तृलश्च वितूलश्चार्जुनश्च लो-
हितश्च ।

दुला ह नाम वो माता मन्थाकको ह वः पिता ।
९. सन्तक्षा हन्ति चक्री वो न सीसरीदत ।
छदपेहि सीसरम सारमेय नमस्ते अस्तु सीसर ॥
१०. समश्वा वृषणः पदो न सीसरीदत ।
छदपेहि सीसरम सारमेय नमस्ते अस्तु सीसर ॥
११. श्वानमिच्छ्वाऽदन्न पुरुषञ्छत् ॥

(ப-ரை) 1. **सुकूर्कुरः**-நன்றாய் குர், குர் என்றுகுறைக்கின்ற **(यः) कूर्कुरः**-எந்தநாயுண்டோ **वालबन्धनः**-வாலினால் கட்டுகின்ற **(यः) कूकुरः**-எந்த நாயுண்டோ **इतः**-இந்தப் பூலோகத்தினின்றும் **तृतीयस्याः**-பூமி, அந்தரிக்ஷம், ஸுவர்க்கம் என்றலோகங்களுள் மூன்றாவதும் **उपरि-ष्टात्**-மேலே இருக்கின்றதுமான **दिवः**-ஸுவர்க்கலோகத்தினின்றும் **यत्**-(1) எந்தநாய்(2). **एजाय**-வந்திருக்கின்றதோ 2. **(सःसः** அந்தந்த)நாய் **औलवः**-உலபன் என்ற நாயின் பிள்ளையாக வாகின்றது. **तम्**-அந்தந்தநாயை **(परिचारकाः**-ஓவேலைக்காரர்காள்) **उपाह्वयथ**-**अत्र भाष्यम्-उपशब्दो अपेत्यस्यार्थे, अपाह्वयथ,यथा इतः अपगतो भवति॥.** எவ்விதம் சத்தம் போட்டால் இங்கிருந்து ஓடி விடுமோ அவ்விதம் சத்தம் போட்டுவிரட்டுங்கள். **श्यामः**-கருப்பு நிறம் பொருந்தியது **शबलः**தவிட்டு நிறம் பொருந்தியது **अधोरामः**-கீழ்பாகத்தில் கருப்பு நிறம் பொருந்தியது **उलुंबलः**-அதிக பலம் பொருந்தியது **(इति**-என்றுசத்ரு:--நான்கு) **आर्जीन्**-ருஜி என்றவரின் புத்திரர்களான நாய்களையும் **अपाह्वयथ**-விரட்டுங்கள். **सारमेयः**-ஸரமா என்ற பெண் நாயின் பிள்ளையான நாயானது **समुद्रम्**-ஸமுத்திரத்தை **अवचाकशत्**-பார்த்துக் கொண்டு **धावति**-ஓடி வருகின்றது. (**तमप्यपाह्वयथ**-அதையும் விரட்டுங்கள்.')

3. **निष्कं च**-நிஷ்கம் என்ற ஆபரணத்தையும் **रुक्मं च**-ருக்மம் என்ற ஆபரணத்தையும் **बिभ्रत्**-தரித்திருக்கின்ற **सुबीरिणः**-- ஸுபீரிணம் எனப்பெயரிய நாயானது **शुनाम्**- நாய்களுக்குள் **अग्रम्**-பிரதான மானது.'**सुबीरिण**- சுபீரிணம் எனப்பெயரிய ஓநாயே!

---

(1) अत्र सुपां सुलुगिति सोर्लुक्। 2. एतेर्लिटि छान्दसो जकारः।

सृज सृज-இந்தக் குமாரனை விட்டுவிடு **शुनक**-அதிகமாய் சாப்பிடுகி றஓ நாயே! **सृज**-இந்தக் குமாரனை விட்டுவிடு. **एकव्रात्य**-ஒரு கூட்டத்தில் பிரதானமாயிருக்கின்ற நாயே! **सृज**-இந்தக்குமாரனை விட்டுவிடு **तत्**-சி சி. போ போ.

4. 5. அடியில் எழுதப்படும் கதையை க்ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். அதாவது:—ஓர் ஸமயத்தில் அஸுரர்கள் தேவர்களின் பசுக்களைத் திருடி மலையின் குகையில் அடைத்து குஹாத் துவாரத்தையும் மூடி விட்டனர். அப்பொழுது இந்திரன் 'ஸரமா' என்ற நாயின் பிள்ளையான ஸாரமேயனைக் கூப்பிட்டு "ஓ ஸாரமேய! நமது பசுக்கள் எங்கிருக்கின்றன. எவர்களால் திருடப்பட்டன வென்பதை வெளியிற் சென்று அறிந்து பசுக்களைத் திருடியவர்களை வென்று பசுக்களைத் திரும்பவும் அழைத்துக் கொண்டே வந்து சேரு"என்று கட்டளையிட்டான். அந்த ஸாரமேயன் என்ற நாயும் இந்திரன் சொல்லிய படியே எல்லாவற்றையும் செய்து முடித்தது. இவ்விதம் காரியத்தைச் செய்து முடித்த ஸாரமேயனுக்கு இந்திரன் வேண்டிய வரனைக் கொடுத்தார் என்பதாம். **इन्द्रः**-இந்திரன் **गाः**-அஸுரர்களால் அபஹரித்துச் செல்லப்பட்ட எங்களது பசுக்களை **स्पाशयस्व**-சத்துருக்களை வென்று அடைவாயாக **इति**-என்று **अब्रवीत्**-சொன்னார் (**इति**) **यत्**-என்பது யாதுண்டோ **तत्**-அதுவும். **त्वम्**-நீ **ताः**-அந்தப் பசுக்களை **स्पाशयित्वा**- சத்துருக்களை வென்று அழைத்துக் கொண்டு **आगच्छः**-வந்தாய் (**इति यत्**-என்பது யாதுண்டோ, **तत्**-அதுவும்) **तम्**-அவ்விதம் காரியத்தைச் செய்து முடித்த **त्वा**-உன்னை (**इन्द्रः**-இந்திரன்) **अविद हा**- (1) பசுக்களையடைந்தாயா **इति**-என்று **अब्रवीत्**-சொன்னார்-அதாவது: கேட்டார்(**इति यत्**-என்பது யாதுண்டோ **तत्**-அதுவும் **तदा**-அப்பொழுது **त्वम्**-நீ) **अविदं हि**-(2) பசுக்களை அடைந்து விட்டேன், அதாவது:-கொண்டு வந்துவிட்டேன் **इति**-என்று **अब्रवीः**-சொன்னாய் (**इति यत्**-என்பது யாதுண்டோ **तत्**-அதுவும் **ततः**-பிறகு **इन्द्रः**- இந்

(1.) छान्दसो विसर्जनीयस्य लोपः । 'हा' इति प्रश्नद्योतको निपातः । तस्य प्रश्ने प्लुतः
(2.) 'हि' इत्यभ्युपगमं द्योतयति ॥

திரன்) **वरम्**—வேண்டியதை **वृणीष्व**—கேட்டுக் கொள்ளு **इति** என்று **अब्रवीत्**—சொன்னார் (**इति यत्**—என்பது யாதுண்டோ **तत्**—அதுவும்) **तदा**—அப்பொழுது **त्वम्**—நீ "**अहम्**—நான் **कुमारमेव**—குழந்தைகளைப் பாதிப்பதையே **वरम्**—வரமாக **वृणे**—வரிக்கிறேன்—கேட்கிறேன் **इति** என்று **अब्रवीः**—சொன்னாய் (**इति यत्**—என்பது யாதுண்டோ **तत्**— அதுவும்) **सत्यम्**—உண்மையே. ஓ ஸுபீரிணா! நீ குழந்தைகளை ஹிம்ஸிப்பதையே இந்திரனிடம் வரமாகக்கேட்டுக் கொண்டாய் என்பது, நீ எனதுகுமாரனைப் பாதிப்பதிலிருந்து உண்மை என வெளியாகின்றது என்று கருத்து.

5. (**हे सुवीरिण!** ஓஸுபீரிணா! **त्वम्**— நீ) **बाहू**— கைகளை **विगृह्य**— பரப்பிக் கொண்டு **द्याम्**— ஆகாசத்தை **अवचाकशत्**- பார்த்துக் கொண்டு **प्रवसे**- வருகிறாய். அல்லது ஸுவர்க்க லோகத்தினின்றும் வரும்பொழுது ஆகாசநதியைத் தாண்டுகிறாய். இவ்விதமே ருக்வேதத்தில் ஸரமாஸூக்தத்தில் **कथं रसाया अतरः पयांसि** "எவ்விதம்ரஸா என்றஆகாசநதியின் ஜலத்தைக்கடந்தாய்" என்றதால் சொல்லப்பட்டிருக்கிறது. **रसा**—ஆகாசநதி.

6. **विभ्रचिक्ष्च** என்ற இந்த 6 வது மந்திரத்திற்கு 252 வது பக்கத்தில் உரை எழுதப் பட்டிருக்கிறது.

7. (**सुवीरिण**- ஓ ஸுபீரிணா!) **ते**—உனக்கு **सरमा**—ஸரமா எனப் பெயரிய நாயானது **माता**—தாய். * **लोहितः**—ரோஹிதன் எனப் பெயரிய நாயானது **पिता**—தகப்பன் (**इति**) **यत्**—என்பது யாதுண்டோ **तत्**—அது **सत्यम्**—உண்மையே. (**अन्येश्वानः**—ஓ மற்ற நாய்களே!) **अमी (यूयम्)** இந்த நீங்கள் **एके**—சிலர் **सरस्यक्काः**—ருசிபொருந்திய மாம்ஸத்துடன் கூடியவர்களாய்க் 'கொண்டு **इतः**— இந்தப் பூலோகத்தினின்றும் **तृतीयस्याः**—மூன்றுவது லோகமான **दिवः**— ஸுவர்க்க லோகத்தினின்றும் **अवधावत**— கீழ் நோக்கி வாருங்கள்.

8. சென்ற 7 வது மந்திரத்தில் பொதுவாய் கூறப்பட்ட நாய்களின் பெயர்கள் குறிக்கப் படுகின்றன. **तेकः,च** தேகன்என்

---

* छान्दसो रेफस्य लकारः ।

றும் **ससरमतण्ड:** **च**–ஸஸரமதண்டன்என்றும் **तूल: च** தூலன் என்றும் **वितूल:, च**– விதூலன் என்றும் **अर्जुन: च**– அர்ஜுனன் என்றும் (**क्रमेण षण्णां शुनां नामानि**–முறையே ஆறு நாய்களின் பெயர்களாகும் **हे षट् श्वान:**–தேகன் முதலிய ஓ ஆறு நாய்களே!) **व:**–உங்களுக்கு **दुला**–துலா எனப் பெயரியவள் **माता**–தாய் (**इति**–என்பது) **ह**– பிரஸித்த மானது. **मंधाकक:**–மந்தாககன் எனப் பெயரியவன் **व:**–உங்களுக்கு **पिता**– தகப்பன் (**इति**– என்பது) **ह**– பிரஸித்தமானது.

9. (**अत्रागतान्**–இங்குவந்த) **व:**-- உங்களை **तक्षा**-- எனது வேலைக் காரன் **चक्री**- ஆயுதத்தைக் கையில் தாங்கிக் கொண்டு **संहन्ति**-நன்றாய் கொல்லப் போகிறான் (**अतश्च**- ஆகையால்) **न सीसरीदत**- இங்குவராதீர்கள். முற்கூறிய நாய்களைவிட வேறான வர்களும், ஸரமையின் புத்திரர்களுமான 'ஸீஸரமன் 'ஸீஸரன்' எனப் பெயரியவர்களைப் பற்றிஇம்மந்திரத்தின் இரண்டாவது பாகத்தால் சொல்லப் படுகின்றது **सीसरम**–ஸீஸரமன் எனப் பெயரிய **सारमेय**- ஓ நாயே **छत्**- சி. **अपेहि**-இவ்விடம் விட்டுச் செல். **सीसर**-ஸீஸரன்எனப் பெயரிய **सारमेय**-ஓ நாயே! **ते**-உனக்கு. **नम:**-நமஸ்காரம் **अस्तु**-இருக்கட்டும். அதாவது: நமஸ்கரிக்கிறேன்.

10. (**हे श्वानौ**- ஓநாய்களே! **यद्यत्रागच्छथ:**- இங்கு வந்தால்) **वृषण:** பலம் பொருந்திய **पद्यो न**--பாதம் போல **अश्वा:**- குதிரைகள் **सीसरीदत**- ஓடிவரட்டும். ஓ நாய்களே! மிக்க பலசாலியான புருஷன் எவ்விதம் தனது காலால் ஒன்றை உதைக்கும் பொழுது வேகமாய் காலை நீட்டுவானோ அவ்விதமே எனதுகுதிரைகள் இவ்விடம் வந்த உங்களிடம் பாய்ந்து கொன்று விடுமாதலால் நீங்கள் இவ்விடம்வராமல் விலகி விடுவதே நன்மை யாகும் என்று கருத்து. **सीसरम** ஸீஸரமன் எனப் பெரிய **सारमेय**–ஓ நாயே **छत्**–சி. **अपेहि**–இவ்விடம் விட்டு செல்லு. **सीसर**–ஸீஸரன் எனப் பெயரிய **सारमेय**– ஓ நாயே **ते**--உனக்கு **नम:**–நமஸ்காரம் **अस्तु**–இருக்கட்டும்.

11. பொதுவாய் எல்லா நாய்களையும் குறித்துச் சொல்லப் படுகின்றது:— श्वा–இவ்விடம் வந்த நாயானது श्वानमित्-- தன து ஜாதியான நாயையே अद्त्--பக்ஷிக்கட்டும். पुरुषम्--இந்தக் குமாரனை न--பக்ஷிக்கவேண்டாம் छत्--சீ

(அ-கை) सू० ॥ शंखिनं कुमारं तपोयुक्त उत्तराभ्यामभिमन्त्र्यो त्तरयोदकुंभेन शिरस्तोऽवनयेत्प्रातर्मध्यंदिने सायम् । (ख० 18, सू० 3) எந்தத் துஷ்டக் கிரஹத்தால் பீடிக்கப்பட்டால் குமாரன் சங்கம் போல் சத்தமிடுவானோ அந்தக் கிரஹத்திற்கு சங்கம் என்று பெ யர். அந்தச் சங்கக்கிரஹத்தால் பீடிக்கப்பட்ட குமாரனை அவனது தகப்பன் "நான் பரிசுத்தனுகி விட்டேன்" என்று மனத்திற்குத் திருப்தி ஏற்படும் வரை போஜனத்தைவிலக்கல் இந்திரியங்களை யடக்கல் முதலிய தவத்தைச் செய்து அடியில் எழுதப்படும் एते ते प्रतिदृश्येते, हतश्शङ्खो हतश्शङ्ख पिता என்ற மந்திரங்களால் அபிமந் திரணம் செய்து ऋषिर्बोधः என்ற மந்திரத்தால், குடத்தில் ஜலத் தை எடுத்து குமாரனுடைய சிரஸில் காலை, மத்யான்ஹம், மாலை இவ்வேளை களில் அபிஷேகம் செய்ய வேண்டும். सू० ॥ अगदो भवति (ख० 18, सू० 4) இவ்விதம் செய்தால் ரோகம் நிவிருத்தியை யடைந்து விடும்.

(मन्त्रः) १२. एते ते प्रतिदृश्येते समानवसने उभे ।
ते अह्ँसारयेण मुसलेनावहन्म्युलूखले ॥

१३. हतश्शङ्खो हतश्शङ्खपिता हतश्शङ्खकुतुर्वकः ।
अप्येषाँस्थपतिर्हतः ॥

१४. ऋषिर्बोधः प्रबोधस्स्वप्नो मातरिश्वा ।
ते ते प्राणांन्स्परिष्यन्ति माभैषीर्न मरिष्यसि ॥

(பரை) 12. समानवसने--ஒரேவிதமான வஸ்திர முடைய வர்களும் ते–பிரஸித்தர்களு மான उभे–இரண்டு एते–சங்கக் கிரஹ ங்களின் தாய்மார்கள் प्रतिदृश्येते–காணப் படுகின்றனர் ते–அவர் களை अहम्–நான் उलूखले–உரலில் (कृत्वा–போட்டு) सारयेण–மிகவும் திருடமான मुसलेन–உலக்கையால் अवहन्मि–இடிக்கிறேன்.

13. **शङ्खः**—சங்கம் என்ற துஷ்டக் கிரஹமானது **हतः**நாசம டைந்து விட்டது. **शङ्खपिता**—சங்கக் கிரஹத்தின் தகப்பன் **हतः** நாசமடைந்து விட்டான். **शङ्खकुतुर्वकः**—ஹிம்ஸிக்கின்ற சங்கக் கிர ஹமானது **हतः**—நாசமடைந்து விட்டது. **एषाम्**—இந்தச் சங்கக்கிர ஹங்களின் **स्थपतिःअपि=** யஜமானனும் **हतः**—நாசமடைந்து விட் டான். இம்மந்திரப்பிரபாவத்தால் சங்கக்கிரஹம் நிச்சயமாய் நாச மடைந்து விடும் என்ற நம்பிக்கையால் **भूतकाल**—பிரயோகம் செய் யப்பட்டிருக்கிறது.

14. **बोधः**—போர்தாயன கோத்திரத்தைச் சேர்ந்த **ऋषिः**— ருஷியும் **प्रबोधः**—நல்லஅறிவுக்கு அபிமானி தேவதையும் **स्वप्नः**— ஸ்வப்னத்தின் அபிமானி தேவனும் **मातरिश्वा**—வாயுவும் ஆகிய (**ए**) **ते**—இவர்கள் **ते**—உன்னுடைய **प्राणान्**—பிராணன்களை **स्परिष्यन्ति**— காப்பாற்றப் போகின்றனர். **अतश्च**—ஆகையால் **न मरिष्यसि**—இற ந்து போகமாட்டாய். **कुमार**—ஓ குமாரனே! **माभैषीः**—பயப்படாதே

ஸர்ப்ப பலி போடும் முறை.

(அ-கை) **सू० । श्रावण्यां पौर्णमास्यामस्तमिते स्थालीपाकः (ख०** 18, **सू०** 5) ஸூரியன் ஸிம்ம ராசியில் சஞ்சரிக்கும் பொழுது வரும் அமாவாஸ்யைக்கு முன்னுள்ள பௌர்ணமாஸிக்கு **श्रावणी पौर्ण-मासी**என்று பெயர். அந்தச் சிராவண பௌர்ணமாஸியில் மாலை யில் ஔபாஸனம் செய்த பிறகு, 7வது கண்டத்திற் சொல்லிய முறைப்படி சிறிய பாத்திரத்தில் ஔபாஸனக்னியில் அன்னத் தைப் பாகம்செய்யவேண்டும். சிரவண நக்ஷத்திரத்துடன் கூடிய பௌர்ணமாஸியை மட்டும் **श्रावणी पौर्णमासी** என்று கூறுவது உசிதமாயினும் சிரவண நக்ஷத்திரத்துடன் கூடாவிடினும் சிரா வண மாஸத்திய பௌர்ணமாஸியில் நித்யமாயிருப்பது பற்றி ஸர்ப்ப பலியை ச்செய்தல் அவசியமாகும். சைத்திரம் வைசாகம் முதலிய மாஸங்களை நிர்ணயிப்பது எங்ஙனமெனின்? கூறுவாம்.

मेषादिस्थे सवितरि यो यो दर्शः प्रवर्तते ।

चान्द्रमासास्तत्तदन्ताश्चैत्राद्या द्वादश स्मृताः ॥

तेषु या या पौर्णमासी सा सा चैत्र्यादिका स्मृता ।
कादाचित्केन योगेन नक्षत्रस्येति निर्णयः ॥

மேஷம் விருஷபம் முதலிய ராசிகளில் சூரியன் சஞ்சரிக்கும் பொழுது அந்தந்த மாதங்களில் எந்தெந்த அமாவாஸ்யை வருகின்றதோ அத்துடன் சாந்திரமாதம் எனப்படும்சைத்ரம் வைசாகம் முதலிய 12 மாதங்கள் முடிவடைகின்றன. அதாவது: சித்திரை மாதத்தில் வரும் அமாவாஸ்யையுடன் சைத்ரம் என்ற சாந்திரமாஸம் முடிவடைகின்றது. வைகாசிமாதத்திய அமாவாஸ்யை யுடன் வைசாகம் என்ற சாந்திர மாஸம் முடிவடைகின்றது. இவ்விதமே மற்ற மாதங்களிலும் கண்டு கொள்ள வேண்டும். அந்தச் சாந்திர மாஸமான சைத்திரம் முதலிய மாதங்களில் எந்தெந்தப் பௌர்ணமாஸிகள் வருகின்றனவோ அவைகள் சித்திரை, விசாகம் முதலிய நக்ஷத்திரங்களின் ஸம்பந்தத்தை ஏதோ ஒருஸமயத்தில் அடையக் கூடுமாதலால் **चैत्री, वैशाखी, आषाढी, श्रावणी** என்பது முதலிய வற்றால் முறையே வியவஹரிக்கப் படுகின்றன.

இங்கு சிலர் **क्षेत्रस्य पतये स्वाहा** என்று சொல்லி ஹவிஸ்ஸை வைக்கவேண்டும் என்கின்றனர் **सू०॥ क्षिप्रं यजेत पाको देवः** (**ख०**20, **सू०** 15) க்ஷேத்திர பதியை ஆவாஹனம் செய்து பாத்யம் என்ற உபசாரத்தை மட்டும் உடனே செய்து மற்ற உபசாரங்களைச்

*अत्र छान्दसोहस्वः ॥

செய்வதற்கு முன்னமேயே மேற்கூறிய படி அன்னத்தைக் கொடுக்கவேண்டும். க்ஷேத்திரபதி என்ற தேவன் அல்ப ஞகை யால் இவ்விதம் செய்யப் படுகின்றது. ஸூ॥ उत्तरांभयामुप तिष्ठते (ख॰ 20, सू॰ 16) அடியில் எழுதப்படும் 47, 48 வது மந் திரங்களால் க்ஷேத்திரபதி என்ற தேவனை ஸ்துதிக்க வேண்டும்

(मन्त्रः) ४७, ४८. क्षेत्रस्य पतिना वयमिति द्वे ॥

क्षेत्रस्यपतिना वयं என்றது முதலிய மந்திரங்களாவன.—

४७. क्षेत्रस्य पतिना वयꣳहितेनेव जयामसि ॥
गामश्वं* पोषयित्न्वा स नो मृडातीदृशे ॥

४८. क्षेत्रस्य पते मधुमन्तमूर्मिं धेनुरिव पयोऽस्मासु-
धुक्ष्व । [मृडयन्तु॥
मधुश्चुतं घृतमिव सुपूतमृतस्य नः पतयो

(ப-ரை) 47. **वयम्**- நாம் **क्षेत्रस्य पतिना**- க்ஷேத்திரபதி என்ற தேவனுல் **हितेनेव**- சினேஹிதனைக் கொண்டு போல **जयामसि**- ஜயிக்கவேண்டியதை ஜயித்து விடக் கடவோம். **सः**- அந்த க்ஷேத்திரபதி என்ற தேவன் **गाम्**- பசுவையும் **अश्वम्**- குதிரையையும் **पोषयित्नु**- விருத்திசெய்பவராக வாகி **मृडाति**- சுக ப்படுத்துவாராக.

48. **क्षेत्रस्य पते**- ஓ க்ஷேத்திரபதி என்ற தேவனே! **मधुमन्तम्**- தித்திப்புள்ள பாலுடன் கூடியதாயும், **मधुच्युतम्**- தித்திப் புள்ள பாலைப் பெருக விடுவதாயும், **सुपूतम्**-நன்ருய் சுத்தி செய் யப்பட்ட **घृतमिव**- நெய்யை ப்போலிருக்கின்ற தாயுமிருக்கின்ற **ऊर्मिम्**- பசுக்களின் ஸமுதாயத்தை **धेनुः**-பசுவானது **पयइव**-பாலை ப்போல **अस्मासु**- எங்களிடம் **धुक्ष्व**- விருத்திசெய்வீராக. (**किंच**- மேலும் **त्वत्प्रसादात्**- உமது பிரஸாதத்தால்) **ऋतस्य**-யாகத்திற்கு **पतयः** நாயகர்களான அக்கினி முதலிய தேவர்கள் **नः**-- எங்களை **मृडयन्तु**-சுகப்படுத்தட்டும்.

---

* "पोषयित्न्वासनो मृडातीदृशे" इत्यत्र पोषयित्नु, आ इति पदच्छेदः॥ आकारः समुच्चये ॥

ஸூ॥ **स्थालीपाकं ब्राह्मणान् भोजयेत्** (ख०20, ஸூ०17.) ஸ்தாலியில் மீதப்பட்டிருக்கும் ஈசான ஹவிஸ்ஸை பிராம்மணர்களுக்குப் போஜனம் செய்விக்க வேண்டும். ஸூ० ॥ **क्षेत्रपत्यं प्राश्नन्ति ये सनाभयो भवन्ति** (ख० 20, ஸூ० 18) க்ஷேத்திர பதிக்காகத் தயார் செய்த ஹவிஸ்ஸின்மீதபாகத்தை யஜமானன், யஜமானனுடைய தாயாதர்கள் இவர்கள் புஜிக்க வேண்டும். ஸூ०॥ **यथैवैषां कुलधर्मस्स्यात्** (ख० 20, ஸூ०19) அல்லது க்ஷேத்திரபதியின் ஹவிஸ்ஸின் மீதபாகத்தை எவ்விதமுபயோகிப்பது குலதர்மமோ அவ்விதமாவது செய்யலாம். அதாவது: யஜமானனுக்கு தாயாதர்களாக வில்லாதவர்களும் புஜிப்பது வழக்கமானல் செய்யலாம்.

இரண்டாவது பிரச்னத்தில் பதினெட்டாவது கண்டம் முற்றிற்று.

பத்தொன்பதாவது கண்டம்.

மாஸிசிராத்தப்பிரகரணம்.

ஸூ०॥ **मासिश्राद्धस्यापरपक्षे यथोपदेशंकाला:** (ख०21 ஸூ० 1) ஒவ்வொருமாதத்திலும், மிருதர்களான பிதா, பிதாமஹன், பிரபிதாமஹன், முதலியோரைக்குறித்து செய்யவேண்டிய **मासिश्राद्धम्** என்ற கர்மாவை கிருஷ்ண பக்ஷத்தில் தர்மசாஸ்திரங்களில் சொல்லிய தினத்தில் செய்யவேண்டும். **सर्वेष्वेवापरपक्षस्याऽहस्सु क्रियमाणे पितॄन् प्रीणाति कर्तुस्तु कालाभिनियमात् फलविशेष:** (**आप. ध. प्र** 2, **ख** 16, ஸூ० 7.) கிருஷ்ண பக்ஷத்தினுடைய தினங்களுள் எந்த தினத்திலும் மாஸிசிராத்தத்தைச் செய்யலாம், ஆனல் நியதமாய் ஒருதிதியை எடுத்து க்கொண்டு அதிலேயே ஆயுள் காலம் முடியும்வரை மாஸி சிராத்தத்தைச்செய்து வருவதானது செய்பவனுக்கு விசேஷமான நல்லபலனைக் கொடுப்பதாகவாகும் என்று கூறியிருப்பதால் கிருஷ்ண பக்ஷத்தின் திதிகளுள் ஒருதிதியை நியதமாக எடுத்துக் கொண்டு மாஸிசிராத்தத்தைச் செய்யவேண்டும். ஸூ०॥ **शुचीन्मन्त्रवतो योनिगोत्रमन्त्रासंबंधानयुग्मांस्त्र्यवराननर्थावेक्षो भोजयेत्** (ख०21, ஸூ० 2) அந்த மாஸிசிராத்தத்தில் பிதா, பிதாமஹன், பிரபிதாமஹன் இவர்களின் திருப்திக்காக ஒவ்வொரு வர்ணத்திற்கும் மூன்று பேருக்குக் குறையாமல் பிராம்மணர்களை வரணம்செய்து போஜனம் செய்விக்கவேண்டும்,

அந்தப் பிராம்மணர்கள் வாக், மனம், காயம் இவற்றில் சுத்தியுள்ளவர்களாகவும், வேதாத்யனம் செய்தவர்களாகவும், யோநி* ஸம்பந்தம், கோத்திரஸம்பந்தம், மந்திரசம்பந்தம் இவைகளற்றவர்களாகவு மிருக்கவேண்டும். ஆனுல் இரட்டைப் படையாக பிராம்மணர்களை போஜனம்செய்விக்கக் கூடாது. சிராத்தத்தில் போஜனம் செய்விப்பதன் மூலம் அந்தப் பிராம்மணர்களிடமிருந்து எவ்வித பதிலுபகாரத்தையும் எதிர்பார்க்கவும் கூடாது.

सू०॥ अन्नस्योत्तराभिर्जुहोति (ख० 21, सू० 2) பிராம்மணர்களுக்குப் போஜனம் செய்விப்பதற்காக பாகம்செய்த அன்னம் சாகம் முதலியவற்றினின்றுமெடுத்து அடியில் எழுதப்படும் 7மந்திரங்களால் ஹோமம் செய்ய வேண்டும்.

(मन्त्रः) १ यन्मे माता प्रलुलोभ चरत्यननुव्रता ।
तन्मे रेतः पिता वृङ्क्तामाभुरन्योऽवपद्यताम-
मुष्मै स्वाहा ।

२ यास्तिष्ठन्ति या धावन्ति या आर्द्रोघ्नीः परित-
स्थुषीः । अद्भिर्विश्वस्य भर्त्रीभिरन्तरन्यं पितुर्द-
धेऽमुष्मै स्वाहा ।

(ப–ரை) मे–என்னுடைய माता–தாயானவள் अननुव्रता (सती) தனது கணவனுக்கு அனனுகூலையாக चरती– நடந்துகொண்டு प्रलुलोभ– பரபுருஷனுடன் சேருவதை விரும்பினுள் (इति) यत्–என்பது யாதுண்டோ तत्–அதனுல் आभुः–எனக்குப் பிதாவாக ஆகக்கூடிய अन्यः–பரபுருஷன் अवपद्यताम्–பயனற்ற சங்கல்ப முடையவனுக வாகட்டும். मे–என்னுடைய रेतः पिता–

---

* மாமனுர், அம்மான், அம்மானுடைய பிள்ளை முதலியவர்கள் யொநிஸம்பந்திகள் எனப்படுவர். ஒரே கோத்திரமுள்ள சித்தப்பா, பெரியப்பா முதலியவர்கள் கோத்திர ஸம்பந்தமுள்ளவர்கள் எனப்படுவர். யாகம் செய்விப்பவன், யாகம் செய்விக்கப்படுபவன், சிஷ்யன், குரு இவர்கள் மந்திர ஸம்பந்திகள் எனப்படுவர். இவர்களை சிராத்தத்தில் விலக்கவேண்டும்.

சரீரோத்பத்திக்குக் காரணமான ரேதஸ்ஸைக்கர்ப்பாசயத்தில் செலுத்தின தகப்பன் (**इदंकव्यम्**–இந்தத் திரவியத்தை) **वृङ्क्ताम्**–அடையட்டும். **अमुष्मै**–யக்ஞசர்மா எனப் பெயரிய எனது தகப்பனையும் பொருட்டு **स्वाहा**–இந்தத் திரவியத்தை ஹோமம் செய்கிறேன்.

(தா–ம்) பரபுருஷனுடன்ஸங்கமம் செய்ய மனத்தால் நினைத்தல் என்பதும்பர்த்தாவுக்கு அனனுகூலமாகையால் எந்த ஸ்திரீயானவள் பரபுருஷனை மனத்தால் நினைக்கிறாளோ அவளும் பர்த்தாவுக்கு அனுகூலையாக நடந்து கொள்ளாதவளாகவே யாவாள். நேரில் பரபுருஷஸங்கமம் செய்பவர்களைப்பற்றி எழுதத் தேவையில்லை. இத்தகைய மானஸிகமான வ்யபிசாரமானது பதிவிரதைகள் என்று சொல்லப்படும் ஸ்திரீகளுக்கும் ஏதோ ஒரு ஸமயத்திலாவது ஸம்பவிக்கலாம் என்று கருதி, மந்திரம் அதன் பரிஹாரத்திற்காகப் பிரவித்தித் திருக்கின்றது. ஆகவே எனது தாயால் விரும்பப்பட்ட புருஷனும் எனக்கு ஓர் முறையில் தகப்பனாகவே யாகிவிடுகிறான். **चित्तेन भावयति दूरगतापि यं स्त्री गर्भं बिभर्ति सदृशं पुरुषस्य तस्य** என்றதால் பிருஹத்ஸம்ஹிதை முதலிய கிரந்தங்களிலும் 'ஸ்திரீயானவள் எந்தப் புருஷனை மனத்தால் நினைக்கிறாளோ அந்தப்புருஷனுக் கொப்பாகவே கர்ப்பத்தை தரிப்பாள்' என்று கூறியிருப்பதிலிருந்து மிவ்விஷயம் தெளிவாகின்றது. ஆதலால் எனது சரீரோத்பத்திக்குக் காரணமான வீர்யத்தை கர்ப்பாசயத்தில் செலுத்தியவன் போலவே, எனது தாயால் நினைக்கப்பட்ட பரபுருஷனும் எனக்கு ஒரு முறையில் பிதாவாகவாவதால் என்னால் கொடுக்கப்படும் இந்த ஹவிஸ்ஸானது பரபுருஷனையும் ஓர் ஸமயம் சேரக்கூடும். ஆயினும் அவனை இந்த ஹோமத்திரவியம் சேராமல் எனது சரீரத்தைப் படைத்த ரேத: பிதா ஒருவனையே சேரவேண்டும் என்று பிரார்த்திப்பதில் கருத்து. இங்கு சில வைதிகர்கள் **रेतः पिता वृङ्क्तां मा भुरन्यः** என்றும் படிக்கின்றனர். இதன்படி **मा**–என்னைக் குறித்து பிதாவாகவான **अन्यः**–மற்றவன் என்று பொருள் கொள்ளவும்.

2. याः—எந்த ஜலங்கள் तिष्ठन्ति— குளம் முதலியவற்றில் தங்கிக் கிடக்கின்றனவோ, याः—எந்த ஜலங்கள் धावन्ति — நதீ முதலிய வற்றில் – ஓடுகின்றனவோ याः— எந்த ஜலங்கள் आर्द्रघ्नीः— ஈரமானகரை முதலியவற்றை இடிக்கின்றனவோ याः— எந்தஜலங்கள் परितस्थुषीः— நான்கு பக்கங்களிலும் சுற்றிக் கொண்டிருக்கின்றனவோ विश्वस्य—ஜகத்தை भर्त्रीभिः— தரிக்கின்றதான ताभिः अद्भिः—அந்த ஜலங்களால் पितुः अन्यम्—இந்தக் கர்மாவில் ஹவிர்ப்பாகத்தைப் பெறுவதற்காக வருகின்ற எனது தகப்பனைவிட மற்றவனை अन्तर्दधे—தடுத்து விடுகிறேன். விலகியிருக்கும்படி செய்கிறேன். अमुष्मै—தேவதத்தன் எனப் பெயரிய எனது தகப்பனுக்கு स्वाहा—இந்தத் திரவியத்தை ஹோமம் செய்கிறேன்.

(मन्त्रः) ३. यन्मे पितामही प्रलुलोभ चरत्यननुव्रता। तन्मेरेतः पितामहो वृङ्क्तामाभुरन्योऽवपद्यताममुष्मै स्वाहा॥
४. अन्तर्दधे पर्वतैरन्तर्मह्या पृथिव्या। आभिर्दिग्भिर नन्ताभिरन्तरन्यं पितामहाद्दधेऽमुष्मै स्वाहा ॥

(ப–ரை) 3. मे—என்னுடைய पितामही—பிதாவின் தாயானவள் अननुव्रता—அனனுகூலையாக चरती—நடந்து கொண்டு प्रलुलोभ—பரபுருஷனை மிகவும் விரும்பினுள் (इति) यत्—என்பது யாதுண்டோ तत्—அதனுல் आभुः—எனக்குப் பிதாமஹனுகவான अन्यः—பரபுருஷன் अवपद्यताम्—பயனற்ற சங்கற்ப முடையவனுக வாகட்டும். (इदंकल्पम्—இந்த ஹோமத்திரவியத்தை) रेतः पितामहः—எனது தகப்பனுடைய சரீரம் உண்டாவதற்குக் காரணமான ரேதஸ்ஸை கர்ப்பாசயத்தில்செலுத்தியவர் वृङ्क्ताम्—அடையட்டும் अमुष्मै—யக்ஞசர்மா எனப் பெயரிய எனது ரேத:பிதாமஹனையும் பொருட்டு स्वाहा—இந்தத் திரவியம் ஹோமம் செய்யப்பட்டதாயாகட்டும். முன்போல் கருத்து.

4. पितामहात्—எனது பிதாமஹனைக் காட்டிலும் अन्यम्—வேருனவனை पर्वतैः—மலைகளால் अन्तर्दधे—இங்குவராவண்ணம் தடுக்கிறேன். मह्या—பெரிதான पृथिव्या—பூமியினுல் अन्तर्दधे—தடுக்கி

றேன். **अनन्ताभिः**—தேசகால பரிச்சேதமற்ற **आभिः दिग्भिः**—கிழக்கு முதலிய திக்குகளால் **अन्तर्दधे**—தடுக்கிறேன். **अमुष्मै**—யக்ஞசர்மா முதலிய பெயரையுடைய பிதாமஹனையும் பொருட்டு **स्वाहा**—இந்தத்திரவியத்தை ஹோமம் செய்கிறேன்.

(मन्त्रः) ५. यन्मे प्रपितामही प्रलुलोभ चरत्यननुव्रता। तन्मे रेतः प्रपितामहो वृङ्क्तामाभुरन्योऽवपद्यतामुष्मैस्वाहा ॥

६. अन्तर्दध ऋतुभिरहोरात्रैश्च संधिभिः। अर्द्धमासैश्च मासैश्चान्तरन्यं प्रपितामहाद्दधेऽमुष्मै स्वाहा ॥

(ப—ரை) 5. **मे**—என்னுடைய **प्रपितामही** பாட்டனின் தாய் **अननुव्रता**— அனனுகூலையாக **चरती**— நடந்து கொண்டு **प्रलुलोभ**—பரபுருஷனுடன் சேருவதை விரும்பினாள் (**इति**) **यत्**— என்பது யாதுண்டோ **तत्**—அதனால் **आभुः**—எனது பாட்டனுக்குப் பிதாவாகின்ற **अन्यः**—பரபுருஷன் **अवपद्यताम्**—பயனற்ற சங்கற்பமுடையவனாகட்டும். **मे**—என்னுடைய **रेतः प्रपितामहः**— பாட்டனுடைய சரீரமுண்டாவதற்கு நிமித்தமான ரேதஸ்ஸை கர்ப்பாசயத்தில் செலுத்தியவர் (**इदंकव्यम्**—இந்த ஹோமத்திரவியத்தை) **वृङ्क्ताम्**—அடையட்டும். **अमुष्मै**—யக்ஞசர்மா எனப் பெயரிய பிரபிதாமஹனையும் பொருட்டு **स्वाहा**—இந்தத் திரவியத்தை ஹோமம் செய்கிறேன். முதல் மந்திரம் போல் கருத்துக் கொள்ளவும்.

6. **ऋतुभिः**—வஸந்தம் முதலியருதுக்களாலும், **अहोरात्रैश्च**—பகல் இரவு களாலும் **सन्धिभिः**—அஹோராத்திர ஸந்திகளாலும் **अर्द्धमासैः**—பக்ஷங்களாலும் **मासैः च**—மாதங்களாலும் **प्रपितामहात्**—பிரபிதாமஹனைக் காட்டிலும் **अन्यम्**—மற்றவனை **अन्धर्दधे**—தடுத்துவிடுகிறேன். **अमुष्मै**—யக்ஞசர்மா எனப்பெயரிய பிரபிதாமஹனையும் பொருட்டு **स्वाहा**—இந்தத் திரவியத்தை ஹோமம் செய்கிறேன்.

(मन्त्रः) ७. ये चेह पितरो ये च नेह याँश्च विद्म याँ उ च न प्रविद्म । अग्ने तान्वेत्थ यदि ते जातवेदः तया प्रत्तँ स्वधया मदन्तु स्वाहा ॥

(ப-ரை) येच पितरः–எந்தப்பிதுருக்கள் इह-இந்த லோகத்தில் வஸிக்கின்றனரோ येच–எந்தப் பிதுருக்கள் नेह–இவ்வுலகிலில் லையோ यान्, उ, च–எவர்களை न प्रविद्म–அறியமாட்டோமோ जातवेतः–உலகில் ஜனித்த எல்லாவற்றையு மறிந்த अग्ने–ஓ அக்கினி தேவனே! (त्वम्–நீர்) तान्–அவர்களை यदिवेत्थ–அறிவீரே யானல் (तेभ्यो यथार्हं त्वमेव प्रदिपादय–அவர்களையும் பொருட்டு தகுந்தபடி இந்த ஹோமத்திரவியத்தை நீரே கொடுப்பீராக). प्रत्तम्*-கொடுக்கப்பட்ட तयास्वधया–அந்த ஹோமத் திரவியத்தால் ते–அவர்கள் मदन्तु–திருப்தி யடையட்டும். स्वाहा–அவர்களையும் பொருட்டு இந்தத் திரவியத்தை ஹோமம் செய்கிறேன்.

(அ-கை) सू० ॥ आज्याहुतीरुत्तराः (ख० 21, सू० 4) இவ்விதம் அன்னத்தினல் ஹோமம் செய்து அடியில் எழுதப்படும் 6 மந்திரங்களாலும் ஆஜ்யத்தால் 6 ஹோமம் செய்யவேண்டும்.

(मन्त्रः) ८. स्वाहा पित्रे ९. पित्रे स्वाहा १०. स्वाहा पित्रे. ११. पित्रे स्वाहा १२. स्वधा स्वाहा १३. अग्नये कव्यवाहनाय स्वधा स्वाहा ॥

(–ரை) 8. पित्रे– பிதுரு தேவதையின் பொருட்டு स्वाहः– இந்த ஆஜ்ய மானது கொடுக்கப்பட்டதா யாகட்டும். 9வது மந்திரம் முதல் 12வது மந்திரம் முடிய அர்த்தம் ஒரேவிதமாகை யால் எழுதப்படவில்லை 13. कव्यवाहनाय– பிதுருக்களை யுத்தேசித்துக் கொடுக்கப்படும் திரவியம் கவ்யம் எனப்படும். அதை யஜமானனிடமிருந்து நேரில் ஸ்வீகரித்து அந்தந்த பிதுருக்களிடம் கொண்டுபோய் சேர்க்கும் அக்கினியானவன் கவ்ய வாஹனன் எனப்படுவன். ஆகவே கவ்ய வாஹனனுன अग्नये– அக்கினியின் பொருட்டு स्वधा–இந்த ஆஜ்யத் திரவியமானது स्वाहा– ஹோமம் செய்யப்பட்டதாயாகட்டும்.

---

* अत्र लिङ्गविभक्तिव्यत्ययः छान्दसः । प्रत्तयेत्यर्थः ॥

(அ-கை) **सू०॥ एतद्वा विपरीतम्** (ख० 21, सू० 5) மேற்கூறிய ஹோமங்களை மாற்றிபாவது செய்யலாம். அதாவது: **यन्मेमाता** முதலிய 7மந்திரங்களால் ஆஜ்யஹோமத்தையும் **स्वाहा पित्रे** முதலிய 6மந்திரங்களால் அன்னஹோமத்தையும் செய்யலாம். **सू०॥ सर्वमुत्तरैरभिमृशेत्** (ख० 21, सू० 6) பிராம்மணர்களுக்குப் போஜனம் செய்விப்பதற்காக தயார் செய்த வஸ்துக்கள் யாவற்றையும் அடியில் எழுதப்படும் 14,15,16வது மந்திரங்களால் தொட வேண்டும்.

(मन्त्रः) १४. एष ते तत मधुमाँ॑ऊर्मिस्सरस्वान् यावानग्निश्च पृथिवी च तावत्यस्य मात्रा तावतीन्त एतां मात्रां- ददामि यथाग्निरक्षितोऽनुपदस्त एवं मह्यं पित्रे- ऽक्षितोऽनु पदस्तस्स्वधा भवतां त्वँ॑स्वधां तैस्स ह्यो- पजीवर्चस्ते महिमा. १५- एषते पितामह मधु- माँ॑ऊर्मिस्सरस्वान् यावान् वायुश्चान्तरिक्षं च तावत्यस्य मात्रा तावतीं त एतां मात्रां ददामि यथा वायुरक्षितो ऽनुपदस्त एवं मह्यं पिताम- हायाऽक्षितोऽनुपदस्तस्स्वधा भव तां त्वँ॑स्वधां तैसहोपजीव सामानि ते महिमा. १६. एषते प्रपितामह मधुमाँ॑ऊर्मिस्सरस्वान् यावानादि- त्यश्च द्यौश्च तावत्यस्यमात्रा तावतींत एतां- मात्रां ददामि यथादित्योऽक्षितोऽनुपदस्तएवं मह्यं प्रपिता महाया क्षितोऽनुपदस्तस्स्वधा भवतां त्वँ॑- स्वधां तैस्सहोपजीव यजूँ॑षि ते महिमा ॥

14. (ப-ரை) **तत**=ஓ பிதாவே! **ते**=உமக்காகத் தயார் செய்த **एषः**=இந்த அன்னுதி வஸ்துவானது **ऊर्मिः**=அலையுடன் கூடியதும் **मधुमान्**= நல்ல ருசியுடன் கூடியதுமான **सरस्वान्**= ஸமுத்திரமாக விருக்கின்றது. நான் செய்திருக்கும் பதார்த்தங்கள் ஸமுத்திரம் போலதிகமாக இருக்கின் றனவென்று கருத்து.

अग्निः, च=அக்னி **यावान्**=எவ்வளவு பெரிதோ, **पृथिवी च**=பூமி (**यावती**=எவ்வளவு பெரிதோ) **अस्य**=இந்த அன்னத்தினுடைய **मात्रा**=மாத்திரையானது (பரிமாணமானது) **तावती**=அவ்வளவாக விருக்கின்றது. பூமி, அக்கினி இவற்றைப் போல் பெரிதாக விருக்கின்றது என்று கருத்து. **ते**=உம்மையும் பொருட்டு **ताव-तीम्**=அவ்வளவு பெரியதான **एतां मात्राम्**=இந்த அன்னாதி வஸ்துவை **ददामि**=கொடுக்கிறேன். இனி அன்னத்தைக் குறித்துச் சொல்லப்படுகின்றது. (**हेस्वधे**=ஓ அன்னமே) **अग्निः**=அக்னியானவன் **अक्षितः**=ஓர் ஸமயத்திலும் குறைவை யடையாதவனாகவும் **अनुपदस्तः**=நாசமற்றவனாகவும் **यथा**=எவ்விதமாகின்றானோ **एवम्**= இவ்விதமே **मह्यंपित्रे**=எனது தகப்பனையும் பொருட்டு **अक्षितः**= குறைவை யடையாததாயும், **अनुपदस्तः**=நாசத்தை யடையாததாயுமிருக்கின்ற **स्वधा**=அன்னமாக **भव**=ஆவாயாக. இனி பிதாவைக் குறித்து சொல்லப் படுகின்றது. **त्वम्**=நீர் **तांस्वधाम्**=அந்த அன்னத்தை **तैस्सह**=அந்த அக்கினி முதலிய தேவர்களுடன் கூட **उपजीव**=பெற்றுக் கொள்வீராக. **ते**=உம்முடைய **महिमा**= பெருமையானது **ऋचः**=எல்லா வேதங்களிலுமுள்ள ருக்குகள் போலுள்ளது. வேதங்களில் ருக்குகள் எவ்வளவு அதிகமாக விருக்கின்றனவோ, அவ்வளவு அதிகமாக உமது மஹிமை இருக்கின்றது என்று கருத்து.

15. **पितामह**=ஓ பிதாமஹனே! **ते**=உமக்காகத் தயார் செய்த **एषः**=இந்த அன்னாதி பதார்த்தமானது **ऊर्मिः**=அலையுடன் கூடியதும் **मधुमान्**=நல்ல ருசியுடன் கூடியதுமான **सरस्वान्**= ஸமுத்திரமாகவிருக்கின்றது. **वायुः च**=காற்று **यावान्**=எவ்வளவு பெரிதோ **अन्तरिक्षंच**=ஆகாசம் (**यावत्**=எவ்வளவு பெரிதோ) **अस्य**=இந்த அன்னத்தினுடைய **मात्रा**=பரிமாணமானது **तावती**= அவ்வளவாக விருக்கின்றது. **ते**=உம்மையும் பொருட்டு **तावतीम्**= அவ்வளவு பெரிதான **एतां मात्राम्**=இந்த அன்னாதி வஸ்துவை **ददामि**=கொடுக்கிறேன். இனி அன்னத்தைக் குறித்துச் சொல்லப்படுகின்றது. (**हेस्वधे**=ஓ அன்னமே) **वायुः**=காற்றானது **अक्षि-तः**=ஓர் ஸமயத்திலும் குறைவை யடையாததாகவும் **अनुपदस्तः**= நாசமற்றதாகவும் **यथा**=எவ்வித மாகின்றதோ **एवम्**=இவ்விதம்

मह्यं, पितामहाय= எனது பிதாமஹனையும் பொருட்டு अक्षित:- குறைவையடையாததாயும், अनुपदस्त:=நாசத்தையடையாததாயு மிருக்கின்ற स्वधा=அன்னமாக भव=ஆவாயாக. இனி பிதா மஹனைக் குறித்துச் சொல்லப்படுகிறது. त्वम्=நீர் तांस्वधाम्= அந்த அன்னத்தை तैस्सह=அந்த வாயு முதலிய தேவர்களுடன் கூட उपजीव=பெற்றுக் கொள்வீராக. ते=உம்முடைய महिमा= மஹிமையானது सामानि=ஸாமங்களைப் போல் விரிவாயுள்ளது.

19. प्रपितामह=ஓ பிரபிதா மஹனே! ते=உமக்காக தயார் செய்த एष:=இந்த அன்னாதி பதார்த்தமானது मधुमान्=நல்ல ருசி யுடன் கூடியதாயும், ऊर्मि:=அலையுடன் கூடியதாயு மிருக்கின்ற सरस्वान्=சமுத்திரமாக விருக்கின்றது. आदित्यश्च=ஸூரியனும், द्यौ:, च=ஸ்வர்க்கமும் यावान्=எவ்வளவு பெரிதோ अस्य=இந்த அன்னத்தினுடைய मात्रा=பரிமாணமும் तावती=அவ்வளவாக விருக்கின்றது. ते=உம்மையும் பொருட்டு तावतीम्=அவ்வளவு பெரிதான एतांमात्राम्=இந்த அன்னாதி வஸ்துவை ददामि=கொடுக் கிறேன். இனி அன்னத்தைக் குறித்துச் சொல்லப்படுகின்றது. (स्वधे=ஓ அன்னமே) आदित्य:=ஸூரியன் यथा=எவ்விதம் अक्षि- त:=ஓர் ஸமயத்திலும் குறைவையடையாதவனாகவும் अनुपदस्त:= நாசமற்றவனாகவு மாகின்றானோ एवम्=இவ்விதமே मह्यं प्रपितामहाय= என்னது பிரபிதா மஹனையும் பொருட்டு अक्षित:=குறைவையடை யாததாயும் अनुपदस्त:=நாசத்தை யடையாததாயு மிருக்கின்ற स्वधा=அன்னமாக भव= ஆவாயாக. இனி பிரபிதாமஹனைக் குறித்துச் சொல்லப் படுகின்றது. त्वम्=நீர் तांस्वधाम्=அந்த அன்னத்தை तैस्सह=அந்த ஆதித்யன் முதலிய தேவர்களுடன் उपजीव=பெற்றுக் கொள்வீராக. ते=உம்முடைய महिमा=பெரு மையானது यजूंषि=வேதங்களிலுள்ள யஜுஸ் மந்திரங்கள் போல விரிவாக இருக்கின்றன.

सू॰ ॥ क्लृप्तान्वा प्रतिपूरुषम् (ख॰21, सू॰7) பிதா, பிதாமஹன், பிரபிதாமஹன் இவர்களுக்காகத் தனித்தனியே இலையில் அன் னாதிகளைப் பரிவேஷணம் செய்தபிறகாவது அந்தந்த மந்திரத் தால் அந்தந்த அன்னத்தைத் தொடவேண்டும். அதாவது: பிதாவுக்காக இலையில் பரிவேஷணம் செய்த அன்னத்தை एषते-

तत என்ற மந்திரத்தாலும், பிதாமஹனுக்காக இலையில் பரிவேஷணம் செய்த அன்னத்தை **एषतेपितामह** என்றதாலும், பிரபிதாமஹனுக்காகத் இலையில் பரிவேஷணம் செய்த அன்னத்தை **एषते प्रपितामह** என்றதாலும் தொடவேண்டும்.

இருபதாவது கண்டம்

(அ-கை) **सू० ॥ उत्तरेणोपस्पर्शयित्वा** (**ख०** 21, **सू०** 8) அடியில் எழுதப்படும் மந்திரத்தால் போஜனம் செய்கின்ற பிராம்மணனைக் கையில் பிடித்து பரிவேஷணம் செய்த வஸ்துக்களைத் தொடும்படி செய்ய வேண்டும்.

(मन्त्रः) १. पृथिवीते पात्रं द्यौरपिधानं ब्रह्मणस्त्वामुखे जुहोमि ब्राह्मणानां त्वा प्राणापानयोर्जुहोम्यक्षितमसि मैषां क्षेष्ठा अमुत्राऽमुष्मिल्लोके॥

(ப—ரை) (**हे कव्य**=பிதுருக்களின் திருப்திக்காகத் தயார் செய்த ஓ அன்னாதி பதார்த்தமே!) **ते**=உன்னுடைய **पात्रम्**=ஆதாரமான பாத்திரமானது **पृथिवी**=பூமியாக வாகின்றது. அதாவது: பூமியைப் போல் பெரிதாக வாகின்றது. **अपिधानम्**=மூடுவதற்குரிய பாத்திரமானது **द्यौः**=ஆகாசமாக வாகின்றது. **पृथिवी, द्यौः** என்ற இந்தஇரண்டு பதங்களாலும் போஜ்ய வஸ்துக்களின் ஆதிக்யம் தெரிவிக்கப் படுகிறது. அன்னத்தைப் பரிவேஷணம் செய்திருக்கும் பாத்திரம் ஆதாரம் என்றும், அன்னத்தின்மேல் தூசி முதலியன படியாமலிருப் பதற்காக போடப்படும் இலை முதலியன **अपिधानम्** என்றுமறியவேண்டும். **त्वा**=உன்னை **ब्रह्मणः**=பிராம்மணனுடைய **मुखे**=முகத்தில் **जुहोमि**=ஹோமம் செய்கிறேன். பிதுருக்களின் திருப்திக்காக பிராம்மணர்களின் முகமாகிற ஆஹவனீயாக்னியில் இந்தக் கவ்யத்தை ஹோமம் செய்கிறேன் என்று கருத்து. இவ்விதமே.

यस्याऽऽस्येन सदाश्नन्ति हव्यानि त्रिदिवौकसः ।
कव्यानि पितरश्चापि किंभूतमधिकं ततः ॥

"எந்தப் பிராம்மணர்களின் முகம் வாயிலாகத் தேவர்கள் தங்களது பாகமான ஹவிஸ்ஸையும், பிதுருக்கள் தங்களதுபாகமான கவ்யத்தையும் எப்பொழுதும் சாப்பிடுகின்றனரோ, அந்த

பிராம்மணர்களைக் காட்டிலும் சிறந்த வேறு வஸ்துளது? என்றதால் பிராம்மணர்களின் முகத்தில் ஹோமம் செய்தலைப் பற்றி ஸ்மிருதிகளிலும் புகழ்ந்து கூறப்பட்டிருக்கிறது.

இதுவரை பிதுருக்களுக்குத் திருப்திக்காக ஹோமம் செய்கிறேன் என்று கூறப்பட்டது. இனி போஜனம் செய்கின்ற பிராம்மணர்களுக்கும் திருப்தியுண்டாக வேண்டும் என்று கூறப்படுகின்றது. **त्वा**=உன்னை **ब्राह्मणानाम्**=போஜனம் செய்கின்ற பிராம்மணர்களுடைய **प्राणापानयोः**=பிராணன், அபானன் முதலிய பஞ்சப்பிராணன்களின் திருப்திக்காகவும் **जुहोमि**= இந்தப்பிராம்மணனுடைய முகத்தில் ஹோமம் செய்கிறேன். (**हेकव्य**=ஓ அன்னமே!) **अक्षितम्**=குறைவையடையாதவனாக **असि**=இருக்கின்றாய் **एषाम्**=பிதுருக்களுக்கும். போஜனம் செய்கின்ற பிராம்மணர்களுக்கும், (முறையே) **अमुत्र**=பரலோகத்திலும், **अमुष्मिल्लोके**=இந்த லோகத்திலும் **माक्षेष्ठाः**=குறைவை யடையாமலிருப்பாயாக.

(அ-கை) सू० ॥ **भुक्तवतोऽनुव्रज्य प्रदक्षिणीकृत्य द्वैधं दक्षिणाग्रान्दर्भान् संस्तीर्य तेषूत्तरैरपो दत्वा, उत्तरैः दक्षिणापवर्गान् पिण्डान् दत्वा पूर्ववदुत्तरैरपो दत्वा—(ख० 21, सू० 9)** பிராம்மணர்கள் போஜனம் செய்த பிறகு அவர்களை வெளியே அனுப்பும் பொழுது யஜமானன் தனது வீட்டினுடைய எல்லை வரையில் பின் தொடர்ந்து சென்று, பிறகு அவர்களுக்குப் பிரதக்ஷிணம் செய்து திரும்பி உள்ளே வந்து பிண்டப்பிரதானம் செய்யவேண்டிய ஸ்தலத்திற்கு வந்து யக்ஞோபவீதத்தை இடமாகப் போட்டுக் கொண்டு, தர்ப்பங்களை இரண்டு பங்காகப் பிரித்து தெற்கு நுனியாகப் பரப்பி அவற்றின் மேல் அடியில் எழுதப்படும் 2 முதல் 7 முடியவுள்ள மந்திரங்களால் ஒவ்வொரு மந்திரத்திற்கும் ஒவ்வொரு தடவை வீதம் ஜலத்தைவிட்டு, அவற்றின்மேல் 8 முதல் 13 முடியவுள்ள மந்திரங்களால் ஒவ்வொரு மந்திரத்திற்கும் ஒவ்வொரு பிண்டம் வீதம் வடக்கிலிருந்து ஆரம்பித்து தெற்கு திசையில் வந்து முடியும்படியாக பிண்டங்களை வைத்து, மறுபடியும் **मार्जयन्तां मम पितरः** என்றது முதலிய 6 மந்திரங்களால் அந்தப்பிண்டங்களின் மேல் தீர்த்தத்தை விடவேண்டும். இரண்டுவிதமாக பிரித்துப் போடப்பட்ட தர்ப்பமுஷ்டிகளுள் கீழண்டையிலிருக்கும்

முஷ்டியை பிதா, பிதாமஹன், பிரபிதாமஹன் இவர்களுக்காகவும், மேலண்டையிலிருக்கும் முஷ்டியை மாதா, பிதாமஹீ, பிரபிதாமஹீ இவர்களுக்காகவும் உபயோகித்துக் கொள்ள வேண்டும்.

(मन्त्रः) २. मार्जयन्तां मम पितरो ३ मार्जयन्तां मम पितामहाः ४ मार्जयन्तां मम प्रपितामहाः ॥ ५ मार्जयन्तां मम मातरो ६ मार्जयन्तां मम पितामह्यो ७ मार्जयन्तां मम प्रपितामह्यः ॥
८ एतत्ते ततासौ ये च त्वाम ९ न्वेतत्ते पितामहासौ ये च त्वाम १० न्वेतत्ते प्रपितामहासौ ये च त्वामनु ॥ ११ एतत्ते मातरसौ याश्चत्वान्वे १२ तत्तेपितामह्यसौ याश्चत्वामन्वे १३ तत्ते प्रपितामह्यसौ याश्चत्वामनु ॥ १४–१९–मार्जयन्तां मम पितर इत्येते ॥*

(ப–ரை) 2. **मम**=என்னுடைய **पितरः**=தந்தையார் **मार्जयन्ताम्**=இந்தத் தீர்த்தத்தால் சுத்தராக வாகட்டும். இதனால் பிதாவுக்காக தர்ப்பத்தின் அடிபாகத்தில் தீர்த்தத்தை விடவேண்டும். 3. **मम**=என்னுடைய **पितामहाः**=பாட்டனார் **मार्जयन्ताम्**=இந்தத் தீர்த்தத்தால் சுத்தராக வாகட்டும். இதனால் பிதா மஹனுக்காக தர்ப்பத்தின் மத்ய பாகத்தில் தீர்த்தத்தை விடவேண்டும். 4. **मम**=என்னுடைய **प्रपितामहाः**=பாட்டனாரின் தகப்பனார் **मार्जयन्ताम्**=இந்தத் தீர்த்தத்தால் சுத்தராக வாகட்டும். இதனால் தர்ப்பத்தின் நுனியில் பிரபிதாமஹனுக்காகத் தீர்த்தத்தை விடவேண்டும் இனி வரும் மூன்று மந்திரங்களாலும் மேலண்டையிலுள்ள தர்ப்பத்தில் முறையே அடி, நடு, நுனி இவற்றில் தீர்த்தத்தை விடவேண்டும். 5. **मम**=என்னுடைய **मातरः**=தாய் **मार्जयन्ताम्**=இந்தத் தீர்த்தத்தால் சுத்தையாகவாகட்டும். 6. **मम**=என்னுடைய **पितामह्यः**=பாட்டி **मार्जयन्तम्**=இந்தத் தீர்த்தத்தால் சுத்தையாக வாகட்டும். 7. **मम**=என்னுடைய **प्रपितामह्यः**=பாட்டனாரின்

* 2 முதல் 7 முடிய வுள்ள மந்திரங்களை இங்கு படிக்கவேண்டும்

தாய் **मार्जयन्ताम्**=இந்தத் தீர்த்தத்தால் சுத்தையாக வாகட்டும். பிதா மாதா இவர்கள் முதலியோரை யண்டி பிழைக்கின்ற மற்ற பிதுருக்களும் இந்தத்தீர்த்தால் சுத்தர்களாக வாகட்டும் என்ற அபிப்ராயத்தால் பஹுவசனம் **पितरः** என்றது முதலிய விடத்தில் உபயோகிக்கப்பட்டிருகிறது.

முன் தர்ப்பத்தின் மேல் தீர்த்தம் விட்ட கிரமத்தையனுசரித்து இனிவரும் 6 மந்திரங்களால் தீர்த்தம் விட்ட விடத்தில் பிண்டத்தை யெடுத்து வைக்கவேண்டும் :—8. **असौ**=யக்ஞசர்மா என்ப்பெயரிய **तत**=ஓ தகப்பனே ! **ते**=உமக்காகவும், **येच**=எவர்கள் **त्वामनु**=உம்மையண்டி ஜீவிக்கின்றனரோ (**तेभ्य : च**= அவர்களுக்காகவும்) **एतत्**=இந்த அன்னபிண்டத்தை (**ददामि**=கொடுக்கிறேன்)

9.**असौ**=ஸோமசர்மா எனப்பெயரிய **पितामह**=ஓ பாட்டனரே **ते**=உமக்காகவும் **येच**=எவர்கள் **त्वामनु**=உம்மையண்டி ஜீவிக்கின்றனரோ (**तेभ्य : च**=அவர்களுக்காகவும் **एतत्**=இந்த அன்னபிண்டத்தை **ददामि**=கொடுக்கிறேன்.) 10. **असौ**=விஷ்ணுசர்மா எனப்பெயரிய **प्रपितामह**=ஓ பிரபிதாமஹனே ! **ते**=உமக்காகவும் **येच**= எவர்கள் **त्वामनु**=உம்மையண்டி ஜீவிக்கின்றனரோ (**तेभ्य : च**=அவர்களுக்காகவும்) **एतत्**=இந்த அன்ன பிண்டத்தை (**ददामि**=கொடுக்கிறேன்.)

असौ=ஸரஸ்வதீ எனப் பெயரிய **मात :**=ஓ தாயே **ते**=உனக்காகவும் **याश्च**=எவர்கள் **त्वामनु**=உன்னையண்டி ஜீவிக்கின்றனரோ (**ताभ्य : च**=அவர்களுக்காகவும்) **एतत्**=இந்த அன்னபிண்டத்தை (**ददामि**=கொடுக்கிறேன்.) 12. **असौ**=லக்ஷ்மீ எனப் பெயரிய **पितामहि**=ஓ பிதா மஹியே ! **ते**=உனக்காகவும் **याश्च**=எவர்கள் **त्वामनु**=உன்னையண்டிப் பிழைக்கின்றனரோ (**ताभ्य : च**=அவர்களுக்காகவும்) **एतत्**=இந்த அன்னபிண்டத்தை (**ददामि**= கொடுக்கிகிறேன்.) 13. **असौ**=பார்வதி எனப்பெயரிய **प्रपितामहि**=ஓ பிரபிதாமஹியே ! **ते**=உனக்காகவும் **याश्च**=எவர்கள் **त्वामनु**=உன்னையண்டி ஜீவிக்கின்றனரோ (**ताभ्य : च**=அவர்களுக்காகவும்) **एतत्**= இந்த அன்னபிண்டத்தை (**ददामि**=கொடுக்கிறேன்) 14 முதல் 19வது மந்திரம் முடியவுள்ள மந்திரங்களுக்கு 302வது பக்கத்தில் உரை எழுதப் பட்டிருக்கிறது.

குறிப்பு—மேற்படித்த 8வது மந்திரம் முதல் 13வது மந்திரம் முடியவுள்ள 6 மந்திரங்களிலு மிருக்கின்ற **असौ** என்ற பதத்தால் முறையே பிதா, பிதாமஹன், பிரபிதாமஹன், மாதா, பிதாமஹி, பிரபிதாமஹி இவர்களின் பெயர் எதுவோ அதை எடுத்துக்கொள்ள வேண்டும்.

(அ–கை) **सू० ॥ उत्तरैरुपस्थाय-(ख० 21, सू० 9)** அடியில் எழுதப்படும் **येच वोत्र** முதலிய 6 மந்திரங்களால் பிதுருக்களை உபஸ்தானம் செய்யவேண்டும்.

(मन्त्रः) २० येचवोऽत्र येचास्मास्वाशꣳसन्ते, २१ याश्चवोत्र याश्चास्मास्वाशꣳसन्ते, २२ तेचवहन्तां २३ताश्चवहन्तां, २४ तृप्यन्तु भवन्तः, २५ तृप्यन्तु-भवत्यः, २६ तृप्यत, तृप्यत तृप्यत ॥

(ப–ரை) 20. (**येपितरः**=ஓ பிதுரு பிதாமஹ பிரபிதாமஹர்காள் !) **येच**=எந்த பிதுருக்கள். **अत्र**=இந்தச் சிராத்தம் என்ற கர்மாவில் **वः**=உங்களையும் **येच**=எந்த பிதுருக்கள் **अस्मासु**=எங்களிடமும் **आशंसन्ते**=கவ்யத்தைப் பிரார்த்திக்கின்றனரோ. 21. (**हेमातरः** ஓமாதிரு, பிதாமஹி, பிரபிதாமஹிகாள் !) **याश्च**=ஸ்திரீகளாய் மரித்த எந்த பிதுருக்கள் **अत्र**=இந்தச் சிராத்தம் என்றகர்மாவில் **वः**=உங்களையும் **याः च**=ஸ்திரீகளாய் மரித்த எந்த பிதுருக்கள் **अस्मासु**=எங்களிடமும் **आशंसन्ते**=கவ்யத்தைப் பிரார்த்திக்கின்றனரோ, 22. **तेच**=அந்த புருஷர்களாய் மரித்த பிதுருக்களும், **वहन्ताम्**=இந்த அன்ன பிண்டத்தை அடையட்டும். 23 **ताः च**=ஸ்திரீகளாய் மரித்த அந்த பிதுருக்களும் **वहन्ताम्**=இந்த அன்ன பிண்டத்தை யடையட்டும். 24. **भवन्तः**=புருஷர்களான நீங்கள் **तृप्यन्तु**=திருப்தியை யடையுங்கள். 25. **भवत्यः**= ஸ்திரீகளான நீங்கள் **तृप्यन्तु**=திருப்தியையடையுங்கள் 26. **हेपितरः मातरश्च!**=ஓ பிதுருவர்க்கத்தைச் சேர்ந்தவர்களே ! ஓ மாதிருவர்க்கத்தைச் சேர்ந்தவர்களே ! **यूयम्**=நீங்கள் **तृप्यत**=திருப்தியை யடையுங்கள். **तृप्यत**=திருப்தியை யடையுங்கள் **तृप्यत**= திருப்தியையடையுங்கள்.

(தா–ம்) மிருதர்களான எந்த ஸ்திரீ புருஷர்களுக்கு ஸந்திகளில்லாமை பற்றி சிராத்தாதி கர்மங்கள் நடைபெறுவதில்லை

யோ அவர்கள், தாம் எந்தக்குலத்தைச் சேர்ந்தவர்களோ அக்கு லத்திலுள்ளோருக்கு சிராத்தாதிகள் நடக்கும் பொழுது சிராத் தாதிகளில் உத்தேச்யர்களானபிதுருக்களிடமும், சிராத்த கர்த் தாவினிடமும், கவ்யத்தை யாசிக்கின்றனர். அவ்விதம் யாசிக்கி ன்ற ஸந்ததிகளற்ற பிதுருக்களும், சிராத்தத்தில் முக்யோத்யேச் யர்களான பிதுருக்களும் இந்தப் பிண்டத்தை யடைந்து திருப்தி யை யடைய வேண்டும். (எ—று)

(அ-கை)**ஸூ॥ उत्तरयोदपात्रेण त्रिः प्रसव्यं परिषिच्य न्युब्ज्यपात्राण्युत्तरं यजुरनवानं त्र्यवरार्द्ध्यमावर्तयित्वा प्रोक्ष्य पात्राणि द्वंद्वमभ्युदाहृत्य सर्वतस्समवदायोत्तरेण यजुषा शेषस्य ग्रासावरार्द्ध्यं प्राश्नीयात्** (ख० 21, ஸூ 9) அடியில் எழுதப்படும் 27வது மந்திரத்தால், ஜலபாத்திரத் தால் அப்ரதக்ஷிணமாக (இடமாக)பிண்டங்களுக்கு நான்குபக்கங் களிலும் மூன்றுதடவைபரிஷேசனம் (சுற்றிலும் ஜலத்தை விழும் படி) செய்து பிறகு ஹோமார்த்தமாயும், பிண்டதானார்த்த மாயு மிருக்கின்ற பாத்திரங்களைக் கவிழ்த்து, பிறகு 28வது மந்திரத் தை மூன்று தடவைக்குக் குறையாமல் மத்தியில் முச்சுவிடா மலே திருப்பித் திருப்பிப் படித்து, பிறகு கவிழ்த்து வைத்திருக் கும் பாத்திரங்களைத்தீர்த்தத்தால் புரோக்ஷணம் செய்து அவற் றை இரண்டிரண்டாக நிமிர்த்தி வேறு கார்யங்களில் உபயோகித் துக் கொள்ள வேண்டும். பிறகு 29வது மந்திரத்தால், மீதப் பட்டிருக்கும் எல்லாவிதமான அன்னத்தினின்றும்* ஒருகிராஸப் பிரமாணத்திற்குக் குறையாமலெடுத்து சிராத்தகர்த்தா சாப் பிடவேண்டும்.

(मन्त्रः) २७. पुत्रान्पौत्रानभितर्पयन्तीरापो मधुमतीरिमाः । स्वधां पितृभ्योऽमृतं दुहाना आपो देवीरुभयाँस्तर्पयन्तु ॥ २८. तृप्यत तृप्यत तृप्यत ।

२९. प्राणे निविष्टोऽमृतं जुहोमि ब्रह्मणि म आत्माऽमृतत्वाय ॥

---

*சாதாரணமாய் ஒருவனது வாயில் எவ்வளவன்னம் பிடிக்குமோ அது "கிராஸம்" எனப்படும்.

(ப—ரை) 27 இம்மந்திரத்தால் பிதுருவர்க்கத்தைச் சேர்ந்த பிண்டம், மாதுருவர்க்கத்தைச் சேர்ந்த பிண்டம் இரண்டையும் தீர்த்தத்தால் அப்பிரதக்ஷிணமாகப் பரிஷேசனம் செய்ய வேண்டும். **इमा:**=இந்த **आप:**=ஜலங்கள் **पुत्रान्**= பிள்ளைகளையும் **पौत्रान्**= பேரன்களையும் **अभितर्पयन्ती:**=திருப்திசெய்து வைக்கின்றவைகளாகவும் **मधुमती:**=தித்திப்புள்ளவைகளாகவு மிருக்கின்றன. ஸகல பிராணிகளும் ஜலத்தினுலேயே ஜீவிக்கின்றனர் என்பது வெளிப்படை என்று கருத்து. (**ता:**= அந்த) **देवी:**= பிரகாசிக்கின்ற **आप:**=ஜலங்கள் **पितृभ्य:**=பிதுருக்களையும் பொருட்டு **स्वधाम्**=ஸ்வதாரூபமான (பிதுருக்களுக்குக் கொடுக்கப்படும் அன்னுதிகள் **स्वधा** எனப்படும்.) **अमृतम्**=அமிருதத்தை **दुहाना:**=கரக்கின்றவைகளாய்க் கொண்டு, அதாவது: கொடுக்கின்றவைகளாய்க் கொண்டு **उभयान्**=மாதுருவர்க்கம், பிதுருவர்க்கம் இவ்விரண்டையும் சேர்ந்த பிதுருக்களையும் **तर्पयन्तु**=திருப்தி செய்து வைக்கட்டும். 28. (**हेपितर:**=ஓ பிதுருக்காள்) **तृप्यत**= திருப்தியையடையுங்கள் **तृप्यत**= திருப்தியையடையுங்கள் **तृप्यत**= திருப்தியையடையுங்கள்.

29. இதனுல் அன்னசேஷத்தைச் சாப்பிடவேண்டும் **आत्मा**=உண்மையில் பரமாத்மரூபனும் **प्राणे**= பிராணன் அபானன் முதலிய ஐந்துபிராணன்களையும் **निविष्ट:**=ஆசிரயித்திருக் கின்றவனுயுமிருக்கின்ற(**अहम्**=நான்) **अमृतम्**=பரம்பரையாய் மோக்ஷத்தையடைவதற்கு நிமித்தமான இந்தஅன்னத்தை **ब्रह्मणि**= பரமாத்மாவினிடத்தில் **मे**= எனக்கு **अमृतत्वाय**=மோக்ஷமுண்டாவதற்காக **जुहोमि**=ஹோமம் செய்கிறேன்.

அஷ்டகாசிராத்தப்பிரகரணம்.

(அ—கை) ஸூ॥ **या माघ्या: पौर्णमास्या उपरिष्टाद्व्यष्टका तस्यामष्टमी ज्येष्ठया संपद्यते तामेकाष्टकेत्याचक्षते** (க॰ 21, ஸூ॰ 10)மாகமாதத்திய பௌர்ணமாஸிக்குப் பிறகு வரும் கிருஷ்ணபக்ஷத்தின் அஷ்டமீ எதுவுண்டோ அது ஜ்யேஷ்டா (கேட்டை) நக்ஷத்திரத்துடன் கூடும். அந்தத்திதியையே ஏகாஷ்டகை என்கின்றனர். அதில் அஷ்டகா சிராத்தத்தைச் செய்யவேண்டும்.

"ஜ்யேஷ்டா நக்ஷத்திரத்துடன் கூடும்" என்று கூறியது பிராயிகமாகையால் (இவ்விதம் பெரும்பாலும் வரும் என்ற

அபிப்பிராயத்தை முன்னிட்டுக்கூறியதாகையால்) எந்த மாகமாஸத்திய கிருஷ்ணாஷ்டமியானது ஜ்யேஷ்டா நக்ஷத்திரத்துடன் கூடுவதில்லையோ அந்த அஷ்டமியிலும் அஷ்டகா சிராத்தத்தை நித்யமாயிருப்பதுபற்றி செய்துதான் தீரவேண்டும் என்று ஸுதர்சனபாஷ்யத்தில் கூறப்பட்டிருக்கிறது. **ஸூ॥ तस्यास्सायमौपकार्यम्** (**ஸ०** 21, **ஸூ** 11) அஷ்டமீ யன்றுசெய்யவெண்டிய அஷ்டகா சிராத்தத்திற்குஅங்கபூதமானகர்மாவை ஸப்தமீதிதியின் ஸாயங்காலத்தில் செப்பவேண்டும். அங்கபூதமானகர்மாஇன்னது என்பதுஇனிசொல்லப்படுகின்றது **ஸூ॥ अपूपं चतुश्शरावञ्श्रपयति** (**ஸ०**21, **ஸூ** 12) சராவம் என்பது ஓர்வகை மண்பாத்திரமாகும். நான்கு சராவநெல்லைக் குத்தி அரிசியாக்கி மாவரைத்து அதைத் தட்டையாகச் செய்து வேகவைக்கவேண்டும். இதுவே அபூபம் எனப்படும் **अष्टाकपाल इत्येके**(**ஸ०** 21, **ஸூ** 13)8 கபாலங்களில்ஸம்ஸ்கரிக்கப்பட்ட புரோடாசத்தைத் தயாரிக்கவேண்டும் என்று சிலர் சொல்லுகின்றனர். **ஸூ ॥ पार्वणवदाज्यभागान्तेऽञ्जलिनोत्तरयाऽपूपाञ्जुहोति**(**ஸ०** 22,**ஸூ** 1.) பிறகு பார்வணஸ்தாலீபாகத்தில் செய்தமாதிரி அக்னிப்பிரதிஷ்டைமுதல் ஆஜ்யபாகம் என்ற கர்மம் வரை செய்து கொண்டு, அஞ்ஜலியால் அபூபத்தினின்று மெடுத்து அடியில் எழுதப்படும் 30வது மந்திரத்தால் ஹோமம் செய்யவேண்டும்.

(मन्त्र:) ३० यां जनाः प्रतिनन्दन्ति रात्रिं धेनुमिवायतीम् ।
संवत्सरस्य या पत्नी सा नो अस्तु सुमङ्गली स्वाहा ॥

(ப—ரை)இது அஷ்டகாசிராத்தம்செய்ய வாரம்பித்தவன் ஸப்தமீ யன்று இரவில் செய்யவேண்டிய அபூப ஹோமத்தின் மந்திரமாகும். **जना:**= ஜனங்கள் **आयतीम्**= பகலில் வெளியிற் சென்று புற்களை மேய்ந்து விட்டு இரவில் வீட்டைக்குறித்து திரும்பி வருகின்ற **धेनुमिव**= பசுவைப்போல **याम्**= எந்த **रात्रिम्**= அஷ்டகா சிராத்தத்திற்கு முந்தியதினத்தின் ராத்திரியை (ராத்திரியின் அபிமானிதேவதையை) **प्रतिनन्दन्ति**= அபூப ஹோமத்தால் பூஜை செய்கின்றனரோ. **या**= எந்த ராத்திரியானது **संवत्सरस्य**= ஸம்வத்ஸரத்திற்கு **पत्नी**= பார்யையோ **सा**= அந்த ராத்திரியானது **न:**= எங்களுக்கு **सुमङ्गली**= நல்ல மங்களத்தை விளைவிப்பதாக **अस्तु**=

ஆகட்டும் **एषा वैसंवत्सरस्य पत्नी, यदेकाष्टका** என்றதால் ஏகாஷ்டகையை ஸம்வத்ஸரபத்தினியாக மற்றவிடத்தில் ஸ்துதிசெய்திருந்த போதிலும் ஏகாஷ்டகையின் ஸாமீப்யமிருப்பதால் ஸப்தமீ திதியின் ராத்திரியும் ஸம்வத்ஸரபத்தினியாக இங்கு ஸ்துதிக்கப் படுகின்றது.

(அ-கை) **सू० ॥सिद्धश्शेषस्तमष्टधा कृत्वा ब्राह्मणेभ्य उपहरति (ख० 22, सू० 2)** ஹோமம் செய்த பிறகு மிச்சமாக விருக்கின்ற அபூபத்தை 8 பங்காகப் பிரித்து 8 பிராம்மணர்களுக்குக் கொடுக்க வேண்டும். **सू०॥श्वोभूते दर्भेण गामुपाकरोति पितृभ्यस्त्वा जुष्टामुपाकरोमीति (ख० 22, सू० 3)** அபூப ஹோமம் செய்த ராத்திரிக்கு மறுதினத்தில் மாஸிசிராத்தத்தில் செய்த மாதிரி அக்னிமுகாந்தம் வரையுள்ள கர்மங்களைச் செய்துகொண்டு பசுவுக்கு உபாகரணம் என்ற கர்மாவை **पितृभ्यस्त्वा जुष्टामुपाकरोमि** என்றதால் செய்ய வேண்டும். **सू० ॥ तूष्णीं पञ्चाज्याहुतीर्हुत्वा तस्यैव वपां श्रपयित्वोपस्तीर्णाभिघारितां मध्यमेन अन्तमेन वा पलाशपर्णेनोत्तरयाजुहोति (ख० 22, सू० 4)** பிறகு மந்திரமின்றியே 5 தடவை ஆஜ்யத்தால் ஹோமம் செய்து, பிறகு பசுவினின்றும் வபையை எடுத்து பாகம் செய்து பொரசஇலை யின்நடுவிலுள்ள இலையிலோ, ஓரத்திலுள்ள இலையிலோ நெய்யைத் தடவி வபையைஎடுத்து வைத்துப்பிறகு அதற்கு மேல் ஆஜ்யத்தை விட்டு அடியில் எழுதப்படும் 31வதுமந்திரத்தால் ஹோமம் செய்யவேண்டும்.

(मन्त्रः) ३१ वह वपां जातवेदः पितृभ्यो यत्रैनान्वेत्थ निहितान्पराके ।

मेदसः कूल्या उप तान्क्षरन्तु सत्या एषामाशिषस्सन्तु कामैस्स्वाहा॥

ப-ரை) **जातवेदः=** ஓ அக்கினிதேவனே! **पितृभ्यः=** எனது பிதுருக்களையும் பொருட்டு **वपाम्=** வபையை **वह**– சுமப்பீராக. என்னால் கொடுக்கப்படும் இந்த வபையை நேரில் பெற்றுக்கொண்டு பிதுருக்களிடம் கொண்டுபோய் சேர்ப்பீராக என்று கருத்து. **पराके=** வெகுதூரத்திலிருக்கின்ற **यत्र**– எந்த விடத்தில்

(मम पितरो निहिता:= எனதுபிதுருக்கள் வைக்கப்பட்டிருக் கின்றனரோ तत्र= அவ்விடத்தில்) निहितान्= வைக்கப்பட்டிருக்கின்ற एनान्=இந்த எனது பிதுருக்களை (त्वम्=நீர்) वेत्थ=அறிவீர். எனது பிதுருக்கள் தத்தமது கர்மகதியை யனுஸரித்து எங்கு வஸிக்கின்றனரோ அவ்வவ்விடங்களை நீர் அறிவீர். ஆகையால் உம்மிடம் இந்த வபையைக் கொடுக்கிறேன். तान्= அந்தப் பிதுருக்களைக்குறித்து मेदस:= மேதஸ் என்ற தாதுவைப்போல் ஸாரமானவஸ்துக்களின் कूल्या:—வாய்க்கால்கள் उपक्षरन्तु= பெருக்கை யடையட்டும். எனது பிதுருக்களுக்கு ஸாரமான வஸ்துக்கள் கிடைக்கவேண்டும் என்று கருத்து. एषाम्=எனது பிதுருக்களுடைய आशिष:— விருப்பங்கள் कामै:— விரும்பிய பொருள்களின் லாபத்தால் सत्या:— வியர்த்தமாயாகாதவைகளாக सन्तु ஆகட்டும். स्वाहा— இந்தத் திரவ்யத்தை ஹோமம் செய்கிறேன்

அ—கை) सू०॥ मांसौदनमुत्तराभि: (ख०22, सू० 5) வபாஹோமம் செய்தபிறகு பசுமாம்ஸத்தின் கொஞ்சபாகத்தை நவமீயன்று செய்யப்படும் அன்வஷ்டகா சிராத்தத்தில் பிராம்மணர்களுக்குப் போஜனம் செய்விப்பதற்காக மீதப்படுத்திக் கொண்டு, மற்றபாகத்தை வேகவைத்துப் பதமாக்கி, அஷ்டகா சிராத்தத்தில் பிராம்மண போஜனத்திற்காகத் தயார் செய்திருக்கு மன்னத்தினின்றும் கொஞ்சமெடுத்து, அத்துடன் பாகம் செய்த இந்த மாம்ஸத்தைக் கலந்து மாஸ்மம், அன்னம் இரண்டையும் அடியில் எழுதப்படும் 7 மந்திரங்களால் ஹோமம் செய்யவேண்டும்.

(मन्त्र:) ३२. यां जना: प्रतिनन्दन्तीत्येषा । ३३--३५. इयमेव सा या प्रथमा व्यौच्छदिति तिस्र: ॥

इयमेव सा या प्रथमा व्यौच्छत् என்றது முதலிய மந்திரங்களாவன.

३३. इयमेव सा या प्रथमा व्यौच्छदन्तरस्यां चरति प्रविष्टा ।
वधूर्जजान नवगज्जनित्री त्रय एनां महिमानस्सचन्ते ॥

३४. छन्दस्वती उषसा पेपिशाने समानं योनिमनुसंचरन्ती ।
सूर्यपत्नी विचरत: प्रजानती केतुं कृण्वाने अजरे भूरिरेतसा ॥

**३८. ऋतस्य पन्थामनु तिस्रआगुस्त्रयो घर्मासो अनु-
ज्योतिषाऽऽगुः ।
प्रजामेका रक्षत्यूर्ज मेका व्रतमेका रक्षति देवयूनाम्॥**

(ப-ரை) 32. **यां जनाः प्रतिनन्दन्ति** என்ற மந்திரமும், அதன் அர்த்தமும்307வதுபக்கத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

33 **या=** எந்த உஷோதேவதையானவள் **प्रथमा=** ஸூர்யனுக்கு முதலிலேயே **व्यौच्छत्=** உதயத்தை யடைகின்றளோ (ஸூர்யோதயமாவதற்கு முன் விடியற்காலம் வருவதால் அக்காலாபிமானியான உஷோதேவதையும் அப்பொழுதே உதயமடைவதா யிங்கு சொல்லப்படுகின்றது) (**व्युच्छ्यच्च=** உதயமடைந்த பிறகு) **प्रविष्टा=**ஸூர்யனை யடைந்தவளாய்க் கொண்டு **अस्यामन्तः** இந்தப் பூமியில் **चरति=**கிரணரூபமாய் சஞ்சரிக்கின்றளோ. (**या=** எந்தத் தேவதையானவள்) **वधूः=** விவாஹம் செய்யத்தகுந்த பெண்ணாக **जजान=** ஆகின்றளோ **नवगत्=** புதியபர்த்தாவை யடைகின்றவளாக வாகின்றளோ **जनित्री=**பிள்ளைகளைப் பெறுகின்றளோ **एनाम्=**எந்த உஷோதேவதையை **महिमानः=**மிக்கமஹிமை பொருந்திய **त्रयः=** அக்கினி 1. அச்வினீதேவர்கள் 2. ஆகிய மூன்று தேவர்களும் **सचन्ते=** ஸேவிக்கின்றனரோ **सा=** அந்த உஷோதேவதையாக **इयमेव=**இந்தஏகாஷ்டகைஎன்றகர்மாபிமானிதேவதையே (**भवति=** ஆகின்றது.) ஏகாஷ்டகை என்ற கர்மாபிமானிதேவதையே உஷோதேவதையாக வாகின்றது.அது இம்மந்திரத்திற் கூறியபடி மஹிமையுள்ளதாகவு மாகின்றது என்று கருத்து.

34. ஸுவர்க்க லோகத்தில் வஸிப்பவளென்றும், அந்தரிக்ஷலோகத்தில் வஸிப்பவளென்றும் உஷோதேவதை இரண்டுவிதமாக வாகின்றது. அவ்விருவரையும் இம்மந்திரம் குறிப்பிடுகின்றது. **छन्दस्वती=**வைதிகமான காயத்ரீ முதலிய சந்தஸ்ஸுகளிலமைந்த ருக்குகளால் ஸ்துதிக்கபடுவதால் சந்தஸ்ஸுகளுடன் கூடியவைகளாயும், **उषसा=**உஷஸ் என்றபெயருள்ள வைகளாயும் **पेपिशाने=**பிரகாசிக்கின்ற வைகளாயும் **समानम्=**ஒன்றாயும் **योनिम्=** காரணமாயுமிருக்கின்ற ஸூர்யனிடம் **अनुसञ्चरन्त्यौ=** பகலில்

ஐக்யத்தை யடைகின்றவைகளாயும் (ஸூர்யனிடமிருந்துண்டாகி ஸூர்யனிடமே ஐக்யத்தையடைகின்றன என்று கருத்து) **सूर्यपत्नी**=ஸூர்யனைநாயகனாக வுடையவைகளாயும் **प्रजानती**=பிராணிகளின் சுபாசுபகர்மங்களுக்குச் சாக்ஷியாக விருந்து பார்க்கின்றவைகளாயும் **केतुम्**=அறிவை **कृण्वाने**=உண்டு பண்ணுகின்ற வைகளாயும்(உதயகாலத்தில் எல்லாப்பிராணிகளும் தூக்கத்தினின்றுமெழுந்து அறிவை யடைவதா லிவ்விதம் சொல்லப்பட்டது.) **अजरे**=கிழத்தன மற்றவைகளாயும் **भूरिरेतसा**=அதிகமான பனியுடன் கூடியவைகளாயும் (உதய காலத்தில் பனி பெய்வதாலிவ்விதம் சொல்லப்பட்டது **ये**=எந்தத்தேவதைகள்) **विचरत:**=சஞ்சரிக்கின்றனவோ (**तेऽपि**=அவைகளும்) **इयमेव**= இந்தஏகாஷ்டகைஎன்றகர்மாவின் அபிமானிதேவதையாகவே ஆகின்றன.

35. **तिस्र:**= மூன்று விதமாக வான உஷோதேவதைகள் **ऋतस्य**=யாகத்தினுடைய **पन्थाम्**=மார்க்கத்தை **अन्वागु:**=அனுஸரிக்கின்றன. **घर्मास:**= பிரகாசிக்கின்ற அக்கினிபோலிருக்கின்ற **त्रय:**=மூன்று தேவதைகளும் **ज्योतिषा**=காந்தியால் **अन्वागु:**=அனுஸரிக்கின்றன. **देवयूनाम्**=தேவர்களை யாகத்தால் திருப்திசெய்ய விரும்புகின்ற யஜமானர்களுடைய **प्रजाम्**=ஸந்ததியை **एका**=ஒரு உஷோதேவதை யானது **रक्षति**=காப்பாற்றுகின்றது. **एका**=ஒரு உஷோதேவதையானது **ऊर्जम्**= யஜமானனுடைய பலத்தை **रक्षति**=காப்பாற்றுகின்றது. **एका**=ஒரு உஷோதேவதையானது **व्रतम्**=யஜமானனுடைய சத்கர்மங்களை **रक्षति**= காப்பாற்றுகின்றது (**तास्तिस्रोऽपि**=அம்மூன்று தேவதைகளாகவும் **इयमेव**=இந்த ஏகாஷ்டகை என்ற கர்மாவின் அபிமானி தேவதையே ஆகின்றது. ஸந்ததிரக்ஷணம், பலரக்ஷணம், கர்மரக்ஷணம்என்ற கார்யபேதத்தையனுஸரித்து உஷோதேவதை மூன்று விதமாக வாவதாயிங்கு கூறியிருப்பதாய் கருத்துக்கொள்ள வேண்டும்.

(मन्त्रः) ३६. एकाष्टकां पश्यत दोहमानामन्नं माꣳसवद्घृतवत्स्वधावत् ।
तद्ब्राह्मणैरतिपूतमनन्तमक्षय्यममुष्मिन् लोके स्फीतिं गच्छतु मे पितृभ्यः स्वाहा ॥

३७. औलूखला ग्रावाणो घोषमक्रत हविः कृण्वन्तः परिवथ्सरीणम् । [रयीणाम् ॥
एकाष्टके सुप्रजा वीरवन्तो वयꣳस्याम पतयो-

३८. एकाष्टका तपसा तप्यमाना संवत्सरस्य पत्नी दुदुहे प्रपीना । [के स्वाहा ॥
तं दोहमुपजीवाथ पितरस्सहस्रधारममुष्मिन् लो

(ப–ரை) 36. (ब्राह्मणाः ! ஓ பிராம்மணர்காள்!) मांसवत्= மாம்ஸத்துடன் கூடியதாயும், घृतवत्=நெய்யுடன் கூடியதாயும் स्वधावत्=பிதுருக்களுக்கு திருப்தியைத் தரக்கூடிய மற்றவஸ்துக்களுடன் கூடியதாயு மிருக்கின்ற अन्नम्= அன்னத்தை दोहमानाम्= கரக்கின்ற, அதாவது: கொடுக்கின்ற एकाष्टकाम्= ஏகாஷ்டகை என்ற கர்மாபிமானி தேவதையைपश्यत=பாருங்கள் तत्=அந்த அன்னமானது ब्राह्मणैः= பிராம்மணர்களால் अतिपूतम्=மிகவும் சுத்தமாக்கப்பட்டதாகவும் अनन्तम्=எல்லைகடந்ததாகவும்अक्षय्यम् குறைவை யடைவிக்க முடியாததாகவும் (भूत्वा=ஆகி) मे= என்னுடைய पितृभ्यः=பிதுருக்களுக்காக अमुष्मिन्लोके=லோகாந்தரத்தில் स्फीतिम्= விருத்தியை गच्छतु= அடையட்டும். स्वाहा= இந்தத் திரவியத்தை ஹோமம் செய்கிறேன்.

37. एकाष्टके=ஓ ஏகாஷ்டகை என்ற கர்மாவின் அபிமானி தேவதையே! औलूखलाः=உறல்களும் ग्रावाणश्च=அம்மி, கல்லுறல் முதலிய கற்களும் परिवत्सरीणम्= ஒவ்வொரு வருஷத்திலும் செய்யப்படுகின்ற हविः=ஹவிஸ்ஸை कृण्वन्तः=ஸம்பாதிக்கின்றவைகளாய்க் கொண்டு घोषम्=சப்தத்தை अक्रत=செய்யட்டும். அஷ்டகாபிமானி தேவதையே! ஒவ்வொருவருஷத்திலும் உறல், அம்மி முதலிய ஸாதனங்களை யுபயோகப்படுத்தி அவ்வவற்றால் செய்யக்கூடிய காரியங்களைச் செய்து ஹவிஸ்ஸைச் சம்பாதித்து அஷ்டகா சிராத்தத்தை யனுஷ்டிக்குமாறு அனுக்கிரஹிக்க வேண்டும் என்று கருத்து. (किंच=மேலும்) वयम्=நாங்கள் सुप्रजाः=நல்லஸந்ததியுடன் கூடியவர்களாகவும், वीरवन्तः=சூரர்க

ளான பிருத்யர்களுடன் கூடிய வர்களாகவும் **रयीणाम्**=தனங்களுக்கு **पतय:**=யஜமானர்களாகவும் **स्याम**=ஆகவேண்டும்.

38. **पितर:!**=ஓ பிதுருக்காள்! **तपसा**=தபஸ்ஸினுல் **तप्यमाना**= உபாஸிக்கப் படுகின்றவளாயும் **संवत्सरस्य**=வருஷத்திற்கு **पत्नी**= பத்தினியாக (ரக்ஷகியாக) விருக்கின்றவளாயும் **प्रपीना**=விருத்தியை யடைகின்ற வளாயு மிருக்கின்ற **एकाष्टका**=ஏகாஷ்டகை என்ற கர்மாபிமானி தேவதையானவள் **दुदुहे**=உங்களது அன்னமான ஸ்வதையைக்கரக்கிருள். அதாவது:கொடுக்கிருள்**तंदोहम्**=அந்த ஸ்வதையை (**यूयम्**=நீங்கள்) **अमुष्मिन्, लोके**=பரலோகத்தில் **सहस्रधारम्**=ஆயிரம் பங்கு அதிகமாக **उपजीवाथ**=அடைவீர்களாக. பிதுருக்களை யுத்தேசித்து ஹோமம் முதலியவற்றைச் செய்வதற்கு ஏகாஷ்டகை என்றகர்மம் நிமித்தமாவதால் ஏகாஷ்டகை என்ற கர்மாபிமானிதேவதை ஸ்வதையைக் கரப்பதாக விங்கு கூறப்படுகின்றது.

இரண்டாவது பிரச்னத்தில் இருபதாவது கண்டம் முற்றிற்று.

இருபத்தோன்ருவது கண்டம்.

(அ—கை) **पिष्टान्नमुत्तरया (ख० 22, सू० 6)** பாலில் மாவைப் போட்டுக் கிண்டிய கூழுக்கு பிஷ்டான்னம் என்று பெயர். அந்தப் பிஷ்டான்னத்தை யெடுத்து அடியில் எழுதப்படும் 1வது மந்திரத்தால் ஹோமம் செய்ய வேண்டும்.

(मन्त्र:) १. उक्थ्यश्चाऽस्यतिरात्रश्च साद्यस्क्रीश्छन्दसासह।
अपूपघृताहुते नमस्ते अस्तु मांसपिप्पले स्वाहा

(பி—ரை) (**हेएकाष्टके**=ஓ ஏகாஷ்டகை என்ற கர்மாபிமானி தேவதையே!) **उक्थ्यश्च**=உக்த்யம் என்ற கர்மாவாக **असि**=ஆகின்ருய் **अतिरात्रश्च**=அதிராத்ரம் என்ற கர்மமாகவும் **असि**=ஆகின்ருய் **छन्दसा सह**=சந்தோமம் என்ற ஸ்தோமத்துடன் **साद्यस्क्री:**=ஸாத்யஸ்க்ரம் என்ற கர்மமாகவும் **असि**=ஆகின்ருய். சந்தோமம் என்ற ஸ்தோமங்களாகவும், ஸாத்யஸ்கரம் என்ற கர்மமாகவும் நீ ஆகின்ருய் என்று கருத்து. **अपूपघृताहुते**=அபூபம், நெய் இவைகளாகிற ஹோமத்திரவியத்தைப் பெறுகின்றவளாயும் **मांसपिप्पले**= மாம்ஸ மாகிற ருசியுள்ள பழத்துடன் கூடிய வளாயு மிருக்கின்ற ஓ

ஏகாஷ்டகை என்ற கர்மாவின் அபிமானி தேவதையே **ते**=உனக்கு **नमः**=நமஸ்காரம் **अस्तु**=இருக்கட்டும். அதாவது: நமஸ்கரிக்கின்றேன். **स्वाहा**=இந்தத் திரவியத்தை ஹோமம் செய்கிறேன்.

(அ–கை) **आज्याहुतीरुत्तराः** (ஸ௦ 22, ஸூ௦ 7) அடியில் எழுதப்படும் 2 முதல் 9 முடியவுள்ள மந்திரங்களால் ஆஜ்யத்தால் ஹோமம் செய்யவேண்டும்.

(मन्त्रः) २. भूः पृथिव्यग्निनर्चाऽमुं मयि कामं नियुनज्मि स्वाहा
३. भुवो वायुनाऽन्तरिक्षेण साम्नाऽमुं मयि कामं नियुनज्मि स्वाहा
४. स्वर्दिवादित्येन यजुषाऽमुं मयि कामं नियुनज्मि स्वाहा ॥
५. जनदद्भिरथर्वाङ्गिरोभिरमुं मयि कामं नियुनज्मि स्वाहा ॥
६. रोचनायाजिरायाग्नये देवजातवे स्वाहा ॥
७. केतवे मनवे ब्रह्मणे देवजातवे स्वाहा ॥
८. स्वधा स्वाहा ॥ ९. अग्नये कव्यवाहनाय स्वधा स्वाहा ॥

(ப–ரை) 2. **भूः**=இது வியாஹ்ருதி எனப்படும். இந்த வியாஹ்ருதியானது உச்சாரணமாத்திரத்தாலேயே ஹோமத்திற்கு உபகாரகமாகின்றதே யொழிய மற்றப்பதங்களுடன் சேர்ந்துஓர் அர்த்த விசேஷத்தைக் குறிப்பிடுவதில்லை என்று பாஷ்யத்தில் கூறப்பட்டிருக்கிறது. **पृथिवी**=*பூலோகத்தினுலும் **अग्निना**=அக்கினி தேவனுலும், **ऋचा**=ருக் வேதத்தினுலும், **अमुम्**=எனது ஹ்ருதயத்திலிருக்கின்ற **कामम्**=காமனையை **मयि**=என்னிடம் **नियुनज्मि**=ஸ்தாபித்துக் கொள்ளுகிறேன். பூலோகம், அக்கினி என்ற தேவன், ருக்வேதம் இவைகளாகிற ஸாதனத்தால் நான் விரும்பிய பலன்களைச் சாதித்துக் கொள்வேனுக என்று கருத்து. **स्वाहा**= இந்தத் திரவியத்தை அக்கினியில் ஹோமம் செய்கிறேன்.

3. **भुवः**=இதுவும் வியாஹ்ருதியாகும். இது உச்சாரணமாத்திரத்தா லுபகாரகமாகின்றதே யின்றி மற்றப் பதங்களுடன் சேர்ந்து ஓர் அர்த்த விசேஷத்தைக்குறிப்பிடுவதாக வாவதில்லை.

* तृतीयैकवचनस्य पूर्वसवर्णदीर्घः

वायुना=வாயுதேவனாலும் **अन्तरिक्षेण**=அந்தரிக்ஷ லோகத்தாலும் **साम्ना** ஸாமவேதத்தாலும் **अमुम्**=எனது ஹிருதயத்திலிருக்கின்ற **कामम्**=காமனையை **मयि**= என்னிடம் **नियुनज्मि**=ஸ்தாபித்துக் கொள்ளுகிறேன். **स्वाहा**=இந்தத் திரவியத்தை ஹோமஞ் செய்கிறேன். முன்மந்திரம் போல் கருத்து.

4. **स्वः**=இந்த வியாஹிருதிக்கும் முற்கூறிய இரண்டு வியாஹிருதிகளைப் போல்கருத்துக் கொள்ள வேண்டும். **दिवा**=ஸுவர்க்க லோகத்தாலும் **आदित्येन**=ஸூர்யனாலும் **यजुषा**=யஜுர் வேதத்தாலும் **अमुम्**=எனது ஹிருதயத்திலிருக்கின்ற **कामम्**= காமனையை **मयि**=என்னிடம் **नियुनज्मि**=ஸ்தாபித்துக் கொள்ளுகிறேன். **स्वाहा**=இந்தத் திரவியத்தை ஹோமம் செய்கிறேன். முன் மந்திரம்போல் கருத்து.

5. **जनत्**=இது நான்காவது வியாஹிருதியாகும். இந்த வியாஹிருதி அதர்வவேதத்தில் படிக்கப்படுகின்றது. முன் வியாஹிருதிகளைப் போல் இதற்கும் கருத்துக் கொள்ள வேண்டும். **अद्भिः**=ஜலங்களாலும், **अथर्वाङ्गिरोभिः**=அதர்வ சாகையில் படிக்கப்பட்ட மந்திரங்களாலும் **अमुम्**=எனது ஹிருதயத்திலிருக்கின்ற **कामम्**=காமனையை **मयि**=என்னிடம் **नियुनज्मि**=ஸ்தாபித்துக் கொள்ளுகிறேன். **स्वाहा**=இந்தத் திரவியத்தை ஹோமம் செய்கிறேன். முன்மந்திரம் போல் கருத்து.

6. **अजिराय**=இருளை விலக்கு கின்ற வராயும் **रोचनाय**=பிரகாசிக்கின்ற வராயும் **देवजातवे**= யஜிக்கத்தகுந்த தேவர்களை யறிந்த வராயுமிருக்கின்ற **अग्नये**=அக்கினியின் பொருட்டு **स्वाहा**=இந்தத் திரவியத்தை ஹோமம் செய்கிறேன்.

7. **केतवे**= எல்லா வற்றை யுமறிந்த வராயும், **मनवे**= பிராணிகளின் க்ஷேமத்தைச் சிந்திக்கின்றவராயும் **ब्रह्मणे=आग्नेयो वै ब्राह्मणः** என்று கூறியபடி பிராம்மண ஜாதிக்குக் காரணபூதராயும் **देवजातवे**=யாகத்தால் ஆராதிக்கத் தகுந்த தேவர்களை அறிந்தவராயு மிருக்கின்ற அக்கினி தேவனையும் பொருட்டு **स्वाहा**=இந்தத் திரவியத்தை ஹோமம் செய்கிறேன்.

8–9. **स्वधा**=பிதுருக்களின் பாகமான இந்தத் திரவியத்தை **स्वाहा**=அவர்களின் திருப்திக்காக ஹோமம் செய்கிறேன். **कव्य**–

वाहनाय= பிதுருக்களின் பாகமான திரவியத்தை வஹித்துச் செல்லுகின்ற **अग्नये=**அக்கினி தேவனையும் பொருட்டு **स्वाहा=**இந்தத் திரவியத்தை ஹோமம் செய்கிறேன். அக்கினி தேவனொருவனே தேவர்களின் பாகமான ஹவிஸ்ஸை யஜமானர்களிடமிருந்து நேரில் ஸ்வீகரித்துக் கொண்டு அந்தந்தத் தேவர்களிடம் கொண்டுபோய்ச் சேர்க்கும் பொழுது ஹவ்யவாஹனன் என்றும், பிதுருக்களின் பாகமான ஸ்வதையை ஸ்வீகரித்துக் கொண்டு போய் அந்தந்த பிதுருக்களிடம் சேர்க்கும் பொழுது கவ்யவாஹனன் என்றும் சொல்லப் படுவன்.

सू० ॥ स्विष्टकृत्प्रभृति समानमापिण्डनिधानात् (ख० 22, सू० 8) பிறகு ஸ்விஷ்ட கிருத் என்ற கர்மமம் முதல் பிண்டப்பிரதானம் என்ற கர்மம் முடிய வுள்ள கார்யங்களை மாஸிசிராத்தத்தில் செய்த மாதிரி செய்யவேண்டும். **सू० ॥ अन्वष्टकायामेवैके पिण्डनिधानमुपदिशन्ति (ख० 22, सू० 9)** நவமியன்று அன்வஷ்டகா சிராத்தம் என்ற கர்மாவைச் செய்யவேண்டு மென்று இனிகூறப்போகின்றார். அந்த அன்வஷ்டகையில் தான் பிண்டதானம் செய்யவேண்டுமே யொழிய ஏகாஷ்டகையில் செய்யவேண்டியதில்லை எனச்சில ஆசிரியர்கள் உபதேசிக்கின்றனர்.

இதுவரை ஏகாஷ்டகா சிராத்தத்தின் முக்யகல்ப முபதேசிக்கப் பட்டது. இனி கௌணகல்ப முபதேசிக்கப் படுகின்றது. **सू० ॥ अथैतदपरं दध्नएवाऽञ्जलिना जुहोति यथापूपम् (ख० 22, सू०10)** முன் எந்த மந்திரத்தைப் படித்து அபூபத்தை ஹோமம் செய்தோமோ அந்த மந்திரத்தினாலேயே அஞ்ஜலியால் தயிரை எடுத்து ஹோமம் செய்யவேண்டும். இது மற்றொரு முறையாகும். அதாவது: **यां जना: प्रतिनन्दन्ति** என்றதால் தயிரை எடுத்து ஹோமம் செய்யவேண்டும். அபூபத்தை விலக்கவேண்டும். இந்தத் ததிஹோமமானது அபூபஹோமம் முதல் ஆஜ்யஹோமம் முடிய வுள்ள எல்லாகர்மங்களின் ஸ்தானத்திலும் விதிக்கப்படுவதால் இந்தத்ததி ஹோமத்தைத் தவிர்த்து மற்ற ஹோமங்களைச்செய்யவேண்டுவதில்லை என்றுஸுதர்சன பாஷ்யத்தில் கூறப்பட்டிருக்கிறது. **सू० ॥अतएव यथार्थं मꣳसꣳशिष्ट्वा श्वोभूतेऽन्वष्टकाम् (ख० 22, सू०11॥)** ஏகாஷ்டகா சிராத்த நிமித்தமான பசுவினுடை

யமாம்ஸத்தையே மீதப்படுத்தி வைத்துக்கொண்டு அந்தமாம்ஸத்தினல் ஏகாஷ்டகா சிராத்த தினத்திற்கு மறுதினத்தில் அன்வஷ்டகை என்ற கர்மாவைச் செய்யவேண்டும். மீதப்படுத்தியிருக்கும் மாம்ஸத்தை பாகம் செய்து அன்வஷ்டகையில் பிராம் மணர்களுக்குப் பரிவேஷணம் செய்ய வேண்டும். **ஸூ॰ ॥तस्या मासिश्राद्धेन कल्पो व्याख्यातः (ख॰ 22, ஸூ॰ 12)** அந்த அன்வஷ்டகையை மாஸிசிராத்தத்தைச் செய்த மாதிரி செய்ய வேண்டும்.

யாசனப் பிரகரணம்.

(அ–கை) **ஸூ॰ ॥ सनिमित्वोत्तरान् जपित्वाऽर्थं प्रब्रूयात्** (**ख॰** 22, **ஸூ॰** 13) குருதக்ஷிணையைக் கொடுப்பதற்காகவும், விவாஹத்திற்காகவும், யாகத்திற்காகவும், மாதா பிதுருக்களைக் காப்பாற்றுவதற்காகவும், மஹானன ஒருவருக்கு நியமபங்கம் வராமலிருப்பதற்காகவும் வெளியிற் சென்று யாசிக்கலாம். அவ்விதம் ஒருவன் வந்து யாசித்தால் யாசிப்பவனின் குணங்களைக் கவனித்து தனது சக்திக்குத் தக்கபடி பொருளுதவி செய்யவேண்டும் என்று **भिक्षणे निमित्तमाचार्यो विवाहो यज्ञो मातापित्रोर्बुभूर्षाऽर्हतश्च नियमविलोपः, तत्र गुणान् समीक्ष्य यथाशक्ति देयम्** (आप, ध. प्र 2, ख॰ 10, ஸூ॰ 1, 2,) என்றதால் ஆபஸ்தம்ப தர்மஸூத்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவேமேற்கூறிய நிமித்தங்களுள் யாதானுமோர் நிமித்தத்தை முன்னிட்டு தனிகனிடம் சென்று யாசிக்குங்கால் அடியில் எழுதப்படும் 10வதுமுதல் 16வதுமுடியவுள்ள மந்திரங்களை ஜபம்செய்து, பிறகு எதற்காக யாசனை செய்ய வந்திருகின்ருனே அதைச் சொல்லவேண்டும். அதாவது: **आचार्यार्थं भवन्तं भिक्षामि. विवाहार्थं भवन्तं भिक्षामि** என்றது முதலிய முறையை யனுஸரித்து யாசிக்க வேண்டும்.

(मन्त्रः) १०. अन्नमिव ते दृशे भूयासं, ११. वस्त्रमिव ते दृशे भूयासं, १२. वित्तमिव ते दृशे भूयासम् १३. आशेव ते दृशे भूयासꣳ १४. श्रद्धेव ते दृशे भूयासम् ॥१५. सꣳस्रवन्तु दिशो महीस्समाधावतु सूनृताः। सर्वे कामा अभियन्तु मा प्रिया अभिरक्षन्तु मा प्रियाः॥ १६. यशोऽसियशोऽहं त्वयि भूयासमसौ ॥

(ப—ரை) 10. (हेदात:=ஓ தாதாவே) ते=உன்னுடைய दृशे=கண்களுக்கு अन्नमिव=அன்னத்தைப் போல भूयासम्=நான் ஆக வேண்டும். அன்னத்தைக் கண்டமாத்திரத்தில் எவ்வளவு ஸந்தோஷமொருவனுக் குண்டாகின்றதோ அவ்வளவு ஸந்தோஷம் என்னைக் கண்டவுடன் இந்தத் தனிகனான உனக்கு உண்டாக வேண்டும் என்று கருத்து. பெரும்பாலும் யாசகனைக் கண்டதும் தனிகனுக்கு மிருத்யுவைக் கண்டமாதிரி பயமுண்டாவது ஸஹஜமாகையால் அவ்விதம் தன்னிடம் அப்ரீதியைத் தனிகனடையக்கூடா தென்று இதனால் பிரார்த்திக்கப் பட்டது. இனி வரும் மந்திரங்களிலும் இக்கருத்தையே கொள்ளவேண்டும்.

11. (दात: ஓ கொடையாளியே!) ते=உன்னுடைய दृशे=கண்களுக்கு वस्त्रमिव=வஸ்திரத்தைப் போல भूयासम्=ஆகவேண்டும். நல்ல ஆடையைக் கண்ணால் கண்டதும் எவ்வளவு ஸந்தோஷமுண்டாகின்றதோ அவ்வளவு ஸந்தோஷம் என்னைக் கண்டவுடன் தாதாவான உனக்கு உண்டாக வேண்டும் என்று கருத்து. 12. ते=உன்னுடைய दृशे=கண்களுக்கு वित्तमिम=தனத்தைப் போல भूयासम्=ஆகவேண்டும். முன்போல் கருத்து. 13. ते= உன்னுடைய दृशे கண்களுக்கு आशेव=மனோரதம் போல भूयासम्= ஆகவேண்டும். 14. ते=உன்னுடைய दृशे=கண்களுக்கு श्रद्धेव= நம்பிக்கை போல भूयासम्=ஆகவேண்டும். நம்பிக்கையே உருவத்துடன் வந்திருப்பதாய் என்னிடம் பாவனை ஏற்படவேண்டும் என்று கருத்து.

15. दिश:=எல்லா திக்குகளிலு மிருக்கின்ற मही:=பெரிதான பொருள்கள் संस्रवन्तु=என்னை வந்தடையட்டும். அந்தந்தத் திக்குகளிலிருக்கின்ற சிறந்த வஸ்துக்கள் என்னை வந்தடைய வேண்டும் என்று கருத்து. सूनृता:=பிரியமான வார்த்தைகள் समाधावन्तु=என்னை நன்றாய் வந்தடையட்டும். தனிகன் எனக்கு நல்வரவு முதலியவற்றைக் கூறிப்பிரியமான வார்த்தைகளை மொழிய வேண்டும் என்று கருத்து. प्रिया:=பிரியங்களான सर्वे=எல்லாவிதமான कामा:=பலன்களும் मा=என்னை अभियन्तु=வந்தடையட்டும். प्रिया:=விரும்பிய பலன்கள் मा=என்னை अभिरक्षन्तु=காப்பாற்றட்டும். அதாவது: என்னை வந்தடையட்டும்.

16. असौ=ஓயக்ஞசர்மா என்ற பெயரிய யஜமானனே! (त्वम्=நீர்) यशः=நல்ல கீர்த்தியுள்ளவனு யிருக்கின்றாய். अहम्=நானும் त्वयि=உன்னிடம் யாசிப்பதால் यशः=நற்கீர்த்தியைப் பெற்றவனாக भूयासम्=ஆகவேண்டும்.

(அ—கை) யாசிப்பதால் தனிகனிடமிருந்து ரதம் குதிரை முதலியவைகள் கிடைக்குமானால், அவற்றைக் கிரஹிக்கவேண்டிய முறை இனி உபதேசிக்கப் படுகின்றது. ஸூ० ॥ रथं लब्ध्वा योजयित्वा प्राञ्चमवस्थाप्योत्तरयारथचक्रे अभिमृशति पक्षसी वा(ख० 22,सू० 14) தனிகன் ரதத்தைக் கொடுத்தால் அதைப் பெற்றுக்கொண்டு வேலைக்காரர்களைக் கொண்டு அதில் குதிரையையோ, மாட்டையோ கட்டச்சொல்லி, அந்தரதத்தைக் கிழக்கு முகமாக நிறுத்தி அடியில் எழுதப்படும் 17வது மந்திரத்தால் வண்டியின் இரண்டு சக்கிரங்களையோ, ஏர்க்காலையோ தொடவேண்டும்.

(मन्त्रः) १७. अङ्कौ न्यङ्कावभितो रथं यौ ध्वान्तं वाताग्रमनुसंचरन्तौ। दूरेहेतिरिन्द्रियावान्पतत्री ते नोऽग्नयःपप्रयः पारयन्तु

(ப—ரை) *ध्वान्तम्=சப்திக்கின்றதாயும் वाताग्रम्=காற்று போல் சஞ்சரிக்கின்றதாயு மிருக்கின்ற रथम्=வண்டியை अनुसञ्चरन्तौ=அனுஸரித்து ஸஞ்சரிக்கின்ற अङ्कौ=அங்கம் என்றும், न्यङ्कौ=ந்யங்க மென்றும் பெயருள்ள यौ=எந்தப் பூதங்களுண்டோ दूरेहेतिः=தூரேஹேதி என்றும், इन्द्रियावान्=பலம் பொருந்தியது என்றும் पतत्री=வண்டியைக்கவிழ்க்கும் ஸ்வபாவமுள்ள தாயிருப்பதால் பதத்ரீ என்றும் கூறப்படுகின்ற यौ=எந்தப் பூதங்களுண்டோ ते=அவைகள் யாவும் अग्नयः=ரதத்துடன் கூடவருகின்ற வர்களாகவும் पप्रयः=காமனைகளைப் பூர்த்தி செய்கின்றவர்களாயும் भूत्वा=ஆகி नः=எங்களை पारयन्तु=இஷ்டமான தேசத்தைக் குறித்து அழைத்துச் செல்லட்டும். அங்கம், நியங்கம் முதலிய பூதங்கள் ரதத்திற்கு அபிமானிகளா கையால் அவைகள் இம்மந்திரத்தால் பிரார்த்திக்கப் பட்டன.

---

* ध्वनशब्दे, छादस इडभावः । ध्वानितमित्यर्थः ।

